திருமெய்ஞான
தேவாமிர்தம்

சாலை தங்கப் பசாமை

ஆதியே துணை

ப்ரம்மோதய

மெய்வழி சாலை ஆண்டவர்கள்

அருளிய திருமெய்ஞ்ஞான

தேவாமிர்தம்

(திரு வாயுரை விரிப்பு)

(திருமெய்ஞ்ஞான அருளமுதம் இரண்டாம் பாகம்)

முத்தி முகப்புரை

ஆகுபிஸ் மெம்பெர்களுக்கு, எல்லாம்!

நாள் தோறும் நமது தெய்மவர்கள் நமக்காக அருளிய திருவாயுரை விரிப்புகள் கணக்கிலடங்காது. அவைகளே அனந்நாதி தேவர்கள் அன்றன்று அனுதினமும் தங்கள் டைரியில் குறிப்பெடுத்து அதை தொகுத்து எழுதி பல வால்யூம்களில் ஆலயத்தில் வைத்திருந்நார்கள்.

அவற்றில் ஒருசில பகுதிகள் நமது தெய்வமவர்கள் நடமாடும் திருமேனியில் திகழ்ந்த காலத்திலேயே நூல்களாக வந்நது. அப்போதைய அச்சு வசதிக்கு ஒரிரு புத்தகங்கள் தான் அச்சுக்கு எடுத்துவர முடிந்நது. அடுத்த சில கால கட்டங்களில் தீ விபத்து மற்றும் சில காரணங்களால் ஆலயத்தில் வைக்கப் பெற்றிருந்த வால்யூம்கள் இல்லாமல் ஆகிவிட்டது.

ஆனால் ஆண்டவர்கள் திருவாக்கியம் என்றும் அழியாத தகைமை வாய்ந்தது ஆகையால் அனந்நாதி தேவர்கள் குறிப்பெடுத்திருந்தவைகளின் மூலச் செய்திகள் அவரவர்கள் டைரியில் அப்படியே இருந்ததால் அவைகள் ''சாலைக் கொரல்'' பத்திரிக்கையில் அவ்வப்போது வெளிவந்நது. பிறகு அதை ஒரு நூலாகவும் எடுத்துவந்தோம். அதன் தொடர்ச்சியாக இப்போது ''திருமெய்ஞ்ஞான தேவாமிர்தம்'' என்ற ஆண்டவர்கள் வாக்கிய தொகுதியை மெய்வழி குலமக்களுக்கு அளிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்ஙனம்

மெய்வழி சாலை வர்க்கவான்

அட்சரகலா ஆதினர் & சபைக்கரசர்

மெய்வழிச்சாலை

இந்த நூலில்

அங்கம் –அங்கி–அங்கு–அங்கே

அங்ஙம்–அங்ஙி–அங்ஙு–அ ஙஙே

அந்த–அந்தி–அந்தோ–சந்தை

அந்ந–அந்நி–அந்நோ–சந்நை

அஞ்ச–அஞ்சா–அஞ்சி–அஞ்சு – அஞ்சே

அஞ்ஞ–அஞ்ஞா–அஞ்ஞி–அஞ்ஞு – அஞ்ஞே

மேல்வரி – எழுத்துவாசகமா கீழ்வரியில் – சாய்ந்த எழுத்திலிருக்கும் – அச்சர வாசகமாய் எழுதியிருப்பதைப் பிழை யா யிருக்கிறதென்று எண்ணாதீர்கள்.

மொழிக்கு முதலில் 'ஞ' – எழுத்திருக்கும்.
பார்த்துப் படித்துக்கொள்ளுங்கள்.

வையகத்தையும் வானகத்தையும் சர்வ கால காலங்களையும்
சர்வ காலத்திற்குள் அடங்கிய அழிவிலா நித்திய
பூரண மேம்பாடுக ளனைத்தையும் கையில்
வரவழைத்துத் தரும் கிரயத்தையுடையது
இந்தத்

திருமெய்ஞ்ஞான தேவாமிர்தம்

(தெய்வமெய் ஆணையிற் கிளர்ந்த இந்து நூலில்
செயலில்லாத வாசகமே கிடையாது)

ஆண்டவர்கள் வாக்கியம்

வெளி உலகத்தில் ஒவ்வொருவரும் தன் குற்றத்தை மறைக்கப் பார்ப்பானே தவிர ஒப்பு கொள்ள மாட்டான். ஏன் என்றால் அவன் ஒப்புக் கொண்டால் அதைச் செய்ததற்கு தண்டனை கிடைப்பதோடு மட்டுமல்லாமல் அவன் அக்குற்றத்திற்கு தகுந்த தண்டனையை அனுபவித்த பிறகும் அக்குற்றத்தை பிறர் மறப்பதில்லை.

ஆனால் இங்கோ குற்றம் செய்பவர்கள் அதை ஒப்புக்கொண்டு அதற்கான தண்டனையையும் விரைவோடு ஏற்றுக் கொள்கிறார்கள். ஏன் என்றால் தண்டனை அனுபவித்த பிறகு அந்த குற்றம் முழுவதும் எல்லோராலும் மறக்கப்படுவதோடு பின்னால் நித்திய பேரின்ப வாழ்க்கை பரிசாக கிடைக்கிறது.

ஒரு தெய்வ ஆசான் திருமுன்பாக அச்சப்பாட்டுடன் எவனொரு வன் தன் குற்றத்தைக் கூச்சமில்லாமல் ஒப்புக் கொள்கிறானோ அவனே ஜெயமடைவான். வஞ்சகமாக மறைக்கிறவன் அப ஜெயம் அடைவான்.

உலக வழக்கத்தில், ஒருவன் செய்த பாவம் நீங்குவதற்கு ஒரு தேவபிரான் சன்னிதியில் தன் அங்கங்கள் யாவும் தரையில் படப்புரண்டு அங்கப் பிரதக்ஷணம் செய்ய வேண்டும். அல்லது அத் தெய்வத் திருமேனியரின் செவிகேட்கத் தன் குற்றத்தை வாய்விட்டுச் சொல்லி மன்னிப்புத் தேட வேண்டும் என்று வேதத்தில் இருக்கிறது. அவ்வாறு உன் பாவத்தை சங்கரிக்க வல்லவர் இந்த எல்லையைத் தவிர வேறெங்காவது இருக்கிறார்களா? இல்லவே இல்லை.

னி பாவவிமோசனம் பெற நும் உங்ஙளுக்கு எடுத்து வைத்திருக்கிற முறை அப்படி ஒன்றும் கடுமையாக இல்லேயே. னி குனிந்து தரையைத் தொட்டபிறகு னிமிர்ந்து இரு கைகளேயும் சிரசின் பின் பாகம் வைத்து சிர வணக்கம் செய்து பணிந்நால் அதுவே போதும் என்று எடுத்து வைத்திருக்கிறேமே. அப்படிச் செய்தால் உன் பாவங்ஙள் சங்ஙரிக்கப்பட்டு னி உடல் எடுத்த முழுப்பலனேயும் தர நும் தயாராக இருக்கிறேமே.

அதோடு னியாக உன் மனத்தில் உன்குற்றத்தை னினேத்து உருகி னி செய்த பாவம் திரும்படியாக இறைஞ்சி னன்னம்பிக்கை வேண்டி ஆலயத்தில் னின்று ஓதிநல் போதும் என்றே எடுத்து வைத்துள்ளோம்.

உன் ஆசான் முன்னிலேயில் னி போலியாகவாவது கனிந்து கனிந்து உருகி அழு. அப்படி அழுவதால் தான் உன் பாவங்ஙள் சங்ஙரிக்கப்படும். பாசாங்ஙையே அசலாக ஏற்று பலன் அளிக்கும் ஒரு கருணேயாளர் இதோ இங்ஙு வந்நுள்ளார் . அழுதால் எம்மை பெறலாமே.

⟡⟡⟡⟡⟡⟡⟡

ஒரு தடவை ஆண்டவர்கள் சபையை பார்த்து

"முன் காலங்ஙளில் இந்த உலகுக்கு வந்த பெரியோர்கள், ஞானிகள், எமது வருகையைப் பற்றியும் மற்றும் செயல்களேப் பற்றியும் ஏராளமான தீர்க்க தரிசனங்ஙளே எழுதியிருக்கிறார்கள். அந்த தீர்க்க தரிசனங்ஙளே தினமும் வணக்கத்திலும் கூறி வருகிறீர்கள்.

"அப்படி பெரியோர்கள் ஏன் தீர்க்க தரிசனம் எழுதினுர்கள்?" என்று கேள்வியாக கேட்டார்கள். "ஏதோ ஒரு பிரயோஜனத்தை

கருத்தினை எழுதியிருக்க வேண்டும். அந்த பிரயோஜனம் என்ன?'' என்று மீண்டும் கேட்க சபையில் ஒருவரும் பதில் சொல்ல வில்லை.

ஆண்டவர்கள்: ''பெரியோர்கள் ஜீவன் முக்தி அடைந்திருக்கிறார்கள். அவர்கள் தேக முக்தி அடைய வேண்டும் என்பதற்காகவே தீர்க்க தரிசனம் எழுதினார்கள்.'' என்று தெரிவித்தார்கள்.

மேலும் ''பெரியோர்கள் தேக முக்தி அடைவதற்கு எனக்கு என்ன உதவி செய்தார்கள்?'' என்ற மற்றொரு கேள்வியை ஆண்டவர்கள் கேட்டார்கள். ஒருவரும் பதில் சொல்லவில்லை.

ஆண்டவர்கள்: ''பெரியோர்கள் மக்களுக்காக அப்போதிருந்து பூஜை புனஸ்காரம், அனுஷ்டானங்கள், கோயில்கள், என்று எடுத்து வைத்தார்களல்லவா? அதனால் தானே மெய்யில் இன்று உலக மக்களை ஏற்ற முடிந்தது. இது தான் பெரியோர்கள் எனக்கு செய்த உதவியாகும்''

ஆயிரத்தாண்டுகளுக்கு முன்னே வாழ்ந்தவர்களும் இந்த எல்லையைப் பற்றி சொல்வதென்றால் அவர்களுக்கும் லாபகரப் பெருவாழ்வு இங்கே இருப்பதால் தானே இதைக் குறிவைத்து எழுதி வைத்துள்ளார்கள்.

தங்களுக்குப் பிறகு வருகிறவர்கள். ''சர்வ மதங்களையும் கையடக்கி வருவார்கள்'' என்று வடலூரார் திர்க்க தரிசனம் அருளியுள்ளார்கள். ஒரு மனுத்தாலம் ஒரு மதத்தையே முழுதாகப் படிக்க முடியாதே அப்படியிருக்க ஒருவர் சர்வ மதங்களுடைய உயிராணியையும் பெற்று வருவதென்றால் அது எப்படி இயலும் என்ற ஆச்சரியம் ஏன் இந்த உலகத்தில் ஒருவனுக்கும் வருவதில்லை?'' என்று தெரிவித்தார்கள்.

திருக்குறளில் திருவள்ளுவ ருயனார் "மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல்லெனும் சொல்" என்று கூறுகிறார். அது என்ன? தவம் செய்து உன்னை பெத்தது என்பது யாருக்கு பொருந்தும்? உம்தெய்வ ஆசான்தானே உன்னை தவமிருந்து பெற்றார்கள். உம் தகப்பன் உன்னை அப்படி தவம் செய்தா பெற்று எடுத்தார்? ஏதோ வெறியினால் பெற்றார். மேலும் அவர் உன்னை வளர்க்கும் போது வயதான காலத்தில் தனக்கு இவன் உதவியாக இருப்பான் என்ற பிரதிபலனை நினைத்துத்தானே வளர்த்தார்.

அதோடு தன் சொத்தை எல்லாம் தாம் இருக்கும் போதே யாரேனும் தன் மக்களுக்கு கொடுக்கிறார்களா? இல்லையே. உயில் எழுதி வைத்து இதில் இருக்கும் சொத்து நான் போன பிறகு மகனுக்கு சேரக் கடவது என்றல்லவா எழுதி வைக்கிறான். ஆனால் உன் தெய்வத் தந்தை உன்னை நித்தியனாக ஆக்கவே எண்ணி எண்ணிப் படைத்தார்கள். ஞானக்கருவில் பெற்று எடுத்தார்கள். அதில் அவர்களுக்கு உம்மால் உதவி ஒத்தாசை உண்டா? கிடையவே கிடையாது.

மேற்கொண்டு அவர்களுக்கு உபத்திரவம் வேறு கொடுக்கிறாய். ஆனால் அவர்கள் உன்னிடம் இருந்து எந்த பிரதிபலனையும் எதிர்பார்ப்பதில்லை. மேற்கொண்டு நீ நித்திய அவஸ்தை தேகத்திற்கு போய்விடக் கூடாதே என்று உன் மேல் கருணை மிகக் கொண்டு உன்னை அதிலிருந்து மீட்பிக்க எத்தனையோ கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். சரி. அது போகட்டும். அவர்கள் இந்த மெய் – கை வரவாக எலும்பும் இளைக்க தவம் செய்கிறார்கள். அந்த தவப்பலனை தவ செல்வத்தை இப்பொழுதே உனக்கு உரிமையோடு ஒரு பாடுமில்லாமல்

சொந்தமாக கொடுக்கிறார்கள். உன்னை இந்த நெடுங்காலகத்தே யுகத் தவத்தேற அல்லவா பெற்று எடுத்தார்கள். மேலும் அந்த தெய்வத் தந்தை உன்னை அந்த மகத்துக்களின் அவையில் முந்தி இருக்கும்படி வேறு செய்கிறார்கள். இது தான் "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச்செயல்."

அப்படி நீ அவர்கள் உன்னை முந்தி இருக்க செய்த உதவிக்கு செலுத்தும் நன்றி என்னவென்றால் அவர்கள் உனக்கு செய்தநன்றியை எண்ணி எண்ணி உருகுவதை உலகத்தவர்கள் கண்டு "இவனை என்ன தவம் செய்து இவன் தந்தை பெற்றார்களோ" என்று நினைக்க செய்வதுதான்.

நன்றி என்பது உலகத்தவர்களால் ஒருத்தருக்கொருத்தர் செய்ய முடியாதது. எப்படியெனில் ஒருவர் செய்த நன்றிக்கு ஈடாக அவரை நன்கு உபசரித்துச் சாப்பிடுங்க படுத்து தூங்குங்க என்று உபசரித்தால் அவர்கள் உடலுக்கு சாப்பிடுதலும் தூங்குதலும் கெடுதல்தானே செய்யும். இப்படியே உலக வழக்கில் நன்றி என்று நீ செய்யும் ஒவ்வொரு செயலும் கெடுதலே செய்வதாய் இருக்கிறது.

அப்படியிருக்க உனக்கு நாம் செய்த செய்கின்ற, செய்யப் போகின்ற பேருதவிக்கு எங்ஙனம் நீங்கள் கைமாறு செய்ய முடியும்? அந்த அளவற்ற அப்பெருங்காருண்யச் செயலை ஒவ்வொன்றாக நீ நினைந்து நினைந்து, உள்ளம் உருகி, கண்ணீர் கசிந்து இச்சன்னிதியில் நிற்பதுவே நீ செய்யக் கூடிய நன்றி.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

மன்னிப்பு வாசல் அடைபட்டுப்போகும் நாள் நெருங்கிவிட்டது என்று கேள்விப்பட்டிருப்பாய். அது இப்போது நடைபெறப் போகிறது. என்னுடைய இந்த தேகத்தினால் இப்போது இருக்கும் இந்த

சத்துவங்களை அசைக்க முடியாது. ஆகவே தான் இந்த தூலத்தை விட்டுவிட்டு ஸிதி தேகம் எடுக்க வேண்டி இருக்கிறது. அந்த ஸிதி தேகத்துக்குள் நாம் சென்றதும் இருக்கும் இந்த ஒவ்வொரு சத்துவத்தையும் அசைக்க ஆரம்பித்து விடுவோம். அப்போது எமக்கு உணவு எப்படி என்று கவலைப்படுகிறாயா? அறுசுவை அற்றுப்போய் விடும். பசியைப் பற்றிய நினைவே இருக்காத தூலம் அது.

கடைசி மெய்வழித் திருநாள் முடிந்த உடனேயே உனக்கு அந்த அமனியின் செய்திகள் காதில் விழ ஆரம்பிக்கும்.

'பூமியடங்கலுக்கும் ஓதும் புராதனம் கூறுவது' என்ற பாடலை 15 ஆண்டுகளுக்கு முன்னமேயே எழுதி டயரியில் வைத்திருந்தோம்! ஆனால் அச்சுக்கு விடவில்லை. ஏனெனில் அதனால் மக்கள் பீதி அடைந்து அரசாங்கத் தொல்லைகள் வரலாம் என்றே அப்படி செய்தோம். ஆனால் இப்போது அதை அச்சேற்றி விட்டோம். இப்போது இனி அரசாங்கம் ஏதாவது கேட்டாலும் அந்தப் பாடல்களில் கூறப் பெற்றுள்ள அனைத்தையும் நிரூபித்து அவர்களுக்கு காட்ட முடியும். அவ்வளவு சக்தி இப்போது எம்மிடம் உள்ளது.

வங்கி நிறைய பணம் போட்டு வைத்திருப்பவர்கள் அதை தங்கள் சொத்து என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பிறகுதான் எல்லாம் போய்விட்டது என்று தெரியவரும். வயல் காடாகி காடுகளெல்லாம் வரண்ட பூமியாகி விடப் போகிறது. 10 ஏக்கர் 2 ஏக்கர் என்று சொத்து இருக்கிறது என்று நினைப்பவர்களுக்கு அது இனிமேல் சொத்தாக இருக்காது.

அரிசி புடைத்து, சலித்து எடுக்கப் பெறுகிறது. அதுபோல இந்த உலகத்தில் எல்லா இடங்களிலும் உள்ள மகத்துக்களை ஒரே

குழுக்கலில் ஒன்றுசேர்க்கப்பெறுவார்கள். மகத்துக்கள் கடலில் இருந்நாலும் சரி. மலையில் இருந்நாலும் சரி. மண்ணில் இருந்நாலும் சரி. மகத்துக்களின் வித்தை ஒன்றும் செய்ய முடியாது.

நித்திய உலகத்தில் எமன் இல்லையே? ஆகையால் சாவு கிடையாது. தற்போது உலகத்தில் அவஸ்தையாக இருக்கிறது என்று அவஸ்தையிலிருந்து தப்பிக்க வேண்டும் என்று சாகிறான். ஆனால் அவன் போகும் நரக உலகத்தில் எவ்வளவு கொடூரமான தண்டனையை அனுபவிக்க போகிறான்? அதிலிருந்த அவன் தப்ப முடியாது.

தனிகை மணிப்பிரானவர்கள் நரகத்திற்குச் சென்று பனித்திரைக்கு அப்பால் உள்ள நரகத்தை பார்த்தார்கள். அதன் பிறகு மூன்று நாட்களுக்கு அந்த கோர வாடை இருந்ததாம். அப்படி என்றால் நரகத்திலேயே இருப்பவனுக்கு எப்படி இருக்கும்? நரகவாதிகளும் சுவர்க்கவாதிகளும் ஒரே இடத்தில் இருப்பார்கள். நரகவாதிகளுக்கு ஒரு பனை மர உயரத்திற்கு மேல் சூரியன் இருக்கும். இப்பொழுது வெயில் அடித்தால் நிழலுக்குப் போகிறான். அப்பொழுது எங்கே போவான்? சுவர்க்கவாதிகளுக்கு சாயந்திர சூரியன் நிழல் போல இருக்கும்.

✦✦✦✦✦✦✦

இது வரை வந்து போன அவ்வளவு காலா காலங்களும் இறைவனுடைய கணக்கில் ஒரே ஒரு நாள் தான். ஆனால் வரப் போகும் நித்திய உலகமோ கால வரம்பற்ற காலம் கொண்ட நித்தியமானது. அந்த நாள் வருவதை 'மூரித்தேர் நாள் சக்ராயுத விழா' என்கிறார்கள். வந்த வந்த பாரவான்களுக்கு எல்லாம் அவர்களின் சொந்த விதிதாசாரப்படி பங்கினை பெறப்போகும் நாள் அது

அல்லவா? அதனால் 'விழா' என்று கூறுகிறார்கள். பாவிகளுக்கு பழிவாங்கும் நாளும் இது தான்.

படைக்கப் போகும் நித்திய உலகின் சூரியன் இன்னவடிவம் என்று தெரியாது. ஆனால் பிரகாசம் மட்டும் இருக்கும் - சூரியன் சஞ்சாரமில்லாததினால் இரவே கிடையாது - நாளும் தெரியாது. இதையே நம் நூலில் "கங்குல் பகலற்ற விடிவெள்ளி கிளம்ப" என்று கூறி இருக்கிறோம்.

இப்போது இருக்கும் வீரம் வலிமை அழகு போன்றவைகள் புது யுகத்தில் ஒன்பது மடங்கு அதிகமாகக் காணப்பெறும். ஆல இலை ஒன்று எவ்வளவு அடர்த்தியாக இருக்கிறது? அப்படிப்பட்ட ஒன்பது இலைகளை அடுக்கினால் ஒரு பக்கத்திலிருந்து அந்த ஒன்பது இலைகளையும் துளைத்து கொண்டு அந்த இலைகளின் அப்பால் பார்க்க முடியும் என்றால் அந்த வல்லபத்தை இப்போது நாம் எப்படி அறிய முடியும்?

எட்டு வகையான சொர்க்கத்தை ஆள ஒன்பது வகையான வலுவுடைய ஒரு தேகம் உனக்கு தரப்பெறப் போகிறது.

இப்போது உயிர் ஒரு உலகத்தில் இருக்கிறது. உடல் ஒரு உலகத்தில் இருக்கிறது. இரண்டும் கட்டப்பட்டிருக்கிறது. ஒன்றை அவஸ்தை படுத்தினால் ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்து கொள்ளும். இனி தரப்பெறப் போகிற- படைக்கப்பெற போகிற உடலில் உயிர் உடலுடன் பிணைந்து இருக்கப் போகிறது. இந்த உடலை நீ பெற்றிடவே இங்கு வைக்கப் பெற்றிருக்கும் வணக்கங்கள் அனைத்தும். இதை நீ அலட்சியம் செய்யலாமா? ஞானத்திற்காக மட்டும் உங்களை சேர்க்கவில்லை. உங்களை யுக வித்துக்களாக ஆக்க வேண்டும் என்று தான் சேர்த்திருக்கிறோம்.

மன்னிப்பு வாசல் அடைக்கப்பட போகிறது என்றால் என்ன?

பாரபட்சம் பார்க்கும் இந்த நிலையை விட்டு நீதி தேகத்தில் நாம்

ஏறுவதைத்தான் அப்படி குறிக்கிறார்கள். நீதி தேகம் எடுத்த பிறகு அவரவர் செய்யும் நன்மை தீமைப்படிதான் தீர்ப்பு வழங்கப்பெறும்.

✦✦✦✦✦✦

தெய்விக ராஜாங்க நீதி மன்றத்தில் ஒரு தராசின் தட்டில் நன்மையும் மற்ற தட்டில் தீமையையும் வைத்து எடை போட்டு எந்த தட்டு கனத்து இறங்குகிறதோ அதற்கு தக்க படியே தீர்ப்பு அளிக்கப் பெறும். நன்மையான செயல் தீங்கைவிட அதிகமாயிருந்தால் அந்த ஆத்மாவானது சுவர்க்கத்திற்கு போக தகுதியுடையதாக இருக்கும். ஆனால் தீமையானது நன்மையை விட அதிகமாயிருந்தால் அந்த ஆத்மாவானது நரகத்தில் தள்ளப்படும். அந்த தராசின் தட்டானது ஒரு மயிரிழை எதாவது ஒரு பக்கத்தில் இறங்கி கொண்டு நின்றால் போதும். அதற்கு தக்கபடி அந்த ஆத்மாவுடைய கதி நிர்ணயிக்கப் பெறும்.

நன்மை தீமையை எடை போட்டு பிரித்துஎது அதிகமாக இருக்கிறதோ அதற்கு தக்கப்படி வெகுமதியோ, தண்டனையோ விதிக்கப்படுகிறது. அதோடு அல்லாமல் தனித்தனியே ஒவ்வொரு நன்மையும் ஒவ்வொரு தீமையும் பிரித்து கணக்கிடப்பெற்று நன்மைக்கு தகுந்தவாறு இன்பத்தையும், தீமைக்கு தகுந்தவாறு தண்டனையும் பெறுகிறார்கள். உதாரணமாக எந்தஒரு நன்னெறி ஆத்மாவானது தான் செய்துள்ள நற்காரியங்களில் சுவர்க்கம் புகுத்த தகுதியுள்ளதோ அந்த ஆத்மாவின் கணக்கில் இருக்கும் ஒரு சில தீங்குகளுக்கும் தற்காலிகமான சிறிது தண்டனையை அடையாமல் அது தப்ப முடியாது.

அது போலவே ஒரு தீங்கான ஆவி தான் செய்த அக்கரமச் செயலுக்காக நரகத்திற்குப் போக சபிக்கப்பட்டிருந்தாலும் அதை

நரகத்திற்கு தள்ளும் முன் அது செய்துள்ள சிறு சிறு நன்மையான காரியங்களுக்காக சில இன்பங்களை அனுபவிக்கும் படி செய்யப் பெறுகிறது. அதாவது நன்னெறி ஆத்மாவானது ஒரு சில குற்றங்கள் செய்து விட்டு அதற்கு மன்னிப்பு தேடாமல் இருந்து விட்டால் அந்த குற்றங்கள் அளவிற்கு அது தண்டனையை அனுபவித்த பின்னரேதான் நன்னெறியாளர்கள் திருக்குழாத்தில் சேர்க்கப் பெறுகிறது.

✦✦✦✦✦✦✦

திருக்குறளைப் பற்றி சபையில் பேச்சு நடந்தது.

'இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார்மாட்டு.''

என்ற திருக்குறள் சபையில் பேசப்பெற்று அதற்கு விளக்கமும் கொடுக்கப் பெற்றது. இருவினை என்பதற்கு. ஒரு வினை நல்வினை என்றும், மற்றொன்று தீ வினை என்றும் விளக்கம் கொடுத்து பிறவியர்கள் பேசினர். அப்பொழுது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்:

''தீ வினை சேராமல் போவது சரி, நல்வினையும் சேராதென்றால் அது எப்படி பொருந்தும்? வள்ளுவர் அப்படியா சொல்லியிருப்பார்? ஒரு வினை பிறப்பு, மற்றொரு வினை இறப்பு'' இந்த இருளுக்குள்ளே தானே இவன் வாழ்க்கை. இந்த இரு வினையையும் போக்குவதுதான் ஆசான் திருவாக்கு.

அடிக்கடி இங்கு வந்து எம் வார்த்தைகளினால் சுத்திகரிக்கப்படா விட்டால் யாராயிருந்தாலும் அதோ கதி தான். மற்றும் புனல் ஜென்மத் திருநாள் வருடந்தோறும் அவசியம் கொண்டாட வேண்டும் என்று சட்டம் விதித்திருப்பதும் இந்த அவலநிலைக்கு யாரும் போகக் கூடாது என்பதற்காகவே தான்.

✦✦✦✦✦✦✦

ஒரு தடவை ஆண்டவர்கள் சென்னைக்கு சென்றிருந்தார்கள். சென்னை விஜயத்தை முடித்துக் கொண்டு மறுநாள் காலை 4.00 மணிக்கு புறப்பட்டார்கள். பிறவியர்கள் ஆண்டவர்களை வழியனுப்ப இரண்டு பக்கங்களிலும் நின்றிருந்தார்கள். ஆண்டவர்கள் ஒவ்வொரு பிறவியராக பார்த்துக்கொண்டே இருந்தபோது வேன் புறப்பட்டுவிட்டது. பின்பு பல கார்களில் பிறவியர்கள் ஆண்டவர்களின் வேனை பின் தொடர்ந்து சென்றார்கள். மீனம்பாக்கம் வந்தவுடன் ஆண்டவர்கள் வேனை நிறுத்தச் சொல்லி வேனினுடைய ஹெட் லைட்டை போடச் சொன்னார்கள். ஆண்டவர்கள் வேனினுடைய புட் போர்டில் ஏறி நின்றுகொண்டு கீழ் கண்டவாறு பிள்ளைகளை பார்த்து அருளிச் செய்தார்கள்:

“ இந்த உலகத்தில் யாருமே இல்லை. நாம் மட்டும் தான் இருக்கிறோம். நாம் தேவர்கள். உன்னை ஒருவன் தானாக கையெடுத்து வணங்கினால் அங்கு ஒரு மனிதன் இருக்கிறான் என்று நீ உணர்வாயாக”

மிருகங்களுக்கு அந்தந்த நிலைக்கு தகுந்த அறிவு உண்டு. மனிதனுக்கு ஜீவன் உண்டு. உலகிலுள்ள எல்லா ஜீவ, தாவர ராசிகளின் இனங்களும் மனிதனுக்குள் இருக்கிறது.

தேக பலத்தில் வைத்து பலமான மிருகம் யானைதான். அதனால் ஒரு மரத்தை அசைக்க முடியும். ஆனால் மனிதன் தன்தேக பலத்தைக் கொண்டு மரத்தை அசைக்க முடியுமா? மனிதன் அதை எப்படி செய்வான்? மனிதன் ஒரு ஆயுதத்தை செய்வான். அந்த ஆயுதத்தினால் மரத்தை சாய்க்க முடியாவிட்டால் வேறோர் ஆயுதத்தை செய்வான்.

அந்த ஆயுதத்தைக் கொண்டு மரத்தை எப்படியாவது அவனால் வெட்டிச் சாய்க்க முடியும். இதை எப்படி அடைகிறான்? இவனுள் அறிவு என்ற ஒரு பொருள் இருப்பதால் தானே இதை யெல்லாம் மனிதனால் செய்ய முடிகிறது. ஆனால் அறிவு மனிதனுக்கு இந்த வேலை செய்வதற்கா கொடுக்கப் பெற்றது? இல்லை. அவன் தன்னை அறிந்து இறைவனை அடைவதற்காகவே மனிதனுக்கு அறிவு கொடுக்கப்பெற் றது.

சர்வாதிகாரம் படைத்த ஒரு அரசனும் எமனதிகாரத்திற்குள் அடக்கம் தானே! ஆம். அந்த எமனை அதிகாரம் பண்ணும் ஓர் பேராண்மை அதிகாரண வல்லப ரூபத்திருமேனியரைத் தேடி அடைவதே மனுவின் முதற்கடமை. அந்த அமலாண்மைப் பிரபுவை னேரில் னிஜத்துவ னிஜதரிசனையாகக் காணும் தேவக் கண் இங்கே கொடுக்கப்பெறுகிறது என்றால் என்ன காலம் இது! இதைக் கேட்டாலே 'அது முடியுமா' என்று திகைத்துப் பிரமிக்கும் உலகோர்களுக்கிடையே உனக்கு மட்டும் வாய்த்தது என்றால் அது அதிசயமான பூரண கால வசந்தம் அல்லவா?

இப்படி கட்டாயம் னினைக்கா விட்டால் னீ இந்த மெய்யை எவ்வளவு கனம் கொண்டு பற்றிக்கொண்டாலும் அது உன்னை விட்டுப் போய்விடும். மதி கெட்டு வருகிறது. உஜார். ஜாக்கிரதை என்ற னினைப்பு இல்லாவிட்டால் னாசமேதான்.

✦✦✦✦✦✦✦

னாம் சபையில் உள்ளவர்கள் யாரிடமாவது குற்றம் காணும் போது, "னாம் அவர்களை விட மட்டமாக இருக்கிறோம். னாம் ஒரு

தாசிக்குச் சமானம். அப்படி இருக்கும் போது மற்றவர்களை நாம் என்ன குறை கூறுவது'' என்று எண்ண வேண்டும்.

ஒரு முக்கியமான விஷயம் சொல்லப் போகிறோம் கவனமாய்க் கேள். இந்நேரத்திலிருந்து, உங்களுக்குள் ஏற்றத்தாழ்வோ வேற்றுமையோ இருக்கக்கூடாது. உங்களுக்குள் கீழ்மேல் எல்லாம் ஒன்றும் கிடையாது. நீண்ட காலமாக இருப்பவர்களுக்கும், நேற்று வந்தவராயிருப்பவர்களுக்கும் வித்தியாசம் இருக்கக்கூடாது. புதிதாக இன்று சபையில் அங்கத்தினராக சேர்ந்தவரையும் உன் சகோதரனாக எண்ணி உயிர் ஒட்டுதலுடன் இருக்க வேண்டும். நாம் எம் அங்கமாக ஏற்றுக் கொண்டவுடன் அவன் எம் அங்கம் தான். இது சத்தியம். நீ துளி கூட வேற்றுமையாக எண்ணக்கூடாது. ஏனெனில் அடுத்து ஒரு கொடுமையான நேரம் வரப்போகிறது. இதை இப்பொழுது சொன்னால் உன் அறிவில் படாது. அதாவது இந்த ஆகாயத்தில் இருந்து ஒருவித நெருப்பு பூமிக்கு இறங்கும். அது உன் தேகத்திலுள்ள மயிர்க்கால்களை தீய்த்துவிடும். அந்த அவஸ்தையிலிருந்து தப்ப வேண்டுமெனில், இப்போதிருந்தே உன் பிறவியாரிடத்தில் உயிர்ப்பிடியாக இருக்க வேண்டும். இது சத்தியத்தில் வருவது. சத்திய நடக்கையில் வருவது. என்ன? இன்றிலிருந்து உயிர் பிடியாய் இருப்பீர்களா?

✦✦✦✦✦✦✦

15.12.71

பொங்கல் பாடலில் '' பாழைப் போக்கி பலன் கை குலுக்கிட '' என்ற வரி வருகிறது. பாழைப் போக்கி என்பதற்கு ஆண்டவர்கள் சாவைப் போக்கி என்று விளக்கம் கொடுத்தார்கள்.

'' மனிதர்களை நவக்கிரக கோள்களின் ஆட்சியிலிருந்து விடுவிப்பவர் ''கோணரி சாமியார்'' என்று விளக்கம் தந்தார்கள்.

அண்டத்தில் கோளாறு. ஆகவே பிண்டத்திலும் கோளாறு ஏற்பட்டிருக்கிறது. அதை இந்த கோளரி சாலை அய்யர் தான் தீர்ப்பார். நவக்கிரக கோளின் தொல்லை வந்து தீண்டி நரக அவஸ்தைக்கு போகாமல் மாற்றி வைப்பவரே கோளரி அய்யர்.

தேசிகர் - யார்? தேசியெனும் மன வசிய குளிகையை கொண்டவர். எமன் அஞ்சுக் கூடிய குளிகையை கைக்கொண்டவர் எவரோ அவரே தேசிகர்.

நேதி என்பதற்கு "இவனுள் இருக்கும் தீ நேய்தல்" என்று விளக்கம் கொடுத்தார்கள்.

உலகில் உள்ளவர்கள் ஆச்சாரம், அனுஷ்டானம் என்று சொல்லி கோயில் குளங்களுக்கு சென்று பூஜை புனஸ்காரங்கள் செய்தும் ஒரு பலனும் இல்லாமல் இருக்கிறது. முமும் அந்த மாதிரிதான் இருந்தோம். ஆண்டவர்களிடம் வந்து சேர்ந்த பின்புதானே நிஜமான பலனை பெற்றோம் என்று சபையில் பிறவியர்கள் பேசும் பொழுது பிறந்த தெய்வ வாக்கியம்:

"இவன் காலமெல்லாம் யாரை கும்பிடுகிறான். ஈசனை நினைத்துதானே. கடைசியில் யாரை சந்திக்கிறான் எமனைத்தான். என்ன காரணம்? இவன் செயலில் ஈசனுக்கு பகைமை, எமனுக்கு நேசம். ஆனால் வாயில் மட்டும் ஈசன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறான். காலமெல்லாம் யாரை உண்மையாக கும்பிட்டிருக்கிறான்? "எமனைத் தான்!" அதனால் தான் அந்த எமன் வருகிறான்.

ஈசன் என்று விக்கிரகத்தை விலைகொடுத்து வாங்குகிறார்கள். அதை இவனுக்கு விற்றவன் கும்பிட்டு கொண்டா இருந்தான்? விற்பனைக்கு வந்ததை விக்கிரயம் செய்து வாங்கி கும்பிடுவது என்ன முடத்தனம் பார்? கோயில் கட்டுவது கைங்கர்யம் என்கிறார்கள்.

பூமியில் ஒரு இடத்தில் இருக்கும் மண்ணையும் கல்லையும் இன்னொரு இடத்துக்கு எடுத்து வந்து கட்டிடம் கட்டுவதா கைங்கரியம்?

கடவுள் என்பது தங்கத்துக்குள், மரத்துக்குள், செம்புக்குள் என்று சொன்னார்கள்? ஆனால் கடத்திற்கு உள் என்று சொல்லியிருந்தும் ''கடவுளே'' என்று முணுமுணுத்துக் கொண்டு ஆகாயத்தை நோக்கி மேலே பார்த்து கை விட்டுகிறான்! இது என்ன அதிபாதகமான தோசித்தனம் பார்த்தாயா? வேறென்ன?

அன்பே சிவம். சிவத்தைக் கண்டவர்கள் யாராவது உண்டா? இல்லையே. சிவம் என்றால் உருவமில்லாதது. அதன்மேல் அன்பு செலுத்த முடியுமா?

மரத்தின் மேலும் கல்லின்மேலும் போய் அன்பு செலுத்த முடியுமா? அப்போது மறு உருவில் ஈசன் ஒருவர் வருகிறார் என்று தெரிகிறதல்லவா? தாயுமிலி தந்தையுமிலி - ஊணுமிலி, உறக்கமுமிலி - யாராவது பார்த்திருக்கிறீர்களா? இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

முன்பு வடலூர் வள்ளற்பிரானவர்கள் தெருத்தெருவாகக் கூவினார்கள் - நாமோ இங்கு வந்தவர்களுக்குத்தான் சொல்கிறோம்.

இங்கு வந்து இவ்வளவையும் கேட்டுவிட்டு ''இங்கு விக்ரகம் இல்லையா?'' என்கிறான்.

சபையில் சைவப் பெரியார்களான மாணிக்க வாசகர், ஞான சம்மந்தர் இவர்களைப் பற்றிய பேச்சு எழுந்தபோது பிறந்த தெய்வ வாக்கியம்:

நூல்வரில் மாணிக்கவாசகருடைய சிவபுராணம், முதலில் எழுதப் பெற்றது. அதை கிணற்றுக்குள் ஒளித்து வைத்திருந்தார்.

என்ன தொந்தரவுஅவருக்கு வந்து கொண்டிருந்தால் அவர் அப்படிச் செய்திருப்பார்? முல்வருக்கும் ஒரு மாணுக்கனுவது உண்டா? இல்லை.

வள்ளல் இராமலிங்க சுவாமிகளை ஏன் விரோதித்தார்கள்? அவர்கள் நிஜமான விபூதியை பெற்றவுடன் சாம்பலை பூசுவதை விட்டு விட்டார்கள். உடனே பொய்க் குருமார்கள் ''பார்! பார்! நம்ம ஜாதியிலேயே அவர் இல்லை'' என்று விரோதிக்க தாண்டினார்கள்.

✦✦✦✦✦✦✦

சூரியனுக்கு மேல் சந்திரன் இருக்கிறான். அதற்கு மேல் தாரகா கணங்கள் இருக்கின்றன. பூமியிலிருந்து சூரியன் எவ்வளவு தூரமோ அதைப்போல் ஒன்னேகால் பங்கு உயரத்தில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் இருக்கிறது. அதற்கு மேல் ஒன்னரை பங்கு உயரம் இருக்கும் சந்திரனுக்கும் தாரகா கணங்களுக்கும் உள்ள தூரம். உடம்பில் குளிர்ச்சி முந்தியா! அல்லது உஷ்ணம் முந்தியா?

அண்டத்திற்கு ஒத்தது பிண்டம். அப்போது சூரியன் தானே முந்தி இருக்க வேண்டும்.

✦✦✦✦✦✦✦

'' **ம**ன்றுண்ட மன்னகரம் மினுக்குவே சிகனெல்லாம்'' என்ற தீர்க்கத் தரிசன தேவ அறத்தைப் பற்றி எழுதியுள்ள வேத பாடலை சபையில் பாடப் பெற்ற போது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்:

''மண் ஆண்டவர்கள் மண் ஆகிறார்கள், மண்ணை ஆண்டவர்கள் யாரும் விண்ணை ஆண்டது கிடையாது''

✦✦✦✦✦✦✦

சாணூர் குல முயகம் தீர்க்க தரிசன பாடல் பாடப்பெற்ற போது ஆண்டவர்கள் அந்தப் பாடல் வரிகளுக்கு விளக்கம் கொடுத்தார்கள். பாடலும், விளக்கமும் கீழே கொடுக்கப் பெற்றுள்ளது:

"கேடு வருங்காலம் கிருஷ்ணு உன் னற்காலம்"

வடலூர் ஆலயத்தில் இடி விழுந்து கெட்டது நடந்தது. ஆனால் அந்த நேரத்தில் தான் சித்திரை மாதம் 1938 ஏப்ரல் மாதம் எல்லோரையும் கூட்டி சபை ஆரம்பிக்கப் பெற்றது.

"சரித்திரத்திற்கோர் மகனே"

ஆதம் முதலாக சொராஷ்டிர முயகம் முதலாக வடலூர் வள்ளல் வரை நீண்ட தெய்வ சரித்திரத்திற்கு இன்று ஓர் மகனாய் வந்துள்ளாய்.

"கலங்காதே என் மகனே"

இப் பெருங்காரியத்தை – சைவத்தை – கலியில் எப்படி நிலை நாட்டப் போகிறோமோ என்று கலங்காதே ... ... என் மகனே.

"தண்டாயுதத் தோடே சத்தம் ஒன்று தான் பிறக்கும்"

தண்டாயுதம். தன்–தண்ணீர் – தண்ணீராலான ஆயுதம் – தண்டாயுதம்.....

"ஊறல் மலையில் விருட்சம் அலை அலையாய் வளருது"

ஊரல் மலையில் ஒரு விருட்சம் அலை அலையாய் – சென்னையில் சமுத்திர அலை – குமரியில் சமுத்திர அலை – பசிபிக் மகா சமுத்திரத்தில் அலை – அதுபோல ஆண்டவர்களைத்தேடி அலை அலையாய் கிளம்பி பம்பாய், கல்கத்தா, டில்லி அங்கெல்லாம் இருந்து வளர்ந்து மக்கள் விருட்சம் அலை அலையாய் வருகிறது.

முதன் முதலில் தோன்றியது ஒரு பிரகாசம். அதுதான் இந்த உலகத்தையும் - சர்வ ஜீவராசிகளையும் படைத்து பிறகு மனிதனை படைத்தது. அந்த பிரகாசம் தான் இப்போது இங்கு உன் முன்னால் பேசிக் கொண்டிருக்கிறது. இந்த மனுத்தலே என்ன உன்னதம் உடையது என்று உனக்கு தெரியாது. அந்த ரூப ரூபமற்ற பிரகாசம் இப்போது ரூபத்தில் வந்திருக்கிறது.

திருச்சி மலைக் கோயிலில் நடராஜ பெருமானின் சிலை இருக்கிறது. அந்த சிலையில் ஒரு கையால் தன் தலையில் பூப்போடுவதாக உள்ளது. இந்த சிலை தன்னையே தான் அர்ச்சனை செய்து கொள்ளும், பாவனையுடன் நிற்கிறது. யாம் எழுதிய பாக்களை பாடி எம்மையே தோத்தரிக்கிறீர்கள். அர்ச்சிக்கிறீர்கள். உம்மால் அப்படி பாடல்களை எழுதி அர்ச்சிக்க முடியாது என்பதால் நாம் எழுதிய தோத்திரப் பாடல்களை கொண்டே எம்மை தோத்திரிக்கிறீர்கள் என்பதை தீர்க்க தரிசனமாக காட்டவே இந்த சிலை அமைக்கப்பெற்றுள்ளது.

சிவபெருமானே உலகில் வந்து அவதரிக்கும்போது அவர்கள் ஒருவருக்குதான் கொடியை ஏற்றி சுதந்திரமாய் பறக்கவிட உரிமை உண்டு. அந்த நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற நம்பிக்கை கால காலமாக சைவமதத்தில் இருந்து வருகிறது. அந்த நம்பிக்கைக்கு அடையாளமாகத்தான் இன்றும் கோயில்களில் கொடி யேற்று திருவிழா கொண்டாடும் போது கொடியில் ஒருநுனியை பறக்காதபடி கட்டி விடுவார்கள்.

ஈசனே மனுவாக வந்துள்ள இந்த நேச முகம் ஒன்றுக்குத் தான் எமன் அஞ்சுவான். எம் நினைவு சிறிது இந்த பக்கம் திரும்பினால் இவன் நான்முகமாக இருந்தாலென்ன! ஆறுமுகமாக இருந்தாலென்ன! எட்டு முகமா இருந்தாலென்ன! நூறு முகமா இருந்தாலென்ன! அதோ கதி தான். எம் முகம் ஒன்றுக்குத்தான் எமன் அஞ்சுவான்.

சதுர்யுகத்திலும் எமன் வல்லபத்தை அடக்கும் அமல் யார் கையிலிருந்தது? அருபத்தில் ஈசனிடந்தான் இதுவரை இருந்தது இந்தப் பவர் ஒர் அரசனிடம் இருந்தால் என்ன போடு போடுவான், அந்த வல்லாளை அடக்கும் பவர் இதுவரை யாரையும் நம்பிக் கொடுக்கப் பெறவில்லை. இன்று உன் கண்முன் உன்னைப் போல பிரத்தியட்சத்தில் குமும் மனுத்தூலத்தில் இருந்தாலும் அந்த வல்லாளை அடக்கும் பவரை பெற்றிருக்கிறோம்.

✧✧✧✧✧✧✧

உனக்கு எதிரி யார் தெரியுமா? எமன்தான். எமன் தான் உன்னுடைய முதல் விரோதி. எப்பேர்ப்பட்ட விரோதி தெரியுமா? ஜென்ம விரோதி. உன்னுடைய மற்ற எதிரிகளிடம் பணிந்து போயாவது மன்னிப்பு கேட்டுக் கொள்வதன் மூலமாவது, கை கால்களில் விழுந்தாவது கெஞ்சிக்கேட்டுக் கொண்டாவது விரோதத்தை நீக்கிக் கொள்ளலாம். ஆனால் நீ என்னதான் செய்தாலும் எமனுடைய விரோதத்தை போக்கிக் கொள்ளவே முடியாது. எப்போதும் அவன் உன் எதிரிதான். உன் ஜென்ம விரோதி வசிக்கும் தெரு வழியாக நீ செல்ல வேண்டியிருந்தால் நீ எவ்வளவு ஜாக்கிரதையாய் செல்வாய்? ஆனால் உனக்கு சினேகிதனாக உள்ள ஒருவன் உன் ஜென்ம விரோதி கண்டு அஞ்சக் கூடிய ஒரு தைரியவான் அதே தெருவில் இருந்தால் நீ எவ்வளவு துணிவாக செல்வாய்? அதுபோல எமன் கண்டு அஞ்சக் கூடிய ஒரு வல்லபரின் நேசத்தை பெற்றுக் கொண்டால் உன் விரோதியிடம் உள்ள பயம் நீங்கிவிடும். அது உனக்கு எவ்வளவு நல்லது. நீ எப்போதும் எமன் உன் விரோதி அவனை நீ

எப்படியாவது வெல்லவேண்டும் என்று சதா எண்ணிக்கொண்டேயிருக்க வேண்டும். அப்படியிருந்நால் நீ எம் எண்ணத்திற்குள் ஆகிவிடலாம்.

✧✧✧✧✧✧✧

ஒருவனுக்கு நோய் இருக்கிறது. அந்த நோய் சுண்ணாம்பு சத்து குறைவினால் உண்டாகியிருக்கிறது என்று தெரிகிறது. அவனுக்கு வந்த நோயை குணமாக்க ஒரு சட்டி சுண்ணாம்பை அவனுடைய உடம்பில் செலுத்த வேண்டும். நோய் ஆரம்பித்த உடனே வந்நால் வெற்றிலையில் சுண்ணாம்பை தடவி கொஞ்சும் கொஞ்சுமாக கொடுத்து விடலாம். இப்படியே அவனுடைய உடலுக்கு வேண்டிய அளவு சுண்ணாம்பை கொடுத்து நோயை முற்றிலுமாக குணப்படுத்திவிட முடியும், நோய் முற்றின பிற்பாடு வந்நால் என்ன செய்ய முடியும்? பிறவிப்பிணி உன்னை அண்டத்தான் போகிறது. அதற்கு என்னவைத்தியம் செய்தாய்?

அனியாய மரணத்தைத் தடுக்கும் வைத்தியன் தான் ஜீவபண்டிதர். அவருடைய மருந்தான கவனக்குளிகை, அமிர்தம் மிகவும் மேம்பட்டது என்று இன்னும் நம்பிக்கை உனக்கு வரவில்லை. ஆகையால் தான் உனக்குத் தோய மாட்டேன் என்கிறது. தடுக்க முடியாததும் ஜெயிக்க முடியாததுமான கோரத்தை அந்த எல்லையில் நீ பயப்படாதே என்று கூறி சிகிச்சை செய்பவன் அந்த ஆபத்வாந்தவன். வீடு, வாசல், மக்கள், பொன், மண், புலன்கள் – எல்லாம் அந்த மரண கோர எல்லையில் பயனற்றவை. குளத்தில் நீர் நிறைந்திருக்கும் போது பறவைகள் முதலியன அங்கிருக்கின்றன. ஆம்பல் முதலியனவும் உடன் செழிக்கின்றன. நீர் வற்றிப் போனதும் பறவைகள் பறந்து ஓடிவிடுகின்றன. ஆனால் ஆம்பல் முதலியவைகளோ அப்படியே காய்ந்து போகிறது. நீ பறக்க தெரிந்துகொள். தப்பிக்க வழியைபார்.

இப்போது உன் எதிரில் குருபிரான் இருக்கும் போதே பெற்றுக்கொள். பல்லு இருக்கும்போது கரும்பு தின்னாமல் எப்போது தின்னுவது?

✦✦✦✦✦✦✦

நான் உன் முகம் பார்த்து பேசுகிறேன். ஏன் பேசுகிறேன்? எனக்கு என்ன அவசியம்? படிக்காதவனும் ஒன்றும் தெரியாதவனும் இங்கு எவ்வளவோ தவ ஏற்றத்தில் இருக்கிறானே – நீ படித்து எல்லாம் தெரிந்தும் இந்த உலகப் பெராக்கிற்காக அலைகிறாயே? எவ்வளவு நாளைக்கு?

நீ ஆயுளெல்லாம் அன்பு வைத்திருந்த உன் கடமே உன்னை கடைசி காலத்தில் கைவிட்டு விடுகிறது. அந்த எல்லையில் உன் கடத்துள் புகுந்து உன்னை எமனிடமிருந்து காப்பாற்றும் செயலுக்கே கடவுள் செயல் என்று பெயர். உனக்கு தேவ ஆசானாக இருப்பவரே அரூபத்தில் கடத்துக்குள் நுழைந்து அந்த அரூப எமனை விலக்கும் அதிமகோன்னத செயலுடையவர்களைத் தான் கடவுள் என்று சொல்ல வேண்டும்.

அரூபத்தில் வந்து உன்னை தாக்குகிற குளிருக்கு ரூபத்தில் ஒரு கம்பளியாகிய பொருளை தேடிக் கொள்கிறாய். அரூபத்தில் வந்து உன்னைத் தாக்குகிற நோயைக் குணப்படுத்த வேண்டி ரூபத்தில் மருந்து சாப்பிடுகிறாய். மாரணமாகிய மரணமும், பிணிகளிலேயே எக்கோடி காலத்துக்கும் தீர்க்க முடியாத பிணியாகிய பிறவிப்பிணியும், நரகமோ சொர்க்கமோ போவதற்கு தலைவாசற் படியாகிய சாவும் அரூபத்தில் தான் வருகின்றது. அவற்றுக்கு மட்டும் அதற்காகவே ரூபத்தில் வந்துள்ள மெய்க் குரு பிரானை அறிவு ரூபமான அரும் பொருளை இவன் தேடிக் கொள்வதேயில்லை.

குருவின் பார்வையால் மலைப்போல் வெய்மை இருந்தாலும் அதுவும் ஒரே பார்வையில் பொசுங்கி விடும். பாவியை பரமபதத்திற்கு ஆக்குவதென்றால் அந்த செயல் என்னவாக இருக்கும்?

இக் கடத்தை நீக்கி உன்னை அக்கடத்துள் ஆக்கும் வரை உலக சங்கடம் உன்னை விட்டு நீங்காது.

✧✧✧✧✧✧✧

மாட்டிற்கு கால், வாய் இவைகள் கருப்பாய் இருப்பதற்கு காரணம் இந்த இடங்களை பாம்பு போன்ற விஷஜந்துக்கள் தீண்டினால் விஷம் ஏறாது. மாட்டுக் குளம்பு - மாட்டு குளம்பில் உள்ள கறுப்புத் தோல் பட்ட மாத்திரத்தில் பாம்பு இறந்து போகும். இது மாட்டை விஷச் ஜெந்துக்களிடமிருந்து பாதுகாக்கிறது. இதைத்தான் பாம்பு பிடிக்கிறவர்கள் 'குளகதாளி' என்று கூறுகிறார்கள். மாட்டின் உடலில் பாம்பு தீண்டிவிட்டது என்றறிவது எப்படி என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால் அதன் புருவ மயிரை பிடுங்கினால் தானே தெரிய வந்துவிடும். அப்போதே மாட்டிற்கு விஷம் ஏறி விட்டது இறந்து விடும் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

✧✧✧✧✧✧✧

நாலாயிர திவ்விய பிரபந்தத்திலிருந்து மணிவண்ண பூதங்கள் என்ற சொற்கள் வரும் பாடலை சபையில் ஒரு பிறவியர் பாடியபொழுது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்:

இங்கு பூதங்கள் என்றால் காற்று, தண்ணீர், மண், ஆகாயம், அக்கினி என்று பொருளல்ல, அறிவிலும், தெய்வீகத்திலும், மனத்திலும் மற்றவர்களோடு ஒப்பிட முடியாதவர்கள் என்று பொருளாகும்.

✧✧✧✧✧✧✧

புலி இறந்த பின் அதன் தோலை எடுத்து அலங்காரமாக மாட்டிக் கொள்கிறாய். அது கொலைப் பாதக பிராணியாயிற்றே! உன் மீது காலமெல்லாம் அன்பு செலுத்தி உனக்காக எல்லாம் செய்த உன் தகப்பனின் பல்லை ஏன் நீ மாட்டிக் கொள்ளக் கூடாது? அவன் நரகலாகிவிட்டான். ஆகவே நீ அவ்வாறு செய்வதில்லை. புரிகிறதா?

தன்னை அறிய வேண்டும் என்ற கடமையை இவன் தலையில் இறைவன் விதித்திருக்க அந்தக் கடமையைச் செய்யாமல் நரகத்திற்கு போவதால் எல்லோரும் இவனை புறக்கணிக்கிறார்கள்.

உலகில் யாராவது இறந்து விட்டால் "தவறிப் போனார்கள்" என்று கூறுகிறார்களே என்ன காரணம்? ஒருவன் இறந்து போனதை ஏன் தவறிப் போனதாகக் கூற வேண்டும்? யாராவது இப்படிச் சொல்லச் சொல்லி – கொடுத்தார்களா? இல்லையே! ஏதோ ஒரு செயலை செய்ய வந்தவன் அதைச் செய்யத் தவறி விட்டான் என்பதனாலேயே அப்படி சொல்லுகிறார்கள் என்று தெரிகிறதல்லவா? இவன் "தன்னை அறிவதை கடமையாக விதித்திருக்க" அதைச் செய்யத்தவறினதால் எமன் கைப்பட்டு நரக அவஸ்தைக்கு போகிறான்.

மெய்யில் தலையிட்டவர் பெரியோர்–தலையிடாதவர் இழி குலத்தோர். இவ்விரண்டு சாதி தவிர வேறு சாதியே கிடையாது. மேலாம் பதமாகிய சுவர்க்கப் பதம் பெற சாதிப்பவர் மேல் ஜாதி, நரகமாகிய கீழ்பதத்தை பெறச் சாதிப்பவர்கள் கீழ் ஜாதி.

வெவ்வேறு ஜாதியைச் சேர்ந்தவன் என்று ஒவ்வொருவனும் சொல்லிக் கொள்கிறான். ஆனால் சாகும்போது வெவ்வேறு மாதிரி சாகக் காணோமே. எல்லோரும் ஒரே மாதிரியாக நாறிச் சாகிறானே? "சாதியாவது எவரறிவார் சருவ உடலும் ஒன்றாச்சே – தன்னையறிந்து

சிவமான ஜாதி பெரிய சாதியென்று சாற்றும் மறைகள் சத்தியமே''

''சாதி இரண்டொழிய வேறில்லை'' இறைவன் ஒரு சாதி. எமன் ஒரு சாதி ஆக இரண்டு சாதியைத் தவிர வேறில்லை. இறைவன் மேல் சாதி, ஈசனிடம் யுகங்கோடி காலம் நித்திய சுவர்க்கம் கிடைக்கும். எமனிடம் யுகங்கோடி காலம் மாறா நரகம் கிடைக்கும்.

✦✦✦✦✦✦✦

''அறுசுவை அருந்துபவர்களுக்கே பேரறிவு உண்டாகும். '' என்பது தெய்வமவர்கள் வாக்கியம். இது பற்றி நம் ஆண்டவர்களின் ஆதிமான்மியத்தில் ஜீவ சிம்மாசனப் பருவத்திலே காணக்கிடக்கும் திருவசனத்தில் ''இவ்வுலக மண்பரப்பிலே எண்ணில் கோடி கோடிகளா கிய ஜீவ ராசிகளுக்கெல்லாம் இல்லாத மனுசதனகோலமெடுத்து வந்து நிறைந்திருக்கும் ஜீவான்ம கோடிகளுக்கு மட்டும் அறுசுவையும் அதன் உணர்ச்சி விருப்பமும் தூலவித்தினிலே கவனித்து படைத்து பரமான் மாவும் ஜீவான்மாவும் உசும்பு நடப்பினுக்கு உள்ளூற உற்பவித் தெழும்பும்படிச் செய்வித்து - அதனில் அதி விருப்பம் ஒவ்வொரு வருக்கும் உண்டுபண்ணி வைத்து - அவ்விருப்பம் நிறைவேறுதன் பொருட்டாய்ப் பார்வையில் சிந்தித்துக் கையில் கிடைக்கும்படிக்கு வெளித் தோற்றமாக விரிக்கப் பெற்றுள்ள அண்டத்திலும் மகாப் பெருக்கமாக நுணிகி நுணிகி அனந்தம் பலசுவை உற்பத்திக் கோடிகள் நிறைந்து அதற்குத் தகுந்த பாடின்றி எளிதில் பெறச் செய்து வைத்திருப்பதானது எதற்காக வென்ற விறுப் பிரச்னையை... ஓதவும்....'' என்று வரும்போது ஆண்டவர்கள்:

''அறுசுவை போய் அடங்குகின்ற மறைவிடத்தைக் கண்டவர்க ளெல்லாம் மாறாத புகழுடம்பு பெற்ற மாதவச் சிவராஜர்கள் ஆகத்தான் சிருஷ்டியின் இந்த விரிப்பு.

அறுசுவை உணவு இன்றி குற்றத்தையே ருசியாக உண்பவ னுக்குப் பேரறிவு உண்டாவதற்கில்லை. மேல் நாட்டாரின் ருசி குற்றத்தையே நாடி இருப்பதால் அவர்களுடைய செயலெல்லாம் எமபதத்திற்கு இட்டுச் செல்லுவனவாகவே இருக்கும். ஒருக்காலும் பரமபதத்திற்குத் திரும்பாது. அவ் வான் செயலில் ஆகவே முடியாது.''

இந்த அகில உலகத்திலும் நம் தெக்ஷண பாகத்தில் மட்டும்தான் அறுசுவை கொடுக்கும் தாவரங்களும் நறுமண மலர்களும் எல்லாப் பருவங்களிலும் பலன் அளித்துக் கொண்டே இருக்கின்றன. ஆகையால் ஜீவ வாழ்க்கைக்கு உரியவர்கள் எங்கு இருப்பார்கள் என்று தெரிகிறதா?

நாம் இருக்கும் இந்த தேசம் தான் எல்லா நாட்டிற்கும் ஞான வித்து கொடுத்தது. ஏசுநாதருக்கும் நபிகள் நாயகத்துக்கும் இங்கிருந்துதான் ஞான வித்து சென்றது என்று அருளினார்கள்.

❖❖❖❖❖❖❖

இப்பூமியிலுள்ள சர்வ படைப்புகளும் ''ஆசானே ஈசன்'' என்று நிருபிக்கவே. மனுவை விவேக விரத வேத விதியில் ஒட்டிக் காட்டி அவனை பேரின்ப முத்தி தேகம் எடுக்க உதவி அவன் நரக அவஸ்தை அடையாது தடுக்கும்படியாய் எம்மால் செய்ய முடியும். மனித உடல் எடுத்தவன் உள்ளத்தில் தெய்வ எண்ணம் வருவதற்கு எவ்வளவு பொருள் செலவழித்தாலும் அது நன்மையே. தெய்வம் ஒன்று உண்டு என்ற எண்ணம் வந்தபின் நிஜ தெய்வச் செயல் அடைவதற்கு அவன் முயற்சிப்பானல்லவா? தெய்வம் ஒன்று உண்டு என்ற எண்ணம் வந்தபின் நிஜ தெய்வத்தை தேடும் அந்த முயற்சிப் பாட்டில் எவ்வளவு வேண்டுமானாலும் ஒருவன் செலவழித்தாலும் நன்மையே!

தீர்த்த யாத்திரை ஆலய தரிசனம் என்று பலவாறாக பெரியோர்கள் எடுத்து விரித்து வைத்தன யாவும் ''ஆசானே ஈசன்'' என்று உலகுக்கு அறிவிக்க எடுத்த எடுப்பே ஆகும்.

✧✧✧✧✧✧✧

வெளிஉலகத்தில் உள்ள கோயில் குளம் எல்லாவற்றையும் இடித்தால் தான் அசலுக்கு மக்கள் திரும்புவார்கள்' என்று சிலர் சொல்வார்கள். இப்படிச் சொல்லும் அந்த அயோக்கியன் அசலைக் கண்டவனா? இல்லையே. கோயில் குளங்கள் இல்லையென்றால் உங்கள் அக முகத்திலுள்ள அசலைப் பற்றி பேச போக்கிதை உண்டா? மெய்யைக் கேட்பதற்கு காது எவரிடமாவது இருக்குமா? ஆலயங்களை நிரம்பக் கட்டிவைத்து அதில் எல்லோரும் வழிப்பட்டு வருகிறார்களே என்பதை வைத்துத்தான் மக்கள் முகம் பார்த்து எமக்கு பேச ஆசை வருகிறது. உங்களை மெய்யின்பால் திருப்ப ஆசைகொள்வது சிறிய காரியமா? ஆலய வழிப்பாட்டை ஆகாது என்கிறவன் அறியாமையால் மோடத்தனமாய்ப் பேசுகிறவனே ஆவான். அவ்வளவு பெரும் நாஸ்திகராகப் போவதற்கான எடுத்த எடுப்பே கோயிலை இடிக்க வேண்டும் என்று சொல்பவரின் செயலாகும்.

குழந்தைப் பிராயத்திலேயே தெய்வ எண்ணம் ஊட்டுவதற்கு இந்த ஆலயங்கள் அவசியம் தேவை.

✧✧✧✧✧✧✧

ஒரு சீமான் அரசனாகிய பிறகு கூலி வேலைக்குப் போவானா? இதோ தினமும் கூலி வேலைக்குப் போய் கொண்டிருக்கிறோமே! இது வரையில் எந்த பாரவான்களும் ஏறாத எல்லையெல்லாம் ஏறி அந்த தவ வல்லபங்களை எல்லாம் கைவரப் பெற்றும் இன்னும் எதற்காக நாம் தவம் செய்ய வேண்டும்? உங்களுக்காகத்தான்.

உன்னால் நாசிக்கு வெளியே மூச்சோடாத தவம் செய்ய இயலாது என்பதால் உன் மீது வரும் எமபடரை விலக்குவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய தவத்தை எல்லாம் நாம் ஒருவரே செய்து உங்கள் ஒவ்வொருவருக்கும் இனமாக வழங்குகிறோம்.

ஒரு பெரிய பணக்காரன் தன் வீட்டு திண்ணையில் உட்கார்ந்திருந்தான். அப்பொழுது ஒரு பிச்சைக்காரன் பிச்சை எடுத்துக் கொண்டு வந்தான். அவனைப் பார்த்த பணக்காரன் இந்த பிச்சைக்காரன் வறுமையினால் தானே இவ்வளவு கஷ்டப்படுகிறான் என்று இரங்கி ஒரு கோடி ரூபாய்க்கு செக் எழுதி பிச்சைக்காரனிடம் கொடுத்தான். இவ்வாறு அந்த பணக்காரன் இரக்கத்தால் பிச்சைக்காரன் கோடீஸ்வரன் ஆனான். அது போல் நாமும் இரக்கத்தால் இந்த மெய் ஞானத்தை உங்களுக்கு இனமாக அளித்தோம்.

எம் முன் நின்று, எழுத்து வாசனையற்றவர்களும் கூட எமவாதை அணுகா திருக்க வேண்டி, ''நான் இந்த மெய்வழி சபையின் சட்டதிட்டங்கட்குக் கட்டுப்பட்டு நடப்பேன். இது சத்தியம் - சத்தியம் - சத்தியம்'': என்று பிறர் படிப்பதைக் கேட்டுத் தான் மூன்றுதரம் சத்தியம் செய்கிறார்கள். படிக்காத அவர்கள் அதை கேட்டு வாங்கி சொல்லியதற்கே எட்டி அறிய இயலாத பிரம்மவித்தையில் எம்மால் ஏற்றி வைக்கப் பெறுகிறார்கள் என்றால் - அப்படி அவர்களை ஏற்றுகிறவர்கள் யாராக இருப்பார்கள் என்று நினைத்துப் பார்க்க வேண்டாமா? மறலி கை தீண்டாமை வேண்டுமென்றால் மெய்வழியில் சேர்.

-❖-❖-❖-❖-

எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவராசிகள் இருக்கின்றன. மற்ற எல்லா ஜீவராசிகளையும் மனிதனிலும் மிகவும் மட்டமாக இருக்கின்றன. அவைகளை அடக்கி விடுவான் மனிதன். அப்படியிருக்க அந்த

ஜீவராசிகள் அத்தனையும் தங்களுக்கு தெய்வம் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு விட்டது. அவைகளுக்கே தெய்வம் வேண்டாமென்றால் அவற்றையெல்லாம் அடக்கி ஆளுகின்ற மனிதனுக்கு தெய்வம் எதற்கு?

மூக்கு, கண், காது, எல்லாம் மாடு, ஆடு, கழுதை முதலிய எல்லா மிருகங்களுக்கும் இருக்கிறது. ஆனால் மிருகங்களுடைய தைப் போலில்லாமல், மனிதனுடைய மூக்கு, கண், காது, ஆகிய அவயங் கள் மிக நுணுக்கமாக இருக்கின்றன. இவ்வாறு நுண்ணியதாக படைக்கப் பெற்றது ஏனென்றால் பிண நாற்றத்தை அறிய, ஜீவப் பிராயண சுகந்த மணத்தை உணர மூக்கும், ஜீவப் பிராயண மஞ்சள் பூக்கும் முகத்தைக்காண கண்ணும், நரக அவஸ்தைக்கு போகும் நரனின் அலறல் சத்தத்தைக் கேட்க காதும் மனுவுக்கு கொடுக்கப் பெற்றிருக்கிறது.

மிருகங்களுக்கும் இந்த கருவிக் குலங்கள் இருப்பினும் அவை பிண நாற்றத்தை நுகர்வதற்கோ சாவின் கோரத்தைக் பார்ப்ப தற்கோ, அவஸ்தையான அலறலை கேட்பதற்கோ அவைகளுக்கு சக்தி இல்லை. ஏனெனில், அவற்றை கேட்க, பார்க்க, நுகர வேண்டிய தேவை அவைகளுக்கு இல்லை. மனிதன் அந்த அவஸ்தையிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ளவும், பரமபத மகிழ்ச்சியில் தன்னை ஏற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அந்த அவஸ்தையின் கோரத்தையும், மகிழ்ச்சியின் உன்னதத்தையும் தெரிந்து கொள்ளும் சக்தியுடைய புலன்களை இறைவன் படைத்து இருக்கிறான்.

ஏவலும், விலக்கும் மனுவுக்குத்தானே. ஜீவராசிகளுக்கு அல்லவே. சுத்தமும் நாற்றமும் இவனுக்குத்தானே. மற்ற ஜீவராசிகளுக்கு அல்லவே. ஏன்? ஏனெனில் மற்ற ஜீவராசிகள் நாறிச்

சாவதில்லை. இவன் மட்டும்தான் நாறிச் சாகிறான். அப்படி நாறிச் சாகாதபடிக்கு இவன் ஜீவப் பிரயாணமாக வேண்டுமென்றுதான். இவனுக்கு நாற்றத்தில் வெறுப்பும் மணத்தில் விருப்பும் வைத்து படைத்தது.

கந்தன் என்றும் கந்தசாமி என்றும் முருகப் பெருமானுக்கு நாமங்கள் உண்டு. குழந்தை திட்டில் இருந்து பிறக்கிறது. குழந்தை பிறந்தவுடன் சுத்தம் செய்து உச்சி முகர்ந்தால் மணக்கும். இறைவன் இவனை படைக்கும் போதே மணத்துடன் படைத்தான். ஆனால் இவன் தன்னுடைய செய்கையால் நாற்றம் அடிக்கச் செய்கிறான். அப்படி நாற்றம் அடிக்காமல் மணமுடன் இறைவனிடம் போக வேண்டும் என்று தான் கந்தன், கந்தசாமி என்று பெயர் வைக்கிறார்கள்.

✧✧✧✧✧✧✧

மனிதனுக்கு சத்தியமான பொருளான அறிவை வைத்து இருக்கிறான் கடவுள். அது தான் சத்தியம். அந்த சத்தியமான பொருளே கடவுள். கடவுள் என்ன பேசக் கூடிய ஒரு பொருளா? பேசாப் பொருள் அல்லவா அது. அதைப் பற்றியே நினைக்காதவர்கள் பொதுவாக பேசுவார்கள், பேசாப் பொருளை பேசாம் வாசகங்கொண்டு பேசியளிக்கின்ற சத்தியமான ஒரு பொருளாக கடவுளாக வருபவர்களே மெய்க்குருபிரான் எனப்படும் பெரியோர்கள்.

உனக்குள் இருக்கும் அந்த பிரணவ தேகத்திலேயே சர்வமும் அடங்கி உள்ளது. ஜீவன் முத்தியை கடந்து கையில் சன்னதம் பெற்றவர்களுக்குத்தான் அந்த பிரணவத்தில் அடங்கி உள்ள அண்டரண்ட அகண்டாகார தோற்றங்கள் தெரியும். உனக்கு இதை

தரிசிக்கும் தவ ஏற்றம் இல்லாவிடினும் அந்த வல்லமையுள்ள ஞானிகளிடம் ஒட்டு வைத்திருந்தால் அவர்களின் பேரிரக்கம் உன்னையும் சேர்த்து இழுத்து வைத்து அந்தப்பதவியை இனாமாக உனக்கு தருகிறார்கள்.

நாம் அறிவித்த பிறகு தானே முதலில் 'நீ யார்' என்று உனக்கு தெரியும். நாம் அறிவிக்கும் நேரத்தில் உனக்கு திக்கென்று இருந்திருக்கும். அழிவு எங்கே என்றால் உலகத்தில் தலையின் மூளையில் என்கிறானே! அங்கு என்ன இருக்கிறது? அறிவை கொண்டு போய் அங்கேயா இறைவன் வைத்தான்? அப்படி சொல்பவன் முகத்தில் விழிக்கிறது கூடப்பாவம்.

ஐந்து அறிவுக்கும் தனித்தனியே அறிவுக் குலங்கள் இருக்கின்றனவே அது போல் ஆறாவது அறிவுக்குக் கருவிக்குலம் எங்கே? ஐந்து அறிவுக்கும் கருவிக் குலங்கள் இருக்க, ஆறாவது அறிவுக்கு மட்டும் கருவிக்குலம் இல்லாமல் போகுமா? இருக்குமென்றால் அது எங்கே? இந்தக் கேள்விக்கு உலகமே திரண்டாலும் பதில் சொல்ல வருமா? ஆறாவது அறிவின் புலன் இதோ என்று தொட்டுக் காட்டப் பெறுகிற எல்லையே இது.

✦✦✦✦✦✦

அழியாமைக்கு ஒரு உளவு சொல்கிறோம். நாம் இப்போது நடத்தி வரும் மெய் அனைத்தையும் ஒரு மொழியாகச் சொல்கிறோம். கேட்கிறீர்களா? உங்களுக்கு அழிவு வேண்டுமா? அழியாமை வேண்டுமா? அழியாமை தானே வேண்டும்? அதற்குநாம் ஒரு உளவு சொல்கிறோம். ''அது எம் இஷ்டப்படி நட'' என்று நாம் சொல்வது தான். உன் இஷ்டபடி அல்ல. எமது இஷ்டப்படி. எம் பிடிக்குள் நீ

இருந்தால் போதும். எல்லா ஜெயங்களும் உண்டாகும். நீ தொட்ட தெல்லாம் துலங்கும். இது எப்படி என்று நினைக்காதே. அதற்கு ஆணைதை நாம் செய்கிறோம். எது பேசவேண்டும் என்று நினைத்தாலும் அதை நாமே உன் நாவிலிருந்து பேசுவோம்.

எம்முன் சாதுவாக இருக்கும் நீ எம்மை விட்டு அகன்றால் கலியனாகி விடுகின்றாய். மனதில் ஒன்றை வைத்துக்கொண்டு என்னிடமே இன்னொன்று சொன்னால், அதனால் அவஸ்த்தைதான் வரும்.

✧✧✧✧✧✧✧

ஆண்டவர்கள் அன்று பல பிறவியர்களுக்கு புனல் ஜென்மம் நிகழ்ச்சி நடத்தினார்கள். நிகழ்ச்சி முடிந்தபின் வெளியான ஆண்டவர்கள் வாக்கியம்:

''ஜீவன் இருக்க வேண்டிய நிலையிலிருந்து விலகி கிடக்கிறது. எடுத்துக் கூட்டி செய்ய வேண்டியிருக்கிறது. சாதாரணமாக ஜீவன் தன்னுடைய நிலையிலிருந்து பிரளுவதில்லை.

ஒரு பயிர் வளர்ந்து அறுவடைக்கு வருவதற்குள் எத்தனை முறை ''களை'' எடுக்க வேண்டியுள்ளது. என்ன பாதுகாப்புகள் செய்ய வேண்டியுள்ளது. அதுபோன்று மெய்வாழ்வில் ஈடுபட்டுள்ள உனக்கு ஒரு மாதத்திற்குள் ஒரு முறையாவது ஆசான் தரிசனம் கிட்டவில்லையானால் உன்கதி தான் என்ன? அறுவடைக்கு வர முடியாமல் நீயும் சாவியாகி விடுவாய். ஜீவக் குழந்தையை வளர்ப்பது ஆசானின் திருவாக்கு.

✧✧✧✧✧✧✧

மதுரையில் இருந்து வரும் பிறவியர் ஒருவர் ஆண்டவர்களை தரிசனை செய்து விட்டு "கலி கண்ட அற்புத காட்சியே" என்று அருட்பா பாடலை தோத்திரமாக பாடினார். அப்பொழுது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்.

"அழி கலியனுக்கே மரண அச்சம் பேசி அவனை கலக்கி அவன் எண்ணத்தில் மாறுதல் பண்ணி அவனை சாது செய்பவர்கள் தான் கல்க்கி மகா புருஷோத்துமர்."

"கடைசி கலி காலம் வந்து திடீரென்று முடிவுக்கு வரும் போது ஒரு தேவ ஆவி தங்கச் சந்நதி தோன்றப் பெறும்" என்று தீர்க்க தரிசனம் உள்ளது. இப்போது கடைசி கால முடிவு வந்து விட்டது. எம்முடைய பாட்டால் தங்கச் சந்நதியும் தோன்றியாகிவிட்டது. கலி இனி பிழைக்க முடியாது. அவை போய் விட்டன. இனி பொய் அறவே அழிந்து இல்லாமல் ஆகி விடும். மெய்தான் நிலைக்கும்.

முன்வந்த மெய்ஞ்ஞான செம்மல்கள் இந்த மெய்ஞ்ஞான தேவரதத்தை நடத்த முடியாமல் குடையடித்துப் போக வேண்டிய தாயிற்று. ஆனால் அன்று அவர்களை குடையடிக்க செய்தவர்கள் இன்று அவர்கள் பாடிய பாடல்களை பாடுவதும், போற்றுவதும் நூல்களை படித்து படித்து வியாக்கியானம் செய்வதுமாக வேஷமிட்டுதிரிகிறார்கள். முன்னவர்களுக்கு நேர்ந்த கதி எம் காலத்திலும் நடக்குமென்று இந்த மெய்க்கு மாற்றக்காரர்கள் வஞ்சகமாக நினைத்து கொண்டிருக்கிறார்கள். அது முடியாது. அந்தத் துஷ்டத்தினரின் வால் பூராவும் இப்போது ஒட்ட அறுக்கப்பட்டு ஒடுங்க செய்துள்ளோம். அப்படி ஏதாவது எழுந்தாலும் எமது தெய்விக மெய்வழி மக்கள் அதை மிதைத்து பொடிப் பொடியாக ஆக்கி விடுவார்கள்.

றமே ஒரு பெரிய குடும்பியாக மாறி, எம் குடும்பத்தாருக்கும் ஞானம் வழங்கியதில் இன்று எம் குடும்பத்தில் 37 நபர்கள் இருக்கிறது. இதையே சட்ட முனிவர் தீர்க்கத் தெரிசனமாக கூறியுள்ளார்.

"மார்க்கமுள்ள சத்தியடா மூர்க்கம் மெத்த
வளர்மதியின் கருவறிந்த வாமரூபி
ஏர்க்கமுள்ள சம்சாரம் பெருமைக்காரி
எத்தனையோ புத்திமதி சுத்தமுள்ளான்"

பெருமையுள்ள மார்க்கக்காரி முன்னாள் யாரும் ஏழ்மையானவராக இருக்கக் கூடாது. எம்மைப்போல் எல்லாம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதே எம் ஆசை.

னமது ஞானம் பெருமையுள்ள பணக்கார தர்பார் ஞானம். என் ஆசான் பொய்ப் பொருளில் ஏழையாக இருந்தார். றானும் ஏழை யாக இருந்து அதைப்பெற்றேன். ஆனால் அதே னடைமுறையிலிருந் நால் இங்கு ஒரு குஞ்சு தேறுமா? தேறாது. அதனால் றாம் சட்டத் தையே மாற்றினோம். பால் சாப்பிட்டால் ஞானமில்லை என்பதை மாற்றி பாலில்னீர் கலந்து சாப்பிட வைத்தோம். பெண்களுக்கு ஞானமில்லை என்பதை மாற்றி பெண்ணோடு வாழாதவனுக்கு ஞானம் ஒட்டாது என்று சொல்லி குடும்பஸ்தனாக அவனை ஆக்கி உபதேசம் கொடுத்தோம்.

-•-•-•-•-•-

மூல மந்திர பிரகாசப் பொருளாக கண்டவர் தேவர். மூலமந்திரத்தை வாயால் மட்டும் சொல்லிக் கொண்டும், தேடிக்

கொண்டும் இருப்பவர் மனு. மூலமந்திரத்தை வாயால் சொல்லு வதையும் கூட மறுத்தளிப்பவன் னரன்.

மூல மந்திரத்திற்கு மற்ெறாரு பெயர் ருத்திராக்ஷ முத்திரை.

✦✦✦✦✦✦✦

" எரியும் எமனை எட்டி உதைத்து ஆறு அண்டம் எட்டிப் பாய்கின்றவர் பேர்தான் ராஜயோகி – சாமுனம் சாவப்பழகி சாவதுவே சன்மார்க்கச் செயல். இது வேதத் தீர்ப்பு. இதைக் கேட்கும்போது உங்களுக்கு பெருமையைப்பாக இருக்கிறதல்லவா?

✦✦✦✦✦✦✦

நாம் தினமும் னடக்கிறோமே! கால்கள் எவ்வளவு தேய்ந்திருக்க வேண்டும்? ஏன் தேயவில்லை? இரும்பு மற்ற உலோகங்கள் ஒரு சில ஆண்டுகள் உபயோகித்ததால் தேய்ந்து போகிறதே! ஆனால் கால்கள் எவ்வளவு னடந்நாலும் தேய்வதில்லையே! ஏன் தெரியுமா? கால்களின் பாதத்தில் தேய்மானத்தை சரிகட்ட ஒரு பொருள் உற்பத்தி யாகிறது. னடப்பதால் ஏற்படும் தேய்மானத்தை அந்நப் பொருள் உடனுக்குடன் சரிகட்டி விடுகிறது. ஆகையால் எவ்வளவு னடந்நாலும் கால்கள் தேய்வதில்லை.

அடுப்புக் கொம்மையைப் போல் மூன்று ∴ குமிழ்கள் மனிதரின் குதிக்கால்களில் அமைக்கப் பெற்றிருக்கும் காரணத்தால் தான் இந்த உடற் பலுவை சுலபமாகத் தாங்க மனிதனால் முடிகிறது. உடலில் உள்ள எல்லா எலும்புகளிலும் தமர் இருக்கிறது. ஆனால் னெற்றி எலும்பில் மாத்திரம் தமர் இல்லை. அது என்ன வலுவுடையதென்றால்

தடியால் ஓங்கி அடித்தாலும், தடிதான் பிளந்து உடையும் . அந்த அளவு வலுஉடையது. அது காண்டா மிருகத்தின்கொம்பை விட வலுவானது.

✦✦✦✦✦✦

உன் பாவத்தை சங்கரிப்பதற்காக ஒரு பிரம்ம நிஷ்டர் சன்னிதியில் நீ சமர்ப்பிப்பதுவே காணிக்கையாகும்.

காணிக்கை வைக்கும்போது தொட்டதெல்லாம் துலங்கனும், தெய்வத்தை விட்டு விட்டு போகிறோமே ஒரு தகடமுமில்லாமல் ஒழுங்காக ஊருக்கு போய் சேரனுமே என்று நினைத்தல்லவா வைக்கிறாய். அதன்படி அது தன் காரியத்தைச் செய்கிறதே. அப்படியிருக்கும் போது எல்லாரும் தன்னை மதிக்கனும் என்பதற்காக காணிக்கை வைத்தால் அது உன் தலையில் தானே கல்லைப் போட்டுக் கொண்ட மாதிரியாகும்.

✦✦✦✦✦✦

மரண இடுக்கண்ணை நினைத்துவிட்டால் இவ்வுலக வாழ்க்கை ஒரு இன்பமா? துன்பமே. துன்பம் இல்லாததுவே மோட்சம்.

மரண பயம்: இந்த உலகம் தோன்றிய நாள் முதற்கொண்டு இன் றுவரை தோன்றிய அத்தனை மகத்துக்களும் மரண பயத்தினால் தான் மெய்ஞானத்திற்கு வந்தார்களே அன்றி மற்ற எந்த ஆசைக் கொண்டும் அல்ல. மரண பயம் ஒருவனுக்கு இல்லையெனில் அவனுக்கு மெய்ஞ் ஞான இச்சையே இல்லை.

மனிதனுக்கு ஏன் அந்த சாகும் தருவாயில் அவ்வளவு பயம் வருகிறது என்று தெரியுமா? அதற்கு பின்னால் எக்கோடி காலத்திற்கும்

அவன் அவஸ்தைக்கு அல்லவா போகிறான். அதனால் தான் அவ்வளவு பயம் தன்னாலேயே அவனுக்கு வருகிறது.

⟡⟡⟡⟡⟡⟡⟡

உயிரானது மனித உடலில் அணுக்கோடியற்றும் பரவிக் கிடக்கிறது. மனிதன் மரணிக்கும்போது மனித உடம்பிலுள்ள ஒவ்வொரு அணுவிலிருந்தும் உயிரானது பிய்த்துக் கொண்டு வெளியேறி வருகிறது. அப்போது அவனுக்கு பயங்கரமான வேதனை உண்டாகிறது. அந்த மரண வேதனை அவனுடைய முகத்தில் கோர ரூபமாக வெளிப்படுகிறது. ஒரு துணியை முட்கள் நிறைந்த ஒரு செடியில் பரப்பிவிட்டு பின் அந்த துணியை இழுத்தால் முட்கள் அந்த துணிக்குள் புகுந்து பலநூறு சுக்கல்களாக ஆக்கிவிடும். அதுபோல மரணத்தின்போது, மனிதன் கொடூரமான அவஸ்தையை தனக்குள்ளாகவே அனுபவிக்கிறான்.

இரத்தத்திலுள்ள உயிரணுக்கள், தசையிலுள்ள ஜீவ அணுக்கள், நரம்புகளிலுள்ள ஜீவ அணுக்கள், எலும்புகளிலுள்ள ஜீவ அணுக்கள், கொழுப்பிலுள்ள ஜீவ அணுக்கள் எல்லாம் வேறே வேறே. இந்த அணுக்கள் கருவில் மூன்று மாதம் 15 நாட்கள் ஆனவுடன், ஒவ்வொரு ஜீவ அணுவும் ஒன்றோடொன்று ஒவ்வொன்றிலும் கலக்கிறது. இப்படி கலந்த ஜீவ அணுக்கள் மரணத்தின் போது பிரியும்போது ஏற்படக்கூடிய வேதனை கொஞ்சமாகவா இருக்கும். அதை மாற்றி வெண்ணெயில் மயிர் போட்டு இழுப்பது போல் ஆவதென்றால், இலேசான காரியமா?

உடலிலிருந்து உயிர் பிரியும் அவஸ்தையே மரணம். அவஸ்தை இல்லாம அறவே துடைப்பதுவே மெய்.

⟡⟡⟡⟡⟡⟡⟡

மரணம் என்றால் பயம் வருவதேன்? ஒரு சற்குருபிரானை பெற்று அவரை நம்பியிருந்தால் மரண பயம் வருமா? பிறவிப் பிணி என்றால் என்ன? மரண பயம்தான். நிதியெனும் பொருளான மனுகுலம் நித்தியத்தை அடைவதுவே சன்மார்க்க நெறி.

மனிதர்களை மரண பயத்திலிருந்து விடுவிக்கும் செயல் உடையது தெய்வமாகும். அது இருக்குமிடம் ஆலயமாகும். உலகத்தில் இருப்பதெல்லாம் தெய்வங்களா? ஆலயங்களா?

சாமி என்றால் ஒரு சற்குருபிரானை அடைந்து அவர்கள் சொல்லிக் கொடுத்த உபாயத்தின்படி நடந்து தவத்தில் ஏறி அதன் மூலமாக சாவை மீறியவர்களுக்கு சாமி என்று பெயர். சற்குரு பிரானுனவர்கள் தங்களுடைய மனைவி மக்களோ யாராலும் ஆர்வம், சித்தமுடையவர்களாய் இருந்து – உடல், பொருள் ஆவி இம்மூன்றையும் இவர்களுக்கு தாரை வார்த்து கொடுத்த பிறகே இந்த சாவை மீறுவதற்குரிய உபாயத்தை சொல்லிக் கொடுப்பார்கள்.

ஒருவன் உணவு உண்கிறான். உண்டதினால் பசி நீங்குகிறது. அது எப்படி உடலில் செரிமானமாகிறது என்பது அவனுக்கு தெரியாது. அதுபோல அந்த குரு பெருமானை அண்டியவர்களுக்கு, அவர்கள் அறியாமலேயே மரணப் பசி நீங்குகிறது.

-+-+-+-+-

13.2.1967

சாவைப் பேரின்ப மகிழ்ச்சி திருமணமாக மாற்றிக் கொள்ளவே இம்மனு உடல் எடுத்தது.

-+-+-+-+-

மூல மந்திரத்தை தரிசித்தவர்களை 'ரிஷி' என்று அழைக்கச் சொல்லுகிறது வேதம். அப்படியானால் இப்பொழுது நீ சர்வ மூல மந்திரங்களையும் தரிசித்துள்ளாயே அப்போது நீ யார்?

இருளில் தடுமாறி அபாயத்திலேயே மனுக்குலம் அந்த எமன் இருளுக்கு போகிறது. அதை எதிர்த்து தப்பிப்பதற்கு ஒரு ஆயுதம் ஒன்று தந்திருக்கின்றோம் அதுதான் **மகா சங்கல்ப மந்திரம்.**

கன்றுக் குட்டி தாயின் மடியை நினைத்து அம்மா என்று கூப்பிடுகிறது. தாயின் மடியின் மீதுள்ள பாசமே இப்படி அதைக் கூப்பிட வைக்கிறது. பசுவும் பாசத்தோடு ஒலி எழுப்பி அழைக்கிறது. கன்று வந்து பால் குடித்ததும் பசுவின் மடியில் விம்மிக் கொண்டு இருந்த பாலின் கனம் குறைந்து வலி நீங்கி இன்பம் உண்டாகிறது. அதனால் அதுவும் நன்றியுடன் பாசமாக அம்மா என்று பதில் கொடுத்து அழைக்கிறது. அவ்வளவு தான் அவற்றினிடையே உள்ள பாசம். ஆனால் நாம் சதா உங்களுக்கு ஊட்டும் தேவமணம் கமழ்ந்து கொண்டு இருக்கும் அருளமுதத்தினை உண்டு தேறும் தேவ மக்களாகிய நீங்கள் எம்பால் வைக்கும் என்றும் குன்றாத அன்பையும் ஒட்டுதலையும் நாம் உங்கள் பால் வைக்கும் மாறாத நேசத்தின் பெருக்கத்தினையும் நரர்களுக்குத் தெரிய வருமா? ஒருக்காலும் தெரியவராது. அதனால் தான் ஏதோ மையை போட்டு மசக்கி விட்டார் என்று பிதற்றித்திரிகின்றார்கள்.

சத்திய வேதத்தில் தாவீதின் சங்கீதத்தைப் பற்றிய பேச்சு எழுந்தபோது ஆண்டவர்கள் "சங்கீதம் என்பது சற்சனர் வசனம்"

உன்னிடம் இருக்கும் அந்தப் பேசொன்றைப் புகமுடம்பின் பேரறிவுக்கு ஆகாரம் குரு கொண்டல் அவர்களின் மாசரும் ஆலவாயிலிருந்து பொங்கி வெளியாகும் அருளமுதத்தினை உன் செவிப்புலன் கொண்டு அருந்துவதுதான். அவ்வாறு காலமெல்லாம் அருந்துவதால் சாவாவரமாகிய வீடு பேறு உனக்குப் பரிசாக அளிக்கப்பெறுகிறது.

"ஆலவாயருள்" என்பது யுகாந்த ரூட்டுச் செல்வம்.

பா- செய்யுள் - அகத்தில் செய்வது - ஆசானின் வாக்கியம்" என்று உத்தரவிட்டு அருளினார்கள்.

✦✦✦✦✦✦✦

ஒரு பெண் தானாக ஓர் ஆணை இச்சித்து தேர்ந்தெடுத்து, பின் ஆணும் அவளுடைய இச்சைக்கு இணங்கி விவாகம் முடித்தால் அந்த விவாகம் சீக்கிரம் சண்டை வந்து முறிந்துவிடும். ஆனால் ஓர் ஆண் இச்சித்து ஒரு பெண்ணை விவாகம் செய்தால், அந்த விவாகம் நீடித்து நிற்கும். அது போல நாம் உங்களை இச்சித்து மெய்ஞ்ஞானத்தில் சேர்த்ததால் உங்களுக்கும் இதில் பற்றுதல் இல்லை. நீங்களாகவே இச்சித்து வந்திருந்தால் இதில் பற்று இருக்கும்.

எத்தனை கோடி கிரந்தங்களும், எம்முடைய ஞமத்தை பற்றி திர்க்கதரிசனமாக பேசுகிறது. அந்த கிரந்தங்களை இறக்கிய கர்த்தர்கள் மெய்ஞ்ஞானத்தை தேடி அலைந்து பெற்றார்கள். மெய்ஞ் ஞானத்தை இச்சித்து பெற்றதனாலேயே அப்படி திர்க்கதரிசனம் எழுதும் வல்லபமும் அவர்களுக்கு வந்தது.

✦✦✦✦✦✦✦

மின்சாரம் மின்சாரம் என்று சொல்லி ஆகாயத்திலிருக்கும் பூமியிலுள்ள விஷ ஜந்துக்களை அழிப்பதற்கு அத்தியாவசியமான உஷ்ணத்தை மின்சாரத்துக்காக கிரகித்துக் கொள்ளுகிறோம். ஆகாயத்தில் உஷ்ணம் குறைந்து பூமியில் விஷப் பூச்சிகள் அதிகமாகி விளைச்சலை கெடுக்கின்றன. விஷ மருந்து போட்டு போட்டு அவற்றை கொல்ல வேண்டியிருக்கிறது. அந்த விஷ மருந்து விளை பொருள்களுடன் கலந்துவிடுவதால் விளைபொருளும் விஷமாகி, நோயும் அகால மரணங்களும் தான் அதிகமாகின்றன. உன் செயலால் அந்த சத்துவங்களும் ஏறக்கு மாறாகப் போய்விட்டன.

இந்த ஆண்டு பனிக்காலம் ஐப்பசி மாதமே ஆரம்பமாகி விட்டது. பொதுவாக பனிக்காலம் மூன்று மாதங்கள்தான் இருக்கும். ஆனால் இந்த ஆண்டு 5 மாதங்கள் பனிக்காலம் இருக்கும் போல் தெரிகிறது. இதிலிருந்து கால சக்கரம் மாறுகிறது என்று தெரிகிறது.

பூமியிலுள்ள யானை முதல் எறும்பு ஈடாக உள்ள அத்தனை ஜீவராசிகளையும் எடுத்துக் கொண்டு கணக்கிட்டுப் பார்த்தால் பூமியிலுள்ளதைப் போல் ஐந்து மடங்கு அதிகமாக கடலில் ஜீவராசிகள் வாழ்கின்றன. ஒரு நேரம் வரும்பொழுது கடல் வற்றி அவ்வளவும் அழியப்போகின்றன.

மலைகளை அடியோடு அழிக்கப்படும் என்றால், கடலே வற்றடிக்கப்பட போகிறது என்றால், என்ன ஒரு விபரீதம். முதலில் மனுக்கள் அழிக்கப்படுவார்கள். அதற்குப் பிறகு தான் சத்துவங்கள் அழிக்கப்படும். அமனி, அழிவு தொடங்கி 14 மாதங்கள் நடக்கும்

காலகாலமாக பூமியின் வளங்களை மனிதன் சாப்பிட்டு வருகிறான். மேலும் பூமியில் இருந்து உலோகங்களையும் பாஷாணங் களையும் மனிதன் எடுத்து பயன்படுத்தி வருகிறான். இதனால் பூமியின்

களம் குறைந்து கொண்டே வருகிறது. பூமியின் களம் குறைந்து விட்டதால் பூமி வேகமாகச் சுழலுகிறது.

சீக்கிரம் இந்த உலகம் அழிந்து விட இருக்கிறது. இனியும் தாமதிப்பதாக தெரியவில்லை. ஆனால் ஏதோ சில இடங்களில் தானே அழிவு வருகிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நாள் ஒரு இரவில் திடீரென்று அழிவு வரும் போது அல்லவா தெரியும்?

ஆண்டவர்கள் பிரளயம் வருவதைப் பற்றி நமக்கு அடிக்கடி எச்சரிக்கை செய்தது எல்லோருக்கும் தெரியும். பல பிறவியர்கள் பிரளயத்தைப் பற்றி அச்சம் இல்லாமல் இருப்பதும். ஒரு சில பிறவியர்கள் பிரளய பயத்தினால் சாலையம்பதியில் குடியேறிவருவதுமாக இருந்தனர். ஆண்டவர்களிடம் மெய்வழி பதிமேவு அனந்தர் ''பிரளயம் பற்றிய எச்சரிப்பு 'புலி வருது புலி வருது' என்ற கதையாய் போய் விடுமோ என்று சில பிறவியர்கள் நினைக்கிறார்கள்!'' என்று சொன்னார். இதற்கு பதிலாக ஆண்டவர்கள் அருளிய வாக்கியம்:

''வெளியே உள்ள மற்றவர்கள் பிரளயம் என்ற எண்ணம் இல்லாமல் திடீரென்று பிரளயத்தை திடுதிப்பென்று சந்திப்பார்கள். அதனால் அவர்கள் தாங்க முடியாத அவஸ்தைக்கு உள்ளாவார்கள் என்பது நிச்சயம். ஆனால் நம்முடைய பிள்ளைகளுக்கோ பிரளயம் வரும் என்று நாம் அடிக்கடி கூறுவதால் அந்த எண்ணம் இவர்களின் உள்ளத்தில் நன்றாக பதிந்து விட்டது. அவர்கள் தயார் நிலையில் இருப்பதால் பிரளய ஆரம்ப அறிகுறிகள் ஏற்பட்ட காலம் தெரிந்த உடனே சுத்தமாக உள்ள நம் பிள்ளைகள் ஒவ்வொருவராக சாலைக்கு வந்து விடுவார்கள். அவர்களை எல்லாம் பிரளயத்திலிருந்து காப்பாற்ற எம்மால் எளிதாக முடியும். பிரளயத்தை தேதி குறித்து நம்மால்

சொல்ல முடியும். அப்படிச் சொன்னால் எல்லோருமே பயமின்றி வெளியே போய்விடுவார்கள். அன்றைய நேதிக்கே வருவோம் என்று போய்விடுவார்கள். பிறகு நம்முடைய இந்நப்பாடு அனைத்தும் வீணாகப் போகும். எம் ஐயன் எமக்கு எச்சரித்ததை வைத்து தான் உங்களுக்கு சொல்கிறேன். அதன்படி நடவுங்கள்.

✧✧✧✧✧✧

குரங்கு குரங்கை அழிக்கும் விதம் எப்படி தெரியுமா? குரங்கை சாகடிக்க, அது அதிகமாக பயிர்களை அழிப்பதை தடுக்க, சோற்றில் அதிகமாக காரத்தை கலந்து நிலத்தில் வைத்து விடுவார்கள். குரங்கு அந்த சோற்றைச் சாப்பிட்டவுடன் காரம் தாங்காமல் ஒரு குரங்கை, அடுத்த குரங்கு அடித்துக்கொண்டு சாகும். அது போல ஊழி திட்டமும் மக்களை ஒருவரோடொருவர் வெறிகொண்டு அடித்து சாவதுதான்.

"இறைவன் பொத்திய கையதனை சற்றே திறந்து விட்டால் பூலோகம் அழியும் சிவனே அய்யா" என்கிறது தீர்க்க தரிசனம்.

எதிரிகள் இந்நாட்டின் மீது படையெடுக்கும் போது பிரளய முகூர்த்தம் ஆரம்பமாகும். வந்த எதிரிகள் திரும்பமாட்டான். பின்பு சத்துவங்கள் தங்களுடைய வேலையை ஆரம்பித்து விடும். வீட்டுக்குள் இருந்தாலும் இழுத்து வந்து அடிப்பான். மனைவி கணவனை இல்லையென்பாள். நாட்டை ஆள்பவன் நான் ஆளவில்லை யென்று சொல்லி ஓடுவான். மனிதன் கட்டும் கட்டிடங்களே மனித னுக்கு சமாதி ஸ்தலமாகும். பலக்களை படிந்த மக்களுக்கு முகத்தில்

முன் தீப்பற்றின மாதிரி இருக்கும். பின்னால் வேல் கொண்டு குத்து வது போல் இருக்கும். இருபுறங்களிலும் திரும்ப முடியாமல் கைகள் கட்டுண்டு நிற்கும்.

✧✧✧✧✧✧✧

இதுவரை ஞானம் என்னும் ஆழ் கடலில் அனைவரும் ஓட்டி வந்தது சாதாரண ஒரு ஓடம் தான். அந்த ஓடத்தில் செல்லுவதற்கு குருவும், சிஷ்யனும் சேர்ந்து துடுப்புப் போடவேண்டும். ஆனால் இப்போது நாம் கொண்டு வந்திருப்பது ஒரு பெரிய மரக்கலம். அதில் ஏறி அமர்ந்துகொண்டால் போதும். உன்னை எளிதாக அக்கரை சேர்த்துவிடும். இது பாவக்கடலில் தவிக்கும் மாந்தரை கரை சேர்க்கும் பெரிய கப்பலாகும். இதனுடைய இஞ்ஜின் பழுது ஆகாத இஞ்ஜின். இதற்கு இஞ்ஜினும் நாமே. ஓட்டுபவரும் நாமே. நாம் ஏற்றிச் செல்லும் சுமைகள் தான் நீங்கள். அப்படி ஏற்றிச் செல்லும் போது குழந்தைகளாகிய உங்களில் ஒரு சிலர் உடலோடு வெளியே எட்டி பார்க்கின்றீர்கள். அப்படியே உங்களை விட்டால் பாவக் கடலில் விழுந்து விடுவீர்களே என்று தலையில் தட்டி உள்ளே அடைக்கிறோம். என்ன செய்வது ? எல்லாப் பொறுப்பும் எம் தலையில் தான்.

✧✧✧✧✧✧✧

தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்பது - தூ என்று காறி துப்பக் கூடிய அனித்திய ஊண் சதை பிண்டமாகிய உடம்பிற்குள்ளும் இருப்பான் என்பதாகும்.

துரும்பிலும் இருப்பான் என்பது சின்ன பூவிலும் இருப்பான் என்பதாகும். தூணையும் துரும்பையும் பிரித்து அதாவது இந்த இரண்

டையும் வெவ்வேருக பிரித்து அல்லவா உனக்கு காட்ட வேண்டும். இந்தச் செயலே அல்லவா அன்று நரசிம்ம அவதாரம் செய்து காட்டியது. இதை வைத்து தான் 'நடுவில் ரெண்டாய் நேர் பிளந்த தாணதுவு மெங்ஙே! என்று 'மெய்ஞ்ஞானப் போதம்' என்ற பாடலில் பாடி வைத்தது?

தெய்வத்தை தெரிசிக்க வந்த ஒருவர் தெய்வமவர்கள் ஆசனத்தில் அமர்ந்திருப்பது பொறுக்காமல் ஆண்டவர்களிடம் "எல்லோரும் கீழே உட்கார்ந்திருக்க நீங்கள் மட்டும் ஏன் ஆசனத்தில் இருக்கிறீர்கள்" என்று கேட்க அதற்கு ஆண்டவர்கள்: "எல்லோருக்கும் என்னை தெரியட்டுமே என்று தான்" என்ருர்கள். ஆண்டவர்களின் எதார்த்தமான இந்த பதில் - அவன் தான் கேட்டது ஒரு மடத்தனமான கேள்வி என்று அவனுக்கு உணரவைத்தது.

தெய்வத்தை தரிசிக்க வந்த ஒருவர் "எல்லோரும் உங்களை தெய்வம் என்று கூறுகிருர்கள். நீங்கள் சும்மா இருப்பதை பார்த்தால் அப்படி சொல்லுவதை ஒப்புக் கொண்டது மாதிரி தெரிகிறது" என்ருர். அப்பொழுது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்:

"எல்லோருடைய நிலைக்கும் அவசியமான வேலை ஒன்று அவர்களுக்கு செய்கிறேன். அதனுல் தான் எம்மை தெய்வம் என்கிருர்கள். அது பரமனை தரிசிக்க செய்யும் உதவி. பரவாயில்லை சொல்லட்டும். ஆனுல் சாதாரண ஒரு இக உதவி செய்தவனையே "தெய்வம்" போல வந்து உதவினுர் செய்தார் என்று சொல்லுகிருர்களே அது உங்களுக்கு தவருக படவில்லையா?

இதுவரைக்கும் நீ உண்ட உணவு இந்நப் பரத்தை அடைவ தற்காக. இனி நீ இருந்நாலென்ன போனாலென்ன? வந்த வேலை ஆச்சே! பின் ஏன் நீ இருக்கவேணும்! ஆனால் நீ கட்டாயம் இருக்க வேணும். எதுக்கு? இதில் சேராதவர்களை இந்த சன்னிதானத்தில் கொண்டு வந்து சேர்க்கும் வேலைக்காக.

\-\-\-\-\-\-\-

போலீஸ் அதிகாரிகள் நிறைய பேர் வந்திருந்தபோது பிறந்த வாக்கியம்: கடவுள் நமக்குள்ளே இருக்கிறானே. பிறகு ஏன் எமன் வர வேண்டும்? நம்ம கைகால் இருக்கு. இப்படி அப்படி மடக்காமல் வைத்திருக்கலாமா? அவைகளை மடக்கி பயன் படுத்தினால் தானே வேலைக்கு பயன்படும் – அது போல் உனக்குள் கடவுள் இருந்தாலும் நீ அறிந்து அதனை பயன்படுத்தி கொள்ளவில்லை என்பதால் அதுவே உனக்கு எமனாக வந்து விடுகிறது.

\-\-\-\-\-\-\-

மெய்வழி துழாய் அனந்தர் புதுக்கோட்டையில் மதுரைக்குச் செல்லும் பேருந்தில் தனது மூத்த மகன் மடியில் ஜீவப் பிரயாணம் ஆனார் கள். அவருடைய தூல பிம்பம் சாலையம்பதிக்கு கொண்டு வரப்பெற் றது. ஆண்டவர்கள் அனுமதிபெற்று விடுதியில் தூல பிம்பம் கொண்டு போய் வைக்கப் பெற்றது. அப்பொழுது பிறந்த ஆண்டவர்கள் வாக்கி யம்: ''ஒருவன் தன்னுடைய மூத்த மகன் மடியில் ஜீவப் பிரயாணம் ஆவ து சிறப்பு என்று வேதம் சொல்கிறது''. என்று அருளினார்கள்.

அவருடைய தூல பிம்பம் மறு நாள் (19-03-72) தான் அடக் கம் செய்ய வேண்டியிருக்கும் என்று சன்னிதானத்தில் விண்ணப்பித் தார்கள். ''மெய்வழி துழாய் அனந்தரின் தூல பிம்பத்தின் வலது கையை

ஒரு வாளி நிறைய மணல் எடுத்து அதற்குள் மறைத்து வைக்கவும்''
என்று உத்திரவு ஆயிற்று.

✦✦✦✦✦✦✦

தோற்றத்தில் கடைசி தோற்றமான மரத்தின் வித்தே இவ்வளவு சிறியதாய் இருந்து அதிலேயே இவ்வளவு விளைவுகளும் பதித்திருந் தால் மனித வித்திலுள் எவ்வளவு படைத்திருப்பான். கசகசாவிலும் பாதிதானே இருக்கும் அந்த மனித கரு. மருந்தை தகரக் குழலில் அடைத்து சுடுவதைப் போல அது தாயின் கருவறையில் வந்து விழுந்து உருவாகிறது. அது என்ன விளைவுக்காக இருக்கும். அந்த நாற்றக் கருவறையில் உன்னை வைத்திருந்த உன் தாய்க்கு உன் மீது எவ்வளவு அன்பிருக்கிறது? அதேபோன்று கோடி சூர்யப் பிரகாசமானதும், கஸ்தூரி களபம் என்றும் வீசுகிறதுமான ஒரு கருவறையில் ஒரு க்ஷண நேரமாவது உன்னை வைத்திருந்த அந்ததேவ அன்னைக்கு எவ்வவளவு அன்பு உன் மீதிருக்கும் ?

✦✦✦✦✦✦✦

நிர்வாண நிலை என்றால் என்ன?

தாயின் கருவறையில் நீ இருக்கும் நிலை தான் அது. ஆம். அப்போது உனக்கு சுவாசம் இல்லாத நிலை. சப்தமே இல்லாத நிசப்த நிலை. அதே போன்று தானே இறுதி நேரத்தில் சுவாசமும் சப்தமும் இல்லாத ஒரு எல்லையில் அல்லவா உம்மை ஏற்றிவைக்கிறோம். அப்போது அது எந்த நிலை? அகமியத்தில் தவ நிலையை நிர்வாண நிலை என்று ஏன் சொல்லுகிறார்கள் என்று புரிந்ததா?

✦✦✦✦✦✦✦

ஒரு நாள் ஆண்டவர்கள் கீழ்க்கண்ட ஒரு கேள்வியை கேட்டார்கள். ''ஏண்டா ! ஒரு நாள் அரிசி ஒரு நாள் பொரி, ஒரு

நாள் பேரிட்சம்பழம், ஒரு நாள் சர்க்கரைப் பொங்கல் என்று இப்படி அமுது போடுகிறார்களே! இதை ஏன் எடுத்து வைத்திருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்கள். பிறகு அதற்கு விடையாக:

''உன் ஜீவனுக்கு வேண்டியதெல்லாம் செவிஉணவு மூலம் கொடுக்கிறேன். மரணத்தையும் எமபடரையும், உனக்கு நானே நின்று போக்குகிறேன். அதுபோல் உன் தூலத்திற்கு என்ன செய்கிறேன்? ஒன்றும் இல்லையல்லவா? இப்ப என் முன் வைக்கப்பெற்ற இந்த அமுதை நாம் பார்க்கிறோம். பார்வைக்கு பிறகு தானே உங்களுக்கு கொடுக்கிறேன். என் பார்வை பட்ட அதை நீங்கள் உண்பதால் உங்கள் தூலமும் இதனால் இரட்சிக்கப் பெறுகிறது மேலும் இப்போது உம் தெய்வ ஆசானின் திருப்பார்வை பெற்று வழங்கப் பெறும் பிரசாத அமுது உன் வாய் ருசிக்கும் உணவாகிறது. ஆனால், இது மட்டுமல்ல. உன் நினைவிற் கெட்டாத மூன்றாவது ஒரு அரிய பிரயோசனத்தை கருதி உனக்கு இது அளந்து கொண்டிருக்கப் பெறுகிறது. வரவிருக்கின்ற சுவர்ண லோகத்திற்கான நித்திய தேகம் எடுப்பதற் கான ரஸ்தை இது உனக்கு தந்து உதவும். இதற்கு நீ கிரயம் கொடுக்க முடியுமா? கோவில்களில் போட்டி போட்டுக் கொ.ண்டு, அடிதடி, சண்டையிட்டுக் கொண்டு பிரசாதம் என்று வாங்குகிறவர்களுக்கு இந்த தேவ ரகசியம் தெரியுமா? பிரசாதம் என்பது உனக்குப் புறம்பாக உள்ள பிற இச்சையை சாகடித்து அக நிறைவு ஏற்றும் வல்லமை பெற்றது என்று பொருள்.

அன்று கிறிஸ்துமஸ் பண்டிகை நாள். உலகமெங்கும் கிறிஸ்துமஸ் பண்டிகை கோலாகலமாக கொண்டாடப் பெறுகிறது

என்பதை விபரமாக சபையில் பேசிக் கொண்டிருந்நார்கள். அப்பொழுது ஆண்டவர்கள் ''இயேசு பெருமானின கத்தி, ஈட்டியால் குத்தி ஆணி வைத்து அன்று அடித்தான்கள்'' என்று கூறியதுமட்டுமல்லாமல் தங்களுடைய திருமேனியை காட்டி எந்நெந்த இடத்தில் அடித்தான்கள் என்பதை அவர்களுடைய திருக்கரத்தாலேயே சுட்டி காட்டினார்கள். அப்பொழுது அவர்களுடைய திருமேனி லேசாக நடுங்குவது தெரிந்தது. இயேசு பெருமானாக அவதாரம் செய்திருந்த அந்த காலத்தில் அவர்கள் பட்ட கொடுமையான துன்பங்கள் இப்போது அவர்களின் தோற்றத்திற்கு வந்து இருக்கிறது என்பதனை அறிந்து சபையோர் திகைத்து அமர்ந்திருந்தனர்.

''அன்று இயேசுபிரான் அவர்களை மாட்டிக் கொள்ளும்படி அவரைக் காட்டிக்கொடுத்தானே ஒருவன் அவன் அவரது மாணுக்கனு? அவர்கள் ஆபத்தில் சிக்கின போது மற்றவர்களும் ஓட்டம் பிடித்தார்களே அவர்கள் எல்லாம் மாணுக்கர்களா? இன்றைக்கு அந்தசபையில் எத்தனை பொய்க்கதைகளைக் கட்டிக்கூட்டி குறைத்து எழுதி இருக்கிறார்கள். ஆனாலும் அதில் மெய்யான சில நடைமுறைகளும் வாசகங்களும் இருக்கின்றன. மெய்யானது துண்டாகத் துப்புரவாக ஒதுங்கி பகிரங்கத்தில் தெரியும்படி இருக்கிறது. 'ஏ விரியன் பாம்புக் குட்டிகளே! தேவனுடைய திறவுகோலை நீங்கள் எடுத்துக் கொண்டீர்கள். நீங்களும் உள்ளே பிரவேசிக்கிறதில்லை. பிரவேசிக்கிறவர்களையும் தடை பண்ணுகிறீர்கள்! கடைசிக் காலத்தில் இறுதி தீர்ப்பர் வருவார்கள். அவர்களுடைய சரித்திர நடைமுறை இன்னதுதான்'' போன்ற மெய்யான சில வசனங்களும் அந்த சத்திய வேதத்தில் நமக்கு உதவியாக வந்து நிற்கின்றன.

''மெய்ஞ்ஞான குரு பிரானை எதிர்த்து கோரப் பாவகரச் செயல் செய்பவனைத்தான் அசுரன் என்று சொல்ல வேண்டும். ஏசயா அவர்

களை கிட்டங்கி போட்டுச் சித்திரவதை செய்தான்களே - அவரைப் போன்று அன்று வந்த பெரியோர்கள் எத்தனை பேருக்கு இடைஞ்சல்கள் கொடுத்தார்கள்? - எத்தனை அவஸ்த்தை எத்தனை கஷ்டம் - எவ்வளவு கவலையில் ஆழ்ந்திட செய்தான்கள். அவன்கள் அவரை அறைந்து வதைத்த அந்த கிட்டங்கியையே சின்னமாக அணிந்து கொண்டு இன்று திருவிழா வேறு கொண்டாடுகிறார்கள். என்ன பாவம் பார். எக்காலத்திலும் இந்த மெய்ச்செயல் விரிப்புக்கு எதிர்ப்புகள் இருந்து கொண்டே தான் இருந்திருக்கிறது. ஆனால் இறுதியில் எதிர்த்தவன்கள் எல்லாம் விழுந்தான்கள். அந்த மெய்ஞ்ஞான வேந்தர்களே ஜெய மேட்டில் ஏறினார்கள்.

✦✦✦✦✦✦✦

இங்கு வந்து சிலநாள் பழகியவர்களுக்கு இது சிவலோகம் என்பது திட்டமாக தெளிவாக அறிவுக்குத் தெரியும். வெளியில் இருப்பது நரகலோகம் என்று உணர்வார்கள். இங்கிருந்து இதை விட்டு வெளி உலகத்திற்குப் போனால் அவர்கள் உடம்பு எரிகிற மாதிரி இருக்கும். எப்பெரும்பாடுபட்டு நாம் இந்த சிவலோகத்தை இப்படி உண்டாக்கி இருந்தால் இந்த உணர்வு அவர்களுக்கு வரும் என்று எண்ணிப் பாருங்கள்.

முழுப்பாவியாக, தன் உயிருக்கே எதிரியாக, தன் ஜீவ நலத்திற்கே மாற்றக் காரனாக இருப்பவனுக்கே இந்தத் திருத்தலம் பிடிக்காது. திருடனுக்குப் போலீஸ் ஸ்டேஷன் எப்படிப் பிடிக்கும்? அவன் உள்ளமே அவனை இங்கே போகாதே என்று வாட்டு மன்றோ?

நன்மன நற்குடி நன்மாறாயற்கு நல்லதாயும், தீமனத் தீக்குடித் திருடர்கட்குத் தீயதாயும், இந்த எல்லை இங்கே இன்னாள் விளங்கா னிற்கிறது.

✦✦✦✦✦✦✦

பரப்பிக் கொண்டிருக்கிறது. இதை வி அடைய உன்
வஞ்சுகமற்ற எதார்த்தம் தான் தேவை.

✧✧✧✧✧✧✧

சாலியம்பதி ஒரு சங்கப் பலகை.

எல்லா மதங்களையும் ஏற்கும், ஏற்றுவிக்கும் சங்க
சாலியம்பதியில் தான் உள்ளது. அனைத்து மதங்களையும்
உள்வாங்கும் சக்தியும் இங்குதான் உள்ளது.

✧✧✧✧✧✧✧

(தரிசிக்க வந்தவர்களிடம் திருவாய் மலர்ந்தருளியது

'' எம்பிள்ளைகள் தரிசனத்திற்குத் கொண்டு வந்து
வாழைப்பழசிப்பிலிருந்து ஒரு பழத்தை எடுத்து அவர்
வழங்குகிறோம். அவ்வளவுதான். இதற்கு எம்மிடம் இவ்வள
ஒட்டுதலாக இருக்கிறார்கள். ஏன்? அந்த பழம் ஒரு சாதாரண
இல்லை என்பது அவர்களுக்குத் தெரியும். உயிரையே
கொடுத்து ஒவ்வொரு தலையையும் சேர்த்தோம். இது இ
எம்பிள்ளைகளுக்கு தெரியும். அதனால் தான் இங்கு ஊடக
செயலுக்காக எம்மீது மாறாத பேரன்பை வைத்திருக்கின்றார்க
அன்புதான் இவர்களைச் சிவமாக்குகிறது.

காணிக்கை வீதி மாணிக்க வாசகப் பிரான்
என்றைக்காவது தாங்கள் ஆக முடியும் என்று இவர்கள் க
கருதி இருக்கமாட்டார்கள்.

'சித்தமலம் அறிவித்து சிவமாக்கி எனை ஆண்ட

அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே!''

என்ற அவர்களுடைய அனுபவம் பழுப்பேறிய செயல்வாக்கு இவர்கள் அளவிலும் இங்கே உண்மையாகி உள்ளது. இதை அவர்களிடம் கேட்டா ஞம் செய்தோம்? இல்லே. ''செய்யாமல் செய்த உதவி'' என்பது இதைத்தவிர வேறென்ன? இதை தவிரவேறு ஆகாயத்திலா இருக்கும்?

இருக்குரான் வேதத்தில், அல்லாகுத்தாலாவிடமிருந்து வரும் திருத்தூதர் ஜிப்ரயேல் வானத்திலிருந்து ஒரு நீர் வீழ்ச்சி மூலமாகத் தரைக்கு வருவார். அவருக்கு 70 ஆயிரம் இறக்கைகள் இருக்கின்றன என்று கூறியிருக்கிறது. அது குறிக்கும் தேவ ரகசியம் எரர்களுக்கு எந்தக் காலத்திலாவது புரியுமா? புரியாது. அது எம் மூலமாக எழுந்து உலவும் விண்வளுதலே! இது இப்படி என்று உன் நினைவு வளர்ந்து இப்போது புரிந்து கொண்டது சாமான்யமான காரியமா? உனக்குத் தெரியாமலல்லவா உன் புலன்களை மாற்றி தேவ வல்லபம் பெற்று விளங்க வளரச் செய்திருக்கிறோம். இப்படி மனித சக்தியில் வளர்ந்திருந்த புலன்களை பிரட்டி மாற்றி புதுதேவ ஆற்றலோடு விளைந்து ஈசனாக மாறும்படி ஆக்கி உள்ளோம். மனித சக்திக்கு மேம்பட்ட சக்தி எதுவும் இல்லாமல் ஈசன் படைத்தான். அருபத்தில் உள்ள ஈசன் எந்த அளவுதான் செய்ய முடியுமோ அந்த அளவு செய்துள்ளான். ஆனால் அந்த இறை சக்தியுடன் ரூபத்தில் வந்த ஈசன் சக்தியையும் சேர்ந்து ஒன்றை உண்டாகிவிட்டால் அது என்ன பிரமாண்ட விளைவுக்கு வரும் என்று எண்ணிப் பாருங்கள்.

" மறையதில் மூமின் தேகம் மண் தொடாதெனச் சொல்வார்........" என்று திருக்குரானில் வருவதை சுட்டிக் காட்டி அமுத கலைக்ஞான போதம் முதல் காண்டத்தில் ஆண்டவர்கள் பாடி வைத்துள்ளார்கள். மெய்வழி முகமது யூசுப் அனந்நர் திருக்குரானை முழுதும் ஓதி பாடம் செய்தவர். அவர் திருக்குரான் முழுவதும் தேடிப்பார்த்ததில் இதை விளக்கும் பகுதி கிடைக்கவில்லை. இதை தெய்வமவர்களிடம் தெரிவித்தார்கள். அதற்கு தெய்வம் "இன்ன பகுதியில் இன்ன சூராவில் இருக்கும் தேடிப்பார்" என்று குறிப்பிட்டு சொன்னார்கள்.

தெய்வமவர்கள் திருக்குரானை சிறு வயதில் இளமை காலத்தில் எப்போதோ காதில் கேட்டதுதான். இதற்கு என்று எதுவும் ஓதி படித்ததில்லை. மறதி இல்லாத திருமேனி ஆனதால் அவர்கள் நினைவில் அது அப்படியே இருந்தது. பிறகு மெய்வழி யூசுப் அனந்நர் ஆண்டவர்கள் குறிப்பிட்டபகுதியில் மூமினை மண் தீண்டாது என்று அப்படியே எழுதியிருப்பதை கண்ணுற்று ஆச்சரியமுற்றார்.

அப்படி தெய்வமவர்கள் பாடமாக அவைகளை படிக்காதிருந்தும் தங்கள் மெய்திறன்கொண்ட கூர்மதி கொண்டு மெய்ஞ்ஞானச் செயல் தவவலிமையேற்றத்தால் செவியில் எப்போதோ கேட்டதை அன்று எடுத்து காட்டினார்கள்.

இந்நச் செயலுக்கு உவமையாக ஆண்டவர்கள் "எறும்புக்கு கண் தெரியாது. காதும் கேட்காது. நுகர்கின்ற அறிவு ஒன்றுதான். அதனால் தான் நுகரும் சக்தி அதற்கு அதிகமாகி இருக்கிறது. ஒரு வஸ்து மண்ணில் புதைந்திருந்நாலும் நேரே அங்கே சென்றுதின்பண்டத்தை அது கைப்பற்றிவிடுகிறது" என்று ஊசிமுனை கூர்மை அறிவுபற்றி தெரிவித்து உள்ளார்கள்.

யானையைக் காட்டிற்குள் அனுப்பும்போது அதன் கழுத்தில் ஒரு கனத்த சங்கிலியைக் கட்டி கீழேபடும்படி தொங்க விட்டு அனுப்புவார்கள். அது எவ்வளவு தூரம் போயிருந்தாலும் சங்கிலியின் தடத்தை வைத்து அது காட்டில் மேயும் எல்லையைக் கண்டு கொள்ளலாம். அதுபோலவே மதம் என்கிற சங்கிலி ஒவ்வொரு மனுவின் கழுத்திலும் கட்டப்பட்டிருக்கிறது.

எத்தனையோ மதங்கள் இருக்கின்றன. அனைத்தும் ஒன்றேதான். சிவ மதம் பெரியது என்கிறாய். ஜீவன் பெரிதா சிவம் பெரிதா! ஜீவன் தான் பெரிது. ஏனெனில் ஜீவன் இருந்தால்தானே சிவனை அறிய முடியும்?

ஒவ்வொரு மனிதனும் ஒரு உலகம். இது சத்தியமான வார்த்தை. அப்போ எத்தனை உலகங்களை நாம் ஒன்றாகச் சேர்த்திருக்கிறோம் பார்த்தாயா? மலையைப் பிரட்டினாலும் பிரட்டலாம். மனிதனின் னினைவைப் பிரட்ட முடியாது. அவ்வளவு கனம் கொண்டதாயிற்றே அது. எத்தனை ரகரகமாக பேசினாலும் பிரட்ட முடியாத உங்களை இங்கு பிரட்டி ஆக்கி உள்ளோம்.

எல்லா ஜீவராசிகளிலும் வைத்து தலைமையான படைப்பு மனிதன் தான். ஆனால் இந்த னெடிய உலகத்திலுள்ள அவ்வளவு மனிதர்களை ஒரு சேர வைத்தாலும் சாலைக்கு வந்து சேர்ந்த ஒரு தலைக்கு அவர்கள் எல்லாரும் னிகராக மாட்டார்கள். இங்கு வந்து அந்த உன்னதம் பெற்றுச் சேர்ந்துள்ள அத்தனை தலைகளுடன் இது காலம் வரை இவ்வுலகிற்கு அனுப்பி வைக்கப் பெற்று வந்த தெய்வத் தோன்றலர்களாகிய பாரவான்களை ஒருங்கு கூட்டி வைத்தாலும் உங்கள் தெய்வத் தந்தையவர்களின் தனித்த ஏற்றத்திற்கு னிகராக

மாட்டார்கள். உங்கள் குரு கொண்டலராகிய இந்த மெய்வழி ஆசான் எல்லா தீர்க்கதரிசிகளும் எதிர்பார்த்த தனித் தலைமைப் பெரும்பதி. வானவர் மனுக்கள் யாவரும் அலைந்தலைந்து இன்னும் காணுறா ஆதிமுயக தேவனை இந்த தேவகுல மக்கள் கண்டு கலந்தருள் தான் இது.

வள்ளுவர் காலத்துஞானம் ''எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்'' என்றிருந்தது. எண்ணியது மட்டும் தான் கிடைக்கும். ஆனால், எனது காலத்திலோ ''எண்ணுறா எல்லா சித்தி முத்திகளும்'' வாய்க்கும். நீ நினைக்காதது நினைவுக்கு எட்ட முடியாதது எல்லா வல்லபங்களும் வாய்க்கும். தூய நினைவோடு ஒட்டி நடப்ப வர்களுக்கு இது நிச்சயம் கிடைக்கும்.

✦✦✦✦✦✦✦

(உருமகால தவத்திற்குப்பின் ஆலயத்தில் எழுந்தருளி....)

ஆண்டவர்கள்:- ''இனிமேல் அறம் வரும்போது இடம் வலம் சுற்ற வேண்டாம். முதலில் போகிறவர் எப்படி சுற்றுகிறாரோ அதே திசையில் எல்லோரும் சுற்ற வேண்டும். மூலமந்திரம் ஜபித்துக் கொண்டே மெதுவாகச் சுற்ற வேண்டும்''.

அறவலம் வருதல் என்று சொல்லக்கூடாது. அறம் சுற்றுதல் என்று தான் சொல்ல வேண்டும்.

✦✦✦✦✦✦✦

நீ இங்கு வருவதற்கு முன் இந்த உன்னத தேவநிலையில் நாம் ஆகுவோம் என்றோ இந்த அரிய பதத்தை கைபோடுவோம் என்றோ சிறிதளவாவது நினைத்துப் பார்த்ததுண்டா? யாருமே நினைக்க வில்லையே! இது உன் நினையாப் புரத்து அற்புதச் செயல் அல்லவா?

னினைவு தான் எல்லாவற்றிலும் பெரியது. அது எவ்வளவு பெரியது? என்ன உருவம் உள்ளது என்பது தெரியுமா? யாராலும் அளவிடற்காரியதாயிற்றே அது!

⟡⟡⟡⟡⟡⟡

எமது காலம் விக்டோரியா பெண்ணின் ஆட்சிக்காலம் என்று தீர்க்க தரிசனம் கூறுகிறது. விக்டோரியா ராணியின் பெயர் பாரவான்கள் கூறும் தீர்க்க தரிசனத்தில் இடம் பெற்று விட்டது. அந்த னேரத்தில் அவர் ராணியாவதற்கு வழியே இல்லே. அவருக்கு அக்கா ஒருவர் இருந்நார். சித்தப்பா ஒருவர் இருந்நார். பின் எப்படி இவர் ராணி ஆனுர்? ஆனுல் அந்த தீர்க்க தரிசனம் னிறைவேற வேண்டும் என்பதற்காவே அக்காவும் பிரசவத்தில் இறந்து போனுர். சித்தப்பாவுக்கும் பயித்தியம் பிடித்து விட்டது. எனவே இவர் ராணி ஆனுர்.

ஆதி ஊழி விதி இந்த தீர்க்க தரிசனங்களே எப்படி னிறைவேற்றுகிறது என்று பாருங்கள். இங்கிலாந்தில் ராணி ஆட்சி முடிந்ததும் னும் திருப்பத்தாருக்கு வந்து விட்டோம். அப்போது மொட்டை தலே ஐந்நாம் ஜார்ஜ் அரசர் ஆனுர். அவர் போட்ட னுணயத்தில் மொட்டை தலே தானே னின்றது. அவர் கிரீடம் என்ன ஆச்சு?

⟡⟡⟡⟡⟡⟡

"கெய்சர் ஜெர்மனிப்பட்ட மெய்யாய் பன்னிரெண்டாண்டு
கெடி வைத்து உறதி பற்றும் னிருபம் எத்தனே கோடி
சின்னுமக்காரர்கள் தெள்ளிய அரசாட்சி – அருனேரும்...."

என்ற தீர்க்க தரிசன வரிகள் சபையில் பாடி வரும் போது ஆண்டவர்கள்: 'முதல் உலக மகாயுத்தம் னடந்த பொழுது னும்

திருப்பத்தூரில் இருந்தோம். அப்போது தான் நமது சன்னதமான கின்றுமத்தை செய்வதற்கு ஆர்டர் கொடுத்தோம்.

இதைத்தான் அந்த திர்க்க தரிசனம் சுட்டிக் காட்டுகிறது. கெய்சர் ஜெர்மனி சண்டை பனிரெண்டு ஆண்டு நடந்தது. கொடியையும் இந்த காலத்தில்தான் ஏற்றினோம்.''

✧✧✧✧✧✧✧

ஐந்து சதுர அடி விஸ்திரணமுள்ள சூரிய உஷ்ணம் சேர்ந்தால் உடனே தீ பிடிக்கும். இறைவன் மனிதனுக்காகவே அந்த தீப்பிடிக்கின்ற கிரணங்களையும் இதமாக இணக்கமாக அவனுக்கு உதவும்படி பிடித்து ஆக்கி அனுப்பி வைத்து உலகத்தை காப்பாற்றுகிறான்.

காற்றில் மூன்று வகை பூதங்கள் இருக்கின்றன. இவனுக்கு வேண்டிய விகிதத்தில் எங்கும் என்றும் குறையாமல் இருக்கும்படியாக காற்றை இறைவன் படைத்திருக்கிறான். காற்றில் ஈரம் இல்லாவிட்டால் சுவாசிக்க முடியுமா? அப்ப, காற்றில் கொஞ்சுமாவது தண்ணிர் இருப்பதினால்தானே சுவாசிக்க முடிகிறது. அதே சமயத்தில் அக்னியின் உஷ்ணமும் வேண்டுமே. குளிர் தேசத்தில் வீசும் காற்றிலும் நமக்கு வேண்டிய உஷ்ணத்தை இவன் கருவிக்குலமாகிய மூக்கு தானே தேடி சுவாசிக்கிறது.

உன் அழிவான செயலினால் உன் மாமிசத்தின் உஷ்ணம் ஒரு பங்கு. அதைபோல் இரண்டு பங்கு இரத்தத்தின் உஷ்ணமும், அதைப் போல இரண்டு பங்கு நரம்பின் உஷ்ணமும் மூச்சினால் துண்டாடி விண்போகிறது. ஆனால் ஞானிகள் அண்டத்திலுள்ள எதையும் தங்கள் அகக் கண்ணால் தங்களுக்குள்ளேயே காண்பதால் அவர்களுக்கு

சுவாசம் வெளியேறி உஷ்ணம் வீணாவதில்லை.

முன் வந்த சித்தர் முத்தர்கள் எல்லோரும், உடல், பொருள், ஆவி தத்தம் செய்து மெய்யைபெற்றார்கள் ஆகையால் சதா சர்வ காலமும் தாங்கள் பெற்ற பொருளை பற்றிய எண்ணத்திலேயே இருந்நார்கள். ஜீவனில் பரிசுத்தம் இருந்நது. இவர்கள் இப்படியே சில காலம் இருக்க மூச்சு அடங்கி திட்டு முட்டு அடிக்கும் - அதில் இன்பமும் இருக்கும். பின் அதிலேயே ஆறுமாத காலம் இருந்நால் நாடி நரம்புகளெல்லாம் சுத்தமாகும். பின் சுடர் தோன்றும். இல்லற சுத்தம் ஒரு தடவை தவறினால் மறுபடியும் சுத்தமாக ஆறு மாதமாகும். நீங்கள் ஒரு சாண் ஏறினால் முழம் சறுக்குகிறது. நீங்கள் எங்கே அந்த எல்லைக்கு வரப்போகிறீர்கள்?

நாசிக்கு வெளியே மூச்சோடாதிருப்பவர்களுக்கே நாடி தெரியும். அவர்களுக்கேயன்றி வேறு எவருக்கும் நாடியிருக்கும் தலமே தெரியாது. இதில் ஐந்து நடை உண்டு.

✧✧✧✧✧✧✧

நாம் இங்கு நடத்தும் சாகாத வித்தையென்னும் பிரம்ம வித்தைச் செயல் இவ்வளவு பகிரங்கமாக முன் எந்தக் காலத்திலாவது நடந்நதா? இல்லையே. இப்படி நடத்துபவர்கள் யாராக இருக்க முடியும் என்று நீ நினைத்து கவனித்துப் பார். நீ எம்மிடத்தில் வைக்கும் அன்புதான் உன்னைக் காப்பாற்றும். அதனால் தான் ''அன்பே சிவம்'' என்று வழங்கப் பெறுகிறது. உன் தெய்வ ஆசானிடம் சதா அன்பு செலுத்துவதையே உன்னை சிவமாக்குகிறது. இதை வைத்துத்தான் ஸ்ரீ காகபு சுண்டர்பிரான் அவர்கள்

''உரையுமே நாம் சொல்லதயங்குவாயோ
உயிருமே போனாலும் பயமே இல்லை

இறைவனே எனைக் காக்க இருக்கும்போது

இருதயம் கலங்காது பொருளே சொல்லும்''

என்று பாடியுள்ளார்கள்.

வேதத்திலுள்ள எந்த தீர்க்கத்தரிசனமும் சுய தோற்றமாக வெளிவராது. ஆனால் இப்போது மார்க்கமே திருமேனி தாங்கி வந்துவிட்டது. ஆகவே தீர்க்கத்தெரிசனங்கள் வெளி வருகிறது. பொய்யை மிகைத்து விரட்டி மெய்யை தட்டி மெய் மார்க்கத்தை கண்டவர் ஆகையால் அவரை மார்க்கண்டேயர் என்று தீர்க்க தரிசனங்கள் கூறுகின்றன.

ஞானசம்மந்தர் தேவாரத்தில் ''திருக்கோடிகாவூர்'' என்ற பதிகத்தில் நும் கிள்ளுமக் கொடியை ஏற்றியதை பற்றிய தீர்க்க தரிசனம் கூறியது மட்டுமல்லாமல் பிரளயம் வரப்போகிறது என்றும் அதனால் அந்த ''உத்தியோவன மெய்வழி சாலை எல்லைக்கு ஓடுங்கள் ஓடுங்கள்'' என்றும் தீர்க்க தரிசனம் கூறுவதை பாருங்கள்.

இந்த மெய் எல்லையை திருஞான சம்மந்த பெருமான் திருக்கோடிக்காவூர் பாசுரத்தில் காரல் சூழந்தமானகர் என்றும் மீட்பு செயல் உடைய ஊறல் பிரதேசம் என்று கூறுகிறார்.

'' னில்லா உலகில் னிற்பவர் னிற்கட்டும்

இனி நும் னில்லோம் புயங்கப் பெருமானை

சென்றடைவோம்''

என்ற தீர்க்க தரிசனம் யாருக்கும் கொஞ்சம் கூட படவில்லையே?

''புலன்வழி செல்லாதீர்கள் – புயங்க பெருமானை

சேருங்கள்'' என்று எப்படியெல்லாம்

மாணிக்க வாசகர் எச்சரிக்கை தருகிறார் பாருங்கள்.

'' இதுவரை பெரியோர் சொற்படி னட'' என்று இருந்தது சரி. இனிக் காலமில்லாததால் ''பெரியோர் சொற்படி ஓடு'' என்கிறோம்.

ஆண், பெண் தனித்தனியாக இருந்தவர்கள் திருமணம் என்ற பந்தத்தால் கட்டுப்பட்டவுடன் கணவன் மனைவியை நன்ருக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிருன். மனைவியும் தம் கணவனை எப்போதும் சந்தோஷமாக இருக்கும்படிச் செய்ய முயற்சிக்கிருள்.

பிறகு அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்து தாய், தந்தை, ஆகிருர்கள். இருவரும் தாங்கள் பெற்ற குழந்தையின் மேல் தங்கள் அன்பையும், பாசத்தையும் பொழிகிருர்கள். அதே போல் அந்தக் குழந்தையும் அவர்களை நேசிக்க வேண்டும் அல்லவா? ஆம் நேசிக்க வேண்டும். இது இக வாழ்க்கை. இதேபோல் எத்தனையோ மடங்கு பரவாழ்க்கையில் தாயும், தந்தையுமாக நின்று உம்மை சுவர்க்கபதி சந்ததியாய் பெற்றெடுத்த உன் தெய்வத் தனிப்பிரானை நீ நேசிக்க வேண்டாமா?

சிறிய நேர சிற்றின்பத்திற்காக ஒரு பெண்ணிடம் குழைந்து குழைந்து அவளுக்கு அடிமையாகிருயே! அவளை காலமெல்லாம் உழைத்து காப்பாற்றுவதாக வாக்களிக்கிருயே! அப்படி ஆனுல் உன்னை மறுபிறப்பாளனுக்கி அறிவுக்கு எட்டாதவை எல்லாம் எட்டி கைப்போட வைக்கும் ஆசானிடம் எப்படி அன்பு வைக்க வேணும்? அவரிடம் எப் பேர்ப்பட்ட உண்மையாளனுக நடந்து கொள்ள வேண்டுமென்று சிந் தித்து பார்த்திருக்கிருயா?

✦✦✦✦✦✦✦

ஆதி மான்மியத்தில் ஒரு இடத்தில் தெய்வம் அவர்கள் "புதுமைக்கு புதுமையாகிய இத்தொண்டு பழமை மூல காரியத்தை" என்று மெய்வழியை பற்றி எடுத்துக் காட்டுகிருர்கள். இதையே வைத்து மணிவாசகப் பிரான் தமது திருவாசகத்தில் தீர்க்க

தரிசனமாக நம் தெய்வத்தை பற்றி போற்றும்போது.

"முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் போற்றும் அப்பெற்றியனே" என்கிறார்.

"பழமைக்கு பழமையானவர்கள் – அதே சமயம் புதுமைக்கும் புதுமையானவர்கள்" என்று நம் தெய்வமாகிய மெய்வழி அதிபரை பற்றி கூறுகிறார்கள். என்ன பொருத்தம் என்று பாருங்கள் .

' சிரசினில் துய்ய பாகை' என்று ஆண்டவர்கள் திரு உருவத்தைப் பற்றி தீர்க்க தரிசனங்கள் உரைக்கின்றன. 'துய்யபாகை' என்பதை ஆண்டவர்கள் புத்தம் புதிய துணியையே தலைப்பாகையாக அணிவார்கள் என்பதினை அனைவருக்கும் குறித்து காட்டுகிறது.

திருமூலர் தமது திருப்பாடலில் சிவபெருமானாகிய நமது பெருமான் அவதாரத்தை வர்ணித்து "மெய்யில் அணிகலன் ரத்தின மேவிட துய்ய முடியும் அனுபவத்தில் தோற்றமே" என்று பாடி மகிழ்கிறார்கள் என்று ஒரு நாள் தெய்வம் திருமுன்பாக சபையில் பேசப்பெற்றது.

"செய்யத் திருமேனி செம்பட்டுடைத்தாலும்
கையிற்படை அங்குச பாசத்தோடு அபயம்
மெய்யில் அணிகலன் ரத்தின மேவி
துய்ய முடியும் அனுபவத்திற் தோற்றமே" – திருமூலர்

❖ ❖ ❖ ❖ ❖ ❖

மனு பிறப்பதற்கு 7000 வருடங்களுக்கு முன்னமேயே எல்லாம் படைக்கப் பெற்றன.

ஆதி அநாதியில் ஈசனுக்கு சராசர அண்ட கோளத்தை படைக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அதனால் புழுக்கத்தால் ஜலம். ஜலத்தால் காற்று. காற்றும் ஜலமும் ஒன்றோடொன்று அடித்தடித்து நுரை உண்டாகி ஒரம் ஒதுங்கி மண், கல் முதலியன உண்டாயிற்று. இந்த படிக்கு சிருஷ்டியின் நீளம் தான் எவ்வளவு? முதலில் உண்டான ஆதி அநாதி கோளம் எது? 'வானம்' தான்.

✧✧✧✧✧✧

எப்போதும் முழுவயிறு சாப்பிடக்கூடாது. அப்படிச் சாப்பிட்டால் வயிறு 'தம்' என்றும், கண் 'ஜிவ்' என்றும் இருக்கும், அப்புறம் தூக்கம் தான் வரும். விழித்துக் கொண்டிருக்கும் போதே நினைவு தப்பும். ஒன்றும் தெரியாது. ஆகவே அரை வயிறு தான் சாப்பிட வேண்டும்.

எந்த நோயையும் சங்ஙாரம் செய்கின்ற காலாக்னி உன் வயிற்றுக்குள் இருக்கிறது. அதனால் நீ தான் அளவிற்கு மேல் சாப்பிட்டு அதை கெடுத்து விடுகிறாய்.

" குரோத எண்ணம் இருப்பவர்களுக்கு எமது ஆசி கிடைக்காது. காம குரோதத்திற்கு முக்கிய காரணம் தீனிதான்."

தவம் கைவரவு ஆவதற்கு முக்கியமான முதல் எது?

தவத்திற்கும் தவம் இல்லாததற்கும் மையம் ஏது?

பசிதான். பசி எடுத்துக் குடல் கருகினால் தவம் கைவரவு ஆகும். இதையே "பகர் மொழிச் சுவையும் பசியினில் உகப்பும்" என்று நாம் பாடி வைத்துள்ளோம்.

தூக்கத்தை குறைத்தால் ஜீவன் விருத்தியாகிறது. தூக்கத்தில் கலை அதிகமாய் பாய்வதினால் தூங்குதல் ஆயுளை குறைக்கிறது.

அதிககலே ஒடுவதால் பெருந் துக்கமும் னஷ்டமும் உண்டாகிறது. அப்படி இருந்நாலும் மக்கள் தூங்ங ஆசைபடுகிறுர்கள். (18-2-41)

"ஆசைக் கடலில் அகப்பட்டு அருளற்ற அந்நகன் கை
பாசத்தில் அல்லற்பட இருந்நேனே னின் பாதமென்னும்
வாசக்கமலம் தலைமேல் வலிய வைத்து ஆண்டு கொண்ட
னேசத்தை என் சொல்லுவேன்? ஈசர் பாகத்து னேரிழையே"

என்ற அபிராமி அந்நாதியிலிருந்து ஒரு பாடலே நரிசிக்க வந்ந பிறவியர் ஆண்டவர்கள் திருமுன்பாக ஆலயத்தில் பாடி தோந்தரித்து னின்ருர். அனந்நாதி தேவர்களும் அதனே கேட்டு ஆண்டவர்களே தோத்தரித்து ஆனந்ந கண்ணீர் வழிந்நோட அமர்ந்நிருந்நனர். அப்போது ஆண்டவர்கள் இள னகை பிறங்ங அவர்களேப் பார்த்து "முன் வந்ந செம்மல்கள் எல்லாம் ஒரே விதமாக பாடி வைத்துள்ளதை பார்த்தீர்களா? பாதமென்னும் வாசக் கமலம் தலைமேல் வைத்தாண்டு கொண்ட" - என்று எல்லாரும் ஒரே மாதிரியாக பாடியுள்ளார்களே அதை பார்த்தீர்களா?" என்று திருவாய் மலர்ந்நருளினுர்கள்.

8/9/72

சூரியனில் வெடிப்பு ஏற்பட்டு வட துருவத்தை தாக்கிய செய்தி படித்தபோது "இது எப்போதும் உன் னினைவிலேயே இருக்கனும்" என்று உத்தரவாகியது.

"மூங்கில் இலை மேலே தூங்கும் பனிநீரே – தூங்கும் பனி நீரை வாங்கும் கதிரோனே" என்று பாடிய காலம் போய் சூரியனையே இப்போது பனிமூடி நிற்பதை பார்க்கிறோம். 6000 மைல்களுக்கு அப்பால் நின்ற பனி தாறுமாறாகி உஷ்ணப் பிரதேசமான நம் நாட்டில் வீசி நம்மை நடுங்குறச் செய்கிறது. சூரியன் தன் சக்தி மங்கி கூழாங் கட்டி போலாகும் காலம் நெருங்கிவிட்டது. சூரியனில் பல ஓட்டை கள் விழுந்து ஒரு தட்டு தட்டினால் பொடியாய் உதிர்ந்து விடும் போலிருக்கிறது. சந்திரன் மேலும், மேலும் சிவந்து பயங்கரமாகிக் கொண்டிருக்கிறது. இப்படி சந்திர சூரியாளுக்கே அழிவு நெருங்கினால் இந்த பூமி இன்னும் எத்தனை நாளைக்கு இருக்கப் போகிறது என்று எண்ணிப்பார்!

அண்டத்துக்கொத்தது பிண்டம். அண்டத்திலிருந்து ஒவ்வொன் றாக எடுத்துத்தான் பிண்டத்தைப் படைத்தது. பிண்டத்துக்கு வியாதி வந்தால் அண்டத்திலிருந்து தானே மருந்து எடுக்கணும். அப்ப அண்டமே கெட்டுவிட்டால் பிண்டம் எங்கே இருக்கப்போகிறது?

முன்பு இடி இடித்தால் மழை பெய்யும். இப்போது இடி இடித்தாலும் மழை பெய்வதில்லை.

முன்பு மூன்றாம் நாள் பிறை நிலவில் கூட கை ரேகையை பார்க்கலாம். இப்போதோ சந்திரன் ஒளிமங்கி செவந்து ஒளியிழந்து பயங்கரமாய் இருக்கிறது.

சந்திரனை பற்றி நீங்கள் கவலைப்படுவதே இல்லை. உங்கள் குடும்பத்தில் யாராவது சாகப் போகிறார்கள் என்றால் அவர்களை மறுபடி யும் பார்க்கமுடியாதே என்று உனக்கு எவ்வளவு வருத்தமாக இருக் கும் அவர்கள் போனால் உனக்கு ஒன்றும் தீங்கு இல்லை. ஆனால் சந் திரன் போனால் உலகமே கிடையாது. அதை நினைத்தால் உனக்கு

துக்கமாயில்லையா? எதையும் ஊணி னினைத்தால்தான் அது விளங்கும். அண்டத்திலுள்ள எல்லாவற்றுக்கும் தாய்மதியாகிய சந்திரனே கெட்டு விட்டது. இனிமேல் உலகத்தினருக்கு மதி இருக்குமா? எல்லாம் விபரீதமாகப் போகும்.

பெரிய னகரமாகிய திருச்சியில் சனி பகவானுக்கு திருவிழா கொண்டாடி வாவா என்று அழைக்கிறார்கள். ஜோசியகாரன் சனி பிடித்து விட்டது என்று சொன்னவுடனேயே பரிகாரம் தேட ஆரம்பித்து போய் ''சனியே வா'' என்று கூப்பிடுகிற காலம் வந்து விட்டது. என்ன விபரீதம் பார்! சந்திரன் சிவப்பாகிக் கொண்டு வருகிறது. சிவப்பு னிறம் வெறுப்பை குறிக்கிறது. தாய் மதி கெட்டதால்தான் இந்த உலகத்திலுள்ளவர்களுக்கு மதி கெட்டுவிட்டது. அந்த பாதிப்பு தன்னை அறிந்தவர்களைத்தான் இந்த தேவபூமியில் உள்ளவர்களுக்குத்தான் முதலில் பாதிக்கும். ஆகையால் னீங்கள் எல்லோரும் விடாமல் மூல மந்திரம் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். சிறுது னேரம் மறந்து விட்டாலும் ஐயோ ஆண்டவர்களை மறந்து விட்டோமே என்று பதறி மூலமந்திரம் சொல்ல வேண்டும். இல்லையென்றால் அது உங்களை பாதித்துவிடும். உங்கள் மதியும் கெட்டு விடும். சந்திரன் இல்லையென்றால் ஏது மனுக்குலம்? கூர்ந்த அறிவுடன் னோக்கினால் தானே அந்த விசனம் உண்டாகும்.

✦✦✦✦✦✦✦

னல்ல பாம்பு வழி பாதையில் ஏன் படுக்கிறது தெரியுமா? மனிதர்களின் பாத ரேகைகளிடமிருந்து உப்பு ஜலம் ஊறி தரையில் படுகிறது. அந்த உப்பை னக்குவதற்காகத் தான் னல்ல பாம்பு அங்கு வந்து படுக்கிறது. னமக்குத் தேனின் சுவை போல அதற்கு உப்பின் சுவை இருப்பதால் பாதையில் உள்ள உப்பை மட்டும் அது னக்கும்.

ஜீவப் பிறவியரை னல்லடக்கம் செய்தபின் அந்த னிகழ்ச்சியில் கலந்து கொண்ட எல்லோருக்கும் பொன்னரங்க தேவாலயத்தில் னுழையும் போது ஆண்டவர்கள் தீர்த்தம் போடுமாறு உத்தரவிட்டு அதன்படி னிகழ்ந்து கொண்டிருந்தது.

இது பற்றி ஒரு சமயம் ''னும் ஏன் தீர்த்தம் போடுகிறோம் தெரியுமா?'' என்று தமது தேவ மக்களைப் பார்த்து தெய்வம் கேட்டார்கள். எல்லோரும் அதற்கு பதில் 'தெரியவில்லை' என்று சொல்ல ஆண்டவர்கள் அருளியதாவது:

''அடக்கமானவர்'' தூலத்துடன் இருக்கும்போது னிங்கள் அவருடன் பழகி கொண்டும் உறவாடிக்கொண்டும் இருந்திருக்கிறீர்கள் அல்லவா? இப்போது அவரின் தூல பிரிவு ஒரு சோபமாக உங்கள் உள்ளத்தில் கட்டாயம் இருக்கும். அந்த சோபத்தை மாற்றிடவே ஆலய முகப்பில் தீர்த்தம் போட னும் உத்திரவிட்டிருக்கிறோம்.'' என்று அருளிச் செய்தார்கள்.

-+-+-+-+-+-

சடையில் பிள்ளைத்தமிழ் என்ற பாடலில் ஒருசில பகுதிகள் ஓதப்பெற்றது. அப்பொழுது கீழ்க்கண்ட வார்த்தைகளுக்கு ஆண்டவர்கள் ஞான விளக்கம் அளித்தார்கள். வேகம் என்ற வார்த்தைக்கு மனப்பேயின் வேகம் என்றும். விவேகம் என்றால் வெற்றி தருகிற வேகம் என்றும், வானம் என்றால் ஒலிவாமலே ''மனம், வாக்கு, காயம்'' ''உடல் பொருள், ஆவி.'' என்றும் விளக்கம் அருளிச்செய்தார்கள்.

-+-+-+-+-+-

மெய்ஞான சீடனுக்கு என்ன தகுதிவேண்டும்?

உன் உடல், பொருள், ஆவி மூன்றையும் தன்னை ஆண்டு கொண்ட குரு பிரானுக்கு தத்தம் செய்பவனே உண்மையான மெய் சீடன்.

உன்னிடம் இருந்தால் அது கெட்டுவிடும். அதை அழியாமல் அப்படியே காக்க குருபிரானிடம் தத்தம் செய்து விட வேண்டும். அப்படி தத்தம் செய்தவனே மெய்ச்சீடன் ஆவான்.

பக்தி செய்யும் பக்தி (சுத்த பக்தி), செய்யா பக்தி (கபட அல்லது வஞ்சக பக்தி) ஆக இரு வகை உண்டு. தனக்குத் தெரியாமலேயே வஞ்சக பக்தி தோன்றும். அதை நீக்க உன் மெய் பொருள் ஆவி மூன்றையும் உனது தேவபிரானாகிய ஈசனிடம் ஒப்படைப்பது தான் வழி. (20-2-41)

-:-:-:-:-:-:-

மாணிக்க வாசகர்க்கும் பட்டினத்தாருக்கும் உபதேசம் ஆனதை எழுதி வைத்திருக்கிறார்கள் - ''வெட்டாத சக்கரம், பேசாத மந்திரம், வேறொருவர்க்கும் எட்டாத புஷ்பம், இறையாத தீர்த்தம் இனி முடிந்து யாரும் கட்டாத லிங்கம் நெஞ்சுக் கருத்தினுள்ளே (கையால் போய்) முட்டாத பூஜையன்றோ என் குருநாதர் மொழிந்ததுவே'' என்ற அடையாளம் சொல்லுகிறார்கள். இப்படியே ஒவ்வொருவரும் அந்த அறிதற்கரிய மகத்துவத்தைப் பற்றி விளக்கியுள்ளார்கள்.

வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமா யிருந்ததனை
யிருந்தபடி இருந்து காட்டி ... என்கிறார்கள் பார்.

தக்ஷிணாமூர்த்தியாக வந்த அம்பலவாணர் படித்ததில்லை. ஆனால் அவர்களிடம் மெய்ப் பொருளை பெற்ற நால்வரும் வேதப் படிப்பிலே மகா நிபுணர்கள். நான்மறை அங்கங்களைத் தெளிவாகக் கற்று முறைப்படி எடுத்துப் பேசுகிறவர்கள். அம்பலவாணரோ அப்படிப் படித்ததில்லை. ஆயினும் அத்திருமேனியினிடத்தே நால்வரும் நாக்கு

அறுபட்டு வாய் இருந்தும் பேச வாய் வராதவர்களாய் அன்று நின்றார்கள். வல்லார்கள் நூல்வருக்கும்

"வாக்கிருந்த பூரணமாய் மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி
இருந்து காட்டி"..

என்ற அத்திருச் செயல் பேசப் பெற்றுள்ளது. மனைவியை விட்டுவிடு, உத்தியோகத்தை விட்டுவிடு, ஆசையைவிட்டுவிடு, இதை விட்டுவிடு என்று சொல்லவில்லை. அந்த நூல்வர்களும் எப்படி இருந்தார்களோ அவ்வாறுவர் இருந்தபடியே இருத்தி அவர்களுக்கு உபதேசித்தருளினார்கள்.

அன்று செய்த அந்தப் பிரம்மாதிக்க செயல்தானே இன்றும் இங்கு வந்து இருக்கிறது. இதுவரை மழை எவ்வளவோ பெய்திருக்கிறதே அந்த மழையில் அந்த பிரம்மச்செயல் கரைந்து போய் விட்டதா? இல்லை இருக்காதே. என்றும் அழியாததாய் அந்த மெய் இது நாள் வரை இருந்து தான் வந்திருக்கிறது. இதை அறியாமல் மெய்யானதை தெரிந்து கொள்ளாமல் எவ்வளவோ என்னென்னமோ யார் யாரோ சொல்வதை எல்லாம் ஞானம் என்று கேட்டு இவ்வுலகினர் பாழாகிறார்கள். நாமும் அந்தகாலத்தில் பொய்யர்கள் பன்னிரண்டு பேரிடம் ஞான உபதேசம் என்று எதையோ வாங்கி ஏமாந்தோம். இம்மாதிரி உருப்போடு. அப்படி ஜபம் பண்ணு. இப்படிக் காலை மடக்கிப் போட்டு உட்காரு - அதை விட்டுவிடு. இதை விட்டுவிடு. என்றெல்லாம் சொல்லுவான்கள். அப்படியே செய்து கொண்டிருந்தோம். பலன் பாழ்தான். முன் வந்த செம்மல்கள் எல்லாம் நீங்கள் சொல்லும் இந்தமுறையில் ஞானம் பெற்றதாகச் சொல்லவில்லையே என்று கேட்பேன். ஆனால் ஒருவரும் பதில்

சொல்லவில்லை. அந்த பொய் வேடதாரிகள் எவரையும் கேள்விகேட்க எவர் ஒருவருக்கும் எண்ணம் வரவில்லை. ஏன் வரவில்லை? அதைப்பற்றி ஆத்திரமான ஞான இச்சையே யாருக்கும் இல்லை. அப்படி நினைத்தாலும் "இவ்வளவு பேர் எல்லாம் வந்து அவன்கள் சொல்வதெல்லாம் தான் ஞானம் என்று கேட்டுக் கொண்டு சரி என்று இருக்க நாம் மட்டும் ஏன் கேள்விகேட்டு பொல்லாதவன் ஆகணும் என்ற நினைப்பு தான். எல்லாருக்கும் ஆவது நமக்கும் இருந்துவிட்டுப் போகட்டும்'' என்று முகதாட்சணயமாய் அவனை கேள்வி கேட்பதில்லை. ஆகையால்தான் பொய் வேடதாரிகளின் பித்தலாட்டம் இன்று ஏராளமாக பரவிட முழுவீச்சாக விளைந்து விளைவேறி நிற்கிறது.

ஞானம் இப்படி போலியாய் மலிந்து போய் விட்ட உலகத்தில் நாம்மட்டும் நிதம் பேச எப்படி முடியும் என்று கவலை எமக்கிருந்தது. எம்மை ஆட்கொண்ட தனித்தலைமை குருக்கொண்டல் எமக்குக் கங்கணம் பூட்டி மெய்ஞ்ஞானச் செங்கோல் ஏற்க வாளுருவி விட்டு இருபத்தைந்து வருடங்களுக்குமேல் ஆகிவிட்டபின் இந்த மெய்ச் செயலின் உன்னதத்தை பற்றி ஒரு செய்யுளில் வெளியாக்கினோம்.

'சாவருமுன் சாப்பழக்கம் பழகுவதும் எளிதோ
சாவந்திடில் சமர்த்துமுன்றன் படிப்புமங்கே செலுமோ
சாவருமுன் சாப்பழக்கம் பழகுவதிங்கு யெளிதே
சற்சனர்க்கே ஆகுமன்றிச் சண்டாளர்க் காகா
பாவனைசெய் வேடமிட்டு முத்தர்களைப் பழிக்கும்
பாதகர்கள் சாத்திரம் படித்துப் பசப்பதிக மாச்சே
நாவசைக்க ஏதுமினி நிறுமுண்டோ உலகில்
நடைபிணமாம் புலகத்தலையர் நாசகர்கள் மண்ணில்''

இவ்வாறாகவே அந்தந்த சந்தர்ப்பங்களில் நாம் பாடி வெளியாக்கிய செய்யுள்கள் ஆயிரக்கணக்கில் குவிந்திருக்கின்றன.

ஒரு முறை மெய்வழி செங்கொடி அனந்தருக்கு வைத்தியம் செய்த நாட்டு வைத்தியர் புனுகு தடவிய தங்கத்தை வீத்து கொடுக்க வேண்டும் என்று சொன்ன தகவல் ஆண்டவர்களுக்கு தெரிவிக்கப்பெற்றது. தெய்வமவர்கள் "தங்கத்தை யாராலும் வீத்து முடியாது. அதை ஜீரணமும் செய்யமுடியாது" என்று தெரிவித்து "ஆனால்... தங்கத்தை போல சத்துள்ள மூலிகைகள் இருக்கின்றனவே..... உங்களுக்கு தெரியுமா? என்று வினவினார்கள்.

எல்லோரும் "தெரியாது தெய்வமே!" என்றனர். ஆண்டவர்கள் "ஆவாரை வேரிலும், கொழுஞ்சி வேரிலும், தங்கச் சத்து இருக்கிறது" என்று தெரிவித்தார்கள். அதன் பிறகு அந்நப் பிறவியர் அவ்வேர்களை வீத்து உண்ணவே அவரின் வியாதியும் பூரணமாய் சுகமாயிற்று.

❖❖❖❖❖❖❖

"ஆண்டா னிருக்கும் இடம் தான் காட்டி".....

என்ற ஸ்ரீ சுப்பிரமணியர் தீர்க்க தரிசன வரிகள் பாடப் பெற்ற போது ஆண்டவர்கள்:

"இந்த உலகத்தில் யாராவது ஸ்ரீ சுப்பிரமணியர் இருக்கும் இடத்தை காட்ட முடியுமா?

"அந்த செயல் இங்கு தானே நடக்கிறது."

❖❖❖❖❖❖❖

தீர்க்கதரிசனத்தில்

"அட்டகுழி அரிவை குழி நரகமதும் இங்கே

ஆண்டவரது ஆக்ஞா சக்கர கொடியதுவும் இங்கே" என்று வருகிறது பார்த்தீர்களா?

ம்.... எல்லாவற்றையும் சுத்தம் செய்யும் நேரம் வந்துவிட்டது. காது கொடுத்தால் சுத்தம் செய்யலாம்.

தன்னறிவிற் சாயும் மாய்கை மேலிட்டால் – தெய்வ அன்பு பிடிப் பின்றி இறுதி நேரத்தில் நெடுங்கால வாழ்வின் தேவ அடையாளமில் லாமல் கசப்பு வெளியாகிக் கிடக்கும் நரக அடையாளப் பிரயாணத்தை – நம் தேவ மக்கள் கண்டால் அவர்களை நெருப்பில் வைத்துச் சுட்டெரிக்கச் சொல்லி விட்டு விலகிக்கொள்ள வேண்டியதுதான் – அப்படிச் செய்யாவிட்டால் – அந்த குடும்பமானது க்ஷேமக் கேடாகிவிடும். இது நம் தேவ தீர்ப்பு.

✧✧✧✧✧✧

" ஞுயன்மார்கள் பலருக்கு பாத திட்சை கூட ஆகவில்லை. ஞுயன்மார்களென்று உலகம் போற்றிப் புகழ்கிறதே அவர்களை உனக்கு ஒப்பிடுவது பொருந்தாது. உன்னைப் போன்று இளமையிலேயே ஆனவர்களில் அவர்களில் ஒருவரும் இல்லை. அவர்களைப் பற்றி சரித்திரங்கள் பிரமாதமாக எழுதி வைக்கப் பெற்றிருப்பதினாலே இக்காலத்தில் உலக மக்கள் அவர்களைப் போற்றிப் புகழ்கிறார்கள்.

✧✧✧✧✧✧

சமரச வேதம் - சாலை அமரர்கள் வீதம்... என்ற தெய்வ பாடல் பற்றி சபையில் பேசிக்கொண்டிருந்நார்கள் அப்போது ஆண்டவர்கள்:

''உலகத்தில் சமரசம் என்று பேசுகிறார்களே முதலில் சமரசம் என்று பேசுகிறவன் ஆகியிருப்பானா என்றால் இல்லை. எதற்கு சமரசம் என்றால் அதுவும் தெரியாது. சமரசம் செய்வார்கள். அதாவது பூண்டு, மிளகு, மிளகாய், கடுகு, பெருங்காயம் இதையெல்லாம் சட்டியில்

சமமாக போட்டு ரசம்தான் செய்ய அவர்களுக்கு தெரியும். இது பற்றி அவர்களுக்கு வேறென்னதெரியும்? அந்நச் செயல் எம் கையில்தானே இருக்கிறது. அது மற்றவர்களுக்கு எப்படி தெரியும்?

" ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
னன்றே னினைமின் னமனில்லை நுநுமோ"

என்று. சொல்கிறாரே! னமன் வராதிருப்பதற்கு தானே ஒன்றே குலம் என்று சொல்கிறார். ஒருவனே தேவன் என்கிறார். அந்த எமன் வராத குலம் இந்த மெய்வழி குலம்தானே? அந்த எமன் வராதபடி செய்யும் செயல் இந்த தேவகுருவால் மட்டும் தானே முடியும்? அப்படி உங்களை செய்த பிறகுதானே உங்கள் எல்லாருக்கும் ஒரு சமரசமான னினைவு வந்து ஒரே குலமானீர்கள். அப்படி அல்லாமல் ஒவ்வோர் எண்ணமும் பலகோடியாக விரிந்துவிட்டால் சமரச னினைவு வருமா? வாயில் "சமரசம்" என்று பேசிவிட்டால் ஆகுமா? அதற்கான செயல் னடத்தி அல்லவா உங்கள் எல்லோரையும் சமரசத்தில் ஆக்கி உள்ளோம். அதனால் தான் ஒன்றேகுலமாகி எமனில்லை என்று ஆனீர்கள்.

ஒரு பெரிய மகாராஜா இருந்தான். ஒரு பிச்சைக்காரியை மருமகளாக பெருந்தன்மையாக ஏற்று கொண்டானாம். பிச்சைகாரி மருமகளாக அரண்மனைக்கு வந்தது முதல் இளைத்துகொண்டே போனாளாம். அரசர் மந்திரியை பார்த்து அரசபோகத்தில் இருக்கும் இவள் ஏன் இப்படி இளைத்து கொண்டே செல்கிறாள் என்று ஆலோசனை கேட்டார். மந்திரி இதற்கு அவள் பிச்சைகாரியாக இருந்தபோது நாலு வீட்டில் பிச்சை எடுத்து சாப்பிட்டவள். இவள் மறுபடியும் நாலு வீட்டு சோறு சாப்பிட்டால் சரியாகி விடுவாள் என்றாராம். ராசா, அப்படியா! சரி. அவளை பிச்சைக்கே மீண்டும் அனுப்பிவிடு என்று அனுப்பிவிட்டராம். இப்படிதான் இருக்கும் இவர்கள் செய்யும் சமரசம்.

மெய்யாக மெய்யாக என்றால் "மெய் ஆகமெய் ஆகவே"

பேராபத்தாகிய மரண அவஸ்தையை அறவே நீக்குவதே மெய். மெய்யில் அலட்சியமும், பொய்யில் மூர்க்க எண்ணமுமுடைய லட்சணமும் உள்ளது தான் பிரபுத்துவம் .

' சந்தியாவந்தனம்' என்ற பிராம்மணர்கள் தங்கள் இரு கைகளில் செய்கிறார்கள். இது எச்சில் கைகள் அல்லவா? அதிலா சந்தியா வந்தனம் பண்ணுவது ?.

அவர்கள் செய்வது சந்தியாத வந்தனமாக போகாமல் சந்தித்து வந்தனம் பண்ணுகிறதாக நான்கு கரங்கள் உனக்குள் உள்ள பிரணவதேகத்தில் இருக்கின்றன.

மூங்கில் இலையில் பசு மாட்டின் கர்ப்பபையை சுத்தம் செய்யக்கூடிய சத்து உள்ளது என்று ஆண்டவர்கள் உத்தர விட்டதனால் ஒரு பிறவியர் ஒருவர் தமது பசுமாட்டிற்கு மூங்கில் இலை போட்டதால் அது சினமாகி கன்று ஈன்று நிறைய பால் கொடுத்தது.

ஆண்டவர்கள் காசுகாரன்பாளையத்தில் தம் தேவியாருடன் வாழும்போது புது வீடு கட்டி குடிபோனார்கள். அப்போது பலர் மொழிப்பணம் அவர்களுக்கு செய்தார்களாம். அடுத்து சில காலத்தில் ஆண்டவர்கள் பாட்டையருடன் அகில வலம் செல்ல திட்டமிட்டவுடன் அந்த மொழிப் பணம் கொடுத்தவர்கள் எல்லாரையும் கூப்பிட்டு திருப்பி கொடுத்துவிட்டார்களாம்.

ஒரு கோவிலில் இரண்டு அர்ச்சகர்கள் இருந்தார்கள். அதில்

ஒருவன் கோயில் பொருள்களை ஒரு சொம்பில் போட்டு திருடி எடுத்து செல்வான். இன்னொருவன் தன் சடையில் மறைத்து எடுத்து செல்லுவான்.

சடை வைத்திருப்பவன் கோவிலில் ''செம்பொன் சோதியே' என்று பாடும்போது இன்னொரு அர்ச்சகன் தான் சொம்பில் பொருளை மறைத்து எடுத்து செல்வதை சுட்டி காட்டி மாட்டிவிடத்தான் அப்படி பாடுகிறான் என்று குமுறுவானும். அதனால் அவனைகாட்டிக் கொடுத்து சரியான பதிலடி கொடுக்க வேண்டும் என்று எண்ணி, தான் பாடும்போது. ''சடையில் விளங்கும் சோதியே!'' என்று பாடினானும். இப்படியே ஒருவரை ஒருவர் ஏசி பாடி வர இவர்கள் பாடுவதை சந்தேகித்த கோயில் நிர்வாகம் இதென்ன ''சொம்பில் சோதியே! என்கிறான். அவன் சடையில் சோதியே என்கிறான்'' இவனுங்க சொம்பையும் அவனின் சடையையும் சோதியுங்கள் என்று கட்டளையிட்டது. பரிசோதித்தபோது இருவரும் மாட்டிக் கொண்டார்கள் என்று ஆண்டவர்கள் கதை சொன்னபோது எல்லோரும் குலுங்க குலுங்க சபையில் சிரித்தனர்.

✦✦✦✦✦✦✦

வைரத்தைவிட முத்து உயர்ந்தது. நம் ஜீவதேகம் போல் கட்டப்பட்டது முத்து. வெங்காயத் தோல் போல மிகமெல்லியதாக ஒவ்வொரு இதழ் இதழாக ஜலத்தால் அடித்து அடித்து அடுக்கடுக்காக பூச்சி கூடுபோல் கட்டி வளர்ந்து முத்தாகிறது.

✦✦✦✦✦✦✦

தீர்த்தம் என்றால் குருபிரான் திருவாக்குதான்

சற்குரு பிரான் அவர்கள் வாக்கே முதலானதாயிருக்கும். மற்ற யாவும் உனக்கு யாதொரு பிரயோசனத்தையும் தராது. தீர்க்கமான படிப்பை, வித்துவான்களும் அறிய முடியாத படிப்பை, சில தினத்தில்

கற்பிக்கும் சாலை இது. உயர்ந்த படிப்பு, எளிதாய் குறுகிய காலத்தில் செலவில்லாமல் எல்லா நூல்களுக்கும் வியாக்கியானம் சொல்லும் படிப்பே ஆசான் வாக்கு.

ஆசான் பிரசங்கத்தை ஏட்டில் எழுதிப் படிக்கிறதினால் பூராவும் உணர்ந்து கொள்ள முடியாது. நீ போட வேண்டிய வித்தை மனதில் போடுவதில்லை. கடுகை விதைத்து துவரை அறுக்க முடியுமா? நான் பேசுகிற போது தான் உன்னிடத்தில் அவ்வாறான வித்துக்கள் விதைக்கப் பெறுகின்றன. இரண்டு மாடுகளை பூட்டி நாம் பல ஏர்களை உழுது கொண்டிருக்கிறோம்.

நாம் பேசும் போது இறைக்கும் வித்தே உன்னிடம் முளைக்க, என் போதகக் கோலை உன்னிடம் கொடுத்துப் பேச வைக்கிறோம். ஏன்? எப்படியாவது இந்தப் பயிர் விளைந்து எல்லோரும் பயனடையட்டும் என்றுதான்

திருக்கரத்தால் தங்கள் திருவாயைச் சுட்டிக் காட்டி உன்னை "எமன் பிடியிலிருந்து விலக்கி தெய்வத்திடம் கொண்டு போய்ச் சேர்ப்பது இதுதான்"

ஒரு தடவை ஆண்டவர்கள் சபையைப் பார்த்துக் கீழ்கண்ட வினாவை எழுப்பினார்கள்! "உலகத்தில் மயில் போன்ற பறவைகள் மிகவும் அழகான இறக்கைகளுடன் படைக்கப் பெற்றிருக்கின்றன. அதேபோல் விலங்குகள் பலமான கொம்புகளுடன் படைக்கப் பெற்றிருக்கின்றன. அப்படி மனிதனிடம் சிறப்பான அம்சம் ஏதாவது உள்ளதா? உள்ளது. மனிதனுக்கு சுக்கிலாம்பர நாடு படைக்கப் பெற்றதைப்போல் எந்த ஒரு ஜீவராசிக்கும் படைக்கப் பெறவில்லை. மற்ற ஜீவராசிகள் எதற்கும் மனிதனுக்கு உள்ள சுக்கில வல்லபம்

இல்லை. உதாரணமாக பசுமாடு புணருதலுக்கு ஏங்கும் போது ஒரு வாடை காட்டும். அப்போதுதான் காளை மாடு புணரும். பறவை ஜாதிகள் எல்லாம் வருடத்திற்கு ஒரு முறை தான் புணரும் தன்மை. மனிதனுக்கு சுக்கிலாம்பர நாடு வல்லபத்துடன் படைக்கப் பெற்றிருப்பதால் இவன் என்னேரமும் காமத்தால் முயங்கும் வல்லபம் உள்ளது. ஆகவே சுக்கிலத்தை அழிசெயலுக்கு பயன் படுத்தாமல் இருந்நால் நாதம் விளைந்து மேலோம்பர நிலையை அடையலாம்.

அணுவுக்கு அணுவான இந்திரியத்திலிருந்தே இவ்வளவு வல்லமை பொருந்திய மானிட தேகம் வந்நால் அந்த வித்து சிதறி விடாமல் உள்ளடங்கினால் என்ன விளைவுக்கு வரும்? ஒன்பது மடங்கு அதிக வல்லபமுள்ள நித்திய தேகத்தை கைபோட அதற்குமுடியும்.

பொதுவாக ஒரு வித்தில் ஏற்படும் உயிர்ப்பு சக்தியாகிய ஒரு உசும்புதலினால் தான் விளைவு ஏற்படும். இந்த உலகத்தில் உள்ள ஜீவராசிகளை படைப்புகளை எண்ண முடியுமா? எண்ணிலடங்காது. அப்படியிருக்கிற இவையெல்லாம் ஆகாயத்திலிருந்துதான் உண்டாகின. அப்ப ஆகாயத்தில் ஒரு குறிப்பிட்ட எல்லையில் அந்த உசும்புதல் உண்டாகி இருக்க வேண்டும். அந்த எல்லை மனுவுடைய அறிவுக்கு எட்டப்பெறாதது.

இந்த தூல உடலில் விதையின் முளைப் போன்றது இந்திரியம். முளையை கிள்ளிவிட்டால் விளைவுக்கு வருமா? அதுபோலவே இவனைப் படைத்த வித்தின் முளையாகிய இந்திரியம் சாவுடைய நேரத்தில் வெளியாகி பிண நாற்றம் எழும்புகிறது. ஜீவப் பிரயாணம் ஆனவர்களின் தூல பிம்பத்தை பூமியில் போட்டால்-மண் தீண்டுவதில்லை. அதோடு கூட அந்தத் தேகத்தை நித்திய தேகமாக விளைவிக்கக் கூடிய செயலுக்கு அந்த மண் உதவுகிறது.

மான்மியத்தில் 'மண் கோள் அகற்ற வருனெறிக் குலமான்' என்று வருகிறதே. ஆம். உலகம் தோன்றிய காலம் முதல் ஒன்பது கோள்களுடன் மண்ணும் ஒரு கோளாகத் தான் இருந்து வருகிறது. இது யாருக்கும் தெரியாது.

மனிதன் மண்ணில் புதைத்தால் மண் அரித்து தின்று விடுகிறது. ஆனால் எம்கையகத்து பிள்ளைகளை மண் தீண்டுவதில்லை. மண் கோளை அகற்றி அதி ஜெயச் செயல் கொண்டேறி விளங்கும் நாள் இன்னாள்.

ஆலயத்தில் ஆதி மெய் உதய பூரண வேதாந்தத்தில் உள்ள காப்பு அகவலில் முதல் வரியாக – ''வந்த வேதம் வரைந்த பயத்தினால்'' என்ற பாடலை பாடும்போது ''வந்த வேதம் என்றால் என்ன?'' என்று ஆண்டவர்கள் கேட்டார்கள். ''குரு உரு எடுத்து வந்தவர்கள்தான் ''வந்த வேதம்'' என்று அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

வந்த வந்த பாரவான்கள் எல்லாம் தூலத்தை மண்ணில் போட்டு விட்டு மறைந்தார்களே அவர்கள் எல்லாம் எங்கே? எல்லோருமே இந்த பூமிக்குள்ளே தங்கத் திருமேனி பெற இருக்கும் தீர்ப்புநாளை எதிர்பார்த்த வண்ணம் பேரானந்த நித்திரையில் இருக்கிறார்கள்.

எப்படி கிரகணத்தின் போது சிறிது நேரம் சூரியன் மறைந்து காணப்படுமோ அதேபோல் ஜீவன் முத்தி பெற்றவர்கள் சிறிது காலம் மறைந்துள்ளனர். ''ஆண்டவர்கள் சப்தம் கேட்டு கல்லறைகள் திறக்கப்படும்'' என்று பைபில் வாசக தீர்க்கதரிசனம் கூறுகிறது.

ஜீவ முத்தருடைய பிள்ளைகள் தேகம் வேண்டாம் என்று கேட்டார்கள் அதன் தாத்பர்யம் என்னவெனில் இதே மனிதப் பிறவியில் அவர்கள் திரும்பத் திரும்ப வந்து கொண்டு இருக்க வேண்டும் என்றுதான்.

அவர்கள் ''இனி ஒரு பிறவி வேண்டேன்'' என்றது மற்றைய அனித்தியமான பிறவிகளையே. ஜீவன் முத்தர்களுக்கு சுற்றி வருவது சந்தோஷமே. வேறு ஒரு பிறப்பை எடுப்பது புதியதொரு சட்டை போட்டுக்கொள்வது போல அவர்களுக்கு சந்தோசமே. இதைத்தான் திருவிளையாடல் என்று பேசப்படுகிறது. ஆனால் இதுவே பாவிகளுக்கு துக்கமே. அவன் அலகையாக போகிறவன் அல்லவா?

முள்ளுபட்டு கந்தல் கந்தலாகும் பட்டுசேலையைப்போல் மரண அவஸ்தை நேரத்தில் நைந்து சல்லி சல்லியாக கிழிந்து உடல் தூக்கிப் போட்டு மூச்சு திணறி முழுக்கு வெளியேறி மனிதன் நாறி சாகிறான். இது தான் மரணம். இந்தவகை மரணத்தை நீக்கி மரணமிலாப்பெரு வாழ்வாகிய சுவர்ணபதி வாழ்வைதானே நாம் இந்த உலகுக்கு கொண்டு வந்துள்ளோம். இதை மனதில் ஆழ பதிய வைத்து கொள்ளுங்கள். இதற்கு முன் காலங்களில் மரணமிலாபெருவாழ்வு அடைந்த வித்துக்கள் மறுபடியும் துளிர் விட்டு தழைத்து வந்திருக்கிறது. வாழை முளைத்தால் அதன் அடியில் கன்னு தோன்றுவது போல. மெய்குலத்தை சேர்ந்த பெரியோர்கள் முன்காலத்தில் மரணமிலா பெருவாழ்வு அடைந்தாலும் பரம்பொருள் இப்பூலகிற்கு வரும் போது அத்திருக்கூட்டமும் கூடவே எழுவார்கள். வாழையடி வாழை திருக்கூட்டம் என்பது இதுவே. உலகில் மரணமிலா பெருவாழ்வு என்றால் இந்தமானிட உடல் இறந்து போகாமல் அப்படியே நிரந்தரமாக உலகில் நிற்கும் என்று உலகத்தினர் தப்பாக எண்ணி இருக்கலாம்.

இது அழிதேகம். மண்ணிலிருந்து வந்தது. இது மண்ணிற்கு திரும்ப வேண்டும். இது இயற்கையின் விதி. மறுபடியும் துளிர்விட்டு எழுவதுவே மரணமிலா பெருவாழ்வு என்று அறியுங்கள். முன்காலத்தில் மரணமிலாப் பெருவாழ்வு பெற்று சிரஞ்ஜீவி பட்டம்

பெற்ற மார்கண்டேயபெருமான், அனுமந்தபிரான் போன்றவர்கள் இப்பூலோகத்தில் என்றும் நிரந்தரமாக இருக்க வேண்டுமல்லவா? அப்படி இருப்பதாக தெரியவில்லையே. அப்போ அவர்கள் சிரஞ்ஜீவி பட்டம் பெற்றது பொய்யா? இல்லையே. சத்தியமாக மெய்தானே. அந்த சிரஞ்ஜீவியர்கள் நைந்துபோன தங்கள் தால பழைய சட்டையை தூக்கி எறிந்து விட்டு புதிய பிறவி எடுத்தெடுத்து பரமாத்மா வரும் போது கூட எழுகிறார்கள். இதனை உலகத்தோர் அறியார்கள். இதை உணர்த்தவே இப்போது மெய்வழி உதயமாகிவிட்டது.

(3-7-41)

தன் தலையினுடைய தரம் இன்னது என்று மனிதனுக்குத் தெரியவில்லை - மற்றது கோடி கோடியாக அவனுக்கு கிடைத்தாலும் வியர்த்தம் தானே.

உன்னுடைய சொத்து என்பது உன்னுடைய உடல் தான். அதையே நீ இழக்கப்போகிறாய் என்றால் மற்றது நிற்குமா?

நாம் தரும் நித்ய தேகம் தான் இனிமேல் உனக்கு சொத்து. அதன் வரவை அல்லவா நீ எதிர்பார்த்து காத்து நிற்க வேண்டும்!

நரகத்தில் படுகிற அவஸ்தை என்ன இரண்டு மாசமா? எக்கோடி காலம் என்று உணர்ந்தால் - இங்கு வந்து கட்டாயம் எல்லோரும் பிழைத்து கொள்வார்கள்.

மரண அவஸ்தை ஒரு நொடி நேரமல்ல. ஓர் யுகாந்த நீளமிருக்கும். இப்போது முதல் கொண்டு சாவை நினைத்துக் கொண்டேயிருந்தால் கட்டாயம் ஞான பூமியை அடைவாய்.

மரண துன்பத்திற்கு மேம்பட்ட பெரிய துன்பம் மனிதனுக்கு இல்லை. எல்லா கடுமையான நேரங்கள் எல்லாம் கூட வைத்தியத்தால்

மாறிவிடக்கூடும். ஆனால் மனிதனுக்கு நிச்சயமாக வரப்போகும் மரணமோ நீங்காத நோய். மாறாத நோய். ஆகவேதான் மரணத்தை "பொல்லா வெண்ணோய்" என்று சிவச்செல்வாதியர் திருநாவுக்கரசர் கூறியுள்ளார்.

(21-4-42)

உலகத்தில் மக்கள் மனோவாக்குக் காயங்களுக்கு எட்டப்படாத வல்லபம் ஒன்று உண்டெனக் கூறுவது மெய். அதாவது அது அதி வல்லப துல்லப பிரம்ம வித்தை என்பதாம். இதனை எல்லா வேதங்களும் அவ்வேதங்களின் ரசமாகிய வேதாந்தங்களும் பேசிக் கொண்டிருப்பதை மக்களெல்லோரும் சம்மதித்தாலும் அதை அடைய முடியாமல் வாயில் பேசிக் கொண்டு மட்டும் அலைகின்றார்கள். அதனைச் சந்தித்து எட்ட முடியவில்லை. அதற்கான ஆசையுமில்லை. அவர்கள் அதை எட்டவே முடியாது. ஏனெனில் மனுக்களின் மனதுக்கெல்லாம் எட்ட முடியவே முடியாத ஒன்றை எட்டிக் கொண்டிருப்பவரும், வாக்குகளுக்கெல்லாம் எட்ட முடியவே முடியாத வாக்கை எட்டிக் கொண்டிருப்பவரும், காயங்களுக்கெல்லாம் எட்ட முடியவே முடியாத ஓர் காயத்தை எட்டிப்பெற்றுக் கொண்டிருப்பவரும்' மும்மூர்த்திகளும் ஒருங்கு திரண்டு ஓர் மானிட ரூபகமாக வந்திருப்பவனுமான ஒருவரை அவர்கள் குருவாகப் பெறாத தோஷத்தினால் தான் என்று நிச்சயமாக உணருங்கள். அப்படி தோஷமாகிவிட்ட அவர்களுக்கு இந்த மெய்யின்மீது ஆசை இல்லவே இல்லையே அது ஏன்? அவர்கள் கற்றுக்கொண்டிருக்கும் மூலமந்திரமாகிய கலிமாவென்னும் பிரணவமானது பிழையாயிருக்கிறது. அதனால் தான். (21-4-42)

பிரணவம் என்பார்களே அது எது? உன் ஜீவன் எது? சிவம் எது? உன் உயிர் எது? உன் அறிவு எது? இவையெல்லாம் வேற வேறு? இல்லை ஒன்று? அழியா ஒரு வஸ்துவைக் குறிக்கும் நாமங்களே அவை. ஊம் தலைமேலேயே வைத்துப் படைத்திருக்கிற அதை நாம் காண்கிறது முடிந்த காரியம்தான். ஆனால் முடியாத காரியம் என்ற தீர்மானமான முடிவிற்கு எல்லோரும் வந்து விட்டார்கள்.

''அறிவதனைக் கொண்டு அறிவுதனைக் கண்டு அறிவதை அறியாமல் வீண் வெறிகள் பிடித்துக் கலைகள் விரித்து வீணில் அலைவார்கள்'' என்று பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

அறிவதனைக் கொண்டே அறிவை அறிய முடியுமென்றி தானே தன் அறிவைக் காண முடியாது. அறிவை அறிந்தவர்கள் தான் அதனை உனக்கு அறிவிக்கமுடியும்

சிவகுருமார்களை ஐந்தரை அடி மனிதர்களாக உலகம் நினைக்கிறது. அண்டாண்டங்களும் கடந்து விளங்கும் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட கயிலை நாடு ஐந்தரை அடியாகவா இருக்கும்? ஆல மரம் எதற்குள்ளே இருந்து வந்தது? அதுபோன்ற பிரமாண்டமாக சிவகுருபரர்களை நினைக்கவேண்டும்.

''இருதயத்தில் ஈசனிருப்பிடம்'' என்ற புராதன வார்த்தையை எந்த எல்லையிலேனும், எந்த பாட்டிலேனும் யாரேனும் காட்டியதுண்டா? உலகம் பூராவும் சபையாக்கிக் கேட்டாலும் ''கண்டேன்'' என்று சொல்பவர்களுண்டா? இல்லையே. ''நான் கண்டேன்'' என்று சொல்லுகிற சிவமக்களை நாம் கூட்டியிருக்கிறோம். எம் சம்பாதனை சிவலோக சம்பாதனை. இந்தச் சம்பாதனையை எமக்கு பிறந்த மக்கள் பெற வேண்டுமென்றே சொல்லுகிறோம்.

கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர் என்ற வாசகத்திற்கு மறு பிறப்பாளனாகி தேவனாக ஆகாமல் யாராலும் உண்மை அர்த்தம் தெரிந்து கொள்ள முடியாது.

✦✦✦✦✦✦✦

(25-7-42)

பாம்பு பருந்தை உகக்காது, காக்காய் சிட்டுக்குருவியை உகக்காது. ஆனால் தேவ குல மகனாகிய நீ னரனை போய் உகந்து அவனுடன் சம்பந்தம் வைத்துக்கொள்கிறாய்.

யானை மரங்களை தூக்கியெறிகிறது. நாய் கடிக்கிறது. இரண்டையும் அடக்கி ஆளும் வல்லபம் மனிதனுக்கு உண்டு. நாயினுடைய இரத்தமும், கோழியினுடைய இரத்தமும் ஒன்றல்ல. உன்னுடைய இரத்தமும், மற்றவர்களுடைய இரத்தமும் ஒன்றல்ல. ஆகவே னரர்களுடன் உறவு கொள்வது சரியல்ல.

எண்ணற்ற மக்களுக்குள் இந்த உலகத்தில் ''தேவர்கள்'' என்பவர்கள் யார்? எம் மக்களாகிய நீங்கள் தானே. இதை ஏன் நீங்கள் மறந்து விடுகின்றீர்கள்?

தேனிக்களை ஒப்பிட்டு தேவர்களுக்கு ஒரு தீர்க்க தரிசனம் உள்ளது. ஈ மலத்திலும் இருக்கும் இனிப்பிலும் இருக்கும். ஆனால் தேனீ இனிப்பில் மட்டுமே இருக்கும். அதே போல் தேவர்கள் தனித்த சிறப்பு உடையவர்களாக இருப்பர்.

தேவர்கள் செயல் யாது? தேவாதி தேவனாகிய உனது ஐயன் ''இரு'' என்று சொன்னபடி இருத்தல். மேற்கொண்டு அவர் ஆணையினை எதிர்பார்த்து நிற்றல். இது வேதக் கட்டளை.

வானவர்கள் யார்?

வானெறைசக்கு ஏற்ப நடப்பவர்கள். அப்படி நடப்பவர்கள் தான் வானவர்கள், ஏனையோர் வானவர்கள் அல்ல. வான் யுகத்தையும் வான் வர்க்கத்தையும் நடவு செய்யவே நாம் வந்துள்ளோம். எம் ஓசையை கேட்டு நடப்பவர்கள் தான் வானவர்கள்.

பிறவிச் சூழலில் இருந்து விழிப்பவர்கள் மானுடர்கள். பிறவா நெறியில் வாழ்பவர்கள் தேவர்கள்.

மனிதன் தன் யூகப்படி செய்யும் போதும், தன் அறிவில் சாயும் போதும், பிறவி நெறிக்கு வருகின்றான். தன் ஆசரியராகிய தேவாதி தேவரின் மன நோக்கிற்கு இசைய நடக்கும் போதுதான் பிறவாநெறி நிலையாகிய தேவ நிலையிலிருக்கிறான். எது மிஞ்சுகிறதோ, அது ஜெயிக்கிறது. ஆகவே, எம் மக்களாகிய நீங்கள் எப்போதும் தேவ நிலையிலிருக்க, குரு பரனின் நோக்கிற்கு நடக்கும் தேவச்செயலில் எப்பொழுதும் இருக்கும் படியான கவனம் உங்களுக்கு வேண்டும்.

நமக்குத் தெரிந்தளவு இதுவரைக்கும் நாம் நியாயமாகச் சுத்தமாக நடந்து வந்திருக்கிறோம் என்று தான் நீ எண்ணுகிறாய். ஆனால் பாவத்தை தான் இது நாள் வரை செய்து கொண்டே வந்திருக்கிறோம் என்பது உனக்கே தெரியாது. இறைவன் கொடுத்த கைம்முதலாகிய அமானிதத்தை உன்னில் நீ பார்த்த பிறகுதான் நீ உன்னை அறியாமலே செய்துவருகிற அந்தப் பவக்கிருத்தியங்கள் உன்னை விட்டு போகும். வந்தும் அணுகாது.

எந்த ஒரு வேலையைச் செய்தாலும் தகைமை வேண்டும். பூப்புவரும் வரை மரம் எவ்வளவு பாடுபட்டு வளர்கிறது. அதைப்போல நீயும் இருக்க வேண்டும்.

ஆகாததெல்லாம் ஆக வைப்பது எது? வளர்ச்சியில் ஊக்கம் பூரணமாய் செலுத்துதல் தான்.

மறுபிறப்பு பெற்றவுடன் மேட்டிமையால் ஒரு கர்வதேகம் உண்டாகிறது. கர்வம் அதிகமாக ஆக அலகைத் தேகம் ஆகிவிடும். குருபரன் சன்னதியில் உன் பணிவு சாந்தி தேகமாக மாற்றும்.

* * * * * *

(7-3-41)

ஆண்டவர்கள்: ஞானம் என்றால் என்ன?

சபையோர்: (சற்று நேரம் யோசித்து) தெரியவில்லை. தெய்வமே!

ஆண்டவர்கள்: ஒரு சாமான் மூடி போட்டு வைத்திருந்தால் எப்போதாவது அது விளங்கத் தெரியுமா? தெரியாது. அதை இன்னதென்று அறிந்தவர்கள் உடைத்துக் காண்பித்தால்தானே உள்ளே இருக்கும் வஸ்து தெரியவரும். ஞானம் என்றால் ஞான் னம். அதாவது ஞமே ஞம். ஞமே ஞமாகிக் கொள்வது. இது தான் வேதம். வேதம் உருவெடுத்து வரும்போது தானாயிருந்த அதுவே முன்னிருந்து அறிவிக்க அதன் விளைவாக தானே தானாதல் கைவரவாகும். இதையே "உன்னையல்லால் என்னுயிரிங்கில்லை தன்னையறிந்தது உன்னையையா" என்று பாடி வைத்துள்ளோம்.

ஞானம் என்பது பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரும் விதமாக மனதில் பதிய வைத்துக் கொண்டிருப்பதுண்டு. ஆனால் அதனால் தான் ஞானம் அடையவேண்டும் என்ற எண்ணமும் அவனுக்கு வருகிறது.

ஆனால் ஞானம் என்பதை யாராலும் இன்னது என்று எண்ணவே முடியாது. அந்த எண்ணங்களுக்கெல்லாம் இம் மார்க்கம் முற்றிலும்

வேறு. உண்மையாக ஐம்மணிப் பொதிகைக்குள், பஞ்சாக்ஷர ரூபிக்கு நேருக்கு நேராக நிற்கும் போது தான் நீ, முன் ஞானம் என்று நினைத்தது அனைத்தும் வெட்கக் கேடாயிருக்கும். ஏனெனில் அப்பாதையில் நீ இதுவரையில் முன்போனதுமில்லை. கண்டதுமில்லை

உன் பிரயோஜனத்தை நீ அடைந்து கொள்ள உன் தெய்விகத்தை நீ அடைந்து கொள்ள எம்மிடம் என்ன கேட்பது என்று கூட உனக்குத் தெரியாது. இதையெல்லாம் அறிந்து கொள்ளவே புராதன வாழ்க்கையாகிய ஆத்ம சாந்தியை அடையவே நீ இச்சபையில் சேர்கின்றாய்.

எம் ஞான நூல்களும் வாக்கியமும் தான் உனக்கு வித்து. அவை இல்லை என்றால் நீ சொத்தை தான். வித்திலே சொத்தை விளைந்து, மரமாவது எங்காவது கண்டதுண்டா? நமது மெய்வழி வேத நூல்கள் படிக்காவிட்டால் ஞான எண்ணங்கள் தோன்றாது. உள்ளமும் பூரிக்காது. மனம் கசியாது. அதனால் வித்து முளைக்காது. நூல்கள் எவ்வளவு படிக்கிறாயோ அவ்வளவு உனக்கு நன்மையே.

பாரவான்களைப் பற்றி புகழ்ந்து எழுதியுள்ள வசனங்களைப் படிக்க வேண்டும். அல்லது படிப்பதை காது கொடுத்து கேட்க வேண்டும். இது ஒன்றுதான் அறிவுவழி. மற்றவை வெறி வழி.

ஜீவாத்மாவின் போக்குவரத்து தான் தொனி. தொனி தான் ஜீவாத்மாவின் தலை.

-+-+-+-+-

நமது சபைக்கு ''மெய்வழிச் சபை'' என்று நாமம் சூட்டியிருக்கிறோம். என்றும் அழியப்படாத செயலுடைய சபை என்ற பொருளில் அது வைக்கப்பெற்றுள்ளது. அழியாத சிவத் தன்மைக்குத் தான் ''மெய்'' என்று பெயர். ''மெய்ப்பால் அறியாத மூடர்தம்

னெஞ்சுத்திற்கு அப்பாலிருக்கும் சிவம்'' என்கிறார் ஔவை.

தனத்தைக் குறித்து இச்சபை உண்டாக்கப் படவில்லை. சிவ னிதியைக் குறித்தே தான் உண்டாக்கப் பெற்றுள்ளது. உனக்குப் பயன்தரும் சிவனிலைப் பீடத்தில் உன்னுடைய சத்தியம், பொறுமை முதலியன பயன்தரும். குரு சன்னிதானத்தில் உன் பணிவே குருவின் இரக்கம் உன் மேற் பனிர் என்று பாயச் செய்யும். அது உன்னை சிவனிலைக்கு ஏற்றும்.

-+-+-+-+-

பிற மதத்தை விரோதிக்கிறவன் தன் மதத்துக்கே விரோதி. ஆகையால் தன் மதத்தை னேசிக்கிறவன் பிற மதங்களை விரோதித்தல் கூடாது.

உலக மக்களைக் குறைவுபடப் பேசுவது ஞான வளர்ச்சியை அழிக்கும் பழி பாவக் கொடியைப் படரச் செய்கின்ற செயலாகும். னம் மெய்வழிச்சபை வளர்ச்சிக்கு திணறுதல் ஏற்படுவதற்கு காரணம் - உலக மக்களைக் குறைவு படப்பேசும் செயலே என்பது திண்ணம்.

னம் மக்கள் எல்லோருடைய னாக்கு னுனியிலும் ஒரு பூட்டு போட்டுத்தொங்க வேண்டும். அது என்னவென்றால் ''யாகா வாராயினும் னாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு'' என்பது தான். அது னாவடக்கம் கட்டாயம் வேண்டும். உன் 'னா' எப்போதும் மூலமந்திரம் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும்.

-+-+-+-+-

உலகத்தில் சர்வமும் தெரிந்தவர்களுக்கும் ''மெய்க்கல்வி'' என்று சொன்னால் என்ன தெரியும்? மழலைகள் முதல் முதலாகப் பள்ளிக்குப் போன போது கல்வியைப் பற்றி அவர்களுக்கு இருந்த எண்ணம்தான் உலகத்தவர்க்கு மெய்க்கல்வியை பற்றி இருக்கும்.

உன்னைப் போல தேகியாக வந்து பரத்தினுடைய லக்ஷணமாகிய சாகாக் கல்வியென்ற தெய்வீகக் கல்வியையும் கற்று,- இகத்தின் லக்ஷணத்தை உன்னைப்போல் இரண்டு மடங்கு கற்றுத் தேர்ந்தவர்களே னோர் பாதையைக் காட்டுகிற அந்த மெய்க் கல்வியை உனக்கு போதிக்க முடியும். சிவலோகப் பதவியை உன் தலையில் சூட்டுகிற அப் பாராவான்களுக்கு ஒப்பு உவமை ஏது? நீ ஒரு இராஜாங்கமே கொடுத்தாலும் அவர்களுக்கு அதனால் பிரயோஜனமில்லை. நீ அவர்களுக்குச் செய்ய வேண்டியது என்ன என்றால் உன் மேல் அவர்களின் இரக்கத்தைபடிய வைத்துக் கொள்ளுவதே ஆகும்.

பொய்க்கல்வியாகிய ஐ.ஏ.எஸ். போன்றவற்றுக்கு எல்லோரும் போகமுடியுமா? ஆனால் இந்த மெய்க்கல்வியையோ அரசனாயினும் ஆண்டியாயினும் பெறலாமே.

மக்களாய்ப் பிறந்தோர் இன்னும் ஒரே படிதான் ஏற வேண்டும். அதற்கு போக ஒரே ஒரு வாசல்தான் இருக்கிறது. அந்த வாசலைக் காட்டவே நாம் வந்துள்ளோம். அவ்வாசல் அறுத்தடைத்த வாசல். அது முன் திறந்திருந்து பிறக்கும் போது அடைக்கப்பெற்றது. மற்ற வாசல்கள் மூடப்பட்டது. மூடப் பட்டிருக்கும் வாசலை ஆசிரியன் தம் அஞ்ஞன சிலாகையால் திறப்பார்.

✧✧✧✧✧✧✧

ஒரு நூற்றாண்டிற்கு முன் வந்த சிவ செம்மலாகிய வடலூர் வள்ளல்பிரான் அவர்களின் செங்கரத்தில் செயலிலிருந்த அதே பிரம் மவித்தைச் செயல்தான் இப்போது இங்கே பிரத்தியட்சத்தில் எம் கையில் இருக்கிறது. முன்காலத்தல் வந்து செம்மல்களான மாணிக்கவாசகர், அப்பர், சுந்தரர், திருஞான சம்பந்தர், முகையதீன் ஆண்டவர் – நாகூர் ஆண்டவர் – அகஸ்தியர் – பழனி ஆண்டவர் என்பவர்களை சர்வ உல

கத்திற்கும் தெரிகிறது அல்லவா? அவர்களை எல்லாம் கைகூப்பி வணங்குகிறார்களல்லவா! அவர்கள் என்ன ஜாதி? எம்மைக் காண அதிகமாக நீங்களனைவரும் ஐ.சி. எஸ். பி.ஏ., முதலியவற்றைச் சண்டமாருதமாகப் படித்திருக்கிறீர்களே! தெரிந்தால் சொல்லுங்களேன்! நாமோ படிக்கவில்லை. அரிவரிப்பாடம் இம்மி இலக்கம் மட்டும் தான் திண்ணைப் பள்ளியில் இளமையில் படித்தோம். ஆனால் இன்றோ சர்வவேதங்களும் எம் கையில் செயலில் இருக்கின்றன. ஜாதியை வைத்தா பெரியோர்களை எடைபோடுவது? மெய்யில் தலையிட்டார் பெரியோர். தலையிடாதார் எமனிடம் சிக்கும் இழிகுலத்தோர்

✧✧✧✧✧✧✧

ஸ்ரீலஸ்ரீ கல்கி அவதார புருஷோத்தமர் மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் பொல்லாப்பிணி நீக்கும் பொன்னரங்க தேவாலயத்திற்கு எழுந்தருளினார்கள். அப்போது சன்னதியில் ஆதி மெய் தீர்க்க தரிசன சுவிசேஷத்தை அனந்தர்கள் வாசித்துக் கொண்டிருந்தார்கள். "வனாந்தரத்திலே வயல் வெளிகளிலே **நீதியைச் சரிகட்டப்படும்**" என்ற வாசகம் வாசிக்கப்பெற்றது. அப்போது அருளப்பெற்ற ஆண்டவர்கள் வாக்கியம்:

நீதி பூர்வ புராதனமானது. என்றும் ஒரே அளவில் கூடுதல் குறைதல் மாறுதல் இல்லாதது. அநீதி அதிகமானதற்காக நீதியும் வளர்வதல்ல. அப்படி வளருமாகில் அது நீதியாய் இருக்க முடியாது. நீதியும் அசைவது போல் காணப்படுவதுண்டு. ஏனெனில் அநீதியானது நீதியில் மோதும் போது குள்ளாவெனும் மண் பூச்சியின் குழியில் எறும்பு முதலானவை வந்தால் தனது ஸ்பரிச அலகால் அவைகளை சுண்டித் தாக்கி எறியுமே அது போல் நீதியும் அநீதியை தக்க ஆயுதங்களால் ஒதுக்கி தாக்கி எறியும். அவ்வேகத்தால் அற்ப அறிவுகளுக்கு நீதி

அசைவது போல் தோன்றுமே அன்றி உண்மையில் விதி அசையாது. பேரறிவு பெற்றவர்களுக்கு இது தெரியும். அனிதி உயர்ந்து அலங்கோலமாவதைத் தடுத்து பெருங்கருணையால் கர்த்தரானவர் விதியைச் சரிகட்ட காலங்கள் தோறும் வருவார்கள். இறுதித் தீர்ப்பு கர்த்தர் அவர்களின் சேனைகள் வினைவில் சாயம் பூசிய படைகள். பட்டயத்துடன் விதியை ஆங்காங்கு ஏற்படுத்தி பூமி ஜலம் அக்கினி காற்று முதலியவைகளால் பிரளய சங்காரம் செய்வார்கள். மீதியை வடித்துத் எடுத்து தெளித்து தேவத்திருச் சபையின் முன் வைத்து விதியைச் சரிகட்டுவார்கள்.

விதி இப்படித்தான் இருக்கும் அல்லது இருக்க வேண்டும் என்பது உன் அறிவுக்குப் புலப்படுகிறதா? ஆமாம். அப்படிச் சரிபார்த்து சரியானதை சரியானபடி ஒத்துக்கொள்ளும் அறிவை உனக்கு வைத்துப் படைத்தானே அதற்கென்ன நன்றி செய்தாய்? அந்த அறிவு உன்னிடம் இருப்பதை நம்பிதான் நாம் இங்கு வந்தோம். அவ்வறிவை உனக்கு நிருபித்துவிட்டு பின்னர் தான் இவ்விஷேடத்தை பேசுகிறேன். இப்படியோ அப்படியோ முடிவு கட்டுவது உங்கள் பொறுப்பு. ஏனென்றால் எனக்குள்ளது போலவே எல்லா கருவி கரணங்களும் உனக்கும் இருக்கிறது.

✧✧✧✧✧✧✧

கர்மம் ஆதியந்தமற்றது. அதனால் உண்டாகும். ஜன்மமும் ஆதியந்தமற்றது. கர்ம பந்தத்தை ஒழிப்பது முடியுமா? யோசித்துப்பார். கர்மம் மனதைப் பற்றியிருக்கிறது. கர்மம் செல்லும் இடங்களில் கர்மத்தைக் கொண்டு போய் சேர்க்கிறது. கர்மத்தை விட்டாலொழிய மனது ஞான பூமிக்கு போக முடியாது. கர்மத்திலிருந்து தப்புவது எப்படி? காலக் கிரமத்தினால் ஞானம் கிடைக்குமா? நாம் பந்தங்களை

விட்டு முத்தியடைவது முடியுமா? என்று யோசித்துப்பார். முடியாது. ஆனால் அப்படி அடைய உடலெடுத்த மெய் ஞானி ஒருவர் வேண்டும். அவர் இரக்கப்படும் படி நம்பிக்கையுடன் நடந்து வரவேண்டும். அவர் வசிக்கும் இடத்திலேயே வசிக்க வேண்டும். அவர் வசிக்கும் இடத்திலேயே வசித்தும் அவர் மனம் போக்குக்கு இணங்கியும் நடக்கவும் வேண்டும்.

பாவங்களை ஒழித்து உனக்கு காருண்யம் தர நவமேருவான ஒரு தேவகுரு வேண்டும். அவருடைய வாள் எங்கும் ஓங்கும். அதனால் உன் கர்மம் விரட்டி அடிக்கப்படும். (23-2-41)

நூல்களுள் வேதச் சட்டங்கள் பேசுகின்ற நூல்கள், வேதத்திற்குப் புறம்பான நூல்கள், இகத்தையும் பரத்தையும் பேசுகின்ற நூல்கள் எனப்பல உள. அதில் அவரவர் படித்த நூல்களைக் கொண்டு அவரவர் மனமும் பலவேறாக மாறுகின்றன. இதுவன்றி இந்த உலகத்தில் அனந்தகோடி விஷயங்களும் இருக்கின்றன. அதற்கேற்ப அவரவர் எண்ணங்களும் நினைவுகளும் அனந்தகோடியாக இருக்கின்றன.

இப்படி பிறந்தது முதல் ஒரே எண்ணத்தில் யாரும் இருப்பதில்லை. இப்படி உள்ள அவர்களின் எண்ணங்களை ஒவ்வொன்றாக மாற்றி புரியவைத்து பலதும் பேசி அவர்களை ஒருமுகமாக ஒருநிலைக்கு கொண்டு வர வேண்டி இருக்கிறது.

நன்மை பிறக்கும் வார்த்தைகள், தேவரகசிய வார்த்தைகள், மூலமந்திர வார்த்தைகள் பேசி வருகிறோம். அவை போய் உள்ளத்தில் படிந்து நன்மை பயக்க வில்லை யென்றால், அது ஜந்துக்களில்

ஒன்றாகவேதான் இருக்கவேண்டும். மிருகங்கள் கேட்டு பிரயோஜனப் படாமல் போவது சரி. மனித உருவத்தோடும் கூடிய பேய், பிசாசு, நாய் பன்றி முதலியன இருக்கின்றன என வேதம் சொல்லுகிறது.

குதிரை வெக அழகாயிருக்கிறது. மயில் அழகாய் இருக்கிறது. பசு அழகாயிருக்கிறது. என்றெல்லாம் சொல்லுகிறோம், ஆனால், பத்தாயிரம் மிருகங்களையோ, பறவைகளையோ கூட்டி வைத்து பத்தாயிரக் கணக்கான சொற்களைச் சொன்னால் அவைகளின் காதில் ஏறுமா? ஏறாது. மனுவாக வந்தவர்களில் கூட எம்முடைய சொல்லை யார் நிஜமாகக் கிரயம் வாங்கப் போகிறார்கள் என்று யோசிக்கிறேன்? வாங்குகிறவர்கள் தான் மனிதர்கள். மற்றையோர் கல், காடு, முறடுதான்.

பட்டிக் காட்டில் கஸ்தூரி விற்க வந்திருக்கிறோம். சுளகு எடுத்துக்கொண்டு வந்து கொடுத்துவிட்டு அரிசிக்குச் சரிக்குச் சரி கொடுப்பார் என்று எதிர்பார்க்கிறார்கள். இன்னும் புத்திசாலிகள் தீட்டிய நல்ல அரிசியானால் சரிக்குச் சரி தாருங்கள் என்கிறார்கள். எவ்வளவு கேவலமான உலகத்திற்கு நாம் வந்திருக்கிறோம் பார்.

தலைவு கெட்ட நூலாக உலக மாந்தர் இருக்கிறார்கள். நாமோ தலைவு கண்டு எடுப்போம். மழைக்கால இருட்டாக இருந்தாலும், எவ்வளவு கஷ்ட நஷ்டமாக இருந்தாலும், தலைவு விட மாட்டோம். தலை எடுத்தே நெய்வோம். (16-8-42)

-+-+-+-+-+-

இறைவனை அறிய எல்லோருக்கும் ஆசை. ஆதி சுருதிகளின்படி வைத்துப் பார்க்கும்போது, அந்த இறைவன் மனோவாக்குக் காயங்களுக்கு எட்டப்படாதவன் என்று தெரிய வருகிறது.

மனோவாக்குக் காயங்களுக்கு எட்டப்படாத அதை, வரம்பு கடந்த அந்த வல்லபத்தை மக்கள் ஐந்தறிவு கொண்டு எட்டமுடியுமா? சப்தம் ஒரு எல்லையளவு தான் கேட்கிறது. கண் ஒரு எல்லையளவுதான் பார்க்கிறது. மூக்கு ஒரு எல்லையளவுதான் நுகருகிறது. அந்த அளவுகளில் புரட்டிப் புரட்டிப் பார்த்தால் என்ன பிரயோசனம்? இறைவனை எட்ட முடியவே முடியாது. ஆனால் எட்டக் கூடிய ஒரு வஜ்ர தேகம் உன்னுள்ளே இருக்கிறது. இதைக் கூட்டி வைக்க வந்தவர்களை மக்கள் அல்லலுக்குள் ஆக்கி தட்டிவிட்டு விட்டார்கள். இலேசாக எண்ணி, துச்சமாக எண்ணி அலட்சியப் படுத்தினார்கள்.

✦✦✦✦✦✦✦

சைவம் என்றாலும், சன்மார்க்கம் என்றாலும், மெய்வழி என்றாலும் எல்லாம் ஒரு செயலே. சைவம் என்று சொல்லிப்பழகி வந்தது பலனில்லாமல் போவது கண்டு புதுப் பெயர் இட்டார்கள். மக்கள் உணர்ச்சி ததும்பக் கேட்கட்டும் என்ற கருணையால் அப்படி செய்தார்கள். சைவம் என்று பேசினால் நமக்குத் தெரிந்ததுதானே என்று போய் விடுவீர்களென்பது அவர்களுக்குத் தெரியும். அதனால் புதிதாக வைணவம், சன்மார்க்கம் என்ற பெயர்களை வைத்தார்கள்.

இப்படி பல ஞானிகள் பலவாறுபல வழிகளைச் சொன்னது எதற்காக? எந்த வகையிலாவது இவனுக்கு இந்த சூட்சமம் புலப்பட்டு இவனுடைய ஜீவன் கடைத்தேறிக் கொள்ளட்டும் என்று கருணையினால்தான்.

✦✦✦✦✦✦✦

15-11-42

இத்தால தேகம் அழியும். அழியின் பிசாசாகவோ அல்லது வேறு

எப்படியோ ஆக னேரும். ஆதலின் இப்பொழுதே தேவனாக முயல வேண்டும். விதியென்பது இங்கில்லை. கடமையை அடைவது உன் கடமை என்று இறைவன் உன் தலையில் எழுதிவிட்டான்.

விதி என்பது இறைவனுடைய கையேடு. அதைப்போய்ப் பார்த்தவனுண்டா? விதி போல ஆகும் என்று னீ இருந்து விட்டால் வேதமும் அதற்குரிய வேலையும் எதற்கு? பாபி என்று உன் விதி இருப்பின், இப்பொழுதே கள்குடிக்கலாமென்று ஆரம்பித்து விடலாமே! பின் வேதம் எதற்கு? விதியை விட்டு மதியின் மேல் ஏறிச் சென்றால் கரையாகிய எமபடர் கடந்து மோட்சத்தில் சேர்வாய்.

எம் சபையில் வீற்றிருக்கும் என் சிஷ்ய கோடிகளே! ஆண்டவர் என்றும், ஜீவன் முக்தன், குருனாதன், மகரிஷி மெய்ஞானி, வேத காருண்யர் என்றெல்லாம் என்னை சொல்கிறீர்களே? நான் அப்படி சொல்லச் சொல்லி ஏவியதுண்டா! இல்லையே. என்னுடைய மைந்நா! எமது வாலை திருமங்கையின் மணி வயிற்றில் உன்னை புகுத்தி அங்கு இருவாரக்குகையில் அறுகோணத்திலிருந்து திரிகோண யோனிப் பிரகாச ஆலவாய் வழியாய் உன்னை ஈன்றெடுத்து வேதமணி தீபத்தை உன் இதயத்தில் ஏற்றிப்பதித்திருக்கின்றோமே ஆதலால் உன்னை 'மைந்நா' என்று அழைத்தோம். அன்றியும் உன் காமத் தாய் வயிற்றில் அடைந்து யோனியின் வழியாய் இம்மண்ணுலகுக்கு வந்தது உனக்கு எப்படி ஞாபகமில்லாமல் ஆகிவருகிறதோ அதேபோல் இதையும் மறந்தனை. வேதம் இத்தூலம் இருக்கும் போதேதான் கடமையாக்கப் பட்டிருக்கிறது. 1 வயது வரை கடமை இல்லை. அந்த வயதிற்குள் இறந்நால் இல்லை மற்றபடி ஜீவனும் உடலும் சேர்ந்திருக்கின்ற இத்தூலகத்திற்கே விதியாக்கி இருக்கிறது.

ஈரேழு பதினான்கு உலகத்திற்கு னடுவில் னீ இருக்கிறாய். அந்த உலகத்தில் னடுவில் னீ சுற்றித் திரிகிறாய். இன்னும் அதில் பல

உட்பிரிவுகள் உள்ளன. அதனையெல்லாம் கற்பது இந்த மெய்க்கல்வி கலாசாலையில் தான்.

எல்லோரும் சர்க்கஸ் பார்த்திருக்கிறோம். ஒரு கம்பியின் மேல் ஏறி நின்று, தலைகீழாய்ச் சுற்றிப் பளார் என்று எதிர்க்கம்பியில் பாய்கிறானே! முந்திப் பழகினதால் இதைச் செய்யமுடிகிறது. அவனைக்காண நாம் பலசாலியாக புத்திசாலியாக இருக்கலாம். ஆனால் நம்மால் அப்படி பழகாமல் செய்ய முடியாது. ஆனால் அதைப்போல் இந்த மெய்ஞ்ஞானம் பழகித் தேறக் கஷ்டமானதா? இல்லையே. பழகினால் இரட்சிப்பை அல்லவோ அளக்கிறது.

✦✦✦✦✦✦✦

" இரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்று பழமொழியில் குறிப்பிடுவது அழிந்து போகிற இந்தப் பொய்ப் பொருளை அல்ல. நித்தியத் தேகச் சொத்தாகிய ஜீவ ரத்தினத்தைத்தான் தேடும்படிசொல்கிறது. அந்த ஜீவரத்தினத்தின் பெருமையை அதன் பவரை மனித அறிவு கொண்டு அறிந்து கொள்ள இயலாது. அது விளைந்நால் இன்னொரு கண்ணல்லவா, இவனுக்குத் திறக்கிறது. தன்னுடைய நாதத்தில் ஒரு துளிக்கூட வீணாக்காமல் சேமித்து – வைப்பதன் விளைவால், ஜீவரத்தினம் பிறக்கிறது.

வைரம், கோமேதகம், புஷ்பராகம், முத்து, பவளம் இவை விலை கொடுத்து வாங்கலாம். ஆனால் நாகரத்தினம், ஜீவரத்தினம், சிரோரத்தினம் – இவற்றை வாங்க கிரயம் ஏது? அப்படியே விலைக்கு வந்நால் அது அசல் ஞான மணியல்ல.

இச்சாலையில் அந்த ஞானமணி நிறைந்த பொக்கிஷம் திறந்து வைக்கப்பட்டு, எல்லோரும் வாரிக் கொண்டு செல்ல தர்மமாக விடப்பட்டிருக்கிறது.

பகல் 3 மணிக்கு தெய்மவர்கள் ஒரு அரும் விஷயத்தைப் பேச எண்ணி சபாமண்டபத்திற்கு விஜயம் செய்த போது, அங்கு ஒருவரும் இல்லாமையால், இத்திருவசனத்தை எழுதி முடித்தார்கள்: (26-3-43)

"ஏ மனிதனே! நீ தேவதேவேசன் முதலாய் அழியா- வரம்பெற்று அளவிலாக் காலம் வாழ்ந்து அழியாப் புகழ் எடுக்கப் பிறந்தவன்-நாம் அதை நிரூபிக்க வந்திருக்கிறோம். நீ அதை விட்டு விட்டு புழுக்களெல்லாம் சேர்ந்து ஒரு பெரும் புழுவைப் புகழுவது போல்-இவ் உலக அறிஞரினர் அனைவரும் உன்னை புகழ்வதற்காக சென்றுவிட்டாய்? உன்பாடு இறுதியில் என்னே? இவ்வழியுலகமே அழியும் உன்னைப் புகழ்ந்தவர்கள் அதற்குமுன் அழிவார். அவர் உன்னைப் புகழ்ந்தது அதற்குமுன் அழியும்"

காவேரி ஆற்றின் மணலில் பொன் இருக்கிறது. அதனால் அதை பொன்னி என்கிறார்கள். தாமிர பரணி ஆற்றில் தாமிரம் இருக்கிறது. அந்த ஆற்றின் ஜலத்தை அப்படியே சாப்பிடலாம். ஆனால் கரிசல் மண் பூமியில் காரியம் இருக்கிறது. அம் மண்ணில் இருக்கும் தண்ணீரைக் குடித்தால் காமாலை வந்து விடும். ஆனால் அதே தண்ணீரைக் கொட்டாங்குச்சியில் சிறிது நேரம் வைத்து விட்டுக் குடித்தால், அந்தக் காரீயத்தின் விஷத்தை கொட்டாங்குச்சிக்கு மாற்றிவிடும்.

ஞானத்திற்காக உப்பில்லாமல் பத்தியம் இருந்து வந்த ஒருவர் ஆண்டவர்களை தரிசிக்க வந்தபோது: "எமது ஞானம் வீரம் தெறிக்கும் ஞானம். இதனைத் தாங்க தேகத்தில் இளமையும், வலிமையுயம் வேண்டும். உப்பில்லாமல் சாப்பிட்டால் உடம்பில் தெம்பு எங்கிருந்து

வரும்? உப்பு தான்டா சுவையில் முதல் ராஜா. உப்பு இல்லாத பண்டம் குப்பையிலே என்று நீ கேள்விபட்டது இல்லையா? உப்பு என்று ஏன் அதற்குப் பெயர் கொடுத்தார்கள் தெரியுமா? உப்பை சேர்த்து கொண்டால்தான் நீ உப்புவாய் – குண்டாக ஆவாய். இல்லையேல் எவ்வளவு சாப்பிட்டாலும் உடம்பில் ஒட்டாது. மெலிந்துதான் போவாய். ஆகையால்தான் அதற்கு ''உப்பு'' என்று பெயர் கொடுத்தார்கள்.

உப்பில்லாத பண்டத்தை வாயில் போட்டு சுவைத்துப்பார். 'சப்' பென்றிருக்கும். சுவைக்காது. ஐந்து சுவைகளும் ஒன்றுக்கொன்று சண்டைபோட்டுக் கொண்டு தனது தனது தானத்திற்கு செல்லாமல் அடம் பிடித்து நிற்கும். ஆறுவது சுவையாகிய உப்பைச் சேர்த்தவுடன், அது சுவையின் ராஜாவாகையால் பண்டத்தில் சுவை கூடிவிடும். உப்பை பண்டத்தில் சேர்த்தவுடன் ''தித்திப்பே நீ இங்கே போ, காரமே அங்கே 'போ'! என்று அதிகாரம் செய்து அதனதன் ஸ்தானத்தில் அது அதனை நிறுத்தி வைக்கும். உடனே பண்டத்தில் ருசி கூடி விடும்.

சரி... உப்பில்லாமல் தின்கிறேன் என்கிறாயே, அப்போ நீ இறைவனுக்குப் புத்தி சொல்கிறாயா? ஏ இறைவா நீ உப்பை படைத்தது தப்பு. நான் அதனைத் தொடமாட்டேன்'' என்கிறாயா?

இறைவன் படைப்பில் ஒன்று கூட வீணுக்காக படைக்கவில்லை. பாம்பு கூட உனது நன்மைக்கே படைக்கப் பெற்றதுதான். பாம்பு இல்லாவிடில் நீ விளைவிக்கும் தானியத்தில் பாதியை எலிகளே தின்று தீர்த்து விடும்.

புலி, வேங்கை எதற்கு என்கிறாயா? புலியும் வேங்கையும் உனக்கு வீரத்தின் தன்மையை உணர்த்தவே படைக்கப்பெற்றது.

புலிக்கு பயம் என்பதே தெரியாது. பயம் அதற்குப் படைக்கப்படவில்லை, அதனை துப்பாக்கியினால் சுட்டால்கூட குண்டடியை வாங்கிக் கொண்டு புகைவந்த திசை நோக்கி பாய்ந்து வந்து தாக்கிய பின்னரே தனது உயிரை விடும். இறைவன் படைத்த படைப்புகள் அத்தனையும் மனிதன் ஒருவனுக்கே.

இறைவன் கரையானை படைத்தது எதற்காக? மண் வளத்தை காப்பாற்ற. கரையான் எதைச் சாப்பிட்டாலும் அது மண் ஆகும்.

உன்னைப் பிடித்த பாபம் உப்பைத் தின்னாமல் செய்து விட்டது. சரி. இன்று அந்த பாப விமோசன நாள் என்பதை தெரிந்துகொள்.

-•-•-•-•-•-

உன்னிலிருக்கும் மனிதனை சாகடித்து தேவனாக்கும் தீ தான் 'சா-ந்தி'. உன் இருள் மனத்தினை நீக்கி அருட்பெரும் ஜோதியாக மாற்றும் தீயே சா-ந்தி.

''ஓம் சாந்தி, ஓம் சாந்தி'' என்று ஆயிரம் தடவை வாயினால் சொன்னாலும் அந்தப் பருப்பு வேகாது. பருப்பு வேக வேண்டுமென்றால் நிஜமான தீ வேண்டும். அது தான் ஆசானிடத்திலுள்ள முத்தி ''முத்-தீ''

-•-•-•-•-•-

வேதத்திற்கு மறை என்ற மாற்றுப் பெயர் உண்டு. உனது கண்களுக்கு மறைக்கப் பட்டிருக்கிறதற்கு பெயர் மறை. வேதத்தினாலேயே மறைக்கப் பட்டது உனது கனவில் தோன்றுமா? ''கனவில் நான் மயில் வாகனனைக் கண்டேன்'' என்கிறான். மயில் வாகனனை முன்னால் இவன் சந்தித்திருக்கிறானா? சந்தித்திருந்தால் தானே அவர் வந்தால் இவன் அடையாளம் கண்டு கொள்ளுவதற்கு? இது மனப்பிரமை. கனவு' ஞானம் பெறுவதற்காக படைக்கப் படவில்லை?

மனிதப் பிறவியைத் தவிர வேறு எந்நப் பிறவிக்கும் கனவு உலகம் இல்லை. இது இவன் ஒருவனுக்கே அது பிரத்தியேகமாக ஒரு காரணத்திற்காக படைக்கப் பெற்றது.

இவன் இன்பக் கனவு காண்கிறுன். அதற்கான அடையாளம் வெளிப்படியாகத் தெரிகிறது. ஆனுல் இதில் அவனது தேகம் பங்கு எடுத்துக் கொண்டதா? இல்லையே. தேகத்தின் ஐம்புலன்களின் சம்பந்தமில்லாமலேயே மனம் மட்டும் தனித்து நின்று இன்பம் அனுபவித்திருக்கிறது. அதே போல் துன்பம் அனுபவித்து கனவில் அலறுபவர்களும் உண்டு.

ஒரு ஓவியன் மிகச் சிரம்பட்டு ஒரு கோயில் கோபுரத்தின் உச்சியில் ஒரு அழகான ஓவியத்தை வரைந்நான். கீழே அதல பாதாளம். ஓவியத்தை மிகக் கருத்தோடு வரைந்து முடித்த பின் அவன் அதன் அழகை ரசித்துக் கொண்டே பின் னடந்நான். பின்ஞலோ அதல பாதாளம் இருக்கிறது என்பதை மறந்து விட்டான். இன்னும் ஒரு அடி பின் வைத்தால் கீழே விழுந்து விடுவான். அந்த சமயம் அவனுக்கு வர்ணங்களை ஏந்திக் கொண்டிருந்த உதவியாளன், ஓவியன் இப்போது கீழே விழப் போகிறுன் என்பதை அறிந்து கீழேபாதாளம் என்பதை அவன் கவனத்திற்கு கொண்டுவருவதற்கு கையில் இருந்த வர்ணத்தை சடாரென்று ஓவியத்தின் மேல் விசிறுன். ஓவியம் பாழாகி விட்டதை பார்த்து இவன் அய்யோ என்று பதறிக் கொண்டு ஓவியத்தை பார்த்தக்கொண்டே பின்னடப்பதைவிட்டு விட்டு முன் பாய்ந்து ஓடிவந்நான்.

அப்போது இவன் உதவியாளன் இவனை ஆசுவாசப்படுத்தி

இப்போது இவன் கீழே விழுந்து சாக இருந்த அதல பாதாளத்தை சுட்டிக் காட்டினான். அந்நேரத்தில் அப்படிச் செய்யாவிட்டால் நீ பிழைத்திருக்கமாட்டாய் என்ற செய்தியையும் அவனுக்கு தெரிவித்தான்.

அந்த ஒவியன் வேறுயாருமல்ல. நீதான். அந்த உதவியாளன் நாம் தான். அழிந்து போகிற அநித்திய பொருள்களுக்கு ஆயுளையெல்லாம் செலவழித்துத் தேடி தேடி அநுபவித்து மகிழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். பின்னால் எமன் என்ற கரிக்கிடாயன் வந்து உன்னை நரகத்தில் தள்ள காத்துக் கொண்டிருக்கிறான் என்பது உனக்கு தெரியாது. அந்த சமயத்தில் நாம் வந்து ஐயா ''நீ பாடுபட்டுத் தேடி சுகமென்று நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களே அவை அனைத்தும் அநித்தியம் அப்பா! நீ அநுபவித்து முடிவதற்குள் அவை அனைத்தும் அழிந்துவிடும். அழிந்து விடுவதோடல்லாமல் உனக்கு மாறாதபெரும் தீங்கையும் உண்டு பண்ணி விட்டுப் போகும் என்று உஷார்படுத்தி மெய்வழியில் திருப்பி உள்ளோம்.

✦✦✦✦✦✦

ஈசன் மனுவை எந்த உன்னத செயலுக்காகப் படைத்தானோ அதனை பெறக்கூடிய எல்லைக்கு வந்துள்ளவன் நீ. மனிதனை ஒரே ஒரு வேலைக்காக மட்டுமே படைத்திருந்தும், அதை அறியாமல் தங்களுக்கு சம்பந்தமே இல்லாமல் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீ மட்டும் இங்கு வந்து உலகில் வேறு எங்கும் இல்லாத எமனை வெல்லும் லாபகர வசந்தத்தை நீ பெற்றிருக்கிறபடியால் உன் நினைவு இப்போது புதிது—உன் பேச்சு புதிது. உன் செயல் புதிது, நடவடிக்கை புதிது எல்லாமே புதிது. ஆகையால் இங்கு வந்தது முதல் நீ ஒரு புதுமனிதன். மற்ற உயிர்ச்

சாதிகள் இதை னினைக்கவே முடியாதே. உலகில் இது வேறு எங்கும் இல்லாததாலே இது ஒரு அதிசயம். ஆகவே, னி "ஒரு அதிசயப் புது மனிதன்"

30. 7. 1972 ஞாயிறு

கண்ணுக்குத் தெரியாமல் தவ வலுவால் எம் எலும்புகள் எல்லாம் மாறிவிட்டன? எம் எலும்பு இளகிமாறி இருக்கிறது என்றால் அதை மாற்றுவது எப்பேர்ப்பட்ட கருவறையாக இருக்க வேண்டும். இந்த அதிசயத்தை தீர்க்க தெரிசிமார்கள் எல்லாம் வெகு காலத்திற்கு முன்னமேயே எம்மை பார்த்து சொல்லுகிறார்கள். ஆனால் உனக்கு னேரில் எம்கூட இருந்து பார்த்தும் கண்ணுக்கு தெரியவில்லை.

பிள்ளை உண்டாகி இருக்கிறவ எம் முன்னால் வந்து னின்றால் அவளுக்கு உண்டாகி இருப்பது ஆணா பெண்ணா என்று எமக்கு தெரிகிறது. ஆணா பெண்ணா என்பது உருவ அடையாளம் அவ கண்ணைப் பார்த்தாலே அதில எழுதியிருப்பது எமக்கு தெரிகிறது.

(29-7-72)

அந்த னித்திய வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் னீ வாழும் உலக வாழ்க்கை அனித்திய வாழ்க்கை ஒன்றுமே இல்லை. னூறு வருஷமாக இருந்நாலும் இது ஒரு க்ஷண னேரம் போலத்தான். எனவே இந்த வாழ்க்கையில் னீ சந்தோஷமாக இருந்நால் தான் என்ன? துன்பப்பட்டு கொண்டிருந்நால் தான் என்ன? உன்னைத் தலைகீழாக ஒரு மரத்தில் கட்டி தொங்கவிட்டு னெருக்கினாலும் இந்த வாழ்னாள் பூராவும் அடித்தாலும் அந்தக் கஷ்டத்தை இந்த தூலத்தைவிட்ட பிறகு பெறப் போகும் னித்திய மகிழ்ச்சிக்காக அனுபவிக்கலாம். ஏன் என்றால் அந்த மகிழ்ச்சியின் முன்னால் இந்தக் கஷ்டம் ஒரு திவலை தானே.

எமனை வெல்லும் வரம் பெற்றுள்ள நீங்கள் இந்த அவஸ்தை தேகத்தை எப்போது விட்டுவிடுவோம் என்ற நினைவோடு சதா இருக்க வேண்டும். ஆனால் இதற்கு மாறாக நீங்கள் எல்லோரும் பயந்தாற்போல் இருக்கிறீர்கள். இதுதான் கலிப் பாவம். அந்த நித்திய தேகம் எப்போதுவரும் என்று நீ ஆவலுடன் இருக்க வேண்டும். கவலைப்படக்கூடாது. அவதார புருஷர்கள் மக்களை இரட்சிக்க அவஸ்த்தை தேகத்தை தரிக்கிறார்கள். உன்னை விட பல மடங்கு உலகத்தோடு ஒட்டியிருப்பது போல காண்பிப்பார்கள். ஆனால் எப்போதும் தனித்தே இருப்பார்கள்.

அவஸ்த்தை தரிப்பது அவதாரம். பரிசுத்தசுத்த ஆவியானவர்கள் மனுவுக்காக வேண்டி, இந்த அவஸ்தை தேகத்தை தரித்திருக்கிறார்கள். உன்னை விட பல மடங்கு உலகத்தோடு ஒட்டியிருப்பது போல காண்பிப்பார்கள். ஆனால் எப்போதும் தனித்தே இருப்பார்கள்.

உலகத்தவர்கள், ஞானிகளுக்கு மதிப்பு கொடுக்கலாம். ஆனால் மதிப்பை பற்றி கிஞ்சித்தும் நினைக்காமல் ஞானிகள் சத்தியத்தில் ஊன்றி நெய் சட்டியை எடுத்துசெல்வது போல் மெய்ப் பாதையில் நடப்பார்கள்.

ஒரு சட்டியில் நெய் இருக்கிறது. நெய் தலும்பாமல் போய் வர வேண்டும். சுற்றிலும் கேளிக்கை, உலக விவகாரங்கள் மேடு பள்ளம் என்று இருந்தாலும் கருத்து முழுவதும் சட்டியை தலும்பாமல் கொண்டு போவதில் தான் இருக்கும். உலகத்தவர்களுக்கு ஞானிகளின் தூல நடவடிக்கை மட்டும்தான் தெரியும்.

"எத்தொழில் செய்தாலும் ஏவுத்தை பட்டாலும்
முத்தர் மனம் இருக்கும் மோனத்தே! வித்தகமாய்
காதி மனம் இருக்கும் நீர் குடத்தே தான்"

என்ற பட்டினத்தார் பாடல் வரிகள் முழு எதார்த்தமான வார்த்தையாகும்.

அறிவுக் கூர்மையான ஞான வாழ்க்கைக்கு என்ன கஷ்டம் வந்த போதிலும் கலங்காத – திடங்கொண்ட செயலல்லவோ தேவ வல்லமை. முன் வந்த செம்மல்கள் எவ்வளவு கொடூரம் வந்நாலும் ஏற்றுக்கொள்ளும் வல்லமையுடன் மன மகிழ்ச்சி உள்ளோராக இருந்நார்கள். இந்த பிரம்ம வித்தையின் மகத்துவத்தை – வல்லமையை – இந்த நெருக்கடியான நேரத்தில் வெளியிடாமல் எப்போது வெளியிடுவது? இந்ததேவ வல்லமையானது பரிசுத்த யோனியில் பிறந்நதால்தான் என்ற நினைவுப் பூப்பு உங்களுக்கு வரவேண்டும். இந்த மனமகிழ்ச்சியுள்ளோர்தான் மேலோரேயன்றி – இந்த மனமகிழ்ச்சியில்லாதோர் கீழோரே ஆவர்.

''சுத்த பரிபூரண சவாரி தன்னிலோர்
சொட்டாகிலும் தொட்டவர்
நல்லவர்கள், நல்லவர்கள், நல்லவர்கள்.''

நல்லோர்கள் கூட்டத்தில் நல்லவர்கள் என்று சொல்லப் பெறுகிறவர்களாக இருப்பவர்கள் யார்? ஓர் சொட்டாகிலும் தொட்டவர்க்கே 'நல்லவர்' என்ற இந்தப் பதவி என்றால், முழுவதும் அந்த ஞானவாழ்வில் ஆழ்ந்திருப்பவர்களின் பெருமையை எப்படிச் சொல்லுவது?

பசியே உணவாகவும் வணக்கமே தூக்கமாகவும் ஆவது யாருக்கு? ஜீவன் முத்தர்களுக்கு.

இந்த எல்லை உலகத்தையெல்லாம் விழுங்கி - இது மட்டும் நிற்கின்ற எல்லை - பொய்யிற்கே அநித்திய உலகம் என்று ஒன்று இருக்கும்போது மெய்க்கு நித்தியஉலகம் இல்லாமலா போகும்? பொய் - மெய் என்று இருப்பது இவனுடைய உடலிலும் இருக்கிறது. அதுதான் கசப்பும், இனிப்பும்.

சித்திரை மாதத்தில் மெய்வழி ஷச்சேத்திர அனந்தருக்கு குழந்தை பிறந்த போது (சித்திரை பாலன்) அம் மாதத்தில் பிறந்தது தந்தைக்கு ஆகாதென தீர்த்தம் போட விண்ணப்பித்தபோது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்: ''உங்கள் வீட்டு தலைவன்' நாம்தானே. அப்படி இருக்க அந்த கிரகத்தால் என்ன செய்ய முடியும்?

நாம் மக்கா போய் திரும்புவதற்கு பதிமூன்று மாதம் ஆயிற்று இந்த காலத்தில் இரண்டு நாளில் போய்வந்து விடுகிறார்கள். ஒட்டகம் 1½ வண்டி பாரம் சுமக்கும். ஒத்தையடி பாதையில் - ஒன்றன் பின் ஒன்றாக வாலைக் கடித்துக் கொண்டு செல்லும் - மக்கா - மதினா பனிரெண்டு நாள் அதில் பயணம் செய்தோம். என்ன அடி அடிச்சாலும் பிராணன் போகிறவரைக்கும் அது சுமை சுமக்கும் - கழுத்து மேலே சரிந்து கட்டிக் கொண்டு சென்றோம். பாதையில் மணல் குன்று குன்றாக இருக்கும். அது ஒட்டகம் புதைத்த இடம். இரவு பயணம் கிடையாது. தண்ணீர் 5 நாளுக்கு வைத்துக் கொள்கிறது. கொஞ்சமாகத்தான் சிறுநீர் போகும். பாலைவன கப்பல் என்று அதற்கு பெயர். இதன் பயணம் நின்றுவிடும். அப்போது அழிவு காலம் வரும்.

உடுக்கையை வைத்துதான் இந்த உலகத்தை படைத்தது. ஆனால் இந்த உடுக்கையை நகலாக கூட எந்த கோயிலிலும் எடுத்து வைக்கப்பெறவில்லை. அதைவைத்து தான் நமது சாலையம்பதியில் துந்துமி உருவாகி முழங்குகிறது.

எமது திருக்கரத்தில் உள்ள சன்னதமாகிய தவ மேம்பாட்டினை அறிவிக்கவும் இந்த துந்துமியை இப்படி வெளிரங்கத்திற்கு எடுத்து வைத்துள்ளோம். தவ நிலையில் இருக்கும்போது துந்துமிநாதம் ஒன்றுதான் எமக்கு கேட்கும்.

உலகத்தில் சாஸ்திரிகள், கனபாடிகள், பண்டிதர்கள் என்று எவ்வளவோ பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்களே அவர்களிடம் நரகத்திற்கு சொர்க்கத்திற்கும் உள்ள கால வயது என்ன என்று கேளுங்கள் பார்க்கலாம். அது எத்தனை ஆண்டுகாலம் என்று அவர்களால் சொல்ல முடியுமா? சொல்ல தெரியாமல் விழிப்பார்கள். நாம் சொல்லுகிறோம். பரமபத சொர்க்கப்பதி வாழ்வுகளுக்கு கற்பஞ்நகோடி காலம். நரகத்திற்கும் இந்த நீண்ட காலமே. இது யார் தலைக்கு விதிக்கப்பட்டிருக்கிறது? மனுவிற்கு மட்டும்தான். மனுவானவன் போனால் நெடுஞ்சால சுவர்க்க வீட்டிற்கு போக வேண்டும். இல்லாவிட்டால் நரகலோகத்திற்குப் போக வேண்டும். நரக லோகத்திற்கு போக யாராவது சம்மதிப்பார்களா? பிச்சை எடுத்து ஜீவிப்பவர்கள் கூட அதற்குச் சம்மதிக்க மாட்டார்களே.

உலக பாட்டிற்காக உயிரைக் கொடுக்கவும் தயங்காது நிற்கும் முனைப்பு உனக்கு இருக்கும்போது நீ இந்த நித்திய மகிழ்ச்சி வாழ்க்கையைப் பெற என்ன வேகம் இருக்க வேண்டும்? ஒரு

பாடுமில்லாமல் இப்போது உனக்கு கிடைக்குதே. குடும்ப வாழ்க்கைக்கு அப்படி முனைகிறுயே அதில் கோடியில் ஒரு பங்கு கூட இதற்கு இல்லையே.

பாடில்லாமல் ஒரு தும்பைச் செடி கூட வராதே. அப்படியென்றல் நீ பட வேண்டிய பாட்டையும் உன்னைப் போல ஆயிரக்கணக்கான பிள்ளைகள் பட வேண்டிய பாடுகளையும் ஒருவரே அந்த பாடெல்லாம் பட்டதால் அல்லவா உனக்கு இதை இனமாகக் கொடுக்க முடிந்தது.

நீங்கள் ஒருவருக்கொருவர் போடும் சண்டையானுலும், குடும்பச் சண்டையானுலும் அவைகள் எல்லாம் சன்னிதானத்தில் சொல்லும் நேரம் தான் எமக்கு நினைவு இருக்கும். மறுகணம் அதை மறந்து விடுவோம். மறுபடியும் நீங்கள் அதை எடுத்து சொல்லும் போதுதான் சொல்லச் சொல்ல எமக்கு ஏதோ கனுக்கண்டது போல் இருக்கும். இந்த எம் தவனிலை யாருக்காவது தெரியுமா? அதே சமயத்தில் அந்த நிலையிலும் ஞான விஷயத்தைப் பற்றி எதாவது ஒரு துளி, ஒரு அணு மாத்திரம் எப்போதாவது பேசினது இருந்தாலும் அது எம் நினைவில் ஆணி அறைந்தது போல் இருக்கும். மறக்கவே மறக்காது. மெய்யில் உன்னை வளர்க்க அந்த அளவு கவனம் செலுத்தி வருகிறேம். இந்த சபையை வளர்ப்பதற்காக என்னென்ன விநோத நாடகம்! எத்தனை நெளிவு சுளிவு! எத்தனை பிரச்சனை! என்னென்னவெல்லாம் பண்ணி வளர்த்திருப்போம்! இல்லாவிட்டால் இப்படி ஒரு குலமாக உங்களை ஆக்கி இருக்க முடியுமா? இப்போதாவது நும் யார் எம்பாடு எப்படிபட்டது என்று தெரிகிறதா?

✦✦✦✦✦✦✦

ஐந்நாறு பேர் உட்காரக்கூடிய வயிறு படைத்த யானைக்கு, சிறு வயிறு படைத்த மனிதனைவிட எத்தனையோ பங்கு அதிகமான அறிவு

அல்லவா இறைவன் தந்திருக்க வேண்டும்?- தரவில்லையே! அப்படியிருக்க கூரிய மதிகொண்ட இவன் வயிறு வளர்ப்பதற்காக என்று இவனுடைய உன்னத அறிவை உபயோகப் படுத்தினால் அது ஒரு அரசன் மாடு மேய்க்கப் போனது போலவே ஆகும். ஒரு வக்கீல் ஆடு மேய்ப்பவனாகச் சென்றால் என்ன ஐயா பலன் தரும்? அவருக்கே உகந்த வேலையைக் கொடுத்தால்தானே எல்லோருக்கும் லாபகரமாக இருக்கும். மேலான வேலை செய்பவனை மட்டமான வேலை செய்ய வைத்தால் கிடைக்கும் பலன் பெரும் நஷ்டம்தானே!

இறைவன் மனிதனுக்கு என்று எல்லாவற்றையும் படைத்து இவனுக்கு பருவம் தவறாமல் உணவு கொடுக்கும்படியாக தாவரங்களை படைத்தது மட்டுமல்லாமல் அதிகமாக தின்று வியாதிகளை கொண்டு வந்துவிடுவானே என்று முன்னேற்பாடாக மூலிகைகளையும் படைத்து இவன் அணிந்து அழகு பார்ப்பதற்கென்று ரத்தினாதிகளையும் படைத்திருக்கிறானே, அந்த கருணையை எண்ணிப் பார்க்காவிட்டால் இவன் யார்? மேலும் இவனை யுகவித்தாக ஆக்க நினைத்தல்லவா பூமியைப் படைத்தான். அப்போ இவன் அந்த நன்றியை உணராதபோது இவனுக்கு கொடுக்க இருக்கும் நரக தண்டனை பத்தவே பத்தாது.

நீ வாழ்ந்த வாழ்க்கையைக் கூட்டி ஐந்தொகை போட்டால் இப்போது என்ன ஐயா மிஞ்சும்? ஏதாவது கொஞ்சம் பணம் சம்பாதித்திருப்பாய். ஐந்நாறு பிள்ளை குட்டிகளை பெற்றிருப்பாய். ருசி புசியாத் தின்றிருப்பாய். தூங்கியிருப்பாய். இதுதானே உன்னுடைய வாழ்க்கையின் ஐந்தொகையின் முடிவு. அழியாத மாணிக்க அறிவை தந்தானே அந்த அறிவிற்கு உரிய கைமுதல் என்ன? அதனை மறுதளித்து ஒரு தலைமுறைனருக்கு விணடித்தாயானால் கடைசியில் பேயுடம்பு எடுத்து நரகவாதியாய் போவாய்.

இப்படி எடுத்து காட்டுவார் யாரும் இல்லாததால் நம் உன்னதமான பேரறிவை அழிந்து போகிற உலகக் காரியத்திற்கே செலவிடுகிறோம். நன்றாக நினைத்துப் பாருங்கள்! நாம் சொல்வதில் ஏதாவது ஒன்று அழியாதது பற்றி உண்டா? அறிவைப் பற்றி பேசுகிறோம். அது அழிந்து போகிற பொருளா? இல்லையே! உனக்கு இறைவன் கொடுத்த அழியாத அறிவைக் கொண்டு போய் அழியும் பொருள்களைத் தேடுவதால் அதற்கு பதில் கொடுக்க எமன்வருகிறான்.

எல்லோரும் எமன் இடத்தில் சிக்கிக் கொண்டு ஆலையில் கரும்பு பிழிபடுவது போல் அகப்பட்டுக் கொண்டு விழிக்க நேரும். அதை மாற்றுகின்ற பிரம்ம வித்தையாகிய செயலை அந்தப் பெரிய கீர்த்தியை அந்தப் பெரிய சம்பத்தைப் பெற வந்தவர்களே ஒவ்வொருவரும்.

நமக்குள்ளே ஒரு ஜீவதேகமிருக்கிறது. அதைப் பெறுவதற்காகவே மனிதன் வந்தான். மனிதனுக்குள்ளாக மூன்று தேகங்கள் இருக்கின்றன. கடைசி தேகந்தான் சிவம். அந்தச் சிவதேகத்தை பெறுவதற்கே இந்த மனுத் தூலத்தைத் தந்தான். அந்த சிவதேகத்தை இந்த முகக் கண் கொண்டு பார்க்க முடியாது. அகக்கண்கொண்டு பார்ப்பவர்கள்தான் அந்தச் சிவரூபத்தைப் பார்க்கலாம். இவ்வீட்டில் இக்குகைக்குள்ளாக இதோ இருக்கிறது அந்தச் சிவசொரூபம் என்று கண்டு அனுபவித்து அந்த செம்மல்களுடன் சமத்துவமாக உட்கார்ந்திருக்கலாம்.

செக்கில் போட்டு ஆட்டுகிறதும், வாளால் அறுக்கிறதும் ஆகச் சித்திரங்கள் போட்டு நரக தண்டனைகளைக் காட்டி இருக்கிறார்களே, அது சத்தியமே. ஏனெனில் இறைவன் கட்டளைக்கு மாறி நாம் நடந்து கொண்டது எல்லாம் சும்மா போகப் போவதில்லை. அவையாவும் அவரவரின் ஜீவ ஏட்டில் பதிக்கப் பெற்றிருக்கின்றன. அந்த ஏட்டையே

னி ஒருவன் வாசித்துப் பார்க்கவரும். அதற்குரிய தண்டனையும் பெறநேரும். மேலே நாம் சொன்ன சிவ தேகத்தைப் பெறுதவர்களுக்கே இறைவன் இவ்வாறாக நரகத்தைப் படைத்தது.

✧✧✧✧✧✧✧

நாம் உங்கள் பாட்டையர் தனிகைமணிப்பிரான் அவர்களோடு அகிலவலம் வந்து கொண்டிருந்த காலத்தில் ஒரு சமயம் மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு அருவியின் ஓரம் பூஞ்சோலை போன்ற இடத்தில் ஒரு பாறையின் மீது அமர்ந்து பாட்டையர் அவர்களுடன் இருந்தோம். அவர்கள் நிஷ்டையில் இருந்தார்கள். மாலை வேளை. அது நேரம் நாம் எமது உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் பண்ணி மெய்ஞானம் பெற்று அவர்களுடன் உடனிருந்த காலம் அல்லவா? அந்த மாலைப் பொழுதில் தான் மெய்ப் பொருள் அடைக்கலப் பாவினை நின்று பாடி அவர்களை தோத்தரித்தோம். அதைத்தான் தேடுகூடகத்தின் முகப்பில் நாம் எடுத்து உங்களுக்கு வைத்துள்ளோம்.

✧✧✧✧✧✧✧

உனக்கு வரப்போகிற மாபெரும் இடரான ஒரு தீங்கைப் பற்றி உனக்கு முன்னமேயே எதாவது தெரியுமா என்றால் தெரியாது. அப்படி வரும்போது எப்படி அதிலிருந்து தப்பிப்பாய் என்பதாவது உனக்கு தெரியுமா என்றால் அதுவும் தெரியாது. இனி வரும் காலத்தில் என்ன நடக்கப் போகிறது என்பது எமக்கு திட்டமாக தெரிந்து இருப்பதால் தான் இந்த வான் வித்தை அருட்கிரண சபையை உண்டாக்கி இவ்வளவு பாரதூரமாக வளர்த்துக் கொண்டு வந்திருக்கிறோம். அழியா மெய்யில் உன்னை புகுத்தாட்டி வைக்க எடுத்த எடுப்பே இந்த சபை.

அந்நரகத்தில் ஒற்றைக் கயிற்றில் தொங்குபவர் நடத்தும் சபை

இது. னரக தேகம் என்றைக்காவது பரமபத தேகம் ஆகுமா? ஆக்குகிறேமே. சபையில் ஏன் சேருகிறாய் என்றால் நுறிச் செத்து போய் விடுவேன் என்று பயந்து சேருகிறேன் என்று திட்டமாக கூற வேண்டும்.

✧✧✧✧✧✧✧

தங்க ஆபரணத்தை இடுப்புக்குகீழே போட்டுக்கொள்ளக் கூடாது. ஆனால் நாம் எம் காலில் தங்க மெட்டி அணிந்துள்ளோம். அப்படிவேறுயாருவது அணியமுடியுமா? ஒரு அரசன் இப்படிப்போட்டுக் கொண்டால் அடுத்த னிமிடம் கஞ்சிக்கு இல்லாமல் திண்டாடுவான். ஆனால் நாம் வீற்றிருப்பது மெய்ஞ்ஞான ஜீவசிம்மாசனத்தில். உன் காணிக்கை பணத்தை வாங்கி காலடியில் தானே போட்டுக் கொள்ளுகிறோம். ஆனால் னீயோ பணம் என்ற உடன் அதை எடுத்து உன் முகத்தில் வைத்து முத்தி முகர்கிறாய்.

உன் உடல், பொருள், ஆவி எமக்கே சொந்தம் என்று கூறுகிறாயே அப்படியானால் உன் உடல் சம்பாதிக்கும் பொய்ப் பொருளும் எமக்குத் தானே சொந்தம்? இருப்பினும் அதைக் கொண்டு னீயும் உன் பெண்டு, பிள்ளைகளும் வாழ்வதற்கு அனுமதி தருகிறோமே. ஆனாலும் அதில் பத்தில் ஒரு பங்காவது எமக்குச் செய்தால்தானே உனக்கு இந்த ஞானம் - ஒட்டும்.

எனக்கு ஒவ்வொரு வீடுதியாகச் சென்று ஒரு சிறிய பருக்கையாவது உண்ண வேண்டும் என்று தோன்றுகிறது. அப்போதுதான் உன்னுடைய பாவங்கள் எல்லாம் னீங்கும். உங்கள் கையில் தவம் இல்லாமல் இருக்கிறீர்களே என்று எனக்கு ஏக்கமா இருக்கிறது.

உன்னை பாதாள உலகத்திலிருந்து பூலோகத்திற்கு கொண்டு வந்து அதற்கு பின் தேவ லோகத்தில் அல்லவா பிறப்பிக்கப்பெற்ருய். இது சத்தியம் தானே. விளையாட்டா இது? யாராவது இதனை செய்ய முடியுமா என்று எண்ணிப்பார். இதை எண்ணுமல் னரர்கள் மத்தியிலே ஒயாமல் புழங்கிருல் துகடமே உனக்குவந்து சேரும்.

இந்த அரிய காரணப் பெரிய செயலே அதன் உன்னதம் தெரிந்திருந்தும் னீ பழகும் னரகர் சிலர் இதற்கு வரவில்லையே ஏன்? னீ வந்திருக்கிருயே ஏன்? மெய்ச் செயலுக்கு இணக்கமான எண்ணமும் உன்னிடம் இருந்தது. இருக்கிறது. அவனிடம் இல்லை. அதுதான்

பாழடைந்த கோட்டை – வேதாளம் இருக்குது என்ற பயம். உள்ளே போய்ப் பார்த்தால் சர்வ ஐஸ்வர்யமும் இருக்கும். அதுபோல மெய்வழியில் னுழைவதற்கு முன்ருல் பயம் – னுழைந்த பின்புதான் எல்லாம் தெரியும்.

னிறையிருள் மலிந்த சைத்தான். இவன்போய்
ஆண்டவர்களை கணிக்க முடியுமா?
இமயத்தை எறும்பு கணிக்க முடியுமா?

✦✦✦✦✦✦✦

ஒரு னுள் காலை தேம்பாவணி படிக்கப்பெற்ற போது ஆண்டவர்கள்: ''இவையெல்லாம் பொய்க்கதை. னும் சொல்கிறேம் கேள். பரிசுத்த ஆவியிருல் கன்னிமரியம் சூல் உற்றபோது அப்போது அங்கு இருந்த சகாரியா என்ற ஞானி அது தெரிந்து அக்கருவை காக்க எண்ணி அவளை சூசையப்பருக்கு திருமணம் முடித்தார்கள். அதற்கு பின் பிறந்தவர்களில் ஒருவர் தான் ஜுடாஸ் தெய்வம்.

✦✦✦✦✦✦✦

சிக்கந்நர் – சிகரத்தில் இருக்கும் கந்நர்.

ஒணம் – எமனை மிதித்து உதைத்து தள்ளி சம்காரம் செய்யும் இடம்.

✧✧✧✧✧✧

ஸ்ரீ காகபுசுண்டபிரான் தீர்க்கதரிசனப்பாடலில்

வயிரத்தி னடுபச்சைப் பவளத்தி னடுமுத்து
மருவிக் கோமேதகத்தி னிடை புஷ்ப ராக மிட்டு
மயிலுப் பெருமாணிக்க வரிசைவிட்ட நீல மொய்த்த வைடூரியமோடு
மகுடத்தில் நவ ரெத்ன மிளசச் சிரசிலிட்டு
மகிழுற்ற பிரசன்னர்கு வதனத்தி னழகிற்கோன்
வடிவைக் கண்டிடப் பற்றி யடிமைப்படுவதெப்போ.

– கணஞரா

ஞும் அணிந்திருந்த தங்கமகுடத்தை பற்றியும், அழகாக அதில் வைரத்தின் நடுவில் பச்சை மரகத கல்லும், பவளத்தின் நடுவில் முத்து கோமேதகமும், இடையில் புஷ்பராகமும் இட்டு, மாணிக்கத்தில் பெரிய வரிசை வளைவாக பதித்து வைடூரியத்தை இணைத்திருந்ததையும் அப்படியே கண்டு தோத்தரித்து பிரார்த்தித்து தாங்கள் அவர்களின் அடிமையாகும் நிலை வேண்டி எதிர்நோக்கி நிற்கிறார்கள்.

"மேலும் உயிர் பற்றி நிலை நிற்க உடமெத்த வை விளங்கும்
உடல் பற்றி உயிர்நிற்கும் விதமெப்படி நடக்கும்
உணவற்ற மனதிற்கு எது சத்தியம் எது நித்தியம் அறியேனே"

என்று இங்கு எம் மக்களுக்கு நிகழும் ஜீவப்பிரயாணத்தை பற்றியும் ஆச்சரியமுடன் பாடுகிறார்.

உடல்பற்றி உயிர் நிற்கும். அதாவது உயிர் போகும் தருவாயில் ஜீவன் உள்ளடங்கி விடுவதையும் அதில் உடல்பற்றி உயிர் நிற்கிறது என்பதையும் கூறி எமது தவச் செயலை தோத்தரித்து பாடி நிற்பதை பாருங்கள்.

பாத்தி கட்டி, எருப் போட்டு வேலியெல்லாம் போட்டு பாதுகாப்பு அமைத்து மண்ணைப் பண்படுத்தியாயிற்று. ஆனால் செடி முளைக்கவில்லை. என்னடா என்று பார்த்தால் விதை மட்டும் போடவில்லை. அதுபோல ஆசாரம், அனுஷ்டானம் வேதம், விரதம், தவம், நோன்பு, சீலம், ஒழுக்கம், ஈகையெல்லாம் இருக்கிறது. ஆனால் மெய்யான செயலுடைய குருபிரான் இல்லை. பலன் எப்படி கிடைக்கும்?

தூலமாகிய உன் வீட்டிற்கு உத்திரம் எது! மெய்க்குருபிரான் திருவாக்குதான். அவர்கள் திருவாய் திறந்நருளும் அவர்கள் திருவாயுரையே உள் + திறம்.

உடலழியா சூட்சமம் என்பதும் இதுதான். காய கற்பத்தை முனிவர், தேவர் உண்டு கொண்டே யிருந்நார்கள் என்பது இது தான். ஒருகுகைக்குள் உண்ணுவதும் உண்டு விட்டு போவதுமாக இருப்பார்கள் என்று மாமறைகள் இதனை குறிக்கின்றன.

இந்ந பூமியில் இரவில் ஒவ்வொரு நாளும் ஆண்டு முழுதும் 360 நாளும் 12 மாதமும் பனிமழையை இறைவன் வருஷித்து கொண்டே இருக்கிறான். கார் காலத்தில் மழை இந்ந பனியை குறைத்து விடுகிறது. மழை பெய்தால் எல்லாருக்கும் தெரியும். ஆனால் இந்ந பனி பெய்வது யாருக்கும்தெரியாது. இரவில் வெட்ட வெளியில் வேட்டியை போர்த்திக்கொண்டு படுத்தால் காலையில் வேட்டி கனமாக இருக்கும். ஏன் தெரியுமா? பனி பெய்து கனம் ஏறி உள்ளதால்தான். ஆனால் பெய்தது தெரியுமா? தெரியாது.

கடல் சூடாகி வெப்பக்காற்று மேலே போகப் போக அங்கே குளிர்காற்று பட்டு மழையாக உருவாகி மழை பெய்கிறது. ஆனால் பனிமழை ஆகாயத்தில் இருந்நே பொழிகிறது. பூமியினுடைய

சம்பந்தமே இல்லாமல் இந்த பனிமழை பூமிக்கு பொழியப் பெறுகிறது.

தேவ சற்குரு பிரானின் அருள் வருஷிப்பு இதற்கு உவமையாக கூறலாம். அவர்களும் ஆகாயத்திலிருந்து தானே வருஷிக்கிறார்கள். அவர்கள் வருஷிப்பு பூமியில் பனி விழுவது போல் தம்மக்களின் சித்தத்தில் விழுந்து மெய்ஞ்ஞான பயிரை வளர்க்கிறது.

✧✧✧✧✧✧

இவ்வொரு ஜாதியின் பெயரிலும் ஒரு உன்னதம் இருக்கிறது. சில ஜாதிகளின் மேன்மையை குறித்து சொல்கிறோம் கேளுங்கள்.

''**முதலியார்**'' என்றால் மனிதனின் முதல். உயிர். அதை
எமனிடத்தில் ஈயாதவர்களுக்கு முதலியார் என்ற பட்டம்.

''**கைக்கோளர்**'' என்றால் குருவின் உத்தரவுகளைக் கைக்கொண்டு
நடக்கிறவர்களுக்கு கைகோளர் என்ற பட்டம்.
அது காலப் போக்கில் கக்கிளியர் என்றும் ஆனது.

''**பிள்ளை**'' என்றால் ஒரு மெய்ஞ்ஞானியின் முன் நின்று தன்னைப்
பிள்ளையாக அதாவது சீடனாக ஏற்றுக்கொள்ள வேண்டி
அவர்களும் இவனை சீடனாக பிள்ளையாக ஏற்றுக்கொண்டு
அதன்படியே ஒழுகிவரும் போது அந்த உத்தம
மாணக்கனுக்குப் பிள்ளை என்ற பட்டம் வந்தது.

''**அய்யங்ஙார்**'' என்றால் அய்யனாகிய மெய்க்குருவினிடம் காத்துக்
கொண்டு அவர் சொற்படி ஆசிரமவாசியாக இருப்பவருக்கு
அய்யங்ஙார் என்பதாகும்.

''**சக்கிலி**'' என்றால் சக்கு = குற்றம். இலி = அற்றவர்.
குற்றமற்ற குருவுக்குப் பெயர் சக்கிலி என்பதாகும்.

''ஶ்ரவன்'' என்ருல் குருவினிடம் உபதேசம் பெற்றவர்கள் என்பதாகும்.

கார் காலத்தில் பாடுபட்ட அளவு, பூமி விளையும். கார் காலத்தில் வெள்ளாமையை காத்துக் கொண்டு இருந்ததனுல் தான் ''கார் காத்த வெள்ளாளன்'' என்ற பெயர் வந்தது.

சமணர் = சாவை மணமுடைய சாவாக ஆக்கிக்கொண்டவர்

என்று ஒருனுள் விளக்கம் தந்நார்கள்.

✦✦✦✦✦✦✦

இரு சன்னதியில் ஆண்டவர்கள் திருமுன்பாக ஒரு அனந்நர் ஒரு கதை சொன்ஞர்:

சிவன் கோவிலில் வேலை செய்கிற ஒருவர் வைணவக் கோயில் வேலைக்குப் போஞர். அங்கே அவர் போகுமுன் அங்குள்ள னடைமுறையை பற்றி அவருக்கு அனுபவஸ்தர் ஒருவர் பல யோசனைகளை சொல்லி அனுப்பிஞர். முக்கியமாக எது பேசினுலும் அதற்கு முன்ஞல் ஒரு 'திரு' 'திரு' என்று சொல்ல வேண்டுமென்று இவரிடம் சொல்லி அனுப்புகிருர்.

இவரும் அந்நக் கோயிலில் ஞமம் போட்டுக் கொண்டு வேலைக்கு அமர்கிருர். அங்கே ஒரு ஞள் மடைப்பள்ளியில் ஞய் ஒன்று னுழைந்நது. அதைத் தொண்டர்கள் தாக்கி விரட்டி அடித்து விட்டனர்.

இந்நச் செய்தியை புதிதாக சிவன் கோவிலுக்கு வந்து வேலைக்குச் சேர்ந்நுள்ள இவர் மாலையில் வைணவ குருமடத்திற்கு

வந்த போது இப்படியாகச் சொல்கிறார்:

மடைப்பள்ளியில் = திருமடைப் பள்ளியில்
நாய் ஒன்று நுழைந்தது = திருநாய் ஒன்று நுழைந்தது
அதை அடியார்கள் = அதை திரு அடியார்கள்
தடிக்கொண்டு = திருத்தடிக் கொண்டு
தாக்கு தாக்கினார்கள் = திருத்தாக்கு தாக்கினார்கள்.

''திருத்தடிக் கொண்டு திருத்தாக்குத் தாக்கினார்கள்'' என்பது வரை அந்த அன்பர் சொல்லிவந்தார். அப்போது தெய்வம் இடையில் தொடர்ந்து ''அந்த திருநாய்' ''திருலொள் திருலொள்'' என்று திரு ஓட்டம் பிடித்தது'' என்று சொல்லி முடித்தார்கள். பலத்த சிரிப்பொலி சபையில் கேட்டது.

✧✧✧✧✧✧

பெருமாளை கோவிலில் இரவு திருப்பள்ளியில் வைத்துவிட்டு ''நாய்ந்தேன் நாய்ந்தேன்'' என்று சொல்லி வணங்குவார்களாம். அதை சன்னதியில் சொன்னபோது தெய்வமவர்கள் ''குருவினிடம் பணிவிடை செய்து விட்டு வணங்கும் போது கருணையோடு குரு சீடர்களைப் பார்ப்பார்கள். அப்போது சீடர்கள் குருவின் அருளால் ''நான் உய்ந்தேன் நான் உய்ந்தேன்'' என்று வணங்குவதே இப்படியாக மருவியது'' என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

✧✧✧✧✧✧

சோம்பேறித் தனம் என்றால் சோம்பல் – சோம்பல் ஏறி – அது தனமாக உனக்கு ஆகிவிடுவது.

உலகத்தில் உள்ள தனங்களெல்லாம் இது போன்றுதான். சோம் பேறித்தனம். முட்டாள் தனம், அசட்டு தனம், மடத் தனம், குருட்டுத் தனம், இப்படியாக பல வேண்டாத தனங்களை இவன் சம்பாதித்து இவன்

தனக்கே கேடு உண்டாக்கிக் கொண்டான். இது தான் இவன் சம்பாதித்த தனம். நாம் வந்து தான் இவன் தலையில் மதித் தனம் வைத்து, அதனால் சிவ தனம் பெறும்படி செய்து வைத்தோம்.

✧✧✧✧✧✧✧

ஒரு சமயம் தமிழக அமைச்சர் ஒருவர் சாலையம்பதிக்கு வந்திருந்நார்கள். அவருக்காக ஆண்டவர்களின் அருள் வருஷிப்பு நிகழ்ந்து கொண்டிருந்நது. அமைச்சருடன் பேசிக்கொண்டிருக்கும் போதே ஒரு தாளை எடுத்து ஏதோ எழுதினார்கள். அதன் பின்பு அதை சபையில் படிக்கச் செய்தார்கள். அப்பொழுது எழுதிய பாடல் தான் ஆதி மெய் உதய பூரண வேதாந்நத்தில் ''தனித் திருப்பாடல்கள்'' என்ற தலைப்பில் உள்ள 'தருக்கினம் புள்ளூர் காலி' என்ற பாடலாகும்.

தருக்கினம் புள்ளூர் காலி ஜலம் வாழ் ஜெந்தும்
தான் பிறந்த வதன்கடமை முடித்து நிற்க
அரியபிறப் பானமனு நனென் றேதும்
அவ்வருமை நோக்கியுன்றன் கடமை யென்ன
விரித்துரை செய் யெனக் கேட்டால் விழிக்கு மந்த
வெறிகொண்ட வீணறிவுப் படிப்பே நோக்கில்
னெறியறியார் உயிருடனிங் நலைகை யல்லால்
நிலைத்திலது வேறில்லை சட்டம் தீர்ப்பே.

✧✧✧✧✧✧✧

மந்திர மாவது நீறு தந்திரமாவது நீறு
வானவர் மேலது நீறு சமயத்திலுள்ளது நீறு
சுந்திரமாவது நீறு செந்துயர் வாய் பங்கன்
துதிக்கப்படுவது நீறு ஆலவாயன் திரு நீறு

என்று படித்திருப்பீர்களே. இது ஞானப்பால் அருந்திய திருஞான

சம்பந்த பெருமானார் அவர்களின் அருள்வாக்கு. தனக்கு ஞானப்பாலூட்டிய தெய்வத் திருமேனி நேரில் அமர்ந்திருக்க அவர்கள் முன்பு இவர்கள் மண்டியிட்டு கண் கலங்க அந்த சைவத் திருமேனியை நோக்கி கை நீட்டி....

மந்திரமாவது நீறு (நீங்களே)

வானவர்க்கெல்லாம் மேலவர் நீரு (நீங்களே)

தந்திரமெல்லாம் கற்றுத் தந்தவர் நீறு (நீங்களே)

ஆலவாயனாக நின்று உபதேசித்த ருனியவரும்நீறு (நீங்களே)

என்று குருவின் திரு ஆலவாயை புகழ்ந்து பாடிய பாடல் அது. அக்கருத்தினை உணராது நீறு என்றால் சாம்பல் – விபூதி – என்று திசை திருப்பி விட்டு விட்டார்கள். இவனும் அதை நம்பி விட்டான். மந்திரமும், தந்திரமும் சாம்பலையா குறிக்கும்? ஆலவாய் அய்யனுக்கே அந்த வல்லமையும் திறமையும் உண்டு. இதனை இதுவரையில் யாரும் வெளியாக்கினதில்லை. உனக்காக நாம் வெளியிட்டிருக்கிறோம்.

இப்படியே அர்த்தத்தை அனர்த்தமாக்கி அதையே நம்ப வைத்த பொய்ப்பாசாண்டியர்களை போய் ''குருக்கள்'' என்று உலகம் நம்புகிறது.

இந்த பொய் சாமியார்கள் வேத வழி பாட்டிற்கு ''குறுக்குக்கல்லாக'' இருந்து மக்களை திசை திருப்பிவிட்டு வருகிறார்கள்.

✧✧✧✧✧✧

மிகவும் தரித்திர திசையில் திணறிக் கொண்டிருந்தான் ஒருவன். பிரபல ஜோசியர் ஒருவர் அவனது ஜாதகத்தை நன்றாக அலசிப்பார்த்து ''இன்னும் 25 வருஷங்களுக்கு உனக்கு தரித்திரிய திசைதான். மிகவும் கஷ்டம்'' என்றார். ஜாதகர் அதற்கு பின்னர் தனக்கு நல்ல

காலம் காத்திருக்கிறது என்று மகிழ்ந்து போய் ''அதற்குப் பின்பு எப்படி?'' என்று மிகுந்த ஆவலாகக் கேட்டார். ஜோசியர் நிதானமாக ''அதற்குப்பின் பழகிப் போகும். அவ்வளவாகக் கஷ்டம் தெரியாது'' என்றார்.

அதேபோல் நீயும் நகல் வாழ்க்கையில் பழகி தோய்ந்து விட்டாய். அந்த நகலே உனக்கு சாஸ்வதமாகி விட்டது.

ஒரு கல்லில் வடித்த தெய்வத்தை வைத்து மந்திரம் சொல்லுகிறோம். கடையில் வாங்கிய நகலான பூணூலை அணிகிறோம். இவைகளா உமக்கு முத்தி தரும்? முத்திதரும் என்று எந்த ஆகமத்திலும் கூறப்பெறவில்லையே. ஆனால் ஏன் இந்தப் பழக்கத்தை எடுத்து வைத்தார்கள்? இப்படி எடுத்து வைக்கவில்லையென்றால் தெய்வம் என்ற எண்ணமே இல்லாமல் இவன் அடியோடே கீழே போய் விடுவான் என்ற இரக்கமே. அசல் பூணூலுக்கு வேதத்தில் சொல்லியுள்ள கண்ணியமும் லட்சணங்களும் இருக்கிறது. ஆனால் இந்த நகலுக்கு அவை இருக்குமா? இருக்காது. கடையில் வாங்கின பூணூல் அழுக்காவதினால் அடிக்கடி மாற்றிக் கொள்ளுகிறோம். ஆனால் நிஜப் பூணூலோ கரத்தினால் தீண்டப்படாத ஜோதிமயமானது.

✧✧✧✧✧✧✧

டாக்டர் மெய்வழி பானுவு அனந்தரின் தகப்பனார் மெய்வழி சண்டிகேஸ்வர அனந்தர் ஜீவப்பிரயாணத்திற்குச் சற்று நேரம் முன்பு அருகில் இருந்தவர்களைப் பார்த்து''எனக்கு படுக்கை விரியுங்கள்'' என்று சொல்லியிருக்கிறார். இந்த விபரத்தை பிறவியர்கள் நமது குரு கொண்டலவர்களிடம் தெரிவித்தபோது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்:

''ஜீவப்பிரயாணம் ஆனவர்களை னல்லடக்கம் செய்யும்போது 'படுக்கை விரியுங்கள்' என்று ஏன் நாம் சொல்லுகிறோம்?

''அடக்கம் செய்ய ஏற்பாடு செய்யும்போது இவ்வளவு ஆழம் குழி வெட்டுங்கள். அடக்கத் தொட்டி செய்யுங்கள் என்று தானே சொல்ல வேண்டும். ஆனால் நாம், ''படுக்கை விரியுங்கள்'' என்றல்லவா சொல்லுகிறோம். அது ஏன்?

மனு முளை துவங்கிய காலத்திலிருந்து வந்த வந்த மெய்மைப் பாரவான்கள் எமனுக்கு தங்கள் தேகத்தை ஒப்புக்கொடுக்காமல் ஆதிமுல வள நாடாகிய மெய்வித்து வள நாட்டில் குடியேறிக் கொண்டார்கள்.

மீண்டும் மானிடச்சட்டை தாங்கி வந்த காலத்தில் முன் னினைவுகள் ஏதும் இல்லாமல் இருந்நாலும் பரிசுத்த ஆவியர்களாதலால் முழு ஆர்வமுனைப்புடன் கடும் தவம் புரிந்து மேலாம் பதனிலைக்கு ஏறுவார்கள். னிதி எனும் பொருளான னித்தியனும் னித்தியத்திற்கே படைத்து வந்து வித்தாகிய இறைவன் தாங்களே தோற்ற உதயமாகி வந்த காலத்தில் தங்களுடைய வாடாத தவ வல்லமையால் தம்மையடைந்த மக்களைப் பிறவா இறவா னிலையாகிய னித்தியத்துடன் இனி மறவாப் பெரும்பேற்றையும் பெற வைக்கிறார்கள். அதைப் பொன்னரங்க கும்மியில்

''பிறவா இறவாயி னிமற வாததும்
பேறுபெற் றபணக் காரரடி''.....

எனக் கொம்மி கொட்டப் பெறுகிறது.

இதைத்தான் தீர்க்க தரிசனமாக திருவள்ளுவ நாயனார்.

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" — என்கிறார்கள்.

அது இப்போது இங்கே நடைபெறுகிறதே! இது இந்த தவாதிக்கச் செயலைக்குறித்த தீர்க்கதரிசனமே! எப்படித் தூங்கி விழிப்பவனுக்கு விழித்தவுடன் எல்லாம் நினைவுக்கு வருகிறதோ அதுபோலே எம் மக்களாகிய உங்களுக்கும் எழுப்பப் பெறுகிற நாளில் யாவும் துலக்கமாக நினைவுக்கு வரும். ஆகையால் உறங்கப் போகிறவர்களுக்கு "படுக்கை விரியுங்கள்" என்றே பொருத்தமாய்க் கூறலாம்" என்று இளநகை பிறங்க திருவாய் மலர்ந்தருளினார்கள்.

❖❖❖❖❖❖❖

உன் சகோதரன் உன் மீது சினம் கொண்டு உன்னை தூஷித்தால் அதற்குப்பதில் நீ சினம் கொள்ளாமல் அதைப் பொறுத்துக் கொண்டால், அவன் சிந்திய தவத்தைப் பெறலாம். நீ சினம் கொள்ளாததினால் பெற்ற தவம் மற்றொரு லாபம். தூஷணையைத் தாங்கிக் கொண்டதனால் கிடைத்தது இன்னொரு தவ லாபம். **ஆக மூன்று தவ லாபங்கள்** நீ பெறுகிறாய். உன் மீது சினம் கொண்ட அந்தச் சகோதரன், சினங்கொண்டதனால் இழந்தது ஒரு தவ நஷ்டம். தெய்வ அங்கத்தினரைச் சினந்ததனால் சிந்திய தவம் இன்னொரு நஷ்டம். ஆக இரு நஷ்டத்தை அடைகிறான்.

அனந்நாதி தேவர்களாகிய நீங்கள் அனைவரும் எம் பாதார விந்தமே. எம் அங்கக் குலங்களாக உள்ள உங்களை கோப முற்றுத் தூஷிக்கிறவன் எம்மையே வெறுத்துத் தூஷிக்கிறவனே. அவனுக்கு என்ன கிட்டும்? கோபமும் வெறுப்பும் தூஷணையும் கொண்டவற்றால் எம்மை விட்டு அந்நியனாகி விடுகிறான். எம்பாதார விந்தமான — எம்

அங்கமான இவன் எம்மிடம் ஒட்டாமல் எம் அங்கங்களை வெறுத்துத் தூஷிக்கிற குற்றம் என்னவாகும்?

எம் துகில், எம் சவுக்கம், எம் ஆசனம், எம் பாதுகை பட்டு எழுந்த மணல் சுவடு இதையெல்லாம் வணங்குகிறாயே – அது பற்றி சற்று சிந்தித்துப்பார்.

ஜடப்பொருளாகிய இவை ஒவ்வொன்றின் மீதும் நீ வைக்கும் மதிப்பும், கௌரவத்தையும்விட உயர் பொருளான – ஜீவப்பொருளான உன் ஜீவப்பிறவியர்கள் மீது வைக்க வேண்டாமா?

ஜீவப்பிறவியரை வெறுத்து விரோதித்துக்கொண்ட தீங்கினை செய்து விட்டு வந்து என்னிடம் தெரியாமல் செய்தேன் என்றால் என்றால் என்ன செய்ய முடியும்? தெரியாமல் கொஞ்சம் நஞ்சு சாப்பிட்டால் என்ன ஆகும்? தெரியாமல் கழுத்தில் சுருக்கு போட்டுக் கொண்டால் என்ன ஆவான்? எல்லா ஜீவப்பிறவியர்களும் உன் தெய்வ அங்கங்களே. ஒரு ஜீவப்பிறவியர் காலில் முள் தைத்தால் மற்ற ஜீவப்பிறவியர்கள் கையில் முள் குத்தியதைப் போல் உணர்வு கொண்டு அதை நீக்க வேண்டும் . நாம் சொல்வதை நமக்கென்ன என்று நினைப்போர் எம் அங்கமல்ல. விலகிவிட்ட அன்னியர்களே ஆவர்.

இது நித்திய வாழ்வுக்குரிய தெய்வ குடும்பம். எம்மேனியில் ஒட்டிய வஸ்த்திரம் கீழே விழுந்து கிடந்தால் பக்தியுடன் எடுத்துச் சுத்திகரித்து மடித்துக் கண்களில் ஒத்திக் கொண்டு வணக்க மரியாதை செய்கிறாயே. எம்மிடம் ஒட்டி இருந்த துணி அது என்று நினைத்து தானே இந்த ஜடப் பொருளுக்கு கௌரவமும் விஸ்வாசமும் காட்டுகிறாய்? அப்படியிருக்க எம் உயிர் அங்கங்களாகிய உன் ஜீவப்

பிறவியர்களிடம் இதைப் போல் எத்தனை மடங்கு கௌரவமும் விசுவாசமும் காட்ட வேண்டும்? ஒருவர் மீது வெறுப்போ, சினமோ காட்டினால் எம்மிடம் காட்டுவதே ஆகும். அதுவே நரகத்திற்கு இழுத்துச் சென்றுவிடும்.

அவர்கள் மீது வைக்கும் அன்பு எம் பிரீதியைத் தரும். அதுவே சுவர்க்கம் தரும். எம் எண்ணத்திற்கு நேராக நீ இருக்க வேண்டும். நீ சத்திய ஒட்டுதலோடு நடந்து கொண்டால் தான் நான் உன்னை வான்வித்தாக ஆக்குவோம்.

சத்தியக் கோட்டில் நீ சிறிது தவறினாலும் பிரளயத்தில் நீ அகப்பட வேண்டியது தான். எந்த நேரமும் எம்முடைய எண்ணத்திற்கு நேராக நீ நிற்க வேண்டும். தன்னறிவில் சாயவே கூடாது. மெய்யன்புடன் உயிர்ப்பிடியாக இருக்க வேண்டும். இதில் ஏதாவது சிறு விஷயத்தில் அற்ப விஷயத்தில் தவறினாலும் வான்வித்தாக உன்னை கரை ஏற்ற முடியாது. ஆகவே நீ எம்மவனாக எப்பவும் நடந்து வர வேண்டும். இது ஒன்றும் கடினமல்ல. எம் சொற்படி நீ கேட்டு நடந்நாலே அதுவே உன்னை அந்தச் சத்தியப் பாதையில் ஒட்டிவிடும்.

இவ்வளவு பெரிய கூட்டம் இருக்கும் போது நாம் செய்யும் சிறு தவறு தெய்வத்திற்கு எப்படி தெரியும் என்று நினைத்தாயானால் எம்மைவிட்டுப் போக வேண்டியது தான். அப்புறம் எமன் தான் கதி. நாம் எழுதியதை பேசியதை எண்ணிப்பார்த்து அனுபவித்துக் கொண்டே என்னேரமும் இருந்நால் அதுவே போதும். வேறு ஒருபாடும் பட வேண்டாம். உன்னை அதுவே மெய்நிலைக்கேற்றும்.

மெய்வழி ராஜாங்கம் இன்னும் சிறுது நாளில் வரப்போகிறது. அதை இப்பொழுதே சொல்லலாமா! என்று நினைக்கிறேன். (15-1-43).

சீடையில் புதிதாக வந்த ஒருவர் ஆண்டவர்களிடம் தம்மை ஒரு பகுத்தறிவாளன் என்று அறிமுகப்படுத்திக்கொண்டார். அதற்கு ஆண்டவர்கள்:

''பகுத்தறிவாளர்கள் என்றால் எனக்கு அதிகம் பிடிக்கும். நாம் பேசுவதை நன்றாகப் பகுத்து அறிந்து புரிந்து கொள்வார்கள். அவர்களது மனம் கரடு கட்டி இருக்காது. மனம் திறந்தே இருக்கும்.

சரி. நீங்கள் பகுத்தறிவாளர் என்பதை நாம் ஒத்துக்கொள்கிறோம். ஆனால் பகுத்தறிவு என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது?'' என்று கேட்டார்கள்.

(வந்தவர் பதில் சொல்லத் தயங்கவே) அது உன்னிடத்தில் தான் இருக்கிறது. மனிதன் ஒருவனுக்குத்தான் இறைவன் பகுத்தறிவை படைத்திருக்கிறான். மற்றைய ஜீவராசிகளுக்கு பகுத்தறிவு கிடையாது. இதனை ஆறுவது அறிவு என்றும் ஞானிகள் சொல்லுவார்கள். இது மரம், பட்சி மற்றும் மிருக ஜாதிகளுக்குக் கிடையாது.

ஒரு ஆட்டை வெட்டப் போகும் தருணத்தில் அந்த கத்தி முனையில் புல்லைச் சுற்றி இதுதான் உன்னை வெட்ட உதவும் கத்தி என்று அதன் முன் நீட்டினாலும் அது அந்தபுல்லை விரும்பித்தின்னும். ஆனால் நீ அப்படி செய்வாயா? விஷயம் தெரிந்து ஒரு அபாயம் வந்துவிட்டது என்று அறிந்து ஓட்டம் பிடிப்பாய். ஏன்? உன்னிடத்தில் நன்மை, தீமை இரண்டையும் பிரித்தறியும் சக்தியாகிய அறிவு இருக்கிறது. ஆனால் அது இருக்கும் இடம் மட்டும் தெரியாது. இவன் அறிவு என்று நினைத்திருப்பது அறிவு அல்ல. அது மனம். அதனால் தான் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பேசுகிறேன் என்கிறான்.

(9-8-1972)

ஞம் சொல்லுகிறோம் மனம் என்பது ஒரு சைத்தான். அதனை எப்படி பழக்கி விடுகிறோமோ அதனை யொட்டியே அது சாட்சி சொல்லும்.

மனம் போனபடி னடக்கிறவன் பேய். இவனைத் தடுத்து ஆண்டு இந்த பேயோடு ஆடும் பெருமான் இந்த சிவபெருமான்.

மனது தான் எல்லாவற்றுக்கும் காரணம் என்று கூறலாம். இவனுக்கு மட்டுமே அலாதியாக அறிவுத் தூலம் கொடுக்கப் பட்டதால்தான், தீர்ப்பு தண்டனை யெல்லாம் இவனுக்கு உண்டு. அறிவு இல்லாத மாடு முதலிய மற்ற ஜீவராசிகளுக்குத் தீர்ப்பு, தண்டனை இல்லை. இவனது மனப்பேய் னேசிக்க வேண்டியதை விரோதிக்கிறது. விரோதிக்க வேண்டியதை னேசிக்கிறது. இறைவன் இவனுக்குப் பகைவனா ?இல்லையே. பின் இவனாகவே அல்லவா அறிவின் வழி சாயாமல், அழிவைத் தேடிக் கொள்கிறான்.

இவன் மன வீட்டில் பேய் குடியிருப்பதால், அறிவு அங்கு அடிமையாக இருக்கிறது. மெய்ஞ்ஞானிகளுக்கோ அவர்களின் அறிவு விளைந்து முதிர்வேறி, னாத ஒலியாக மாறிவிடுகிறது. எல்லையில்லாத மாசற்ற பிரம்மமாக ஆகிவிடுகிறார்கள். அவர்களுக்கு எதுவும் னிகரில்லாததால் உலகம் ஒரு தூசியாகத் தெரிகிறது. அவர்களுக்கு மனம் என்பது கிடையாது. அறிவு சொரூபம் அவர்கள். னினைவு பிரம்மமாக மாறி, னாத அறிவிப்பு ஆவதைத் தான் வஹி என்றும், அசரீரி வாக்கு என்றும் கடவுள் என்றும் சொல்கிறார்கள். இப்பேர்க்கொத்த அறிவு சொரூபராகிய ஆசானிடம் ஒருவன் தஞ்சம் புகுவானேயாகில், அவர்களின் வல்லமையால் இவனுக்கும் எமனுணுகா சாவாவரம் பரிசாக அளிக்க பெறுகிறது. அந்த அசரீரி னாத ஒலியைக்கேட்டு, அதை

உனக்கு ஏற்றவாறு சீர்படுத்தி, உன் ஜீவப்பயிர் செழிக்க நும் ஓயாது அருள்மாரி வருஷித்துக் கொண்டிருக்கிறோம்.

✧✧✧✧✧✧✧

ஆண்டவர்கள்: 'சுண்டெலி' என்று ஏன் பெயர் வந்தது தெரியுமா? தெரிந்தால் சொல்லுங்கள்! என்று ஒரு சமயம் வினவினார்கள். அப்போது ஒருவர் 'அது சின்னதானது அதனால்தான்....'' என்று இழுத்தார்.

அப்போது தெய்வம் அவர்கள் ''அப்ப பெருச்சாளி என்பது போல் சின்ன எலி என்று சொல்லலாமே. ஏன் சுண்டெலி என்று சொல்லுகிறோம். எல்லோரும் ஒத்துக்கொள்ளும்படி பதில் சொல்ல வேண்டும்'' என்று கூறினார்கள்.

அனந்நாதி தேவர்கள்: ''தெரியவில்லை தெய்வமே'' என்றனர்.

ஆண்டவர்கள்: ''சுண்டு என்றால் என்ன அர்த்தம்? சுண்டுவது தானே. எதனால் சுண்டுவாய்? கையால். எங்கே சுண்டு பார்க்கலாம்!

''எந்த விரலால் சுண்டுகிறாய்? சுண்டு விரலிலா? இல்லை. பெருவிரலால். அப்ப சுண்டுவது பெருவிரலில் தானே? சுண்டும் பெருவிரல் அளவு அது உள்ளதால் சுண்டெலி. அது பிறக்கும் போது பெருவிரலின் ''மேல் கணு'' அளவுதான் இருக்கும். வளர்ந்த பின் அதன் அளவு பெருவிரல் அளவுதான். மற்ற எந்த எலியும் சுண்டெலி போல் சின்னதாக இருக்காது. இதனுடைய சுறு சுறுப்பும் மற்றவைக்கு வராது. விநாயகருடைய வாகனம் மூஞ்சூறு அல்லது சுண்டெலி என்று கேள்விப்பட்டிப்பீர்கள் அல்லவா?

✧✧✧✧✧✧✧

நீ சேர்ந்திருப்பது ஒரு மெய்ஞ்ஞான சபையில். இங்கு நடப்பதோ கூடு விட்டுக் கூடு பாயும் பிரம்ம வித்தையாகும். சினிமா போன்றவை எல்லாம் பார்த்து, உன் நினைவில் வேண்டாதவற்றை யெல்லாம் ஏற்றி வைத்திருந்தால் அங்கு நான் குடியேற முடியாது. அது உன்னைப் பாழாக்கிவிடும். உன் வீடு சுத்தமாக இருந்தால் தான் அங்கு குடியேற முடியும். இதை உன் நினைவில் ஆணியாக ஊணிக்கொள்.

⟡⟡⟡⟡⟡⟡⟡

தெய்வமவர்கள் காலையில் பூணூல் அணிய உத்தரவு கேட்க வந்த ஒரு பிறவியரைப் பார்த்து தெய்மவர்கள் ''இடுப்புக்குக் கீழ் காஷாயம் அணிகிறயே மிகவும் சுத்தமாக இருக்கவேண்டும். இந்தக் காஷாயத்தை ஞானிகள்தான் அணிவதற்கு அருகதை உடையவர்கள்.

ஆனால் சில பொய்ப்பாசாண்டியர்கள் இந்த வேஷத்தை அணிந்து மக்களை ஏமாற்றுகிறார்கள் என்று தான் வடலூர் வள்ளற் பிரான் அந்தக் காலத்தில் ''சன்மார்க்கத்தைப் பின் பற்றுபவர்கள் எல்லாம் வெள்ளை வேட்டி அணிய வேண்டும்'' என்று எடுத்து வைத்தார்கள். ஞானம் அறியாதவன் எல்லாம் காஷாயம் கட்டுவதை நிறுத்த வேண்டும் என்றுதான் அப்படிச் செய்தார்கள். அதனால் நாம் இப்போது எப்படிப்பட்டவர்கள் காஷாயம் அணிய வேண்டும் என்பதை எம் நூலில் குறித்திருக்கிறோம்.''

''விண்டு விண்டு அந்தரத்தோடுருவிப் பாயும்

விளங்கும் காரணத்தேகம் காவியேறும்

கண்ட குக்குமுமந் நாண்டித் தூலைந்தன்னில்

காஷாயம் அணிவதற்கிங் கருகராகும்''

என்று பாடி வைத்துள்ளோம்.

ஆனால் காஷாயத்தை உங்களுக்குகெல்லாம் அணிவித்திருக்கிறோமே! ராஜா வீட்டுப்பிள்ளைக்கு ராஜ மரியாதை நடப்பதைப்போல இது. அதனால் தான் ''சொற்சக்தி மனுமகன் சொந்த மகவுக்கெல்லாம் பொற்கச்சு மார்பினில் பூட்டித் தொங்குமென்று'' என்று தீர்க்க தரிசனம் கூறுவதையும் எடுத்துக் காட்டியுள்ளோம் .

✧✧✧✧✧✧✧

ஒரு அரசனுடைய குமாரன் மற்ற குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருந்தான். குமாரன் வசிக்க அரசன் ஒரு பளிங்கு மாளிகையை கட்டிக் கொடுத்தான். மற்ற குழந்தைகள் அவரவர் வீட்டிலே பன்றிகளை கட்டி வைத்திருந்தார்கள். அதே போன்று இந்த அரசு குமாரனும் அப்பளிங்கு மாளிகையில் ஒரு பன்றியை கொண்டுவந்து கட்டி வைத்துவிட்டு மற்ற குழந்தைகளுடன் வெளியே வந்து விளையாடிக் கொண்டிருந்தான்.

அதுபோல எம் தவப் புதல்வர்களாகிய நீங்களும் நாம் உங்களுக்காக அமைத்து தந்திருக்கும் ஜீவ மாளிகையின் உன்னதத்தை விட்டு வெளியேவந்து உங்கள் ஆர்வம் ஆசை இச்சை எல்லாவற்றையும் வெளியிலுள்ள அழி பொருள்களின் மீதே அதிகமாக செலுத்துகிறீர்கள்.

உன் முயற்சி அவ்வளவையும் அழிவுக்கும், ஆசைக்கும் செலவு செய்கிறாயே வரப் போகின்ற அவஸ்த்தை நெடுங்கால அழிவில்லாத

னித்திய அவஸ்த்தை என்கிற அச்சமும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள நும் சொல்லித் தருகின்ற எச்சரிக்கைகளையும் உளவுகளையும் பின்பற்றுவதில் ஆத்திரமே காணோமே. வரப்போகின்ற ஆபத்து முன்பின் இல்லாதது. இதுவரை யாரும் கண்டதுமில்லை. இதற்கு பின்னும் யாரும் காணப்போவதுமில்லை. அதனால் தான் அந்த ஆபத்தின் னீளமும் கனமும் எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் உனக்கு படமாட்டேன் என்கிறது.

சைவம் என்றால் ''பசு – பதி – பாசம்' பசுவாகிய உயிர் பதியாகிய குருவை அடைவதால் பாசமாகிய மலத்தை னீக்குகிறது.

மாணிக்க வாசகப் பெருமான் வாக்கு:- ஆசான் பால் அன்பு செலுத்த விடாமல் தடுப்பது எல்லாம் பாசம் – மனைவி மக்கள் மீது னீ செலுத்துவது அன்பு அல்ல. பாசவேர்.

அத்தன் சொன்னது சுயம்–பின்னோர் சொன்னது சாட்சி. பின்னோர் என்றால் இதுவரை வந்த அவதார புருஷர்கள் அவர்கள் வாக்கை னம்புவாயாக. ஆன்றோர் வாக்கை கூட னம்ப மாட்டாயா? அவர்களுக்கு பயில் பண்ண தெரியவில்லை. ஆனால் நும் பயில் பண்ணி சேர்த்திருக்கிறோம். பயிலை னம்பி வாழும் உலகம் இது. இது 21வது அவதாரம்.

சென்ற துவாபரயுகத்தில் சர்வேஸ்வரனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவதாரம் செய்திருந்தபோது அவர்கள் புரிந்த லீலைகள் அனேகம். பொய் சொன்னார். அதர்மயுத்தம் னடத்தினார் என்று னீ குற்றம் சாட்டுவாய். ஆனால் அவர் செய்தது அவ்வளவும் தர்மமே. அதர்மத்தை ஒழித்து தர்மத்தை னிலை னாட்டவே அவர் அத்தனையும் செய்தார்.

செட்டியார் ஒருவர் பூஜை ஒன்று செய்ய வேண்டும் என்று ஒரு சாஸ்திரிகளைப் போய் கேட்டார்.

சாதாரணமான பூஜை செய்யப் போகிறீர்களா? அல்லது மானசீகப் பூஜை செய்யப் போகிறீர்களா? என்று கேட்டார் சாஸ்திரிகள். சாதாரண பூஜை எப்படிச் செய்வது என்று செட்டியார் கேட்டார்.

சாஸ்திரிகள் சொன்னார்: ''வெற்றிலைப் பாக்கு, ஊதுபத்தி, கற்பூரம், சாம்பிராணி, ரெண்டு வாழைப்பழம் வைத்து பூஜை செய்யவேண்டும்'' என்றார்.

அப்போ மானஸிகப் பூஜை எப்படி செய்வது என்று செட்டியார் சாஸ்திரிகளைக் கேட்டார்.

''தங்க விளக்குகள் இரண்டு வைத்து நெய்விட்டு அவ்விளக்குகளை ஏற்றி வைத்து பிரம்மோற்சவத்திற்கு ஏற்பாடு செய்து ஆயிரம் இளநீர், ஆயிரம் வாழைப்பழம் மானஸிகமாக கொண்டு வந்து சமர்ப்பித்து பூஜை செய்ய வேண்டும்'' என்று சாஸ்திரிகள் சொன்னார்.

சாதாரண பூஜையைவிட மானசீகப் பூஜையே உகந்தது என்று செட்டியார் நினைத்தார். மானசீகமாக பூஜைக்கு வெளியே கடைகளிலிருந்து தங்க விளக்குகள், நெல், ஆயிரம், இளநீர், மற்றதெல்லாம் வாங்கி வந்தார். அவர் ஒரு வாழைப்பழ கடைக்காரர். அதனால் தன் கடை வாழப்பழத்தை வைக்க முடிவு செய்தார். அதனால் தன் கடையில் வேலை செய்பவனை தன் கடையிலிருந்து பூஜைக்கு வாழைப்பழம் கொண்டு வா என்றார். ஆனால் நல்ல பழம் எடுத்துக் கொண்டு வந்து விடாதே உள்ளே கிடங்கில் மேற்கு மூலையில் அழுகிய பழம் இருக்கும் அதில் ஆயிரம் எடுத்துவா என்றார்.

மானசீகமாக பூஜை செய்ய தன் சொந்த கடையில் இருந்து ஒரு செலவுமில்லாமல் எடுத்துவரும் போது கூட னல்ல வாழைப்பழமாக கொண்டு வரச் சொல்ல அவருக்கு மனம் இல்லே. செய்வதோ மானசீக பூஜை. அது போன்று இம்மெய்ச் செயலில் னீங்கள் னடந்து கொள்வதுகூட இந்த செட்டியாருடைய னடத்தையை போலத்தான் இருக்கிறது.

''மானசீகப் பூஜைக்கு அழுகிய வாழைப் பழமா?'' என்பது பழமொழி.

⟡⟡⟡⟡⟡⟡⟡

ஞுயகத்திற்கு பிறகு 400 வருஷங்கள் ஆன பின்னர் தான் சிலரால் தொழுகை எடுத்து வைக்கப் பெற்றது. அவ்வளவு காலம் பொறுத்து ஒரு ஞலு பேர் ஞலு விதமாக தொழுகை யை செய்ய சொன்ஞர்கள். அதைத்தான் இவன் கட்டிக் கொண்டு இப்போது தொழுகை என்று அழுகிருன். வேதம் ஞலு விதமாகவா இருக்கும்? திருக்குரான் வேதத்தில் தொழுகையைப் பற்றி ஒரு வார்த்தை கூட இல்லே.

⟡⟡⟡⟡⟡⟡⟡

'' ஞட்டார்கள் னகை செய்ய ஞம் மேலே வீடெய்த'' என்ற பாடல் வரி படிக்கப் பெற்றபோது ''கலியனுக்கு முன்ஞல் னடந்ததெல்லாம் தெரியும். ஆஞல் பின்ஞல் னடப்பது தெரியலியே!''

மகாவிஷ்ணு முதலானவர்களும் கலியனின் முகத்தில் விழித்தால் தங்களிடமிருக்கிற கொஞ்சும் தவமும் பறிபட்டு போய்விடும் என்று ஓடி விட்டார்கள். அவர்களும் கலியனின் முகத்தில் விழிக்கவே அஞ்ஞுகிருர்கள் என்ருல் கலியனின் முகத்தில் விழிப்பதோடு மட்டுமல்லாமல் அவனே மெய்ஞ் ஞானத்தில் ஏற்றி விடுவது என்று

துவஜம் கட்டிக்கொண்டு அதில் வெற்றியும் காணுகிறவர் யாராயிருக்கும்?

ஒருவன் விவசாயம் செய்யப் போகிறேன் என்று அவசரமாகப் போய்க்கொண்டிருந்தான். நீ உழுவதற்கு மாட்டிற்கு எங்கே போவாய் என்று அவனை விவசாயம் செய்ய தெரிந்த விவசாயி ஒருவர் கேட்டார். மாடு காட்டில் இருக்கிறது என்றான். ஏர் எங்கே என்று கேட்டார். மரமாக நிற்கிறது என்று சொன்னான். கொழுவு எங்கே என்று கேட்டால் இரும்பாக இருக்கிறது என்று சொன்னான்.

அதுபோல நீ கைலாயம் எங்கே இருக்கிறது என்று கேட்டால் இமயமலையில் இருக்கிறது என்று சொல்கிறாய், வைகுண்டம் எங்கே இருக்கிறது என்று கேட்டால் ஏழு கடல்களுக்கு அடியில் இருக்கிறது என்று சொல்கிறாய். உன் இருதயம் உள்ளே அவை ஒவ்வொன்றும் அங்கேயே இருட்டாக இருக்க நீ எங்கேயோ உள்ளது என்கிறாய்.

மனிதன் இறைவன் திருக்கோலமே. ரகசியத்தில் அவனது உருவே இவ்வுடம்பாலயம். அவனைத் தவிர இது வேறொன்றில்லை. நீ சுமக்க முடியாததையா இறைவன் சுமத்தினான்? பராக்காக இருந்தால் இறுதிநாள் கஷ்டமாக முடியும்.

அண்டம், அவனி அனைத்தும் அழிந்தாலும், இன்சான் அழியாது. அழியாத ஒரு வாழ்க்கை நடத்த ஒரு வைரமணித்தேகம் இருக்கிறது. அதற்கு ஹக்கீககத் மகம்மது என்று பெயர்

ஜீவன் அது. சிற்றம்பலப் பொருள்.

மற்ற எவ்வளவு பொருள் மேல் எவ்வளவு ஆசை வைத்திருந்தாலும் இதன் மேல் கொஞ்சும் ஆசை அதிகம் வைத்தால் போதும். உன் உடல் பொருள் (ஜீவன்) சிற்றம்பலப் பொருளாகி விடும்.

பஞ்சாக்ஷரம் என்ற பொருளின் பயனை அனுபவிக்கவே கோயில்களுக்கெல்லாம் போகிறார்கள். கோடி கோடியாய் செலவழிக்கிறார்கள். இது வரை அப்பஞ்சாக்ஷரத்தைப் பற்றி ஒன்றும் தெரிந்து கொள்ளவில்லை. அது பொய்யாகவே போனது. மிக்க பிரயாசை கொண்டும் அதையடைய முடியவில்லை. எதையும் அடைய முடியாத அவன் இதைப் பற்றிப் பேச அவன் லாயக்குடையவனா?

⟡⟡⟡⟡⟡⟡⟡

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி'

என்று மனு முனை துவங்கிய போது உண்டான இந்த வாக்கியம் இன்று இங்குதானே செயலில் நடை முறையில் காண நிற்கிறது.

ஆதி என்ற நாமம் இப்பதானே. இதற்கு முன் எந்த பாரவான்களும் ஆதி என்ற நாமத்தில் வரவில்லையே. ஏனென்றால் இதுநாள்வரை அரூபத்தில் தான் ஆதி இருந்தது. அது இப்ப ஜோதியாக திருமேனி தாங்கி இந்த பூமிக்கு அவதாரம் செய்து வந்திருக்கிறது. இந்த நாளில் தான் ஆதி என்ற நாமத்தோடு விளங்குகிறது. எல்லாவற்றையும் நின்று கவனித்தால் தான் அர்த்தம் புரியும்.

ஆதி - ஆகின்ற தீ. சர்வமும் தானே ஆகி, சர்வத்தையும் ஆக்குகின்ற தீயானது முதல் உற்பவ நேரத்தில் அந்த நாமத்தில் அழைக்கப்பட்டது. அதுவே இக்கலிக் கடையில் மகதி - மகா தீயாக சர்வ தேவ பீஜங்களாகிய மூலமந்திரங்களைக் கைக்கொண்டு உருவெடுத்து வந்துள்ளது.

தன்னுடைய நினைவு வல்லபங்கொண்டு தொட்டதனைத்தையும் நித்தியத்தில் ஆக்குகின்ற அந்த தேவ ரூபம் என்ன தவாதிக்க

பெருங்கருணை வல்லபம் உடையது என்று எண்ணிப் பாருங்கள்.

பூமியில் காசாம்பூ செடிதான் எங்கும் இருக்கும். ஆனால் காசாம்பூ மரம் எங்கோ அபூர்வமாகத்தான் இருக்கும். இறுதித் தீர்ப்பருடைய குளத்துக்கரை பிரதேசத்தில் காசாம்பூ மரம் இருக்கும் என்பது தீர்க்கதரிசனம் கூறுகிறதே. நம்ம கம்மாய் கரையிலே போய் பார்.

பைபிளில் 'ஏசு' என்றது லத்தீன் மொழியில் ''யாஹூ'' என்று சொல்லப் பெறுகிறது. இதையும் புசுண்டர் தம் தீர்க்க தரிசன கண் கொண்டு பார்த்து 'யாசுவா' என்று எம்மை அழைக்கிறார். யாசுவா நீங்க ரூப மெடுத்து வர வேண்டும். வந்து எங்களை காப்பாற்ற வேண்டும் என்றழைக்கிறார்.

பாலிபாஷயில் எவ்வளவோ காலத்துக்கு முன்னால் எழுதப்பட்ட தீர்க்க தரிசனம் எமது தவ வலிமையால் உலகில் வேறெங்கும் செல்லாமல் இங்கு வந்து சேர்ந்திருக்கிறது. அந்த தீர்க்க தரிசனம் இங்குபடிக்கப்பெற்றபோது அன்று இங்கு என்ன நடந்ததோ அதை எல்லாம் குறித்து காட்டுகிறது. அதைபடிக்கும் அன்று ''நான் உன் மீது கோபமாக இருந்தேன். நான் உன்னைத் திட்டினேன், நான் உன்னோடு சண்டை போட்டேன்'' என்றும் ''அன்று சபையில் ஒரே பரபரப்பும் கலவரமுமாக இருந்தது'' என்றும் அன்று நடந்ததை அப்படியே அந்த தீர்க்கதரிசன புத்தகத்தில் எழுதப்பெற்றிருந்தது.

✦✦✦✦✦✦

கம்பும், சோளமும் எதற்காக இறைவனால் படைக்கப் பெற்றன? நெல்லை அவித்து அல்லது உமியை நீக்கி பசியாற வேண்டும். நெல்லை நேரடியாக உண்ண முடியாது. கம்பும், சோளமும் அப்படி

யல்ல. ஆனால் கம்பும், சோளமும் பெரியோர்கள் கையில் வைத்து நகட்டியே சாப்பிட்டு பசியை போக்கிக் கொண்டு போய்க்கொண்டே இருப்பார்கள்.

சண்டாளனுக்கு, பாரவான்கள் கண்ணுக்குத் தெரிந்நாலும் அவன் நினைவில் ஒட்டாது. வானலோகம் மேலேயிருக்குமானால் ஈசன் கண்ணை மேல் நோக்கி அல்லவா படைத்திருப்பான். நேர்முகமாக ஏன் படைத்தான்? பிரதானமானதை நேர் முகத்தில் உடலெடுத்து வரும் பாரவான்களின், ஜீவன் முத்தர்களின், அவதார புருஷர்களின் தோற்றத்தை தெரிசிக்கவே அவ்வாறு படைத்தான்.

✧✧✧✧✧✧✧

அடக்கமாவதில் மூன்று வகை இருக்கிறது. எல்லோரும் அடக்கம் நன்முறையில் ஆக வேண்டும் என்று ஜீவ ரட்சிப்பு காணிக்கை எடுத்து வைக்கப்பெற்றது. எல்லோருக்கும் ஜீவ ரட்சிப்பு காணிக்கை இல்லாமலேயே அப்படிச் செய்தால் பலன் இல்லாமல் போகுமே என்று தான் ஜீவ ரட்சிப்பு காணிக்கை வைத்தோம். ஜீவ ரட்சிப்பு என்பது எளிதான ஒன்றாக நிங்கள் நினைக்க கூடாது. உலகம் முழுவதையும் கிரயமாக கொடுத்தாலும் ஜீவ ரட்சிப்பு பெற முடியாது.

உன் எண்ணம் செயல் அனைத்தையும் பொய்யிலேயே செலவு செய்துவிட்டு நாம் போடுகிற சட்டத்தில் தலைகொடுக்காது இருந்துவிட்டு. "ஜீவரட்சிப்பு காணிக்கை செலுத்தியாகிவிட்டது. நம் கடன் கட்டியாகி விட்டது. இனி தெய்வம் கட்டாயம் பிரம்ம வித்தாக நம்மை ஆக்க வேண்டியது தான்" என்று நீ நினைத்து விட முடியுமா?

"முக்கோடி தருமம் உவந்தளித்த அன்போரைத்
தக்கோடி நரகமதில் தள்ள வென்றால் உன்மனந்தான்..."

என்று உன் பாட்டையர் கூறியுள்ளதைக் கவனி. இந்த மெய் பொடுபோக்காய் இருப்பவர்களுக்கு ஒருக்காலும் கிட்டாது. ஒட்டாது.

எட்ட முடியாத எல்லையில் அந்த எமனுன ஒரு அரக்கன் வந்து கூத்தாடுகிற கோர எல்லையில் பிண னாற்றச் சாக்கடை னரகக் குழியில் இருந்து உன்னை பரிசுத்த சைவத் திருமேனியராகிய ஒரு பிரம்ம சொருபி வந்து னின்று காப்பாற்றி, இன்பமே என்னாளும் துன்பமில்லை என்ற எல்லைக்கு கை தூக்கி விடுவதென்றால் அது சின்னச் செயலா?

உன் தேகத்திலுள்ள ஒவ்வொரு மயிர்க்காலும் இந்த மெய்க்காகவே பாடுபட வேண்டும். அப்பத்தான் இது லபிக்கும். னாம் சொல்வதை ஒரு கூமட்டைத் தனமாகக்கேள். போதும். இதற்கு கைம்மாருக னீ இந்த எல்லையில் கூடவா வசிக்கக் கூடாது. சதா என்னிடமே ஒட்டு வைக்கும் எண்ணத்தைக் கூடவா செலுத்தக் கூடாது. அந்த அன்பைக் கூடவா என் மீது பதிக்கக்கூடாது. இதுவா பெரிய கஷ்டம். தாலத்தில் மாறு வேடமாக இப்போது இங்கு வந்து இப்படி இந்த ஆதி மூல ஆவி உன்னைப் பார்த்துக் கெஞ்சுகிறதப்பா!

✧✧✧✧✧✧✧

'' பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி னூறுயிரம் மல்லாண்ட திண்தோள் மணிவண்ணு---- இன்னுமொரு னூற்றண்டு இரும்''

என்று ஏன் சொன்னார்கள் தெரியுமா? அவர்கள் தங்கள் வயோதிகப்பருவத்தில் ஆசானை சந்தித்திருப்பார்கள். எனவே இன்னுமொரு னூற்றண்டு இருந்நால் தேவலை இன்னும் சில காலம் ஆசானுடன் இருக்கலாம் என்று தோன்றி இருக்கும். அதனால் அப்படி பாடி இருக்கிறார்கள்.

10.8.1972

புராணங்களில் சிவன் வரம் கொடுத்ததாகவும் திருமால் வந்து ரட்சிப்பதாகவும் இருக்கிறதே அது ஏன்?

அரூபத்தில் சிவன்தான் - எல்லா னன்மைகளையும் வரங்களையும் கொடுத்து - மனிதனாக உலகுக்கு அனுப்புகிறார்.

இவன் இங்கு வந்து மனம் போனபடி வாழ்ந்து அசுரன் ஆகிறான். - இவனை ரட்சிக்க - உருவம் தாங்கி - அந்த சிவனே திருமாலாக உருவெடுத்து வருகிறார். எனவே தான் புராணங்களில் அப்படி எழுதியிருக்கிறார்கள்.

உலக படிப்பு எவ்வளவு படித்தாலும் ஈசன் எல்லைக்குத் தான் கொண்டு செல்லும் - தேவனிடத்தில் கற்றவர்கள்தான் ஈசனாக முடியும்.

தோற்றம் என்றால் ரூபம் - ஆறு தோற்றமும் ரூபத்தில் இருக்கிறது. அப்ப தேவர்களும் ரூபத்தில் இருக்க வேண்டுமே? எங்கே காட்டு பார்க்கலாம் என்றால் விழிப்பான்.

மனிதன் விளைந்து, விளைந்து திரவ ரூபத்திலிருந்து அறிவு தேகம் எய்துகிறான். ஆறும் பிறப்பு எய்துகிறான்.

வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை! கீழுமில்லை.

விதையில்லாமல் ஒன்றும் விளைவதில்லையே.

முளைகண்டு இலை விட்டு, தண்டு எழுந்து வாது கிளை வெடித்து, பூத்து, காய்த்தல்லவா கனியாகவேண்டும். ஒரு மரமானது ஒரு முறை பட்டுப் பின் மீண்டும் கனி தரும் பருவத்திற்கு வரமுடியாது. அது போல ஏழு பிறப்பையும் மனிதன் செத்துச் செத்துப் பெறமுடியாது.

மறைத்து அருளல்தான் உண்மை.

ஏழுவகை தோற்றத்தில் நரனை கணக்கிலேயே எடுக்கவில்லை.

புல்லை மிதித்தால் – அது தலை நிமிர்ந்து என்னை ஏண்டா மிதிக்கிறாய்? உன்னை தோற்றத்தில் கணக்கிலேயே எடுக்கவில்லை என்றால் என்ன செய்வாய்? அப்படி கேட்கிறது தவறா?

ஒரு அரைவிச நாழி – அந்த நரப்பிறப்பில் இருக்கலாமா? சீக்கிரம் மனுஷன் ஆகி தேவனாக ஆக வேண்டாமா?

✧✧✧✧✧✧✧

பணத்தைப் பற்றியும், பணத்தை பெறும் ஆசையால் மனிதர்கள் செய்யும் தீங்குகளைப் பற்றியும் பேச்சு சபையில் எழுந்தது. அப்பொழுது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்:

''பணம் பாதாளம் மட்டும் பாயும்'' என்ற பழமொழி உள்ளது, பணம் ஆகாயம் மட்டும் பாயும் என்று சொல்லவில்லை? மெய்க்குருவைத் தவிர மற்றவர்களிடம் பணம் இருக்குமானால் அவர்களை பாதாளத்திற்குத் தான் கொண்டு போகும்.

✧✧✧✧✧✧✧

மெய்வழி னச்சேத்திர அனந்நர் புதிதாக சபையில் சேர்ந்து வந்து போய்க்கொண்டிருந்த அந்த காலத்தில் ஊர் செல்ல ஆண்டவர்களிடம் உத்திரவு கேட்டார்.

அப்பொழுது ஆண்டவர்கள் ''இது மாதிரி போய் வருகிறேன் என்று நாம் எம் ஐயனிடம் சொன்னதில்லை'' என்று பதிலளித்தார்கள்.

ஒரு நிமிடம் கழித்த பின் ஆண்டவர்கள், ''அப்படியும் என்னை உங்க கிட்ட போய்வா என்று சொல்லி பிரித்து அனுப்பி விட்டார்கள்.'' என்று கவலை தோய அருளிச் செய்தார்கள்.

✧✧✧✧✧✧

ஒரு தடவை தன்னுடைய திருக்கரத்தில் இருந்த ''அரிவாளே காட்டி, ஆண்டவர்கள் அரிவாளின் முக்கியமென்ன?'' என்று கேட்டார்கள். பிறகு ''அதனுடைய கூர்மை பதம் தான்'' என்ருர்கள். அதன் பிறகு ''அதேபோன்று மதத்தின் பிரயோஜனம்? என்ன? கேட்டார்கள். பிறகு ''அது தரும் சிவபதம் தான்'' என்று அருளிச் செய்தார்கள்.

✧✧✧✧✧✧✧

வெள்ளி டம்ளரில் தேங்காய் தண்ணீர் விட்டால் விஷமாகும். வெள்ளி டம்ளரில் னல்ல குடி தண்ணீர் விட்டால் சுத்தமாகும்.

தேங்காயை தண்ணீரில் வேக வைத்தால் வேகாது. தேங்காயை அதன் தண்ணீரிலேயே வேக வைத்தால் னன்ருக வெந் நுவிடும்.

✧✧✧✧✧✧✧

'செத்திடமும் பிறந்திடமும் இனிச் சாகாதிருந்திடமும் அறியாதாறறிவு வெவ் வறிவோ.'' என்ற மாணிக்கவாசகர் பாடல் சபையில் பாடப் பெற்ற பொழுது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்:

ஆண்டவர்கள்: இவன் அறிவை வயிறு வளர்ப்பதற்காக மட்டுமே செலவழிக்கிருன். தன்னே அறிந்து தவ முறையில் வாழ இவ னுக்கு அறிவு கொடுத்திருக்க இவன் அதற்கு னேர்மாருன வழியில் பயன்படுத்துவதால் வயித்தறிவு என்று சொன்ருல் என்ன?'' என்று கேட்டார்கள்.

✧✧✧✧✧✧

இறைவன் னுள் தோறும் புதியவன்'' என்று ஒரு வாக்கியம் திருக் குரானில் வருகிறது. தினந்தோறும் புதிய உடையை மாற்றிகொள்வ

தையா சொல்லுகிருர்கள்? இன்றைக்கு சப்-இன்ஸ்பெக்டர் உடை, ஜூனி ஜட்ஜ் உடை, மறு நாள் மாஜிஸ்ட்ரேட் உடை என்று புதுப்புது விதமாக உடையை மாற்றிக் கொள்வதா? இல்லை. காட்சி அறிவுக்கு தானே! ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக காட்சி கொடுப்பது அறிவுக்கு தான். அவரவர் அறிவுக்கேற்ப நாள்தோறும் புதியவன் இறைவன்.

✧✧✧✧✧✧✧

இளவயது உள்ளவர்கள் மிகவும் கெட்டுப்போகிருர்கள் என்ற பேச்சு சபையில் எழுந்தபோது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்:

5 வயது முதல் 21 வயது வரை பசுமையான நேரம். அந்த பசுமையான நேரத்தில் தீங்கில் மனம் நிலைக்குமானுல் அதை மாற்ற முடியாது. 21 வயது வரை ஞானத்திற்கு எடுக்கவும் முடியாது. ஆகையால் தான் பெரியோர்கள் கோயில், குளம், வேதபாராயணம் இவைகளெல்லாம் எடுத்து வைத்தார்கள்.

✧✧✧✧✧✧✧

எமன் கைபட்டவுடன் இவனது நாசித்துவாரம் இரண்டும் அடைத்துவிடும். இது மகாபெரிய ரகசியம்.

ஒருவனை எமன் வந்து தீண்டியதும், கண் பார்வை இழந்து விடுகிறது. மூச்சு ஓடுவது நின்று விடுகிறது. பேசும் சக்தியை இழந்து விடுகிருன். ஆனுல் காது மட்டும் கேட்கும் சக்தியை உடனே இழப்பதில்லை. அவனுடைய உற்ருர், உறவினர்கள் அவனை அவமானப் படுத்துவதை அவன் கேட்கிருன்.

✧✧✧✧✧✧✧

சபையில் ஒரு பிறவியர் இருபத்தாறடி நீளத்திற்கு தலை முடி வளர்த்துக்கொண்டு ஒரு சாமியார் இருப்பதாகவும் அவரை எல்லோரும் அதிசயமாக போய் பார்ப்பதாகவும் சொன்ன போது, பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்:

"அது ஒட்டு மயிர். தேங்காய் எண்ணெயை தடவி சீயக்காய் வைத்து அலசினால் ஒட்டு மயிர் உதிர்ந்துவிடும். இந்த போலி வேஷம் தெரியாமல் அதிசயிப்பது தான் இந்த உலகம்."

உலகத்தில் ஜாலமென்று ஜாலவித்தை செய்கிறார்கள். மந்திரத்தில் மாங்காய் வரவழைத்து கொடுக்கின்றேன் பார் என்பான். மாங்காய் காய்க்கும் காலத்தில் தான் இந்த வித்தையைச் செய்வான். அவன் செய்வதெல்லாம் தந்திரம் தான் . ஒரு போலிச் சாமியார் ஒருத்தன் இருந்தான். அவன் லிங்கத்தை முதல் நாளே விழுங்கி பௌர்ணமி அன்று வாந்தி எடுத்துக் கொடுப்பானும். வாந்தி எடுத்தால் பி நாற்றம் எக்கச்சக்கமாய் அடிக்குமே! அதையும் பொருட்படுத்தாமல் அதை கழுவி வீட்டில் வைத்து ஜனங்கள் பூசை செய்வார்களாம். அது என்னவென்றால் போலிச் சாமியாருக்கு லிங்கமே வயிற்றில் உற்பத்தியாகி வருகிறதாம். அங்கு என்ன கொல்லன் கூடமும், தச்சு கூடமுமா இருக்கிறது ? இது கூட இந்த ஜனங்களுக்கு மண்டையில் படவில்லையே! இதற்கு பெயர் தான் ஜால வித்தை. எல்லாம் தந்திரமாகச் செய்வது அவ்வளவுதான். இதிலே ஞானமா இருக்கிறது ?

கம்முன், புக்முன், உம்முன், செவிடு, குருடு, ஊமை இவர்களுக்கு ஞானம் இல்லை என்று வேதங்கள், வேத கர்த்தாக்கள்

கூறுகின்றனர். ஆனால் இவன் வாய்ப் பேசாமல் ஊமையாய் இருக்கின்றவனை சாமியார் மௌனி என்று பெருமையாக கூறுகின்றனே?

✦✦✦✦✦✦✦

இரு சமயம் சபையைப் பார்த்து ஆண்டவர்கள் ''நாய் சிரிப்பதைப் பார்த்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார்கள். சபையில் உள்ளவர்கள் பதில் சொல்ல தெரியாமல் இருந்நார்கள். ஆசனத்தில் அமர்ந்திருந்த ஆண்டவர்கள் குந்தி அமர்ந்துகொண்டு தன்னுடைய ஒரு திருக்கரத்தை முதுகு புறம் எடுத்து சென்று அசைத்து காட்டினார்கள். சபையில் உள்ளவர்கள் அந்த ஜாடை புரியாமல் திகைத்து பார்த்தார்கள். பின்பு ஆண்டவர்கள் நாய் வாலை மகிழ்ச்சியாக ஆட்டுவதைப் அடையாளம் காட்டுகிறார்கள் என்று புரிந்து கொண்டார்கள்.

''நாய் சிரிப்பது இப்படிதான். நாய் தனக்கு மகிழ்ச்சி வரும்போது தன்னுடைய வாலை ஆட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறது. ஆனால் மனிதனுக்கு மட்டும் மகிழ்ச்சியை முகத்தில் வெளிபடுத்தும்படி இறைவன் படைத்திருக்கிறான்'' என்றார்கள்.

✦✦✦✦✦✦✦

''**யு**கங்கள் நான்கும் கை கொண்ட கோடுழியர்''.....

என்ற னம் வேத பாடல் சபையில் பாடப் பெற்ற பொழுது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்:

இந்தப் பாட்டு எழுதிய போது நான்கு யுகங்களின் கோடி கண்டு எழுதியது. இப்பொழுது எவ்வளவு தூரம் போயிருக்கும்!

✦✦✦✦✦✦✦

மயில் தான் சாகுவதற்கான நேரம் வரும் போது ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து அங்கு படுத்துவிடும். இதனால்தான் மயிலின் செத்த தேகத்தை எங்கும் காண முடியாது.

✧✧✧✧✧✧

உலகத்தில் எந்த ஜீவராசி அதிகமான கனத்தை தூக்கிக் கொண்டு போகிறது என்று தெரியுமா! ''எறும்பு'' தான் ''எறும்பு தன்னுடைய கனத்தைப்போல பத்துப் பங்கு கனத்தை தூக்கிக் கொண்டு போகிறது''.

✧✧✧✧✧✧

புத்தேழ் – பூ ஏழ் – திருவடிநிலை
பழவடியார் – பழம் அடியார் – கனிந்த தவத்துடைய அடியார்.

✧✧✧✧✧✧

அஷ்ட ஐஸ்வரியம்: 1) மகாசுத்தம் 2) மகாமானம் 3)மகாசீரும் 4) மகா சிறப்பும் 5) மகா வாக்கு 6) மகா வலிமை 7) மகா தைரியம் 8) மகா காயம். என்பதுவே அஷ்ட ஐஸ்வரியமாகும்.

✧✧✧✧✧✧

ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்த போது நீங்கள் என்ன செய்கிறீர்கள்? என்று தெய்வம் கேட்க – ''நாங்கள் தினமும் திருடர்களை பிடிச்சிகிட்டிருக்கிறோம்'' என்று சொன்னார். ''அப்போ நல்லவர்களை நீங்கள் எப்போது பிடிக்கப் போறீங்க?'' என்று வேடிக்கையாக சிரித்து கொண்டே கேட்டார்கள்.

✧✧✧✧✧✧

மதுரை அருகில் பழஞ்ஞாலை இருந்த இடத்திற்கு பரன் மேடு என்று பெயர்

✧✧✧✧✧✧✧

காஷாய தீர்த்தம் பிம்பத்திற்கு அடக்கத்தலத்தில் மூன்று முறை கொடுக்க வேண்டும். இது ஆண்டவர்கள் உத்திரவு என்று சொல்லிக் கொடுக்க வேண்டும். அதிகமாகக் கொடுக்கக் கூடாது. கொடுத்தால் அது பத்து நாளைக்குப்பின் கசிந்து விடும்.

✧✧✧✧✧✧✧

சாலையில் குழந்தைகள் படிக்க வேத பாட சாலை ஆரம்பிக்கப் பெற்றது. அன்று காலையில் முதற் பாடமாகக் அகரம், அவ்வு, ஏகம், ஐந்தெழுத்தையும் ''என் பொருள்'' என்று குழந்தைகளுக்கு கற்பிக்க உத்திரவாயிற்று.

✧✧✧✧✧✧✧

அட்சய பாத்திரம் என்பது என்றும் குறையாத பாத்திரம் என்பதாகும். அது அழியாதது. சயம் என்றால் குறைவது. அட்சயம் என்றால் அழியாமல் இருப்பது.

✧✧✧✧✧✧✧

மஞ்சள், வேப்பெண்ணை கலந்து பற்றுப் போட்டால் எந்த தழும்பும் போய்விடும்.

✧✧✧✧✧✧✧

பரணி னட்சத்திரம் சூரியனுக்கும் சந்திரனுக்கும் அப்பால் உள்ளது. அது போல் பரன்+னி யாருக்கும் எட்டாத தூரத்தில் இருந்நாலும் எட்டிபிடித்தவர்க்கு பரணில் இருக்கும் பொருள் தெரியும்.

✧✧✧✧✧✧✧

மாண்டபின்பு	வைகுந்த	மடைவராம்
ஆண்டு னிற்க	அறிவுஇப்ப	இல்லையோ
காண்டலுக்	கரிதேகம்	கழன்றபின்
காண்பம் என்பது	பழங்கதை	யாகுமே

உனக்கு இப்போது இல்லாத அறிவா னீ இறந்த பின்னர் வரப்போகிறது?

⟡⟡⟡⟡⟡⟡⟡

துப்பாக்கி குண்டு னம்மை னோக்கி வரும்போது ஈர சாக்கை னம் முன்ஞல் பிடித்தால் குண்டு அடிபடாது. வழுக்கி ஒடிவிடும்.

⟡⟡⟡⟡⟡⟡⟡

மறதி என்ற ஒன்றை இறைவன் படைத்திருப்பதால் தான் னம்மால் வாழ முடிகிறது. இல்லை என்ருல் பைத்தியம் பிடித்துவிடும்.

⟡⟡⟡⟡⟡⟡⟡

னம் ஞவு இருக்கிறதே அது ஒரு தோல்தான். அதே போல் னம் கன்னமும் ஒருதோல்தான். மிளகாயை னறுக்கிக் கன்னத்தில் வைத்தால் எரியாது. ஞக்கில் வைத்தால் எரியும். இரண்டு வெவ்வேறு பொருட்களால் ஆக்கப்பெற்றவை. இது இறைவனின் அதிசய சிருஷ்டி.

ஞம் பிறந்த காலம் முதல் இன்னெடுங்காலம் வரை உபயோகிக்கும் ஞக்கு ஒரு சிறிதாவது தேய்ந்திருக்கிறதா! இல்லை. அப்படி தேய்ந்திருந்தால் னம் கதி என்ன? இவ்வளவு அதி னுட்பமாக அதிவல்லபத்தோடு அருமையாகப் படைக்கப் பெற்ற அங்கங்குலங்கள் னரக அவஸ்தைக்குப் போகவா படைக்கப் பெற்றிருக்கும்? ஞம் கேட்காமலேயே இறைவன் இப்படியான பல வல்லப கருவிகளை இந்த தேகத்தில் படைத்துக் தந்து இருக்கிருனே, இவைகள் னமக்கு வேண்டுமென்று கேட்கத்தான் தெரியுமா?

தெரியாது.

❖❖❖❖❖❖❖

இறைவன் ஒவ்வொரு வேப்பம் இலையையும் அழகாக ரம்பம் மாதிரிக் கத்தரித்து வைத்திருக்கிறானே என்ன ஆச்சரியம் இதை எப்படிச் செய்தான்?

❖❖❖❖❖❖❖

குரங்குக்கு கையும், காலும் ஒன்றே. மனிதனுக்கோ கை வேறு. கால் வேறாக படைக்கபட்டிருக்கிறது. குரங்கு தன் நான்கு விரல்களையும் ஒன்றாகச் சேர்த்துதான் மடக்க முடியும். ஆனால் மனிதனோ தன் ஒவ்வொரு விரலையும் தனித் தனியாக மடக்க முடியும். அப்போ மனிதனுக்கும் குரங்கிற்கும் எவ்வளவு வித்தியாசம்?

❖❖❖❖❖❖❖

ஐம்புலன்களில் ஒன்றான மெய் உணர்ச்சியான தேக உணர்ச்சியை, இறைவன் கொடுத்து ஆயுள் எல்லாம் இலவசமாக நீ அனுபவித்தாயே அதற்கென்ன கைமாறு இறைவனுக்கு செய்தாய்? அதற்காக நீ ஒரே ஒரு தலைமுறைக்குள்ளாக யுகங்கோடி கால வாழ்க்கையைச் சம்பாதிக்கிறது என்றால் உனக்கு தரப்பெற்றுள்ள அறிவு என்ன பவர் உடையது? இறுதியில் பதில் கேட்கபடுவாய்!

உனக்கு அறிவுப் பருவம் வந்தவுடன் – நீ செய்யும் வேலைக்கு கூலி கேட்க வேண்டும் என்ற நினைப்பு வருகிறதல்லவா? அப் பருவம் தொட்டு இறைவன் செய் நன்றிக்கு நீ கூலி கொடுத்தே ஆக வேண்டும் என்ற கடமை உன்மேல் விதியாகி விடுகிறது. அறிவுப் பருவம் வருவதற்கு முன் நடந்ததெல்லாம் இறைவனால் உனக்கு இனமாகக் கொடுக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖

வெப்பாலை மரம் சிறிது ஈரம் இல்லாவிட்டாலும் ஆல இலை போல இலையுதிர்ந்து மொட்டையாகிவிடும். ஆணிவேர் மட்டும் பட்டையைக் காக்கிறது. இதற்குப் பக்க வேர்கள் கிடையாது. ஆகவே இலைகள் உதிர்ந்துவிடுகின்றன. அதுபோல உனக்கு ஆணிவேர் எது என்றால் இந்த மெய்யில் நீ கொள்ளும் இச்சை. அதில் எவ்வளவு ஊணுகிறாயோ அந்த அளவு வலுவான ஆணிவேராக இருக்கும். அப்போதுதான் நாம் உன்னை ஏற்றி தேவனாக்க முடியும்.

⟡⟡⟡⟡⟡⟡

சபையில் மெல ஞானக்கண் கொண்டு என்ற பாடல் பாடப் பெற்றபோது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்:

எல்லாக் கருவிகளும் ஒரே மாதிரிதான். நிஷ்டை என்னும் குகையில் இருந்து அந்த ஞானக் கண் வித்தை பரிசுத்தமாகிறது. பரிசுத்தம் எல்லா கருவி கரணாதியங்களுக்கும் பரவுகிறது. ஒளி விசுகிறது.

கண், காது முதலிய உன் அங்கக் குலங்கள் உன் இச்சைப்படி அடங்கி நடக்கின்றனவா? இல்லையே. உன் சுவாசத்தை நீ அடக்கி ஆளப் பழகியபின்தான் உன் நினைவு ஓட்டம் உன் அகமுகத்தில் அடங்கி ஒடுங்கும்.

அவ்வண்ணம் அடங்காது மதம் கொண்டு நிற்கின்றன அவைகளை அடக்கி ஆளுகின்ற மகா தவ வல்லபம் இப்போது ஒரு மானிட ரூபம் தாங்கி உன் முன் வந்திருக்கிறது.

தன் தன் மதத்தில் தவறு திருத்தி
பண்புபி றங்கு பகைமை யொக்க

இன்புற சுட்டும் இயல்மொழி அண்ணல்
தன்பெரு வெளியே சாலையென் றேதே.

– ஆதிமெய் உதயபூரண வேதாந்தம்

◆◆◆◆◆◆◆

மெய்வழி பிரகாசக்கொடி அனந்நர் சாலையம்பதியில் விடுதியில் ஒரு நாள் இரவு திடீரென ஜீவப்பிரயாணம் ஆகிவிட்டார். அப்போது ஆண்டவர்கள் தவ மாளிகையில் தவத்தில் இருந்நார்கள். மெய்வழி பிரகாசக்கொடி அனந்நர் ஜீவப் பிரயானமானதைப் பற்றி தவமாளிகையின் முன்பு பிறவியர்கள் பேசிக்கொண்டிருந்ந செய்தி தவம் கலைந்ந அந்ந நேரத்தில் ஆண்டவர்களுக்கு கேட்டது. உடனே நேராக மெய்வழி பிரகாச கொடி அனந்நர் விடுதிக்குச் சென்றார்கள். அப்போது விடுதியில் மெய்வழி பிரகாச கொடி அனந்நரின் தூலப் பிம்பம் தரையில் படுக்க வைக்கப்பட்டிருந்நது. ஆண்டவர்கள் விடுதியில் நுழைந்நவுடன் 'பிரகாச கொடி! புறப்பட்டு விட்டாயா?' என்றார்கள். ஆண்டவர்களின் விஸ்வநாத திருஒலியை கேட்டவுடன் மெய்வழி பிரகாச கொடி அனந்நரின் அடக்கமான கால்கள் தானாகவே அசைந்நு மடங்கின. அவருடைய கைகள் தானாகவே தலைக்குச் சென்று ஆண்டவர்களுக்கு வணக்கம் செய்தது. உயிர் அடக்கமான பின்பும் இந்ந மாதிரி கால்கள் அசைந்ந அதிசயத்தை நேரில் பார்த்தவர்கள் அதனை கண்டு மிகவும் ஆச்சரியமடைந்நுமெய்சிலிர்த்து உறைந்நு அப்படியே நின்றார்கள். மாண்மியத்தின் முகப்பு பாடலின் கடைசிப் பாடலில்.

மாண்டம னுவனைத்தும் மண்ணிலி ருந்நெழுப்பி
தோன்றும் தீர்ப் பினிலேற்றிச் சொர்க்கன ரகமென்று!

என்று வருகிறது. இந்நப் பாடல் ஆண்டவர்கள் பிரளயத்திற்குபின் னடத்தப்போகும் செயலே தீர்க்க தரிசனமாக குறிப்பிடப்பெற்றிருக்கிறது என்று னினைத்திருந்நோம். ஆனால் மண்ணிலிருந்து எழுப்பும் அந்ந வல்லபம் அவர்களுக்க அப்போதே வந்நுவிட்டது என்பதை மேற்கூறிய சம்பவம் னமக்கு அறிவிக்கிறது.

⟡⟡⟡⟡⟡⟡

ஒரு சமயம் சபையில் ஆண்டவர்கள் ''ஆங்கிலத்தில் பாவத்திற்கு என்ன சொல்?'' என்று கேட்டார்கள். ''சின்'' என்ற பிள்ளைகள் பதில் சொன்னார்கள். பிறகு தெய்வமவர்கள் ''புண்ணியத்திற்கு ஆங்கிலத்தில் என்ன?'' என்று கேட்டார்கள். பதில் சொல்ல முடியாமல் பிள்ளைகள் அமைதியாக இருந்நார்கள். ஆண்டவர்கள் ''புண்ணியச் செயல் அங்நு இல்லாததால் புண்ணியம் என்ற சொல் அங்நு பழக்கத்தில் இல்லை. ''ஆங்கு-இலம், ஆங்கு னும் இல்லை'' என்று உத்திரவிட்டு அருளினார்கள்.

⟡⟡⟡⟡⟡⟡

சபையில் புசுண்டர் பெருமான் தீர்க்க தரிசனம் வாசிக்கப் பெற்றது. அதில் ஆண்டவர்களின் வலது திருக்கரத்தில் மச்சம் இருப்பதாக குறிப்பிடப் பெற்றிருந்நது. அப்பொழுது பிறந்ந வாக்கியம்:

''வலது கை மச்சம் புசுண்டர் பிரான் சொன்ன பின் தான் னாமே பார்த்தோம். அதன் பின் தான் எமக்குத் தெரியும்.

'சாம்ப சிவ ஓம் ஹர' என்ற வார்த்தையானது பிராமணர்களால் கால காலமாக சொல்லப்பட்டு வருகிறது. அதை காகபுசுண்டபிரான் ஒரு பாட்டில் கூறுகிறார். எப்படி என்றால், 'சாம்பசி அது ஓம்' என்கிறது பசியானது அற்று போய் உள்ள ஓர் உருவம் என்கிறார். பசி அற்றுப்போயுள்ள எம்மை சம்பசி ஓமாப் பொருள்' என்று கூறுகிறார்.

அறுந்துபோன அட்க்ஷரத்தை, அட்க்ஷரமமைத்தோர் மறுபடியும் எடுத்து அமைக்கும்பொழுது மழை தூறிக்கொண்டிருக்கும் என்பது புசுண்டர் பிரானவர்களின் தீர்க்க தரிசனம்

✦✦✦✦✦✦✦

ஏழையானாலும், பணக்காரனாலும் மூச்சு நிற்பது என்பது எப்பேர் பட்ட வல்லபசெயல்? இச் செயல் அங்கே ஸ்தாபரமாக இருந்தால் அது எப்பேர்ப்பட்ட சொத்து? அதற்கு மேலே சொத்து என்ன இருக்கி றது? பொய்ப் பொருள் எது வரை? மூச்சு போய்விடும் வரை தானே.

ஒரு 'தம்' பிடித்து மூச்சடக்கி ஒரு குத்துக் கல்லை தூக்குகிறோம். ஒரு மூச்சை அடக்குவதில் இவ்வளவு வல்லபம் இருந்தால் மூச்சே சுத்தமாக தானே அடங்கினால் என்ன வல்லபம் இருக்கும்? மூச்சு ஓடா தவ வலிமை உடையவர்கள் எவ்வளவு வலிமை உடையவர் களாக இருப்பார்கள்.

'தம்' மை அறிந்து தம்மை அடக்கி தம்மை உணர்வார் - என்ற மெய்கண்டார் பாடல் இப்பொழுது சபையில் பாடப் பெற்றது.

மனிதன் சந்திர மண்டலத்திற்கு செயற்கை கோள் மூலம் போய் அங்கு இறங்கி திரும்பி வருவதைப் பற்றி சபையில் பேசிக் கொண்டிருந்த போது ஆண்டவர்கள்: ''சந்திரன் பூமியிலிருந்து எவ்வளவு தூரம்? எவ்வளவோ லட்சம் மைல்கள் என்று சொல்கிறாயே. அங்கு போவதாக சொல்பவனைப்பற்றி நீ நினைக்கும் போதெல்லாம் உன் நினைவும் அவ்வளவு தூரம் போகிறதல்லவா! உன் நினைவு அதிகமான தூரம் போக போக உன் சுவாசம் அதற்கேற்றாற் போல் அதிகமாக வெளியேறுகிறது. உஷார்.

மூச்சு விண்போவது தானே பாவம்! ஆனால் ஞானிகள் அண்டத்திலுள்ள எதையும் தங்கள் அகக் கண்ணால் தங்களுக்குள்ளேயே காண்பதால் அவர்களுக்கு சுவாசம் வெளியேறுவதில்லை.

◆◆◆◆◆◆◆

பழஞ்ஞாலை திருமாளிகையில் இருந்த ஜன்னல்களெல்லாம் பெயர்த்து எடுத்து வந்தேனே சந்திர வட்ட சிலாசனத்தை மட்டும் ஏன் நானே என் கைப்பட புதைத்து வைத்துவிட்டு வந்தேன். லாரி சுமக்கமாட்டேன் என்று சொல்லி விட்டதா? அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டுமல்லவா? ஒரு நாள் இருக்கிறது! அப்பொழுது நானேயிருந்து சந்திரவட்ட சிலாசனத்தை எடுப்பேன். சிலகாலம் என்னுடைய தேகத்தை மறைத்துக்கொள்வேன். பின் நித்திய தேகத்தில் வருவேன். அப்பொழுது ஒரு சிலருக்கு என்னுடைய குரலும். உருவமும் தெரியும். ஒரு சிலருக்கு குரல் மட்டும் கேட்கும். ஒரு சிலருக்கு குரலும் கேட்காது.

◆◆◆◆◆◆◆

நேற்று மதியம் எமக்கு ஒரு வருடம் 27 நாட்களாக மறைந்திருந்த பசி திடீரென உண்டாயிற்று. 1½ இட்லி சாப்பிட்டோம். அதனால் இப்போது எம்தேகத்தில் எதைச் செய்வோம் எதை வெட்டுவோம் எதை குத்துவோம் என்று ஒரு விறு விறுப்பான பலம் குமுறி நிற்கிறது. இத்தனை காலமாக பசிமறைந்து நின்றதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டுமல்லவா? அதனால் ஒரு விளைவு ஏற்றம் இருக்குமல்லவா? ஆம். நாம் ஆச்சரியப்படும்படியான ஒரு செயல் எம் கைவசம் ஆகியிருக்கிறது.

பித்தம் தலைக்கேறி விட்டால் இரவு படுக்கப் போகும் போது ஒரு எலுமிச்சம்பழத்தை 2ஆக அறுத்து அதில் சீரகத்தை பொடி செய்து வைத்து விட்டு காலை எழுந்து படுக்கையிலேயே எலுமிச்சை சாறுடன் அந்த சீரகத்தை தின்றுவிட்டால் பித்தம் போய்விடும்.

✧✧✧✧✧✧✧

பாம்பு தனது சட்டையை உரிப்பதற்கென்றே ஒருவகை முள்ளைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளும், தன் வாயில் இருபுறமும் படும்படியாக அது இருக்கும். முதலில் தன் வாய் ஓரமாக முள்ளினால் கீறிக் கொள் ளும். பிறகு மெதுவாக நெம்பி, நெம்பி முன்னாடி நகரும்போது சட்டை உரியும். அப்போது உள்தோலில் முள் சிறிது கீறிவிட்டாலும் கீறிய இடத்தில் எலும்பு தெரிந்து விடும். சிறிது நேரத்தில் எலும்புக் கூடாக ஆகிவிடும். ஆனால் முள் கீறாதபடி அவ்வளவு பக்குவமாக மேல் தோல் மட்டும் கீறும் அளவுக்கு சூதானமாகக் கீறிக் கொள்ளும்.

✧✧✧✧✧✧✧

மெய்வழி கோபால அய்யங்கார் ஆண்டவர்களிடம் சபையில் சேர விண்ணப்பம் செய்தார் . இவருடைய தூல சகோதரர் மெய்வழி ராமசாமி அய்யங்கார் மூலம் ஆண்டவர்களை தரிசனம் செய்யவந்தார். வந்தவர் ஆண்டவர்கள் திருமுன்பு சாஷ்டாங்கமாக விழுந்து தலை தரையில்பட நமஸ்காரம் செய்தார்.

அப்பொழுது ஆண்டவர்கள் "இனி மேல் இந்த மாதிரி செய்யாதே. ஈசன் குடியிருக்கும் தலையை தரையில் போடாதே" என்று உத்திரவு செய்தார்கள்.

அதன்பின்பு மெய்வழி கோபால அய்யங்கார் ஆண்டவர்களை பார்த்து "சபையில் சேர **அனுக்கிரகம்** பண்ண வேண்டும்" என்று

கேட்டார்.

அதற்கு ஆண்டவர்கள், ''அனுக்கிரகம் செய்வது அவ்வளவு லேசான காரியமல்ல'' என்று கூறி ''உன்னை பிடித்துள்ள கிரகங்களை அணுத்தூளாக்கி செய்வதே அனுக்கிரகம் ஆகும்'' என்று உத்திரவிட்டு அருளினார்கள்.

✦✦✦✦✦✦✦

சபையில் பணம் உடையவர்களைப் பற்றி பேச்சு நடந்தபோது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்:

பணம், காசு இல்லாதவனா ஏழை? இல்லை. அறிவில்லாதவனே ஏழை. ஒருவனுக்கு அறிவு மாணிக்கமே தான் அழியாத செல்வமாகும். வருகிற ஆபத்தை நினைக்காமல் அதற்கு அப்புறமிருக்கிற இன்பத்தை நினைத்தால் என்ன பலன்? ஆபத்தை தெரிந்து அறிந்து தப்பித்துக் கொள்ளவே உனக்கு அறிவைக் கொடுத்தான். அச்சமில்லாதவனுக்கு அறிவு இருக்காது.

சுமாரான பணக்காரன் புதுக்கோட்டையில் இருக்கிறான். அவன் திருச்சிக்கு போனால் பெரும் பணக்காரர்களுக்கு இடையே தாழ்ந்து காணப்படுகிறான். சென்னைக்குச் சென்றால் அங்கு அவன் மேலும் தாழ்ந்து காணப்படுகிறான். ஆனால் தெய்விக முதலாகிய தௌலத்தை எமன் அஞ்சுகிற செயலை வரமாக அடைந்துள்ள உங்களுடைய தவச்செல்வம் வேறு யாரிடமாவது உள்ளதா? எல்லா இடங்களிலுமே உங்களை மட்டமாக யாரும் நினைக்க முடியாது. வாடாத சிறப்புடைய வார்த்தையும், ஐயோ என்று சொல்லக் கூடிய வார்த்தையும், எல்லாம் ஒன்றா? கிள்ளுமை ஞட்டு தேவ ஆவி அருள் பெற்ற தங்க ஞட்டு செல்வந்தர்கள் நீங்கள் தானே!

இந்த உலகத்தில் எப்பேர்ப்பட்ட கோடீஸ்வரனாக இருந்தாலும், எவ்வளவு பெரிய அரசனாக இருந்தாலும், பெரிய மதிப்புடையவனாக இருந்தாலும், இறுதியில் அவன் எமன் கை வசப்பட்டு நித்திய அவஸ்தைக்கு போகிறவன் தானே. அந்த எமன் கை உன்னை தீண்டாமல் அடக்கி வைத்திருக்கிறவர்களை உன் தந்தையாக நீ பெற்றிருக்கிறாயே!

இந்த உலகத்து இராஜாக்கள் எல்லாம் இராஜாக்கள் அல்ல. இராஜநிலை அறிந்தவர்களே இராஜாக்கள். ஆம். எமன் அஞ்சுகிற இராஜாக்கள்.

ஒருவன் ஒரு தேவ ரகசியம் சொல்லுவதாக ஒருவனுக்கு சொன்னான். அதை அந்த மற்றொருவன் என்னவென்று தெரிந்த கொள்ள வேண்டும் என்ற ஆவலில் அவனை உடனே தனக்கு அந்த ரகசியத்தை சொல்லும்படி வற்புறுத்தி வந்தான். இவன் இந்த அமாவாசையில் சொல்கிறேன். அந்த பௌர்ணமியில் சொல்லுகிறேன் என்று காலம் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தான். அவனிடம் நன்றாக பலகாலம் வேலை வாங்கி விட்டு பின் ஒரு நாள் அந்த தேவ ரகசியத்தை வெளியிடுவதற்கு ஒரு முகூர்த்த நாளை குறித்தான். அந்த நாளில் அவனிடம் காதை அருகே கொண்டுவரச் சொல்லி காதில் "நெல்லுக்குள் அரிசி இருக்கிறது. இதுதான் ரகசியம்'' என்று அவனிடம் சொன்னா னாம். எப்படி இருக்கிறது பார் ரகசியம் கூறியது?'' என்ற ஒரு கதையை சபையில் தெய்வம் அவர்கள் சொன்னார்கள். இதைகேட்டு சபையில் எல்லோரும் சிரிக்க - ஆண்டவர்கள் தொடர்ந்து அருளிச் செய்ததாவது : 'அகரம்' என்று வேதத்தில் சொல்லியிருக்க உலகில் 'அ'என்று எல்லோரும் கூறுகிறார்கள். அதை

கேட்டுக்கொண்டு நீங்களும் சும்மாதானே இருக்கிறீர்கள்? இதற்கும் அதற்கும் என்ன வித்தியாசம்? மேலும் அரிக்கு முந்தின அவ்வெழுத்து என்று வேதத்தில் கூறியிருக்கிறதே இதைப் பற்றி'' யாராவது பேசுகிறார்களா? விறகை எடைபோடும் தராசிலா வைரத்தை எடைபோடுவது? வெறும் நூலறிவினர் அகரத்தை 'அ' என்று சொல்லுகிறார்கள். அதையும் கேட்டு இந்த உலகம் சம்மதிக்கிறது'' என்று அருளினார்கள்.

✦✦✦✦✦✦✦

காளி கோயிலுக்கு பலியிடுவதற்காக அந்தக் காலத்தில் புலி வேட்டைக்கு போவார்களாம். ஒரு இடத்தில் தகட்டுகல்லை ஒரு கம்பு கொடுத்து சாய்வாக நிற்க வைத்து விடுவார்கள். அதில் ஒரு மெல்லிய கம்பி கயிறு கட்டி அந்த கயிற்றில் ஒரு ஆட்டுக் குட்டியை கட்டி விடுவார்கள. புலி வந்தவுடன் ஆட்டுக்குட்டி மேல் பாய்ந்து கடிக்கும். அப்போது ஆட்டுக்குட்டியை கட்டியிருந்த கம்பி இழுபட்டு அந்த கனமான தகட்டுகல்லானது அசைந்து புலியின் மேலே விழும். அப்படி மேலே விழுந்த உடன் புலி அகப்பட்டுக் கொள்ளும். உடனே புலியின் உடம்பு முழுதும் சங்கிலிபோட்டு பிணைத்து கட்டி இழுத்துச் சென்று காளி கோயிலில் தலை கீழாக தொங்கப் போடுவார்கள். தடிகொண்டு ஆளாளுக்கு அடிப்பார்கள். அத்தனையும் அதுதாங்கி உறுமும். அப்படி அடித்து அடித்து முடித்து கடைசி அடி விழுந்து அதற்கு உயிர் போகும் வரைகூட புலியினுடைய உறுமல் ஒயவே ஒயாது. அதுபோலத்தான் மனிதனுடைய ஆணவமும். என்ன செய்தாலும் கடைசி வரை ஒயாது.

✦✦✦✦✦✦✦

ஒரு மாடு சினையாகிறது, அதன் வயிற்றுக்குள் கன்றுக் குட்டி இருக்கிறது. மாட்டின் வயிறு பூமிக்கு மேல் இரண்டரை அடி

உயரத்தில் இருக்கிறது. இப்போது மாட்டின் வயிற்றிலுள்ள கன்றுக் குட்டிக்கு உணவு பூமியிலிருந்து இரண்டரை அடி உயரத்தில் கிடைக்கிறது. மாடு ஈன்றபின் கன்றுக்குட்டி உணவிற்கு மாட்டின் மடியை நோக்கி செல்கிறது. மடியானது வயிற்றுக்கு கீழே பூமியிலிருந்து ஒன்னரை அடி உயரத்தில் இருக்கிறது. கன்றுக்குட்டி கீழே பால் குடித்து பெரிதாக வளர்ந்து விடுகிறது. அடுத்து அதற்கு பால் ஆகாரம் அல்ல. புல்தான் ஆகாரம். அதற்கு எங்கே செல்கிறது? பால் மடியை விட்டு இன்னும் கீழே பூமிக்கு தன் வாயை கொண்டு செல்கிறது. இப்படி படிப்படியாக மாடு தன் உணவிற்கு கீழே இறங்கி வாயை கொண்டுபோகிறது. பிறகு ஒருநாள் மண்ணோடு மண்ணாகி விடுகிறது.

இப்போது மனிதனின் நிலையைப் பார்ப்போம். ஒரு தாய் கருவுருகிறாள். அவளுடைய வயிறும் பூமியிலிருந்து இரண்டரை அடி உயரத்தில் இருக்கிறது. அக்கருவிற்கு உணவு அங்கேயே அளிக்கப்படுகிறது. தாய் குழந்தையை பெறுகிறாள் - இப்போது குழந்தை இன்னும் உயரமாக மார்பில் பால் குடித்து பெரியதாகிறது. பெரிதானவுடன் உணவை தானே எடுத்து வாயில் உண்டு பசியாறுகிறது. வாய் - மார்பை விட உயரத்தில் மேலே உள்ளது. இதற்கு மேலும் இவனுக்கென்று செவி உணவு ஒன்று உள்ளது. அதை உண்பதற்காக காதுகளும் வாயிற்கு மேல் நிலையில் தான் உள்ளது. இவன் மிருகத்தைப் போல் கீழ்நோக்கி உணவுக்கு செல்வதில்லை அதோடு மண்ணோடு மண்ணாவதுமில்லை. இவன் செல்ல வேண்டிய மேலுலகம் ஒன்று உள்ளது. அதை கை போடுவதற்கு வந்தவன் என்று இவனுக்கு உணர்த்தவே இவ்வளவும்.

1928ம் வருடம் தெய்மவர்கள் மதினாவில் னபிகள் ருயகம் அடக்கமான மதினா முனவ்வராவிற்கு சென்று னபி பெருமானவர்களின் றவுலாசரிபில் இருந்து குருமணி மாலை பாடியது ரூம் அனைவரும் அறிந்ததே.

அதன் பிறகு யாத்திரை முடிந்து ஏடன் துறைமுகத்தில் கப்பலில் ஏறி வந்து கொண்டிருந்தார்கள். அப்போது கடற் பயணத்தில் னிகழ்ந்த ஒரு பெரும் விபத்து ஆதி ஊழி விதியின்படி எப்படியோ அதிசயமாக தவிர்க்கப்பட்ட ஒரு ஆச்சர்யமான னிகழ்ச்சி ஒன்று உள்ளது.

அதுனேரம் கப்பல் கடலில் சென்று கொண்டிருந்தது. அப்போது பலமான பனிப் புயல் விசியது. கனத்த மேகங்கள் வேறு கப்பலை சூழந்து கொண்டது. பனிப் புயல் வேகமாக வீசியதால் பனிக் கட்டியும் கடல் தண்ணீரும் கப்பலுக்குள் வீழ்ந்து ரொம்பியது. தண்ணீர் னிரம்பி கப்பல் கொஞ்சும் கொஞ்சுமாக கடலில் மூழ்கிவிடும் அபாயத்தை உணர்ந்த கப்பல் கேப்டன் அபாய அறிவிப்பை வயர்லஸ் மூலம் மற்ற கப்பல்களுக்கும் துறைமுகங்களுக்கும் தெரிவித்தார். மேலும் கப்பலில் இருந்த பயணிகள் எல்லோருக்கும் லைப் – பெல்ட்டை அணிந்து கொள்ளும்படி கூறினார். மேலும் கப்பலில் இருந்த எல்லா பிரயாணிகளையும் அவரவர் குல தெய்வத்தை வேண்டி பிரார்த்தனை செய்யும்படி கேட்டுக் கொண்டார்.

கப்பல் கேப்டன் கேபின் அறைக்குள் சென்று அறைக் கதவை பூட்டிக் கொண்டு கப்பலுடன் தானும் மூழ்கப் போவதாகவும், அப்படி செய்வதுதான் தன்னுடைய கடமை என்றும் கூறினார். அதன்பிறகு

ஏதோ திடீர் யோசனை ஒன்று கப்பல் கேப்டனுக்கு வந்தது. கடைசி முயற்சியாக வெளியேவந்து கப்பல் சிப்பந்திகளை அழைத்து கப்பலில்

உள்ள பீரங்கிகளில் குண்டுகளை திணித்து தொடர்ந்து வெடிக்கச் செய்யுமாறு உத்தரவிட்டார். இது னல்ல விளைவாக மாறியது. பீரங்கியிலிருந்து தொடர்ந்து குண்டுகள் வெடித்ததால் பனி மேக மூட்டம் விலகியது. ஆபத்து அறவே னீங்கியது. கடல் னீரில் மூழ்கிக் கொண்டிருந்த கப்பல் எப்படியோ மேலே எழும்பியது. இதைக் கண்ட பிரயாணிகளும் கப்பல் கேப்டனும் மிகுந்த மகிழ்வுற்றனர். வெளியே வந்த கேப்டன் "இது எப்படி னடந்தது என்று எனக்கே புரியவில்லை"! என்றார். அனைவருக்கும் ஆச்சர்யமாகவும் இருந்தது. கப்பல் கேப்டன், அபாயம் னீங்கிய விபரத்தை மற்ற கப்பல்களுக்கும், துறைமுகங்களுக்கும் தெரிவித்து விட்டு, கப்பலை பம்பாயை னோக்கிச் செலுத்தினார். கப்பல் எவ்வித ஆபத்தும் இன்றி பம்பாய் துறைமுகம் வந்து சேர்ந்தது. ஆண்டவர்களும், பெரியம்மாவும் னலமுடன் பம்பாய் வந்து சேர்ந்தனர். தெய்மவர்களை தொடர்ந்து வந்து காத்துனிற்கும் ஆதி ஊழி விதியானதுதான் ஆபத்தில் சிக்கி மூழ்க இருந்த அந்த கப்பலை முழுகாமல் காப்பாற்றியது என்பது யாருக்கும் தெரியாத ஒரு அதிசயமாகும்.

◆◆◆◆◆◆◆

னமது தெய்வபிரான் பாட்டையருடன் அகில வலம் வரும் காலத்தில் ஒரு சமயம் ஒரு சிறிய னகரத்தை அடைந்த போது அந்த ஊரின் ஒரு சந்து முனையில் ஜனக்கூட்டம் திரளாக இருந்துகொண்டு யாரையோ வேடிக்கை பார்த்து கொண்டிருந்தது.

இதை தூரத்தில் இருந்து கொண்டே பாட்டையரும் தெய்வமும் கவனித்திருந்தனர். அப்போது அந்த ஜனக்கூட்டத்தில் இருந்து வெளியே வந்த சிலர் ஆண்டவர்கள் அருகே வந்து னின்றனர்.

'என்ன விசேடம் அங்கு?' என்று ஆண்டவர்கள் அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள் 'அங்கு மூலப்புளி சாமியார் என்ற ஒருவன் மலத்தை தின்று கொண்டிருக்கிறான். அதைத்தான் ஜனங்கள் வேடிக்கை பார்க்கிறார்கள் என்று கூறிய பிறகு 'அதை எப்படி திங்க முடிகிறது என்று தெரியவில்லை!' என்றும் சொன்னார்கள்.

அதற்கு ஆண்டவர்கள் அவர்களை பார்த்து ''அது வேறொன்றுமில்லை. சென்ற ஜென்மத்தில் அவன் தெரு நாயாக இருந்தான். அப்போது சீமான் ஒருவன் வீடு அந்த தெருவில் இருந்தது. அவனுடைய சிறு குழந்தை வீட்டுக்கு வெளியே வந்து மலத்தை கழித்து கொண்டிருந்தது. சுற்றி பணியாட்களும், வேலை ஆட்களும் நின்றிருந்தனர்.

அப்போது அந்த குழந்தை கழித்த மலத்தை இந்த தெரு நாய் ஓடிவந்து வாய்வைத்து தின்ன ஆரம்பித்தது. அருகில் இருந்த வேலையாட்கள் கோபம் கொண்டு எங்கள் குழந்தை மலத்தை போய் வாய் வைக்கிறாயே என்று கட்டை எடுத்து ஓங்கி மண்டையில் அடித்தார்கள். இந்த தெருநாய் உடனே மண்டையை கீழே போட்டு விட்டது. உடனே உயிர் போக ஆரம்பித்தது. அப்போது தெரு வழியாக ஒரு முனிவர் வந்தார். உயிர்போகும் நேரத்தில் இறுதியாக அவரை அந்த நாய் பார்த்தது . முனிவரும் அதனை பார்த்தார். அவரின் பேரிரக்கத்தால் அந்த நாய்க்கு இப்போது மனித பிறவி கிடைத்தது. அது தான் இவன்.

ஆனால் அவனால் நாயாய் இருந்து உயிர் பிரியும் போது அந்த மலத்தை தின்ன பழக்கம் மட்டும் இன்னும் விடவில்லை. அதை அப்படியே இன்னும் தின்று கொண்டிருக்கிறான்'' என்று ஒரு கதையை வந்தவர்களிடம் ஜோடித்து விட்டார்கள்.

இதனை பக்கத்தில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த பாட்டையர் 'குபுக்' என்று சிரித்து விட்டார்களாம்.

பாட்டையரின் திருமுகத்தில் சிரிப்பையே பார்த்திராத ஆண்டவர்களுக்கு, இப்போது இவர்கள் சொன்ன கதையை கேட்டு அவர்களுக்கு சிரிப்பு வந்து விட்டதை கண்டு அப்போது மிக்க சந்தோஷப் பட்டார்களாம். இப்படி இந்த கதையை ஆண்டவர்கள் ஒரு முள் சொல்லிமுடித்தார்கள்.

போலி சாமியார்கள் உலகில் எவ்வளவு மடத்தனமாக காரியங்களை செய்து பிழைக்கிறார்கள் என்பதை அறிவிக்கவே இந்த கதையை சொன்னார்கள்.

✧✧✧✧✧✧

ஒரு முறை தெய்மவர்களின் திருச்செவி கேட்க மாணிக்கவாசகப் பிரானின் பாடலாகிய:

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்

என்ற பாட்டை ஒரு முறை பாடிய போது ஆண்டவர்கள் ''மணிவாசகப் பிரான் குருந்த மரத்தடியில் அல்லவா தம் குருபிரான் அம்பலவாணருடன் ஞான வாழ்க்கை னடத்தினார்கள். அப்போது அங்கு இன்னிசை பாடவும் வீணை, யாழ் வாசிக்கவும் யார் அங்கு இருந்தார்கள்? அவர்கள் வாழ்ந்த னிலையில் இவை ஒன்றுமே அப்போது அங்கு இல்லையே! இது அவர்களுக்கு பொருந்தாது. வேறுயாருக்கு பொருந்தும் ?'' என்று கேட்டார்கள். காலம் உருண்டோடிற்று.

ஒரு முறை ஆண்டவர்களிடம் ''விடியற்காலை தோத்தரித்து பாடும்படி பஞ்சுணை எழுச்சி பாடல் ஒன்று இயற்றி அருள வேண்டும்'' என்று அனந்நாதி தேவர்கள் விண்ணப்பித்தனர்.

அதற்கு ஆண்டவர்கள் ''உன் பாட்டையர் சயனித்து நான் ஒருமுறை கூடப் பார்த்ததில்லை. நாம் பஞ்சுணை எழுச்சி எழுதினால் அவர்களைத்தானே தோத்தரிக்க வேண்டும். அது பொய்யாக அல்லவா போய் விடும்? நீங்கள் வேண்டுமானால் பாடுங்கள்''. என்றார்கள். உடனே மெய்வழி கலைமகா அனந்நரும் அனந்நாதி தேவர்களும் தங்களுக்கு தெரிந்தவரையில் பிரயாசைப்பட்டு பஞ்சுணை எழுச்சி பாடலை எழுதி தெய்வத்திடம் சமர்ப்பித்து பாடுவதற்கு உத்திரவு கேட்டார்கள். அதை ஆண்டவர்கள் திருப்பார்வை செய்து அடியோடு திருத்தி அமைத்தார்கள்.

அன்று மணிவாசகப்பிரான் பாடலை பாடிய போது அது தங்களைப் பற்றிய தீர்க்க தரிசனத்தை குறிக்கிறது என்று அப்போது சொல்லாமல் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அப்போது நம் அறிவுக்கு அது புலப்படவில்லை. இதற்கு பிறகுதான் எல்லோரும் இந்த தீர்க்க தரிசனத்தை உணர்கிறோம். எல்லோரும் விடியற் காலையில் இன்னிசையுடன் திருப்பஞ்சுணை எழுச்சிப் பாடலை இங்குதானே பாடிக் கொண்டிருக்கிறோம்.

இதுவரை எந்த ஒரு அவதார புருஷருக்கும் அவர்கள் தூலம் இருக்கும்போது பஞ்சுணை எழுச்சி பாடப் பெறவில்லை. ''பஞ்சுணை எழுச்சி ஐயன் பாரினில் உள்ளபோதில்லை'' என்று இதைத் தங்களின் பாடல் ஒன்றில் ஆண்டவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

யுக இறுதி னீதித் தீர்ப்பரான னம் தெய்வமவர்களுக்கு மட்டுமே பொன்னரங்நத் தேவாலயத்தில் னுள் தோறும் விடியற்காலை பஞ்ஞுணை எழுச்சி தொடர்ந்து பாடப் பெற்று வரும் என்பதை அன்றே தீர்க்க தரிசனமாக மாணிக்க பிரான் பாடியுள்ளார் என்று தெள்ளத் தெளிவாக தெரிகிறது.

காலந் நாட்டிய காரண பாவில்

''பஞ்ஞுணை யெழுப்பும் சீரும்

பகிரங்நம் பாரின் னுளே'' – என்று னமது பிரான் எழுதியுள்ளார்கள்

''குருபரர் மெய்வழிச் சாலையைச் சார்ந்திடும்

குவலயத் தீரேயீ துண்மையுண்மையே!''

⟡⟡⟡⟡⟡⟡⟡

ஆண்டவர்கள் ஆலயத்தில் அமர்ந்திருக்கும்போது அவர்கள் திருமேனியில் இருந்து செண்பகப் பூ மணம் கமழ்ந்து கொண்டிருக்கும் என்பது னும் அறிந்நதே. ஆண்டவர்களுக்கு அருகில் அமர்ந்திருக்கும் பிறவியர்கள் இதை னன்கு அனுபவிப்பர். ஆண்டவர்கள் செண்பகப் பூ வாசமுள்ளவர் என்று தீர்க்க தரிசனங்நள் பல எடுத்து காட்டுகின்றன.

''தேகமடா – செண்பகப் பூ வாசமுள்ளாள்'' – என்று அகத்திய மாமுனிவர் கூறுகிறுர்.

ஒரு தடவை ஆண்டவர்கள் சட்டை இறுக்கமாக இருக்கிறது என்று கழற்றி மெய்வழி னச்சேத்திர அனந்நரிடம் கொடுத்து, அவரை போட்டுக்கொள்ள உத்திரவிட்டார்கள். அந்நச் சட்டையை அவர் போட, அந்நச் சட்டையிலுள்ள மணம் அவரால் தாங்நமுடியாத அளவு மணம் வீசியது. இதைப்பற்றி ஆண்டவர்கள் சன்னிதானத்தில் அவர்

சொன்ன போது "அட....... துவைத்து போட்டுக் கொள்ளுடா" என்று ஆண்டவர்கள் உத்தரவிட்டார்கள்.

ஒரு தடவை மெய்வழி சந்திரோதய அனந்தரிடம் ஆண்டவர்கள் "எங்கேடா சட்டை தைக்கிறாய்?" என்று கேட்டார்கள். "அன்னவாசலில் தைக்கிறேன்" என்று அவர் சொன்னார். ஆண்டவர்கள் "எனக்கும் ஒரு சட்டை தைத்துக் கொண்டு வா" என்று சொல்லி புதுத்துணியுடன் அளவுக்கு தைக்க தங்களுடைய பழைய சட்டையையும் கொடுத்தனுப்பினார்கள்.

அவைகளை மெய்வழி சந்திரோதய அனந்தர் அன்னவாசல் தையல்காரரிடம் தைக்க கொடுத்தார். அந்தத் துணிகளை வாங்கிய கடைக்காரர் "இந்த சட்டை இப்படி மணம் வீசுகிறதே – இது செண்டு வாசனை கூட இல்லையே! எப்படி?" என்று கேட்டார். அதற்கு மெய்வழி சந்திரோதய அனந்தர் "இது ஆண்டவர்கள் திரு உடலில் போட்ட சட்டை. அப்படித்தான் மணம் வீசும்" என்று தெரிவித்தாராம்.

சித்தரஞ்சனுக்கு ஆண்டவர்கள் எழுந்தருளிய போது, தன்னுடைய துணிகளை ஒரு பெட்டியில் வைத்திருந்தார்கள். அந்தத் துணிகளை துவைத்து தருகிறேன் என்று மெய்வழி வரதராஜ அனந்தர் ஆண்டவர்களிடம் விண்ணப்பித்தார். ஆண்டவர்களும் தங்களுடைய துணிகளை மெய்வழி வரதராஜ அனந்தரிடம் கொடுத்தார்கள். ஒரு வாளியில் துணிகளை போட்டு தண்ணீர் விட்டு அவர் அலசினார். அவ்வளவுதான். உடனே துணிகளிலிருந்து சோப்பின் வாசனையையும் மீறி சம்பங்கி – செண்பகப் பூவின் மணம் கும்மென்று வீசத் தொடங்கியது. அலசிய அந்த தண்ணீரை அப்படியே ரோஜா செடிக்கு விட்டு விட்டார்.

மெய்ஞ்ஞானம் என்ற பெயரில் போலி பாசாண்டி சாமியார்கள் வயிற்றுப் பிழைப்புக்காக உலக மக்களை எப்படியெல்லாமோ ஏமாற்றி வருவதை ஆண்டவர்கள் அடிக்கடி சபையில் கூறி எச்சரிப்பது வழக்கம். தமது இளம் பருவத்தில் ஞானம் இது தான் என்று அறியாமல் ஞான வேட்கையின் காரணமாக பனிரெண்டு போலி பாசாண்டி அஞ்ஞானியர்களிடம் ஏமாந்த வரலாற்றை அடிக்கடி சபையில் திருவாய் மலருவார்கள். அப்படி ஆண்டவர்களை ஏமாற்றியவர்கள் பட்டியிலில் ஒரு காளி பூஜை சாமியாரும் ஒருவர்.

இந்த சாமியார் தன்னிடம் வரும் ஞான இச்சை உடையவர்களை காளி பூஜை போடச் சொல்லுவார். அதாவது நடு இரவில் ஆள் அரவம் இல்லாத இடத்தில் ஒரு புளிய மரத்தில் உச்சாணி மரக் கொம்பில் பதினாறு கயிறுகளைக் கட்டி தொங்க விடுவார். பின் அந்த பதினாறு கயிறுகளையும் ஒன்றாக சேர்த்து முடிச்சுப் போட்டு அதில் ஒரு உறியை கட்டித்தொங்கவிடச் சொல்லுவார். ஞான இச்சையுடன் சாமியாரைத் தேடி வந்தவர் தலையினை உறியில் வைத்து தலை கீழாக நின்றுக் கொண்டு தொங்கிக் கொண்டு இருக்கும் பதினாறு கயிறுகளையும் ஒவ்வொன்றாக அரிவாளால் ஆடிக் கொண்டே வெட்டச் சொல்லுவார். பதினாறாவது கயிற்றை வெட்டி முடித்தவுடன் கயிற்றை வெட்டும் பக்தனுக்கு அவன் தீரத்தை மெச்சி காளி பிரசன்னமாகி வேண்டிய வரங்களை பக்தனுக்கு கொடுப்பாளாம்.

காளி பூஜை சாமியார் இப்படி சொல்லிக் கொண்டிருந்ததற்கு காரணம் எவரும் தன்னுடைய உயிருக்கு ஆபத்து தேடிக் கொள்ள மாட்டார்கள் என்ற நம்பிக்கையே ஆகும். ஆண்டவர்கள் தன்னுடைய இளமை வேகத்தில் இந்த போலிச் சாமியாரைச் சந்தித்தார்கள். அந்தச் சாமியார் மற்றவர்களுக்குச் சொன்ன காளி பூஜை செய்ய வேண்டிய

விபரங்களை ஆண்டவர்களிடமும் சொன்னார். ஆண்டவர்களும் காளி பூஜை செய்ய உடனே ஒத்துக் கொண்டார்கள். பூஜைக்கு நாளும் குறித்தாயிற்று. புளியமரத்தில் பதினாறு கயிறுகளையும் கட்டி அவற்றை ஒன்றாக முடிந்து உரியை கட்டி தொங்கவிடப்பட்டது. நடு இரவில் காளி பூஜை ஆனவுடன் ஆண்டவர்கள் கையில் அரிவாளுடன் மரத்தில் ஏறினார்கள்.

உரி கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும் உச்சாணிக் கிளைக்கு ஏறினார்கள். பின்பு உரியில் தலையை வைத்து கால்களை கயிற்றில் பின்னிக் கொண்டு தலை கீழாகத் தொங்கினார்கள். பின் கையில் உள்ள அரிவாளால் ஒவ்வொரு கயிறாக வெட்ட ஆரம்பித்தார்கள். தலை கீழாக உரியில் ஆடிக் கொண்டே நான்கு கயிறுகளை வெட்டி விட்டார்கள். இதை தரையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த சாமியார் ஆண்டவர்கள் முழு மூச்சுடன் கயிற்றை வெட்டுவதைப் பார்த்து அசந்து விட்டான். எல்லா கயிறுகளையும் வெட்டி விட்டால் மரத்தின் உச்சாணிக் கிளையிலிருந்து தரையில் கீழே விழுந்தால் ஆண்டவர்கள் உயிர் பிழைப்பது கடினம். இதை உணர்ந்த சாமியார் பயந்து இதென்ன வம்பில் இந்த முரடரிடம் மாட்டிக் கொண்டோம் என்று நினைத்து பக்கத்தில் இருந்த செடி, கொடிகளை வெட்டி தரையில் உயரமாக பரப்பி விட்டு விட்டு – இவர் விழுந்தால் எப்படியாவது பிழைத்துக் கொள்ளட்டும். இல்லா விட்டால் நாம் தான் பதில் சொல்ல வேண்டும் என்று அஞ்சி அங்கிருந்தால் தம் மேல் பழி விழும் என்று பயந்து ஓடி விட்டான்.

ஆண்டவர்கள் பதினாறு கயிறுகளையும் வெட்டியவுடன் தரையின் மேலே விரித்திருக்கும் செடி, இலை, கிளைகளின் மீது பொத்தென்று விழுந்தார்கள். எழுந்திருந்து பார்க்கும் போது காளியும்

பிரசன்னமாகவில்லை. சாமியாரையும் காணோம். இந்த சம்பவத்திலிருந்து ஆண்டவர்களின் ஞான வேட்கையும் ஞானத்தை அடைவதற்காக தன்னுடைய உயிரையும் ஆபத்துக்குள்ளாக்க அவர்கள் தயங்கியதில்லை என்பது இதனால் தெரிகிறது.

◆◆◆◆◆◆◆

மேலும் ஒரு போலிச் சாமியாரை பற்றி ஆண்டவர்கள் கூறியுள்ளார்கள். இந்த போலிச் சாமியார் தம்மை சந்திப்பவர்களுக்கு கீழே குறிப்பிட்ட ஒரு சோதனையை செய்யச் சொல்லி ஏமாற்றுவது வழக்கம். ஒரு குளத்தில் கழுத்தளவு தண்ணீரில் இருந்து கொண்டு மூன்று நாட்கள் மதுரை வீரச்சாமியை நினைத்து பூஜை செய்ய வேண்டும். ஆகாரம் ஏதுவும் அருந்தக் கூடாது. அப்படி ஒருவர் கடுமையான விரதத்தில் இருந்தால் அவன் முன்பு மதுரை வீராச்சாமி பிரசன்னமாகி வேண்டிய வரங்களை கொடுப்பார் என்பதுவே அது.

தாம் அப்படி இருந்து அவரிடம் பல சித்திகள் பெற்றதாக அவன் ஏமாற்றுவான். இந்த போலிச் சாமியாரைப் பற்றி கேள்வியுற்ற ஆண்டவர்கள் அவனை சந்திக்கச் சென்றார்கள். 'நீ வேண்டுமானால் அப்படி இருந்துபார். இருந்தால் உனக்கும் வீராசாமி தரிசனம் ஆவார்' என்று அந்த போலிச்சாமி சவால் விட்டான். ஆண்டவர்களும் ''சரி'' என்று அந்த போலிச் சாமியார் கூறியபடியே தாமும் ஒரு குளத்தில் கழுத்தளவு தண்ணீரில் நின்று கொண்டார்கள். உடம்பு நீருக்கு மேலே வந்து விடாமலிருக்க ஒரு கல்லை வேறு கட்டிக் கொண்டார்களாம். மூன்று நாட்கள் அன்ன ஆகாரம் இன்றி கடுமையாக ஜபித்து கொண்டு இருந்தார்கள். கை, கால்களெல்லாம் தண்ணீரிலேயே இருந்து சூம்பிப் போய் விட்டனவாம்.

அப்படியும் ஆண்டவர்கள் ஜபத்தை விடவில்லை. இதைக் கண்ட போலிச் சாமியார் மிகவும் அசந்து விட்டான். இந்த போலி சாமியாரின் சவாலை கேட்டு எவரும் இப்படி கடுமையான சோதனையை ஏற்றுக் கொண்டு நடந்தது இல்லை. ஆண்டவர்கள் இந்த சோதனையை முடித்து விட்டால் வீராசாமி ஏன் வரவில்லை என்று வந்து கேட்பாரே என்று இந்த போலி சாமியார் பயந்தான். தம்முடைய ஏமாற்று சவால் வார்த்தையில் இருந்து தப்பித்து ஆண்டவர்களுக்கு பதில் சொல்ல வேண்டுமே என்று ஒரு யுத்தி செய்தான். தன்னுடைய இரு கை விரல்களை சேர்த்து மூடிக்கொண்டு குதிரைக் குளம்புப் போல குளக்கரை மணலில் குத்தி குத்தி பதிவுச் செய்தான்.

ஆண்டவர்கள் மூன்று முட்கள் அந்த போலிச் சாமியார் சொன்னபடி தண்ணீரில் இருந்து விட்டு வெளியே வந்நார்கள். அப்போது ஆண்டவர்களைப் பார்த்து அந்த போலிச் சாமியார் குளக்கரை மணலில் தான் பதிவு செய்த குதிரைக் குளம்புகளைக் காட்டி "மதுரை வீராச்சாமி குதிரையில் வந்து பிரசன்னமாகி கொஞ்ச நேரத்திற்கு முன்பு இப்பதான் சென்று விட்டார். நீ கவனிக்கவில்லை. இதோ பார் அடையாளத்தை!" என்று கையில் குத்திய குளம்பு அடையாளத்தைக் காட்டினான். இவன் சொல்வதை கேட்டவுடன் ஆண்டவர்கள் இவன் யுத்தியாக தம்மை ஏமாற்றுகிறான் என்று புரிந்து கொண்டார்கள்.

ஆண்டவர்கள் சிறுவராக இருந்த போது மாடு மெய்ந்த காலடி குளம்பு அடையாளத்தின் மேல் மாடு மேய்க்கும் சிறுவர்கள் கையினால் குத்தி குத்தி பதிவு செய்து விளையாடி கொண்டிருப்பதை கண்டிருக்கிறார்கள். ஆகவே ஆண்டவர்கள் "ஆமாம் இப்ப கூட மதுரை வீராச்சாமி வருகிறார் பார்" என்று கூறி தங்களுடைய திருக் கரத்தினால் மணலில் குதிரைக் குளம்பு போல இவர்களே குத்தி

காட்டினார்கள். இதைக் கண்டவுடன் தன்னுடைய குட்டு வெளிப்பட்டு விட்டது என்று தெரிந்து கொண்டு ஒன்றும் சொல்லாமல் வேகமாக சென்று விட்டான்.

இதே போன்று இன்னொரு கதையையும் கூறுவார்கள். ஆண்டவர்கள் இளவயதில் ஒரே இச்சையுடன் ஞானத்தை அடைய வழி ஏதாவது உண்டா என்று எப்போதும் தேடியவாறு இருந்தார்கள். அப்போது பக்கத்து காட்டில் ஒரு மகான் இருக்கிறார் அவர் அன்ன ஆகாரமின்றி பல மாதங்கள் ஒரே இடத்திலிருந்து தவம் செய்கிறார் என்ற கேள்வியுற்ற ஆண்டவர்கள் அந்த ஆஸ்மரத்தை நோக்கி சென்றார்கள். அங்கு நிரந்தர பக்தர்கள் என்ற பெயரில் சில அடியாட்களும் மற்றும் சாமியாரைபார்க்க ஏமாந்து வந்து வந்து போகும் சில ஜனங்களும் குழுமி இருந்தனர். இப்படி வருவாரும் போவாரும் காணிக்கை செலுத்துபவர்களுமாக அனேகம் பேர் அங்கு காணப்பட்டார்கள். இங்கு தனக்கு ஞான பாக்கியம் கிடைக்கலாம் என்ற இச்சை தூண்டப் பெற்றவர்களாக அங்கும் சில நாட்கள் தங்கி ஞானம் ஏதாவது சித்தியாகுமா என்று ஆராய்ந்தார்கள்.

அந்த ''சாமியார்'' யாரிடமும் பேசுவதில்லையாம். அங்கிருந்த நிரந்தர பக்தர்களுக்கும் ஞான வாழ்க்கையைப் பற்றி எள்ளளவும் தெரிந்ததாக தெரியவில்லை. இருப்பினும் சாமி சாப்பிடாமலிருக்கும் அதிசயத்தை காணவே அங்கே ஏராளமான ஜனங்கள் வருகிறது என்பதை கண்டார்கள். இவன் போலி என்று ஆண்டவர்கள் தெரிந்து கொண்டதும் தொடர்ந்து அங்கு தங்குவதில் எந்த உபயோக மில்லை என்று தீர்மானித்தாலும் சாமியார் சாப்பிடாமலிருக்கும் இரகசியத்தை கண்டறிய வேண்டும் என்று விரும்பினார்கள். நிரந்தர பக்தர்களுடன் தானும் ஒன்றாக தங்கி கூர்ந்து கவனித்து வந்தார்கள்.

அங்கு விசேடம் என்னவென்ருல் தினமும் காலை, மதியம், மாலை இம் மூன்று வேளைகளிலும் உரிக்காத தேங்காய் பரிமாணமுள்ள பெரிய **பூ பந்துகள்** கூடையில் உள்ளே செல்லும், மாலை ஆனதும் அவைகள் சுருட்டப்பட்டு பெரிய பந்தாக அதே கூடையில் வெளியே வந்து விடும்.

இப்படியே தினமும் னடந்ததால். இதில் தான் சூக்ஷமம் இருக்க வேண்டும் என்று யூகித்த ஆண்டவர்கள், பூ பந்தை சுமக்கும் பணியை வலிய சென்று ஏற்றுக் கொண்டார்கள். உதவி செய்வதுபோல் வந்து கூடையை தூக்கி பார்த்தார்கள். கூடை பூக்கூடை போல் இல்லாமல் மிகவும் கனமாக இருந்தது. யாருக்கும் தெரியாமல் பூ பந்து மீது கை வைத்து விரல்களால் அமுத்தி பார்த்தார்கள். அது வெது வெதுப்பாக இருப்பதை உணர்ந்தார்கள். கையை எடுத்தவுடன் பூ மணம் ஏதுமில்லை பிரியாணி வாடைதான் கையில் வீசிற்று. ஆண்டவர்களுக்கு பளிரென்று அங்கு பூபந்து வந்து போகும் னடை முறையின் னோக்கம் னன்கு புலனுயிற்று.

உணவு வரும் வழியைக் கண்டு கொண்டதனுல் அதே பூப் பந்தில்தான் அவன் கழிவும் வெளியேற வேண்டுமென்று யூகித்து, அருகாமையில் ஏதாவது பள்ளம் படுகுழி இருக்கிறதா என்று சுற்றுவட்டாரத்தில் பார்த்ததில் கண்ணுக்கு எட்டிய ஒரு தொலைவில் ஒரு பாழுங்கிணற்றில் அந்த பூபந்துகள் னிரம்பி னாற்றம் எடுத்து ஈக்கள் மொய்த்துக் கொண்டு இருந்ததை கண்ணுற்ருர்கள். உடனே இந்த போலி சாமியார் இருந்த இடத்தை விட்டு வெறுப்புடன் இவனையும் ஒரு ஞானி என்று னினைத்து வந்து ஏமாந்தோமே என்று மனதிற்குள் திட்டி கொண்டே திரும்பி வந்து விட்டார்கள்.

ஜோதி தரிசனம் காட்டுவதாக ஏமாற்றிய மற்றொரு போலி சாமியாரின் ஒரு புரட்டு பற்றியும் தெய்வம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த இளவயதில் கேரளாவில் ஒரு காட்டில் ஜோதி சாமியார் என்று ஒருவன் இருந்தான். ஆண்டவர்கள் அங்கும் சென்றார்கள். அவன் தனது மார்பில் ஜோதி தரிசனம் காண்பிப்பதாக சொல்லி மக்களை ஏமாற்றி கொண்டிருந்தான். அது எப்படி என்று விசாரிக்க அங்கு இருந்த ஒரு பணியாளினை ரகசியமாக சந்தித்து "ஜோதி தரிசனம்" என்று எந்த முறையில் ஏமாற்றுகிறான் என்ற விவரத்தை தெரிந்து கொண்டார்கள். சாமியாரின் அறையில் அவன்'னேர் எதிரே உள்ள கதவின் பின்பக்கத்தில் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருக்கும். அந்த விளக்கு எரிவது அறையின் வெளியே இருந்து வந்து பார்ப்பவர்களுக்குத் தெரியாது. சாமியார் ஒரு கருப்பு சட்டை அணிந்து கொண்டு இருட்டில் அமர்ந்து கொண்டு சட்டைக்குள் சின்ன முகக் கண்ணாடியை மறைத்து வைத்திருப்பான். எதிரில் மறைவாக வைக்கப் பெற்றிருக்கும் விளக்குக்கு னேராக மார்பில் உள்ள கண்ணாடியை காட்டி கதவு துளை வழியாக வரும் ஒளியை அதில் பிரதிபலிக்கச் செய்து "ஜோதி தரிசனம்" தனது இதயத்தில் தெரிவதாக சட்டையை சற்று விலக்கிக் காட்டி பார்க்கச் செய்து மக்களை ஏமாற்றுவான் என்பதை ஆண்டவர்கள் தெளிவாக தெரிந்து கொண்டார்கள். தெரிந்து கொண்ட பின்னும் அங்கு தங்கியிருப்பது ஆபத்து என்று அறிந்து அந்த இடத்தை விட்டு வந்து விட்டார்கள்.

✧✧✧✧✧✧

ஆண்டவர்கள் பாட்டையர் தணிகை மணிப்பிரான் அவர்களுடன் அகில வலம் சென்ற ஞான்றையில் – திருப்பாட்டையர்

தெய்வமவர்களுக்கு ஜீவ ஆவி பிரசாத அருளமுதினை அருந்த அருந்த அள்ளி அள்ளி தந்த போதெல்லாம்....... 'வெள்ளியங்கிரி மலை சம்பவ அபாயங்கள் போன்றவற்றில் தம் உயிர் போயிருந்தால் பாட்டையரிடம் இருந்து இந்த தேவாமிர்த திருவருள் வாக்குகளை கேட்க முடியாமல் போயிருக்குமே என்று எண்ணி எண்ணி தோய்ந்து நினைவுறுவார்கள்' என்று ஆதிமான்மியத்தில் குறிப்பிட்டு- ள்ளார்கள். இந்த சம்பவ வரலாற்றை பற்றி ஒரு சமயம் சபையில் கூறியிருக்கிறார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள வெள்ளியங்கிரி மலையில் ஒரு போலிச் சாமியார் இருந்தான். அந்த போலிச் சாமியார் ஞானம் இச்சையுடைய பெரும் தனவந்தர்களை, தனது அடியாட்கள் மூலம் அழைத்து வந்து அவர்களிடம் உள்ள பணத்தையும் நகைகளையும் பறித்துக் கொண்டு, அவர்களை அடித்து விரட்டி விடுவதுடன், முடியாத பட்சத்தில் கொலையும் செய்து விடுவானும். ஆண்டவர்கள் செல்வந்தராக நகையும், பணமும் வைத்திருப்பதை அறிந்து போலிச் சாமியாரின் அடியாட்கள் ஆண்டவர்களிடம் வந்து பேசி மலைக்கு அழைத்துச் சென்றார்கள். போகும் வழியில் ஆண்டவர்களுக்கு அவர்கள்மேல் சந்தேகம் வந்ததால், சிறுநீர் கழிப்பதாக சொல்லிவிட்டு, தாம் அணிந்திருந்த நகையையும், பணத்தையும் ஒரு துண்டில் சுருட்டி, செடி மறைவில் ஒளித்து வைத்துவிட்டு, வைத்த இடத்தை அடையாளம் பார்த்துக்கொண்டு வந்நார்கள். பிறகு போலிச் சாமியாரை அவனின் அடியாட்களுடன் சென்று சந்தித்தார்கள்.

வெள்ளியங்கிரி சாமியார் ஒரு போலிச் சாமியார் என்று பார்த்த உடனே தெரிந்து கொண்டார்கள். அவரிடம் ஞானம் ஏதும் இல்லை

என்பதனை ஆண்டவர்கள் தெரிந்துகொண்டவுடன், அந்த இடத்தைவிட்டு எப்படியாவது வெளியேறிவிட நினைத்து வேகமாக திரும்ப முயற்சி செய்தபோது அந்த போலிச் சாமியார் தமது அடியாட்களிடம் தெய்வம் அவர்களிடம் இருந்த பணத்தை உடனே பறிக்கும் படி சமிக்ஞை செய்தான். ஆண்டவர்கள் உடனே திரும்பி வேகமாக பாய்ந்து வெளியே வந்து விட்டார்கள். ஆனாலும் அந்தஅடியாட்கள் ஆண்டவர்களை துரத்தினார்கள். ஆண்டவர்கள் அங்குள்ள கணவாய் அருகே பாய்ந்துவந்ததும், மேற்கொண்டு போகமுடியாத சூழ்நிலை இருந்தது. அடி ஆட்கள் தன்னை தீர்த்துக்கட்ட அரிவாளுடன் வருவதை ஆற்று தண்ணீரில் கவனித்து அங்கிருந்து தன்னுடைய உயிரை காப்பாற்றி கொள்வதற்காக, அந்த கெபி பாதாளத்தில் குதித்தார்கள். அப்படி குதிக்கும் போது மரத்தின் கிளையை பிடித்தார்கள். அந்த கிளை முறிந்தவுடன் தண்ணீரில் குதித்து விட்டார்கள்.

அப்படி கிளையை பிடிக்காவிட்டால் மிக உயரத்திலிருந்து கீழே குதித்ததால் அவர்களுடைய தூல தேகத்துக்கு ஊறு ஏற்பட ஏதுவாயிருந்திருக்கும். அப்படியில்லாமல் தெய்வாதீனமாக தப்பித்தார்கள். போலிச் சாமியாரின் அடியாட்கள் ஆண்டவர்கள் தப்பிவிட்டதை அறிந்து ஏமாந்து போய் திரும்பிச் சென்று விட்டார்கள். ஆண்டவர்கள் தண்ணீரில் கொஞ்ச தூரம் நீந்திச் சென்று கரையேறினார்கள். பின்பு தாங்கள் அடையாளமாக வைத்திருந்த இடத்துக்கு சென்று, தாங்கள் மறைத்து வைத்திருந்த பொருட்களை எடுத்து கொண்டு அந்த படுபயங்கரமான போலிசாமியிடம் இருந்து தப்பி ஊர் திரும்பினார்கள்.

ஆண்டவர்கள் இராஜகெம்பீரத்தில் இருந்த போது ஆண்டவர்களை தேடி அவர்களது சீடர்கள் வருவதும் போவதுமாக இருப்பதை எப்படியோ கவனித்த ஒரு கள்வன் அவனும் தானும் ஒரு சீடப்பிள்ளை போல் அங்கு வந்து எல்லோரிடமும் பழகி பயபக்தியான பிள்ளை போன்று பாசாங்கு செய்து ஏதேனும் திருடிச் செல்வதற்கு சமயம் பார்த்தபடி வந்து போய்க் கொண்டிருந்தான்.

ஒரு நாள் விடியற் காலை இராஜகெம்பீர ஆசிரமத்திலிருந்து, வெளியே காட்டுக்கு ஆண்டவர்கள் சென்றார்கள். போகும் வழியில் ஒரு குச்சியை ஒடித்து பல்லை தேய்த்துக் கொண்டே சென்றார்கள். ஆண்டவர்களுடன் அந்தக் கள்வனும் பேசிக் கொண்டே சென்றான். அந்தக் கள்வன் நல்ல உடற்கட்டு உடையவன். மேலும் பல உடற்பயிற்சிகளையும், வித்தைகளையும் கற்றிருந்தான். ஆண்டவர்களும் அந்தக் கள்வனுடன் பேசிக்கொண்டே சென்ற போது எதிரில் ஒரு கால்வாய் தென்பட்டது. அந்தக் கால்வாயில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது.

அந்தக் கால்வாய் சுமார் 15 அடி முதல் 20 அடி வரை இருக்கும். அந்தக் கால்வாய் அருகில் வந்தவுடன் கள்ளன் அந்தக் கால்வாயை நடந்து கடப்பதற்காக தன்னுடைய வேஷ்டியை ஒரு கையால் தூக்கி பிடித்தான். ஆனால் ஆண்டவர்கள் கால்வாயின் ஒரு கரையில் நின்றபடியே ஒரே எட்டில் தாண்டி மறுகரைக்குச் சென்றார்கள். இதைக் கண்ணுற்ற கள்ளனுக்கு மிகவும் ஆச்சரியமாக போய்விட்டது. ஆண்டவர்கள் கள்ளனைப் பார்த்து, நின்றபடியே உன்னால் தாண்ட முடியாவிட்டாலும், கொஞ்சுதூரம் பின்னால் போய், ஓடிவந்து, எகிறி கால்வாயை தாண்டும்படி கூறினார்கள். அப்படியும் அந்தக் கள்வனால் கால்வாயை தாண்ட முடியவில்லை. ஆண்டவர்கள் மறுகரையில்

னின்றபடியே மறுபடியும் ஒரே எட்டில் மீண்டும் கால்வாயை தாண்டி கள்ளன் னிற்குமிடத்திற்கு திரும்பி வந்நார்கள். கள்வன் ஆண்டவர்களின் வல்லபத்தைக் கண்டு பிரமிப்பு அடைந்நான்.

ஆண்டவர்கள் ஒரு ஞானி மட்டுமல்ல, மகாபலசாலி, போர் வீரனை விட மகா சக்தி கொண்ட வல்லவர். இவர் ஒரு மாமனிதர். எல்லோரும் அவரை வணங்குவதைப் போல அவரிடம் ஞமும் உண்மையாக இருப்பதே னல்லது என்று உணர்ந்நான் ஆண்டவர்களிடம் தான் தன்னுடைய வித்தை எதுவும் பலிக்காது என்பதால் ஆண்டவர்கள் காலடியில் விழ்ந்நு மண்ணிப்பு கேட்டான். தாம் சிடனுக வரவில்லை என்றும் திருடுவதற்காக ஆசிரமத்திற்கு வந்நதாகவும், இப்போது புத்தி திருந்நிவிட்டதாகவும் - தன்னை மன்னித்து விடும்படியும் வேண்டி னின்றுன்.

மேலும் தான் ஏற்கனவே ஆண்டவர்களின் சிடர்களிடம் பல பொருட்களை திருடி இருப்பதாகவும், தற்பொழுது ஆண்டவர்களின் திருக்கரத்தில் அணிந்நிருந்ந கணையாழியை திருடுவதற்கு திட்டமிட்டு இப்போது அவர்களுடன் வந்நதாகவும் கூறி மண்ணிப்பு கேட்டு இப்போது உண்மையிலேயே தன்னை அவர்கள் சிடனுக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கதறினுன். இதுவரை செய்த தன்னுடைய தீய செயல்களுக்கு தன்னை மன்னிக்கும்படி மறுபடியும் மறுபடியும் வேண்டி கேட்டுக் கொண்டு எதிரே னின்றுன். ஆண்டவர்கள் அவனுக்கு புத்திமதி கூறி மன்னித்து சிடனுக வந்நு போய்க் கொண்டிருக்க அனுமதித்தார்கள். கள்வனையும் தெய்மவர்கள் பெருங்கருணையுடன் ஆட்கொண்ட சம்பவம் இது.

◆◆◆◆◆◆

ஸ்ரீ குருகீதையில் இருந்நு ஒரு ஸ்லோகத்தை குருஸ்தோத்திரமாக மதுரை பழஞ்ஞானலயில் தெய்வம் முன்பு பிறவியர்கள் தோத்தரித்து

கொண்டிருந்நார்கள். ஒருநாள் தெய்வம் என் முன்னாலேயே ''அஞ்ஞானமெனும் திமிரத்தால்'' என்று அவலமாக இந்த தோத்திரம் ஆரம்பிக்கிறதே என்று கவலையுற்று கூறி, கீழ்கண்டவாறு மாற்றி தோத்தரிக்க உத்திரவிட்டு அருளினார்கள். ''சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது'' என்று குருகீதையின் ஸ்லாகத்துடன் சேர்த்துச்சொன்னால் சரியாக இருக்கும் அதன்படி தோத்தரியுங்கள் என்று அருளினார்கள். அது முதல் இந்த திருத்தத்துடன் கீழ்கண்டவாறு குரு ஸ்தோத்திர மந்திரம்: ''சுயம்பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞான மெனும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமெனும் அஞ்ஞன சிலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்விய திருவடிக் கமலங்களுக்கே னமஸ்காரம்!'' என்று மாற்றப்பெற்றது.

✦✦✦✦✦✦

வள்ளல் பெருமானார் ஒரு பாடல் ஒன்றில் ''யான் கண்ட இன்பம் சாமி அறிவாரடி'' ... என்று பாடியுள்ளதை சபையில் பாடிக் கொண்டிருந்நார்கள். அது போது – ''சாமி அறிவாரடி'' என்று பாடியது தணிகை மணிப்பிரான் அவர்களைத்தானே? அவர் அடைந்த இன்பம் தணிகை மணிப்பிரானுக்கு மட்டும் தான் தெரியும் அல்லவா? அவர் காலத்தில் அவரை தவிர வேறு மெய்யறிந்த நிலை என்று ஒன்று கூட இல்லையே. வெளிப்படையாக அவர்கள் பெயரை சொன்னால் என்ன ஆகுமோ என்ற அச்சம் அந்த காலத்தில் அவ்வளவு இருந்தது. முன்வந்த பாரவான்களும் இப்படித் தானே மறைத்தே பாடி இருக்கிறார்கள்''. என்ற திருவாக்கு அருளப்பெற்றது.

✦✦✦✦✦✦

பொன்னரங்கத் தேவாலயத்தின் எதிரே உள்ள கொடிக் கம்பம் முன்பு 120 அடி உயரமாக இருந்தது. இந்தக் கொடிக் கம்பம்

இரும்பினால் ஆனது. இந்த கொடி கம்பத்தை நேரே நிமிர்த்தி ஊன்றுவதற்காக ஆண்டவர்கள் ஒரு யுக்தி செய்தார்கள். கொடிக் கம்பத்தில் நான்கு கயிறுகளைக் கட்டி ஒவ்வொரு கயிற்றையும் இரண்டு பிறவியர்களைப் பிடித்துக் கொள்ளச் செய்தார்கள். ஒரு பலமான கயிற்றால் கொடிக் கம்பத்தினை கட்டினார்கள். அதே கயிற்றின் மற்றொரு பக்கத்தை ஒரு மாட்டு வண்டியின் பின் புறம் கட்டினார்கள். ஒரு குழி தோண்டி அதனருகே கொடிக் கம்பத்தின் அடிப்பாகத்தை இருக்கச் செய்தார்கள். ஆண்டவர்கள் மாட்டு வண்டியின் மேல் ஏறிக்கொண்டு சாட்டையால் மாட்டை ஓட்டினார்கள். வண்டி நகர்ந்து போகப்போக கயிறுடன் சேர்ந்து கொடிக் கம்பம் மேலே எழுந்தது. கொடிக் கம்பத்தில் இருந்த நான்கு கயிறுகளையும் நான்கு பக்கங்களில் பிறவியர்கள் பிடித்துக் கொண்டதால் எழுந்த கொடிமரம் கீழே விழாமல் இருந்தது. ஆண்டவர்கள் கொடி மரம் நேரே நிமிர்ந்து நிற்கும் வரை வண்டியை ஓட்டினார்கள்.

அந்த சம்பவத்தை நேரில் பார்த்தவர்களில் மெய்வழி சிலம்பணி அனந்தரும் ஒருவராவார். அப்பொழுது அவர் சபையில் சேரவில்லை. ஆண்டவர்களைத் தரிசனம் செய்வதற்காக வந்திருந்தார். அவர் சொன்னதாவது ''ஆண்டவர்கள் மாட்டு வண்டியை ஓட்டியது மகாபாரதப் போரில் கண்ணன் தேரை சாரதி செய்வது போல் எனக்குகாட்சி யளித்தது'' என்று கூறினார்.

⟡⟡⟡⟡⟡⟡

நீடாழி சூழுங் கதிர்மதி கோடி நிலவொளியாய்
நாடாளும் ராஜ கெம்பீர சிங்க ராஜரிஷி
மேடான மேடி யுகத்தீசர் பொற்பதம் வேதரிஷி
கோடானு கோடி அதிவித ஞானகுரு சிஷ்டையே.

– ஞான வெட்டியான் பரசுரம்.

முதன் முதலில் 'ஆண்டவர்கள்' மாஞமதுரைக்கு அருகில் உள்ள 'ராஜ கெம்பீரத்தில்' ஆசிரமம் அமைத்திருந்நதை தேவக்கண் கொண்டு ஞான திருஷ்டியில் திருவள்ளுவ பெருமான் 'ராஜ கெம்பீர சிங்ங ராஜ ரிஷி' என்று குறித்து எழுதி உள்ளார்கள்.

✧✧✧✧✧✧✧

இராஜகம்பீரம் ஆசிரமத்திற்கு அருகே வைகை ஆறு இருக்கிறது. தெய்வத்தின் பிள்ளை ஒருவர் ஒரு தடவை வைகை ஆற்றில் போய்க்கொண்டிருக்கும் போது ஒரு திருடன் அவரை பிடித்து னன்ருக அடித்தான். வலி பொறுக்காமல் ''ஆண்டவர்களே ஆண்டவர்களே'' என்று அவர் கத்திஞர். இந்த சம்பவம் னடந்த பின்பு சில காலமாக ஆண்டவர்களை தரிசனம் செய்ய அவர் வரவில்லை.

இந்த சம்பவத்தைப் பற்றி மற்ற பிறவியர்களிடம் ''திருடன் அடித்த போது ஆண்டவர்களை கூப்பிட்டேன். ஆண்டவர்கள் வந்து என்னைக் காப்பாற்ற வில்லை'' என்று ஆண்டவர்கள் மீது வருத்தத்துடன் குறை கூறிக்கொண்டிருந்நார்.

சபைக்கு வருவதையும் னிறுத்தி விட்டார். ஆண்டவர்கள் ஒரு ஞள் அவர் வராததைப் பற்றி சபையில் விசாரித்தார்கள். அப்போது சபையில் இருந்த பிறவியர்கள் னடந்த சம்பவத்தையும் சம்பவம் னடந்த னேரத்தையும், மற்ற விபரங்ஙளையும் விரிவாக எடுத்து தெய்வத்திடம் கூறிஞர்கள். தெய்வம் சபையில் இருந்த பிறவியர்களிடம் கீழ்கண்டவாறு அருளிச் செய்து அதை அந்த பிறவியருக்கு தெரிவிக்கும்படி உத்திரவிட்டார்கள்.

''னீ ஆண்டவர்களே என்று கூப்பிட்ட னேரத்தில் ஆண்டவர்கள் ஆசனத்தை விட்டு எழுந்திருந்து ''ஏண்டா, ஏண்டா, ஏண்டா'' என்று மூன்று தடவை கூவிஞர்கள். னீ ஆண்டவர்களே என்று கூப்பிட்டாயே அன்றி ''திருடன் அடிக்கிருன்'' என்று சொல்லவில்லை. ஆகவே விசயம்

என்னவென்று தெரியாததால் ஆண்டவர்கள் வந்து உன்னை காப்பாற்ற முடியவில்லை என்று தெரிவிக்கச் சொன்னார்கள்'' என்று சொல்லும்படி சொன்னார்கள்.

மேற்கண்ட உத்திரவை சபையில் இருந்த பிறவியர்கள் சென்று பிறவியரிடம் அப்படியே சொன்னார்கள். இதை கேட்டவுடன் ''ஆமாம். அது என் தவறுதான். நான் தான் திருடன் அடிக்கிறான் என்று சொல்லவில்லை'' என்று சொல்லி அவர் ஆண்டவர்களிடம் ஓடி வந்து மன்னிப்பு கேட்டுக் கொண்டார். அப்போது ஆண்டவர்கள் அவர் அறிவுக்கு படும்படி அறிவுரையை சொல்லி அனுப்பினார்கள். அதன் பின்பு அவர் அறிவு வரப்பெற்று ஆண்டவர்களை வழக்கப்படி அடிக்கடி வந்து தரிசினை செய்தார். தமது பிள்ளைகளின் எதார்த்த அறிவின்மையையும் கூட நமது தெய்வம் அவர்கள் எப்படி எல்லாம் பொறுத்து ஆட்கொண்டார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணமாக விளங்குகிறது.

✧✧✧✧✧✧✧

ஒரு தடவை ஆண்டவர்கள் திருமாளிகையிலிருந்து வரும்பொழுது அவர்கள் அணிந்திருந்த தலைப்பாகையை சிறிய வேப்ப மரதுளிரின் கிளை ஒன்று தடுக்கியது. அந்த சிறிய கிளையை வெட்ட மெய்வழி வரதராஜ அனந்தர் அரிவாளுடன் சென்றார். அப்பொழுது ஆண்டவர்கள் அந்த கிளையை வெட்ட வேண்டாம் என்று அறிவுரை கூறி, ''ஏன்? விலகிப் போனால் போச்சு'' என்று உத்திரவிட்டு அருளினார்கள். ''வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்பது வள்ளலார் வாக்காகும். இந்த நிகழ்ச்சியில் இருந்து நமது தெய்மவர்கள் வளரும் இளம், தளிர், பூ, இலை, காய்கள் மீது கூட எவ்வளவு பாசம் வைத்திருந்தார்கள் என்பதை காண்கிறோம்.

✧✧✧✧✧✧✧

ஆண்டவர்கள் திருமுன்பாக ஒரு சமயம் வள்ளலார் பாடிய திரு அருட்பா அருள் விளக்க மாலையில் இருந்து

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாய்க் கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்த நறுந் தேன்பெய்து பசும்பாலுந் தேங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய் அளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுந் தெள்ளமுதே

என்ற பாடலை மெய்வழி நச்சேத்திர அனந்தர் பாடினார்.

தெய்வம் அவர்கள் இளநகை பிறங்க அதை கேட்டுக் கொண்டிருந்து விட்டு "வள்ளல் பெருமானார் தாங்கள் ருசித்த இன்பத்தை அப்படியே பாடிவிட்டார்கள். அவர்களுக்கு பிறருக்கு ஊட்டுகிற பாடு கிடையாது" ... என்று திருவாய் மலர்ந்தருளிவிட்டு எழுந்து திருமாளிகைக்கு சென்று விட்டார்கள்.

ஒரு சில மணி நேரத்தில் திருமாளிகையில் இருந்து திரும்ப ஆலயத்திற்கு எழுந்தருளினார்கள். வரும்போது ஒரு தாளில் ஒரு திருப்பாடலை புதிதாக எடுத்து வந்து அதை சபையில் படிக்கச் சொன்னார்கள். அது .... "தனித்த நற்றலைமை பெரும்பதி அரசை" என்று இப்போது நாம் தோத்தரிக்கும் திருப்பாடல் தான் அது.

தனித்தனற் றலைமைப் பெரும்பதி யரசைத்
தரும்புனற் றுறைசிங்கா சனரே
இனித்தமுக் கனிச்சாறு பிழிந்துதே னமுதம்
இணைந்தபூங் நாரமு மணமும்
தனித் தொன்றாய்க் கூட்டி ஆணிப்பொற் கிண்ணத்
தளித்தமெய் வழித்துணை மருந்தே
கணித்தருக் கரிய குருகுலத் தயனே
காணுமெண் டிசையுமுன் முகமே

''இணைந்த பூங்காரமும் மணமும், தனித் தொன்றாய்க் கூட்டி'' என்ற வரிகள் வந்த போது ஆண்டவர்கள் சிரித்துக் கொண்டே ''வள்ளலார் பாடியுள்ளபடி ஒரே தித்திப்பாய் கலவை செய்து ஊட்டினால் உங்களுக்கு திகட்டுமேடா.... அதனால் பூங்காரத்தையும் மணத்தையும் சேர்த்துள்ளோம்'' என்றார்கள்.

அருளமுதமான அந்த முக்கனிச் சாற்றை பிழிந்து தங்கள் குழந்தைகளுக்கு கொடுக்கும் போது கூட அது தம் குழந்தைகளுக்கு எவ்வளவு தித்திக்கும் – திகட்டும் – ஏற்கும் – உகக்கும் – உகக்காது என்று சிந்தித்து நம்மை ஊட்டி வளர்த்துள்ளார்கள் என்பதை இதிலிருந்தே நாம் உணர்கிறோம்.

அந்த தேனமுதத்திற்கு பூங்காரத்தை இணைத்து அதற்கு மணமும் ஊட்டி மேலும் தம் பிள்ளைகளான நமக்கு அதை ஆணிப்பொற் கிண்ணத்தில் வைத்து ஊட்டி அந்த உணவே நமக்கு பிணி தீர்க்கும் மருந்தாகவும் மெய்வழிக்கு துணையாக இருக்கச் செய்தும் அதை நமக்கு தந்திருக்கிறார்கள்.

''கணித்தருக்கரிய குரு குலத்தயனே – காணுமெண்டிசையும் உன்முகமே'' என்று வருவது எந்த காலத்திலோ எந்தக்கோடியிலோ வந்த வந்த பாரவான்கள் எல்லாம் யாராக இருந்தாலும் அவர்கள் பார்க்க விரும்பிய திருமுகம் நமது தெய்வத்தினுடைய திருமுகமாக இருந்தது என்பதை நாம் அந்த தோத்திர பாடல் வாயிலாக உணர்கிறோம். (சபையில் தெய்வம் திருமுன்பாக பேசப் பெற்ற செய்தி)

✦✦✦✦✦✦

ஒரு நாள் முன் இரவு நேரம் ஆலயத்தில் ஆண்டவர்கள் மேற்கு நோக்கி ஆசனத்தில் வீற்றிருந்தார்கள். பிள்ளைகள் அரை பிறை வடிவமாக ஆண்டவர்களுக்கு முன்னே அமர்ந்து இருந்தனர்.

வெளிச்சத்திற்குப் பெரிய லாந்தர் ஒன்று வைக்கப்பெற்றிருந்தது. ஒரு மூஞ்சூறு இடை வெளியில் நுழைந்து ஆண்டவர்கள் முன்வந்தது. ஏதோ ''குச்குச்'' என்று சப்தமிட்டது.

அம்மூஞ்சூறின் குரலைக்கேட்டதும் ஆண்டவர்கள், ''ஆலயத்தின் வடமேற்கு மூலையில் ஒரு நாகம் படுத்திருக்கிறதென்று அது சொல்லுது. விளக்கை எடுத்துக்கொண்டு போய் அதை அடி!'' என்று சொன்னார்கள். சிலர் தடியுடன் எழுந்து சென்று, அங்கே சுருண்டு கிடந்த ஒரு கருநாகனை அடித்துத் தூக்கிக்கொண்டு வந்தார்கள், ஆண்டவர்கள் சகல ஜீவராசிகள் மீதும் ஆட்சி உடையவர்கள் என்று அது நேரம் வெளியாயிற்று என்பதனை அனைவரும் அறிந்தனர். மதுரை பழஞ்ஞானியிலையில் ஒரு ஜடப்பொருளான எரியும் விளக்கின் தீச்சுடரின் அசைவை பார்த்த உடனே இது மாதிரியான ஒரு சம்பவத்தை ஆண்டவர்கள் நிகழ்த்திக்காட்டி உள்ளார்கள்.

⬥⬥⬥⬥⬥⬥

தேவகோட்டை உமையாள் ஆச்சியைப் பழஞ்ஞானியிலையில் தேள் கொட்டிவிட்டது. ஒரு கையை மறுகையால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஆண்டவர்கள் இருந்த இடத்திற்கு (திருமாளிகைக்கு) ஓடி வந்தார். ஆண்டவர்கள், 'என்ன உமை?' என வினவினார்கள் 'தேள் கொட்டி விட்டது விரல் கடுக்கிறது தெய்வமே' என்று அவர் கதறினார். ஆண்டவர்கள் ''இவ்வளவுதானே! கையை மூன்று தரம் உதறு'' என்றார்கள், உதறியவுடன், என்ன ஆச்சரியம்! விஷக்கடுப்பு நின்று விட்டது.

⬥⬥⬥⬥⬥⬥

சென்னையைச் சேர்ந்த மெய்வழி சண்முகம் செட்டியாரை மெய்வழிச் சாலையில் விரியன் பாம்பு ஒன்று கடித்து விட்டது. ஆண்டவர்களிடம் விபரத்தைச் சொல்லி அழுதார். ஆண்டவர்கள் ஆலயத்திலுள்ள ஒரு தூணில் சாய்ந்து கொண்டு தூங்காமல் இருக்கச் சொன்னார்கள். அவரும் அப்படியே தூங்காமல் காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை அப்படியே இருந்தார். ஆண்டவர்கள் பெருங்கருணையால் விஷம் இறங்கிப் பூரண குணமடைந்தார்.

⟡⟡⟡⟡⟡⟡⟡

மெய்வழி முகமது காசிம் அனந்தரின் குழந்தை மைமூன் பீவி சாலை விடுதியில் ஒரு நாள் உரும கால தவநேரத்தில் ஜீவப் பிரயாணமாகி அடங்கி விட்டாள்.

ஆண்டவர்கள் உரும கால தவத்திலிருந்து (பகல் 11.45 லிருந்து 12.15 வரை ஆண்டவர்கள் தவமிருப்பது) திருமாளிகைக்கு எழுந்தருளிய பின், செய்தி கேட்டு நேராக மைமூன் பீவி அடக்கமாகிப் படுத்திருந்த விடுதிக்கு வந்து அவள் முகத்தைப் பார்த்து 'மைமூன்' என்று அழைத்தார்கள்.

உடனே மைமூன் பீவி உறக்கத்திலிருந்து கண் விழிப்பதைப் போல விழித்து ஆண்டவர்களைப் பார்த்தாள். கொஞ்சம் பால் அருந்தக் கொடுத்தார்கள்.

அதை அருந்தியபின், ''சரி அடக்கமாகிக் கொள்'' என்று உத்திரவிட்டார்கள்.

அனைவரும் கண்ணீர் மல்க ஆண்டவர்கள் நிகழ்த்திய அதிசய காட்சியை கண்டு தோத்தரித்து நின்றார்கள்.

⟡⟡⟡⟡⟡⟡⟡

ஒரு முறை சன்னிதானத்தில் தெய்வபிள்ளைகளில் ஒருவர்

புத்த பகவான் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையும், தன் அரசு வாழ்வையும், மனைவி மக்களையும் விட்டு விட்டு தேர்ப்பாகனாக வந்த தன் ஆசானுடன் துறவுபூண்டதை மிக ஆச்சரியமாக பேசினார்.

அப்போது தெய்வமவர்கள்: "நீ ஆச்சரியபடுவது நல்ல சிந்தனைதான். ஆனால் அரசவாழ்வும், சாம்ராஜ்யமும், போக போக்கியங்களும் புத்தர் சம்பாதித்தது இல்லை. அது அவர்களின் தந்தை மூலமாக வந்தது அல்லவா? மேலும் அது எந்த காலத்திலோ நிகழ்ந்த ஒன்று. இங்கு இப்போது சிந்தியுங்கள். நாம் உங்கள் எதிரிலேயே இருக்கிறேன். எம்முடைய இரத்தத்தைச் சிந்தி எம் உழைப்பினாலேயே 32000 வெள்ளி காசுகளையும் சம்பாதித்தோம். இந்த ஞான வாழ்விற்காக அப்படியே அதை விட்டு விட்டு வந்து விட்டோமே. இது எவ்வளவு பெரிது? இது பெரிதா? அது பெரியதா? இதை எவ்வளவு பெரிதாக நினைத்து நினைத்து பார்க்க உனக்கு எண்ணம் வரவேண்டும் பார்!" என்றார்கள்.

அப்போது தான், தெய்வத்தின் துறவை இந்தக் கோணத்திலும் எவ்வளவு மகோன்னத தியாகமாக நினைத்துப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் பிள்ளைகளுக்கு வந்தது.

✧✧✧✧✧✧✧

ஒரு சமயம் எல்லோரையும் பார்த்து ஆண்டவர்கள் "கடல் தண்ணீர் ஏன் உப்பாக இறைவன் படைத்தான்?" என்று கேட்டார்கள். ஒருவரும் பதில் சொல்ல தெரியாமல் ஆண்டவர்கள்

திருவிடையை எதிர்பார்த்து காத்திருந்தார்கள். ஆண்டவர்கள் : "கடல்" பூமியை காட்டிலும் மூன்று பங்கு பெரியது. அதில் வாழும் ஜீவ இனங்களோ பூமியில் உள்ள பிராணிகளை விட எத்தனையோ மடங்கு பெரிதாகவும் அதிகமாகவும் வாழுகின்றன. அவைகள் நீருக்குள்ளே இறந்து விட்டால் அவை கெட்டு நாற்ற மடிக்காமலும் நீர் விஷமாக மாறாமலும் இருக்கத்தான் கடலை இறைவன் அப்படி உப்பாக படைத்தான்" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

ஆதிமெய் உதய பூரண வேதாந்தத்தில் வரும் ' பூங்கிளிக் கண்ணி'யில் கீழ்கண்டவரிகள் வந்தது:

"தான் தேடி வைத்திருக்கும் தன் குடும்பத்தோர் பொருள் போல்
வான்கோடி மெய்க்குருவை வைத்திடுவாய் பூங்கிளியே"

அப்போது ஆண்டவர்கள் வாக்கியம்: 'தான் தேடி வைத்திருக்கும் ஓர் பொருள் என்றால் 'ஏதோ ஒரு பொருள்' என்பது சரி. ஆனால் உன் வீட்டில் ஒரு பொருள் என்பதை

நீ நினைக்கும் போது உன் வீட்டில் உள்ளவற்றுள் உயர்ந்த ஒரு பொருளைத் தானே நினைத்துக்கொள்வாய். அப்படி உன் வீட்டில் உள்ளவற்றுள் மிக உயர்ந்த உன்னதமான ஒரு பொருளாக நினை என்பதுதான்.